485

14
4.65

சாம்பா

செந்தமிழ்ச் சோலை

(ஒன்பதாம் வகுப்பு)

SCRUTINY OFFICER
PUBLIC ...
18 NOV 1965

ஆசிரியர் :
வித்துவான் பு. செல்வராசன்
தலைமைத் தமிழாசிரியர்,
C.A.H.H.M. உயர்நிலைப் பள்ளி, சென்னை-1.

MADRAS RECORD OFFICE
MADRAS

சாம்பா பப்ளிஷிங் கம்பெனி
12, பிரான்சிஸ் ஜோஸப் தெரு,
சென்னை - 1

TB
1.31(9)
N65
146504.

சாம்பா

செந்தமிழ்ச் சோலை

(ஒன்பதாம் வகுப்பு)

MADRAS RECORD OFFICE
MADRAS

விலை ரூ. 2-25

தொகுப்பாசிரியர் :

வித்துவான் பு. செல்வராசன்

தலைமைத் தமிழாசிரியர்

C.A.H.H.M. உயர்நிலைப் பள்ளி, சென்னை-1.

சாம்பா பப்ளிஷிங் கம்பெனி

12, பிரான்சிஸ் ஜோசப் தெரு, சென்னை-1.

முதற்பதிப்பு—நவம்பர் 1965.

TB
03(9)
N65

பதிப்புரிமை

விலை ரூ. 2-25

சென்னை-600 008
146564.

செந்தமிழ் அச்சகம், சென்னை-14.

முன்னுரை

இப்பாட நூல், அரசியலார் அண்மையில் (1965 இல்) வெளியிட்ட புதிய பாடவியலை உளங்கொண்டு ஒன்பதாம் வகுப்புக்கென தொகுக்கப்பட்டது.

புதிய பாடவியலில், செய்யுள் 700 வரிகளும், உரை நடைப் பாடங்கள் கிரவுன் அளவில் 150 பக்கங்களும் இருத்தல் வேண்டும் என விதிக்கப்பட்டிருக்கிறது. அதற்கிணங்க, மாணவர் நலனைக் கருத்திற் கொண்டு, செய்யுட்களும் உரை நடைப் பாடங்களும் சற்று மிகுதியாகவே, சுவை மிகுந்தன வாக இந்நூலில் திரட்டித் தரப்பட்டுள்ளன.

செய்யுட் பகுதியில், ஆசிரியர் வரலாற்றுக் குறிப்பு, நூற் குறிப்பு, அருஞ்சொற்பொருள், வினாக்கள், பயிற்சி முதலியவை தரப்பட்டுள்ளன.

உரைநடைப் பாடங்களை மாணவர் தாமே முயன்று படித்துணர்வதற்கேற்றவாறு பயிற்சிகள் சேர்க்கப்பட்டுள்ளன. பயிற்சிகளை மாணவர் ஒழுங்காகச் செய்து வந்தால் மொழியைப் பிழையற எழுதும் திறமை வாய்க்கப் பெறுவர் என்பது உறுதி.

இப்பாட நூலில், தம் கட்டுரைகளைச் சேர்த்துக் கொள்ள இசைவு தந்த பேரறிஞர்கட்கு என் நன்றி உரியதாகுக.

இந்நூலில், தமிழ்த் தேனைப் பருகும் வாய்ப்பினை மாணவர்க்கு அளிக்குமாறு தலைமை ஆசிரியர்களையும் தமிழாசிரியர்களையும் வேண்டிக் கொள்கிறேன்.

ஆசிரியன்.

(16·3 கி. கிராம் வெள்ளைத் தாளில் அச்சிடப்பட்டது.)

உள்ளுறை

செய்யுட் பகுதி

எண்	பொருள்	பக்கம்
I.	வாழ்த்து :	
1.	கடவுள் வாழ்த்து	 1
2.	தமிழ்மொழி வாழ்த்து	... 2
3.	நாட்டு வாழ்த்து	 3
II.	அறவுரை :	
1.	திருக்குறள்	 5
2.	ஏலாதி	 16
3.	சிறு பஞ்சமூலம்	 18
4.	புறநானூறு	... 20
III.	தொடர்நிலைச் செய்யுள் :	
1.	மணிமேகலை	 23
2.	பெருங்கதை	... 29
3.	வில்லி பாரதம்	... 34
4.	பெரிய புராணம்	 40
5.	பாஞ்சாலி சபதம்	 48
6.	மனோன்மணீயம்	 52
IV.	பல்சுவை :	
1.	வருணனை	 57
2.	சீட்டுக் கவி	 61
3.	இரட்டுற மொழிதல்	... 62
4.	தமிழ் விடுதூது	 65
5.	பிள்ளைத் தமிழ்	 68
6.	மதுரைக் கலம்பகம்	... 70
7.	வழிபாட்டுப் பாடல்கள்	 72

உரைநடைப்பகுதி

பாடம்	பொருள்	பக்கம்
1.	நம் பாரத நாடு வித்துவான் பு. செல்வராசன்	... 75
2.	கௌதம புத்தர் பாரத ரத்தினம் டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் (இந்தியாவின் ஜனாதிபதி)	 84
3.	மொழித்திறத்தின் முட்டறுத்தல் மகா வித்துவான் மே. வி. வேணுகோபாலப் பிள்ளை	 91
4.	புதைபொருள் ஆராய்ச்சி டாக்டர் மா. இராசமாணிக்கனார், எம்.ஏ, எல்.டி., எம்.ஓ.எல்., பி.எச்.டி.	 96
5.	ஒருமைப்பாடு டாக்டர் அ. சிதம்பரநாதன், எம்.ஏ., பி.எச்.டி., எம்.எல்.சி.	 105
6.	கொல்லும் சொல் முத்தமிழ் வித்தகர் கி. ஆ. பெ. விசுவநாதன்	 111
7.	தமிழ் நாட்டில் மின்சாரம் வி. பி. அப்பாதுரை	 117
8.	குடும்பக் கலை வித்துவான் பு. செ. மணிமேகலை (விஷாரத்)	 123
9.	தொல்காப்பியரின் ஒல்காப்புகழ் புலவர் செந்துறைமுத்து	 130
10.	செயற்கரிய செய்த டீசல் திரு. ஜி. ஆர். தாமோதரன் அவர்கள், பி. எஸ்ஸி., எம். எல். சி.	 139

11. சிறு சேமிப்பின் சிறப்பு **147**
பிரதேச இயக்குநர், தேசிய சேமிப்புத்துறை.

12. தங்கைக்கு ஒரு கடிதம் **157**
ப. செல்லமுத்து, பி. எஸ்ஸி.,

13. பழைமையும் புதுமையும் **163**
புலவர் சி. டி. சிவகாமி அவர்கள்

14. உழைப்பின் உயர்வு ... **170**
வி. சேஷகிரி, எம். ஏ., பி. டி.

15. மங்கோ பார்க் ... **175**
வித்துவான் பு. செல்வராசன்

மனப்பாடம் செய்யவேண்டியவை

I. வாழ்த்து :

கடவுள் வாழ்த்து		8
தமிழ்மொழி வாழ்த்து		8
நாட்டு வாழ்த்து		8

II. அறவுரை :

திருக்குறள்	1, 3, 7, 9, 10, 12, 13, 15 19, 20, 23, 26, 28, 31, 40	30
ஏலாதி	1, 2	8
சிறுபஞ்சமூலம்	4, 5	8
புறநானூறு		13

III. தொடர்நிலைச் செய்யுள் :

வில்லிபாரதம்	4	8
மனோன்மணீயம்	15—20	6

IV. பல்சுவை :

மருத நிலச் சிறப்பு		8
		105

மனப்பாடம் செய்யத்தக்கவை

திருக்குறள்	100	அடிகள்
ஏலாதி	20	,,
சிறுபஞ்சமூலம்	20	,,
வாழ்த்துக்கள்	24	,,
	164	

தேசீய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப சிந்து குஜராத மராட்ட
த்ராவிட உத்கல வங்கா
விந்த்ய ஹிமாசல ஜமுனு கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவசுப நாமே ஜாகே
தவசுப ஆசிஷ மாங்கே
காயே தவஜய காதா
ஜன கண மங்கல தாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
ஜயஹே ஜயஹே ஜயஹே
ஜய ஜய ஜய ஜயஹே.

—மகாகவி இரவீந்திரநாத தாகூர்

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற நீதான்
மக்கள் எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செலுத்துகிருய்.

நின் திருநாமம், பஞ்சாப்பையும் ஸிந்துவையும்
குஜராத்தையும் மஹாராஷ்டிரத்தையும்
திராவிடத்தையும் ஒரிஸாவையும் வங்காளத்தையும்
உள்ளக்கிளர்ச்சியடையச் செய்கிறது.

அது விந்திய, ஹிமாலய மலைகளில் எதிரொலிக்கிறது ;
யமுனை, கங்கை நதிகளின் இன்பநாதத்தில் கலக்கிறது;
இந்தியக் கடல் அலைகளால் ஜபிக்கப்படுகிறது.

அவை நின் ஆசியை வேண்டுகின்றன; நின் புகழைப் பாடுகின்றன;
இந்தியாவின் சுக துக்கங்களை நிர்ணயிக்கிற உனக்கு
வெற்றி ! வெற்றி !! வெற்றி !!!

செய்யுட் பகுதி

I. வாழ்த்துப் பகுதி

1. கடவுள் வாழ்த்து

திருவருட்பா

திரு+அருள்+பா என்னும் மூன்று சொற்களால் ஆகிய ஒரு தொடர் திருவருட்பா என்பது. இறைவனது திருவருளினால் தோன்றிய பாடல் என இது விரியும். அருட்பா என்பது மூன்றன் உருபும் பயனும் உடன் தொக்க தொகை. திரு என்பது சிறப்பைக் குறிக்கும் அடைமொழி. இந்நூல் ஏறத்தாழ ஆறாயிரம் பாக்கள் உடையது; ஆறு திருமுறைகளாகப் பகுக்கப்பெற்றது.

நூலாசிரியர் : இராமலிங்க அடிகளார். தாய் : சின்னம்மை; தந்தை : இராமையாப் பிள்ளை. ஊர் : சிதம்பரத்திற்கு அண்மையிலுள்ள மருதூர். காலம் : கி. பி. 1823—1873. தொழுவூர் வேலாயுத முதலியார், நா. கதிரைவேற்பிள்ளை முதலியோர் இவர் காலப் புலவர்களாவர்.

கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பே!
காணார்க்கும் கண்டவர்க்கும் கண்ணளிக்கும் கண்ணே!
வல்லார்க்கும் மாட்டார்க்கும் வரமளிக்கும் வரமே!
மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதிகொடுக்கும் மதியே!
நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுநின்ற நடுவே!
நரர்களுக்கும் சுரர்களுக்கும் நலங்கொடுக்கும் நலமே!
எல்லார்க்கும் பொதுவில் நடமிடுகின்ற சிவமே!
என்னரசே! யான்புகலும் இசையும் அணிந்தருளே.

அருஞ்சொற்பொருள்

களிப்பு-மகிழ்ச்சி. கண்டவர்-தன்னை வணங்கியவர். கண் அளிக்கும்-அறிவுக் கண்ணைக் கொடுத்தருளுகின்ற. நரர்-மனிதர். சுரர்-தேவர். புகலும் - சொல்லுகின்ற. இசையும் - உன் புகழ் அமைந்த பாமாலையும். இசையும் - இழிவு சிறப்பும்மை. கல்லார், கற்றவர், வல்லார், மாட்டார் - வினையாலணையும் பெயர்கள். களிப்பே, கண்ணே, வரமே, மதியே, நடுவே, நலமே - உருவகங்கள். அரசே -விளிவேற்றுமை, ஈறுகெட்டு ஈற்றயல் நீண்டது. இச்செய்யுளில் முதல் 6 வரிகளிலும் முரண்தொடை அமைந்திருத்தல் காண்க.

2. தமிழ்மொழி வாழ்த்து

இச் செய்யுளை இயற்றியவர் அமரகவி சி. சுப்பிரமணிய பாரதியார். இவர் நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த எட்டயபுரத்தில் கி. பி. 1882இல் பிறந்து 1921ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள் 11ஆம் நாள் காலமானார். புத்துணர்ச்சியூட்டும் பாக்கள் பலவற்றையும் உரைநடை நூல்கள் சிலவற்றையும் இவர் எழுதியுள்ளார். இவர் பாக்கள், படிப்போருக்கு நாட்டுப்பற்றும் மொழிப் பற்றும் ஊட்டவல்லவை. இவர் தந்தை : சின்னசாமி ஐயர். தாயார் : இலக்குமி அம்மாள். சிறுவயதிலேயே கவிபாடும் திறமை பெற்ற இவர், சிறிது காலம்வரை எட்டயபுரம் அரசவைக்கவிஞராயிருந்தார்.

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே
வான மளந்த தனைத்து மளந்திடும்
வண்மொழி வாழியவே
ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசை கொண்டு வாழியவே
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே.

அருஞ்சொற்பொருள்

நிரந்தரம் - நிலை பெற்று, என்றும். வண் மொழி - வளங்கள் யாவும் பெற்றுள்ள மொழி, வண்மை+மொழி, பண்புத்தொகை. இசை - புகழ். வாழ்க, வாழிய - வியங்கோள் வினைமுற்றுக்கள். தமிழ்மொழி கடல்சூழ்ந்த இந்நில உலகமெங்கும் புகழுடன் நிலைபெற்று வாழவேண்டும் என்று வாழ்த்துகின்றார் பாரதியார்.

3. நாட்டு வாழ்த்து

இதனைப் பாடியவர் தமிழ்ப் பெரியார் கார்மேகக் கோனார் ஆவார். இவர் மதுரை அமெரிக்கன் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகத் தொண்டாற்றியவர். 1958ஆம் ஆண்டின் தொடக்கத்தில் தமது புகழுடலை நிறுத்திப் பூதவுடலை மறைத்தார். தமிழ் நாட்டின் பெருமையை இப்பாடல் நன்கு விளக்கிக் காட்டுகிறது.

சங்கம்வைத்துத் தமிழ்பயின்று தகைமைபெறு நாடு
தலைமைமிகு புலவர்தமைத் தந்ததிரு நாடு
வங்கமிசைக் கடல்கடந்து வளங்கொணர்ந்த நாடு
வகுத்தஅறம் பலபுரிந்து வயங்குகின்ற நாடு
துங்கமிகும் வீரர்தமைத் தோற்றுவித்த நாடு
துகளறுசீர்ப் போர்முறையில் தூய்மைபெறு நாடு
எங்கும்எழிற் பொழில்சூழ்ந்து ஏர்திகழும் நாடு
எவ்வளமும் செழித்தயலார் இசைக்கும்இசை நாடு

அருஞ்சொற்பொருள்

சங்கம் - தமிழ்க் கழகம். தகைமை - உயர்வு. வங்கம் - கப்பல். வயங்குகின்ற - விளங்குகின்ற. துங்கம் - உயர்வு. துகளறு - குற்றமற்ற. ஏர் - அழகு. அயலார் இசைக்கும் - பிறர் புகழும். அறுசீர் - வினைத்தொகை. பெறு நாடு - வினைத்தொகை.

பயிற்சி

I விடை எழுதுக:

1. இராமலிங்க அடிகள் கூறியுள்ள இறைவனின் சமரசத் தன்மைகள் யாவை?
2. 'எல்லார்க்கும் பொதுவில்'-எனும் தொடர் எவரெவரைக் குறிக்கின்றது?
3. 'நரர்களுக்கும் சுரர்களுக்கும் நலங் கொடுக்கும் நலம்'—விளக்குக.
4. அமரகவி சி. சுப்பிரமணிய பாரதியாரைப் பற்றி நீ யாது அறிவாய்?
5. 'வானமளந்த தனைத்து மளந்திடும்'—இதன் பொருள் யாது?

6. 'சங்கம் வைத்துத் தமிழ் பயின்று தகைமை பெறுநாடு'—இவ்வாறு கூறுவதற்குக் காரணம் என்ன?

7. 'வங்கமிசைக் கடல் கடந்து வளங்கொணர்ந்த நாடு'—இக்கூற்றுக்கு ஆதாரம் யாது ?

II (1) பிரித்து எழுதுக :

களிப்பருளும், கண்ணளிக்கும், வானமளந்த தனைத்து மளந்திடும், துகளறு, செழித்தயலார்.

(2) சேர்த்து எழுதுக :

வங்கம் + மிசை, எ + வளமும், வளம் + கொணர்ந்த, என்று + என்றும், வரம் + அளிக்கும், அணிந்து + அருளே, நடம் + இடுகின்ற, என் + அரசே.

III 1. தமிழ்மொழி வாழ்த்தினை உரைநடைப் படுத்துக.

2. கார்மேகக் கோனாரின் செய்யுட் கருத்தை அடக்கி ஒரு கட்டுரை வரைக.

3. முரண்தொடைக்கு மூன்று சான்றுகள் தருக.

II. அறவுரை

1. திருக்குறள்

திருக்குறள் பதினெண்கீழ்க் கணக்கு நூல்களில் ஒன்று. கடைச் சங்க நூல்களை மேற்கணக்கு, கீழ்க்கணக்கு என்று பிரிப்பர். மேற் கணக்கு, கீழ்க்கணக்கு என்பவை செய்யுட்களின் அடியளவைக் கொண்டு பிரிக்கப்பட்டவை. நாலடியும் அதற்குக் கீழுமுள்ளவை யாகிய பாக்கள் கீழ்க்கணக்கில் சேரும். நாலடிக்கு மேற்பட்ட பாக்கள் மேற்கணக்கைச் சேரும். மேற்கணக்கில் பதினெட்டு நூல்களும், கீழ்க் கணக்கில் பதினெட்டு நூல்களும் உள.

திருக்குறள் உலக மக்கள் அனைவருக்கும் ஏற்ற நல்லுரைகளைக் கூறுவது. அதனால் இது மேனாட்டு மொழிகளிலும் பெயர்க்கப்பட் டுள்ளது. இஃது அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் மூன்று பிரிவுகளைக்கொண்டது. இதனால் இந்நூல் முப் பால் எனும் பெயர் பெற்றது. இது, அறத்துப்பால் 38 அதிகாரங் களையும், பொருட்பால் 70 அதிகாரங்களையும், காமத்துப்பால் 25 அதிகாரங்களையும் கொண்டுள்ளது. ஆக மொத்தம் இந்நூல் 1330 குறட்பாக்களை உடையது.

நூலாசிரியர்: திருவள்ளுவர். காலம்: கி.பி.முதல் நூற்றாண்டு என்பர். அரசரின்கீழ் உள்படு கருமத் தலைவராகப் பணியாற்றி யவர் வள்ளுவர் என்பர். அத்தகைய பணியை ஏற்றிருந்தமையின் இவர்தம் இயற்பெயர் மறைந்து சிறப்புப் பெயராகிய வள்ளுவர் என்பதே வழங்குவதாயிற்று. இவரைக் குறித்து நாட்டில் வழங்கும் பிற வரலாறுகளுக்குத் தக்க ஆதாரங்களில்லை.

கடவுள் வாழ்த்து

வேண்டுதல்வேண் டாமை யிலானடி சேர்ந்தார்க்\
கியாண்டு மிடும்பை யில. 1

வான் சிறப்பு

விசும்பிற் றுளிவீழி னல்லான்மற் றாங்கே\
பசும்புற் றலைகாண் பரிது. 2

அறன் வலியுறுத்தல்

சிறப்பீனுஞ் செல்வமு மீனு மறத்தினூஉங்
காக்க மெவனோ வுயிர்க்கு. 3

வாழ்க்கைத்துணை நலம்

சிறைகாக்குங் காப்பெவன் செய்யு மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை. 4

அன்புடைமை

அறத்திற்கே யன்புசார் பென்ப வறியார்
மறத்திற்கு மஃதே துணை. 5

விருந்தோம்பல

இருந்தோம்பி யில்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு. 6

இனியவை கூறல்

அல்லவை தேய வறம்பெருகு நல்லவை
நாடி யினிய சொலின். 7

செய்ந்நன்றியறிதல்

செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமு மாற்ற லரிது. 8

நடுவு நிலைமை

கெடுவல்யா னென்ப தறிகதன் னெஞ்ச
நடுவொரீஇ யல்ல செயின். 9

அடக்கமுடைமை

காக்க பொருளா வடக்கத்தை யாக்க
மதனினூஉங் கில்லை யுயிர்க்கு. 10

பொறையுடைமை

ஒறுத்தாரை யொன்றாக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து. 11

அழுக்காறுமை

அழுக்காற்றி னல்லவை செய்யா ரிழுக்காற்றி
னேதம் படுபாக் கறிந்து. 12

வெஃகாமை

அஃகாமை செல்வத்திற் கியாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள். 13

ஒப்புரவறிதல்

ஒப்புரவி ஞல்வருங் கேடெனி னஃதொருவன்
விற்றுக்கோட் டக்க துடைத்து. 14

ஈகை

அற்ரு ரழிபசி தீர்த்த லஃதொருவன்
பெற்ருன் பொருள்வைப் புழி. 15

புகழ்

வசையென்ப வையத்தார்க் கெல்லா மிசையென்னு
மெச்சம் பெருஅ விடின். 16

கூடாவொழுக்கம்

மழித்தலு நீட்டலும் வேண்டா வுலகம்
பழித்த தொழித்து விடின். 17

வாய்மை

வாய்மை யெனப்படுவ தியாதெனின் யாதொன்றும்
தீமை யிலாத சொலல். 18

வெகுளாமை

தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க காவாக்காற்
றன்னையே கொல்லுஞ் சினம். 19

இன்னு செய்யாமை

நோயெல்லா நோய்செய்தார் மேலவா நோய்செய்யார்
நோயின்மை வேண்டு பவர். 20

மெய்யுணர்தல்

காமம் வெகுளி மயக்க மிவைமூன்ற
னாமங் கெடக்கெடு நோய். 21

ஊழ்

நன்றாங்கா னல்லவாக் காண்பவ ரன்றாங்கா
லல்லற் படுவ தெவன். 22

கல்வி

எண்ணென்ப வேனை யெழுத்தென்ப இவ்விரண்டுங்
கண்ணென்ப வாழு முயிர்க்கு. 23

கல்லாமை

விலங்கொடு மக்க ளனைய ரிலங்குநூல்
கற்றாரோ டேனை யவர். 24

கேள்வி

நுணங்கிய கேள்விய ரல்லார் வணங்கிய
வாயின ராத லரிது. 25

அறிவுடைமை

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. 26

பெரியாரைத் துணைக்கோடல்

தம்மிற் பெரியார் தமரா வொழுகுதல்
வன்மையு ளெல்லாம் தலை. 27

தெரிந்து செயல்வகை

ஆக்கங் கருதி முதலிழக்குஞ் செய்வினை
யூக்கா ரறிவுடை யார். 28

நன்றாற்றல் உள்ளும் தவறுண் டவரவர்
பண்பறிந் தாற்றாக் கடை. 29

வலியறிதல்

நுனிக்கொம்ப ரேறினா ரஃதிறந் தூக்கி
னுயிர்க்கிறுதி யாகி விடும். 30

ஆகா றளவிட்டி தாயினுங் கேடில்லை
போகா றகலாக் கடை. 31

காலமறிதல்

கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து. 32

இடனறிதல்

அஞ்சாமை யல்லால் துணைவேண்டா வெஞ்சாமை
யெண்ணி யிடத்தாற் செயின். 33

தெரிந்து வினையாடல்

அன்பறிவு தேற்ற மவாவின்மை யிந்நான்கும்
நன்குடையான் கட்டே தெளிவு. 34

பொச்சாவாமை

அச்ச முடையார்க் கரணில்லை யாங்கில்லை
பொச்சாப் புடையார்க்கு நன்கு. 35

வெருவந்த செய்யாமை

அருஞ்செவ்வி யின்னா முகத்தான் பெருஞ்செல்வம்
பேஎய்க்கண் டன்ன துடைத்து. 36

கண்ணோட்டம்

கண்ணோட்டத் துள்ள துலகிய லஃதிலா
ருண்மை நிலக்குப் பொறை. 37

ஊக்கமுடைமை

உரமொருவற் குள்ள வெறுக்கையஃ தில்லார்
மரமக்க ளாதலே வேறு. 38

ஆள்வினையுடைமை

தாளாண்மை யென்னுந் தகைமைக்கட் டங்கிற்றே
வேளாண்மை யென்னுஞ் செருக்கு. 39

தெய்வத்தா னாகா தெனினு முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும். 40

வினைத்தூய்மை

ஈன்றாள் பசிகாண்பா னாயினுஞ் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை. 41

குறிப்பறிதல்

அடுத்தது காட்டும் பளிங்குபோ னெஞ்சங்
கடுத்தது காட்டும் முகம். 42

நட்பு

நவிறொறு நூனயம் போலும் பயிறொறும்
பண்புடை யாளர் தொடர்பு. 43

சூது

சிறுமை பலசெய்து சீரழிக்குஞ் சூதின்
வறுமை தருவதொன் றில். 44

மானம்

புகழின்றால் புத்தேணாட் டுய்யா தா லென்மற்
றிகழ்வார்பின் சென்று நிலை. 45

சான்றாண்மை

இன்னாசெய் தார்க்கு மினியவே செய்யாக்கா
லென்ன பயத்ததோ சால்பு. 46

நாணுடைமை

அணியன்றோ நாணுடைமை சான்றோர்க் கஃதின்றேற்
பிணியன்றோ பீடு நடை. 47

நல்குரவு

நற்பொருள் நன்குணர்ந்து சொல்லினும் நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வு படும். 48

இரவச்சம்

இரவுள்ள உள்ளம் உருகுங் கரவுள்ள
உள்ள தூஉம் இன்றிக் கெடும். 49

கயமை

அறைபறை யன்னர் கயவர்தாங் கேட்ட
மறைபிறர்க் குய்த்துரைக்க லான். 50

அருஞ்சொற்பொருள்

1. வேண்டுதல் - விரும்புதல் (தொழிற்பெயர்); யாண்டும் - எக்காலத்திலும்; இடும்பை - துன்பம்; இலானடி - ஆறும் வேற்றுமைத் தொகை; இலான்+அடி.

2. வான் சிறப்பு - மழையின் சிறப்பு; விசும்பு - மேகம்; துளி- மழைத்துளி; பசும் புல் - பண்புத்தொகை; காண்பு - காணுதல்.

3. அறன் - அறம், ஈற்றுப்போலி; ஈனும் - அளிக்கும்; ஆக்கம் - மேன்மேல் உணர்தல், தொழிற்பெயர்; அறத்தினூஉங்கு - இன்னிசையளபெடை; ஊங்கு - மேற்பட்டது; எவன் - யாது.

4. வாழ்க்கைத்துணை - மனைவி; நிறை - கற்பு.

5. அறம் - அறச் செயல்கள்; மறத்திற்கும் - கொடுமைச் செயல்களைக் களைவதற்கும். சார்பு - துணையாவது.

6. இல் இருந்து ஓம்பி வாழ்வதெல்லாம் எனக் கூட்டுக. வேளாண்மை - உதவி; விருந்து - புதுமை (புதிதாக வருகின்றவர்களுக்கு ஆகி வந்தது) பண்பாகு பெயர்.

7. அல்லவை தேய - தீமைகள் அழிய; நாடி - ஆராய்ந்து; இனிய - இனிமையான பேச்சு.

8. வையகம் - நிலவுலகம்; வானகம் - விண்ணகம்; வையகமும் வானகமும் - எண்ணும்மைகள்.

9. ஒரீஇ - விலகி, சொல்லிசையளபெடை; அறிக - வியங்கோள் வினைமுற்று; கெடுவல் - தன்மை ஒருமை வினைமுற்று.

10. காக்க - வியங்கோள் வினைமுற்று; ஆக்கம் - செல்வம்; ஊஉங்கு - மிக்க, செய்யுளிசை அளபெடை.

11. பொறை - பொறுமை; ஒறுத்தார் - தண்டித்தார்; பொதிந்து - போற்றி; ஒறுத்தாரை, பொறுத்தாரை - வினையாலணையும் பெயர்கள்.

12. அழுக்காறு - பொறாமை, முதனிலை திரிந்த தொழிற் பெயர்; அல்லவை - அறம் அல்லாதவை; ஏதம் - துன்பம்; படுபாக்கு - உண்டாதலை.

13. அஃகாமை - சுருங்காமை; வெஃகாமை - விரும்பாமை; செல்வத்திற்கு+யாதெனின் - செல்வத்திற்கியாதெனின், குற்றிய லிகரம்.

14. ஒப்புரவு - உதவி (உலகியல்); கேடு - அழிவு, முதல்நிலை திரிந்த தொழிற்பெயர்.

15. ஈகை - ஈதல்; அற்றார் - ஏழைகள்; அழிபசி - வருத்தும் பசி, வினைத்தொகை.

16. வசை - பழி; இசை - புகழ்; எச்சம் - எஞ்சி இருப்பது; பெறாஅ - செய்யுளிசை அளபெடை.

17. கூடா வொழுக்கம் - தவறான ஒழுக்கம்; மழித்தல் - மயிர் நீக்கல்; நீட்டல் - சடை வளர்த்தல்.

18. வாய்மை - உண்மை; எனப்படுவது+யாதெனின் - எனப் படுவதியாதெனின், குற்றியலிகரம்.

19. வெகுளாமை - கோபம் கொள்ளாமை; சினம் - கோபம்; தன்னையே - தேற்றேகாரம்.

20. இன்னா - தீமை; நோய் - துன்பம்; தீமை - வருத்தம்.

21. மெய் - உண்மை அறிவு; காமம்-பெண்ணாசை; வெகுளி - சினம்; மயக்கம் - ஒன்றைப் பிறிதொன்றாக உணரும் உணர்வு.

22. ஊழ் - விதி; நன்று+ ஆம்+கால் - நன்மைகள் உண்டா கும்போது; அன்று+ஆம்+கால் - தீமைகள் ஏற்படுகின்ற பொழுது; அல்லல் - மனத்துயர்.

23. எண் - கணிதம், இலக்கணம்; எழுத்து - இலக்கியம்.

24. கல்லாமை - கல்வி கற்றுக்கொள்ளாதிருத்தல்; விலங்கு - மிருகம், மாக்கள்; இலங்கு நூல் - அறிவு விளக்கத்தைத் தரும் நூல்.

25. கேள்வி - செவிகளால் கேட்டுணரும் அறிவு; நுணங்கிய- நுட்பமான; வணங்கிய - பணிவான.

26. மெய்ப்பொருள் - பண்புத் தொகை; யார் யார் - அடுக் குத்தொடர்.

27. துணைக்கோடல் - துணையாகக் கொள்ளுதல்; தமர் - சுற்றத்தார்; ஒழுகுதல் - தொழிற்பெயர்.

28. நன்று ஆற்றல் உள்ளும் - வேற்று வேந்தர் மாட்டு நன்மைகளைச் செய்யும்போதும் (உம் - சிறப்பு உம்மை)

29. ஆக்கம் - பொருள் வளர்ச்சி; ஊக்கார் - முயலார்.

30. வலி -வலிமை; கொம்பர் நுனி - மரக்கிளை உச்சி (கடைப் போலி); இறுதி - முடிவு.

31. ஆகாறு - பொருள் வரும் வழி; இட்டிது - சிறியது; போகாறு - செல்லும் வழி; அகலாக்கடை - விரிவடையாதிருந் தால்.

32. கூம்பும் பருவம் - அடங்கியிருக்கும் காலம்; சீர்த்த இடத்து - காலம் வாய்த்த பொழுது; மற்று - அசை.

33. எஞ்சாமை - செய்யவேண்டிய செயல்களை யெல்லாம் குறைபடாமல்; எண்ணி - ஆராய்ந்து.

34. வினையாடல் - செயல் ஆற்றல்; தேற்றம் - தெளிவு, உறுதி; அவா - பேராசை.

35. பொச்சாவாமை - மறவாமை; அரண் - பாதுகாவல்; அச்சம் - பயம்; பொச்சாப்பு - மறதி (எடுத்துக்காட்டு உவமை யணி).

36. வெருவந்த - அஞ்சத்தக்க; இன்னுமுகத்தான் - கடுகடுப் பான முகத்தையுடையவன்; அருஞ்செவ்வி - குறைசொல்வார் எளிதில் காண்பதற்கரிய காலம்; அருஞ்செவ்வி, பெருஞ்செல்வம் - பண்புத்தொகைகள்; பேஎய் - செய்யுளிசை அளபெடை.

37. பொறை - சுமை; கண்ணோட்டம் - தம்மோடு பயின்றார் கூறுவதை மறுக்கமாட்டாமை, தாட்சண்யம், நாகரிகம்.

38. உரம் - வலிவு; உள்ள வெறுக்கை - ஊக்கமாகிய செல்வம்.

39. ஆள்வினை-முயற்சி; தாளாண்மை-முயற்சி; வேளாண்மை- உதவி; தகைமை - மேன்மை.

40. மெய் - உடல்; கூலி - பயன்.

41. வினைத்தூய்மை - செயல் நல்லவையாதல்; சான்றோர் - அறிவு ஒழுக்கங்களால் சிறந்தோர்; செய்யற்க - வியங்கோள் வினை முற்று.

42. அடுத்தது - தன்னை அடுத்திருக்கின்ற பொருளின் நிறத்தை; கடுத்தது - மிக்கது; அடுத்தது - ஆகுபெயர்.

43. பயில் தொறும் - பழகும் தோறும்; நவில் தொறும் - கற் குந்தோறும்; தொடர்பு - நட்பு.

44. சீரழிக்கும் - உள்ள புகழையும் கெடுக்கும்.

45. புத்தேள்+நாட்டு=புத்தேணுட்டு - தேவலோகத்தில். உய்யாது - செலுத்தாது.

46. சான்றாண்மை - நற்பண்புடனிருத்தல்; பயத்தது - பயனை உடையது; சால்பு - நற்பண்பு.

47. நாண் - வெட்கம்; அணி - அழகு, ஆபரணம்; பிணி - நோய்.

48. நல்குரவு - வறுமை; நல்கூர்ந்தார் - வறியார்; சோர்வு படும் - பயனற்ற சொல்லாய் முடியும்.

49. இரவச்சம் - இரத்தற்கு அஞ்சுதல்; இரவு - இரத்தல்; கரவு - இரந்தாற்கு இல்லையென்று மறைத்தல்; உள்ளதூஉம் - இன்னிசை அளபெடை.

50. கயமை - கீழ்மை; உய்த்து உரைக்கலான் - தாங்கிக் கொண்டு சென்று சொல்லுதலால்; அறைபறை - வினைத்தொகை; மறை - வெளிப்படின் குற்றம் விளையுமென்று பிறரை மறைத்து ஒருவன் சொல்லிய சொல்.

பயிற்சி

I. விடை எழுதுக :

1. "யாண்டும் இடும்பை இல" - யாருக்கு ? ஏன் ?
2. "பசும்புல் தலைகாண் பரிது" - எப்போது ?
3. அறன் வலியுறுத்தலை வள்ளுவர் எவ்வாறு விளக்குகின்றார் ?
4. சிறைகாவல், நிறைகாவல் - விளக்குக.
5. மறத்திற்கும் அன்பு துணையாதல் யாங்ஙனம் ?
6. இல் வாழ்வது எதற்கு ?
7. இன்சொல்லின் இலக்கணம் யாது ?
8. செய்யாமற் செய்த உதவியின் சிறப்பென்ன ?
9. அடக்கத்தின் சிறப்பு எவ்வாறு கூறப்பட்டுள்ளது ?
10. யாரைப் பொன்போற் பொதிந்து வைப்பர் ?
11. "அழுக்காற்றின் அல்லவை செய்யார்" - ஏன் ?
12. "விற்றுக் கோட்டக்க துடைத்து" - எது ?
13. ஈகையின் சிறப்பினை எடுத்து விளக்குக.
14. புகழின் மேன்மையினை எடுத்து விளக்குக.
15. "மழித்தலும் நீட்டலும் வேண்டா" - எப்போது ?
16. வாய்மையின் இலக்கணம் யாது ?
17. தன்னைக் காக்க விரும்புபவன் எதைக் காக்க வேண்டும் ? ஏன் ?

18. இன்னு செய்யாமை எவ்விதம் விளக்கப்பட்டுள்ளது ?

19. எவை கெடக் கெடும் நோய் ?

20. மக்களின் கண்கள் யாவை ?

21. "விலங்கொடு மக்களனையர்" - யார் ?

22. அறிவின் இலக்கணமாக வள்ளுவர் கூறியுள்ளது யாது ?

23. வன்மையுள் எல்லாம் தலையாயது எது ?

24. "ஊக்கார் அறிவுடையார் - எதனை ?

25. "உயிர்க் கிறுதியாகிவிடும்" - எது ? ஏன் இவ்வாறு கூறப் பட்டுள்ளது ?

26. "வரவுக்கு மேல் செலவிடாதே" என்பதை வள்ளுவர் எவ்வாறு விளக்குகிருர் ?

27. கொக்கைக் காட்டி வள்ளுவர் விளக்குவது யாது ?

28. கீழ்க்கண்ட தொடர்களை விளக்குக :—

(i) நன்ருற்றலுள்ளும் தவறுண்டு.
(ii) மரமக்களாதலே வேறு.
(iii) வேளாண்மை யென்னும் செருக்கு.
(iv) ஈன்ருள் பசிகாண்பான்.

29. தெளிவு யாரிடம் அமையும் ?

30. கீழ்க்கண்ட உவமைகளைப் பொருளுடன் பொருத்தி விளக்குக :—

(i) அடுத்தது காட்டும் பளிங்கு போல்.
(ii) நவிெருறு நூனயம் போலும்.
(iii) பேஎய்க் கண்டன்ன.
(iv) அறைபறை யன்னர்.

31. சூது எத்தகையது ?

32. இகழ்வார் பின் சேறலின் இழிவினை விளக்குக.

33. பீடுநடை பிணியாதல் எப்போது ?

II. 1. திருவள்ளுவரைப் பற்றியும், திருக்குறளைப் பற்றியும் இருபது வரிகள் எழுதுக.

2. பிரித்து எழுதுக : இலானடி, நோயெல்லாம், அன்ருங் கால், வாயினராதலரிது, உயிர்க்கிறுதி, கொக்கொக்க, பயிெருறும், பிறர்க்குய்த்துரைக்கலான்.

3. சேர்த்து எழுதுக : பசுமை+புல்; விருந்து+ஓம்பி; தன்+நெஞ்சம்; கோள்+தக்கது+உடைத்து; பழித்தது+ஒழித்து; நோய்+இன்மை; காண்பது+அறிவு; குத்து+ஒக்க; அவா+

இன்மை; ஆகாது+எனினும்; நவில்+தொறும்; என்று+உணர்க; புத்தேள்+நாட்டு.

III. 1. திருக்குறள் பகுதியில் வந்துள்ள (i) அளபெடைகள் (ii) வினைத் தொகைகள் (iii) பண்புத் தொகைகள் ஆகியவற்றைத் தெரிந்து எடுத்து எழுதுக.

2. இப்பகுதியில் வந்துள்ள உவமைகளை எடுத்தெழுதுக.

2. ஏலாதி

ஏலாதி என்பது பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று. இதன் ஆசிரியர் கணிமேதையார்; காலம் : கி. பி. ஆறு அல்லது ஏழாம் நூற்றாண்டு. சமயம் : சமணம். ஏலம், இலவங்கம், சிறுநாவற் பூ, மிளகு, திப்பிலி, சுக்கு முதலியவற்றால் ஆகிய ஏலாதிச் சூரணம் உடம்பிற்கு நன்மை செய்தல் போல, இந்நூற்பா ஒவ்வொன்றும் இம்மை மறுமைகட்குரிய நலன் தருவதால், இந்நூல் 'ஏலாதி' எனப் பெயர் பெற்றது. இந்நூலில் எண்பது செய்யுட்கள் இருக்கின்றன. ஒவ்வொரு பாவிலும் சுமார் ஆறு அல்லது ஏழு செய்திகள் கூறப்பட்டிருக்கும்.

நல்லனவே செய்க

இளமை கழியும்; பிணிமூப்(பு) இயையும்;
வளமை வலிஇவை வாடும்—உளநாளால்
பாடே புரியாது பால்போலும் சொல்லினாய்!
வீடே புரிதல் விதி. 1

காலனை ஒழிக்க வழி

வாளஞ்சான் வன்கண்மை அஞ்சான் வனப்பஞ்சான்
ஆளஞ்சான் ஆய்பொருள் தான்அஞ்சான்—நாள்எஞ்சாக்
காலன் வரவொழிதல் காணின்வீ டெய்திய
பாலின்நூல் எய்தப் படும். 2

அன்பர்க்குரிய ஆறு குணங்கள்

சாதல் பொருள்கொடுத்தல் இன்சொல் புணர்வுவத்தல்
நோதல் பிரிவில் கவறலே—ஓதலின்
அன்புடையார்க் குள்ளன ஆறு குணமாக
மென்புடையார் வைத்தார் விரித்து. 3

உத்தமனுய் வாழ வழி

களியான்கள் உண்ணுன் களிப்பாரைக் காணுன்
ஒளியான் விருந்திற் குலேயான்—எளியாரை
எள்ளான்ஈத் துண்பானேல் ஏதமில் மண்ஆண்டு
கொள்வான் குடிவாழ்வான் கூர்ந்து. 4

மறுமைப்பேறு பெறத்தக்கவர்

தாயிழந்த பிள்ளே தலேயிழந்த பெண்டாட்டி
வாயிழந்த வாழ்விஞர் வாணிகம்—போயிழந்தார்
கைத்தூண் பொருள்இழந்தார் கண்ணி லவர்க்கீய்ந்தார்
வைத்து வழங்கிவாழ் வார். 5

அருஞ்சொற்பொருள்

1. இயையும் - வந்துசேரும். வளமை- செல்வம். வலி-வன்மை பாடே - துன்பந்தரும் செயல்களேயே. பாடே, வீடே - 'ஏ' பிரிநிலே. பால் போலும் சொல்லினுய் - மகடூஉ முன்னிலே.

2. வன்கண்மை - கண்ணுேட்டம் இன்மை. வனப்பு - அழகிய ஆண்மைத் தோற்றம். ஆள் - ஆட்சி. ஆய்பொருள் - தெரிந்து தேடிய செல்வம். எஞ்சா - குறையாத. காணின் - விரும்பினுல். பாலின் நூல் - அருள் தன்மை பொருந்திய அறிவு நூல்.

3. சாதல் - (நண்பர் இறந்தால்) தாமும் இறத்தல். இப் படியே ஒவ்வொன்றுக்கும் கொள்க. புணர்வு - சேர்க்கை. நோதல்- வருந்துதல். கவறல் - கவலேப்படுதல். மென்புடையார் - மென்மை மிக்க புலவர்கள்.

4. களியான் - கர்வம் கொள்ளானுய். களிப்பார் - கள் உண்டு களிப்பவர். உலேயான் - ஒழுக்கம் தவருதவனுய். ஏதம் - குற்றம். மண் - நாடு. குடி - குடும்பம்.

5. தலே - கணவன், ஆகுபெயர். வாய் இழந்த வாழ்விஞர் - ஊமைகள். வாய் - ஆகுபெயர். கைத்து ஊண்பொருள் - உணவுப் பொருளுக்கு ஆதாரமான செல்வம். பெண்டு+ஆட்டி - பெண் மையை ஆள்பவள்.

3. சிறுபஞ்ச மூலம்

இது பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. இதனைப் பாடியவர் காரியாசான் என்பவர்; கி. பி. ஏழு அல்லது எட்டாம் நூற்றாண்டினர். இவர் சமண சமயத்தினர். செவ்வியம், சித்திர மூலம், கண்டு பறங்கி, பேரரத்தை, சுக்கு ஆகிய ஐந்தும் கொண்டு இறக்கிய கஷாயம் போல, இந்நூலில் ஒவ்வொரு பாட்டிலும் கூறப் படும் ஐந்து பொருள்களும் மனநோயைப் போக்கி நன்மை செய்வன ஆதலின் இந்நூல் இப்பெயர் பெற்றது. சிறு+பஞ்சம்+ மூலம் - சிறிய ஐந்து வேர் என்பது இதன் பொருளாகும். இந்நூலில் 97 செய்யுட்கள் உள்ளன.

கற்றவர்—கல்லாதவர்

தேவரே கற்றவர் கல்லாதார் தேருங்கால்
பூதரே முன்பொருள் செய்யாதார்—ஆதரே
துன்ப மிலேம்பண்டு யாமே வனப்புடையேம்
என்பார் இருகால் எருது. 1

ஒருவருக்கு ஒன்றே எளிது

வான்குருவிக் கூடரக்கு வால்உலண்டு கோல்தருதல்
தேன்புரிந் தியார்க்கும் செயலாகா—தாம்புரீஇ
வல்லவர் வாய்ப்பன என்னார் ஒரோவொருவர்க்(கு)
ஒல்காதோர் ஒன்று படும். 2

பெண்டிர் சிறப்பு

வருவாய்க்குத் தக்க வழக்கறிந்து சுற்றம்
வெருவாமை வீழ்ந்துவிருந் தோம்பித்—திருவாக்கும்
தெய்வதையும் எஞ்ஞான்றும் தேற்ற வழிபாடு
செய்வதே பெண்டிர் சிறப்பு. 3

கடமை உணர்வு

தான்பிறந்த இல்நினைந்து தன்னைக் கடைப்பிடித்துத்
தான்பிற ரால்கருதற் பாடுணர்ந்து—தான்பிறரால்
சாவ எனவாழான் சான்றோரால் பல்யாண்டும்
வாழ்க எனவாழ்தல் நன்று. 4

அறிவுடையார்—அறிவில்லார்

பூத்தாலும் காயா மரமும்உள; நன்றறியார்
மூத்தாலும் மூவார் நூல் தேற்ருதார்—பாத்திப்
புதைத்தாலும் நாருத வித்துள; பேதைக்(கு)
உரைத்தாலும் செல்லா துணர்வு. 5

அருஞ்சொற்பொருள்

1. பூதர்-பூத பைசாசங்கள். ஆதரே - அறிவில்லாதவர். என்பார் - என்று தற்பெருமை பேசுபவர். பண்டு - முன்னே.

2. வான்குருவி - தூக்கணங்குருவி. அரக்கு - செம்மெழுகு. வால் - வெண்மை. உலண்டு - புழுக்கள் (நூற்ற நூல்). கோல் தருதல் - கோல் புழுவால் செய்யப்படும் கூடு. வாய்ப்பன - செய்ய முடிவன. ஒல்காது - குறைவு படாமல்.

3. வருவாய் - பொருள் வரும் வழி. வழக்கு- செலவிடும் வழி. வெருவாமை - பயந்து ஒதுங்காமை. வீழ்ந்து - விரும்பி, தழுவி. தெய்வதை - தெய்வம்.

4. இல் - குடிச்சிறப்பு. தன்னே - தன் ஒழுக்கத்தை. கருதற்பாடு - மதிக்கப்படுதல். வாழான் - வாழாதவனுய்.

5. மூவார் - அறிவினுல் முதிரார், எதிர்மறைப் பலர்பால் வினைமுற்று. மூ - பகுதி. நாருத - முளைக்காத. உணர்வு செல்லாது- அறிவு தோன்ருது.

பயிற்சி

I. விடை எழுதுக :

1. ஏலாதி - குறிப்பு எழுதுக.
2. 'உளநாளால் வீடே புரிதல் விதி' - ஏன் ?
3. காலனே ஒழிக்க வழியாது ?
4. அன்பர்க்குரிய ஆறு குணங்கள் யாவை ?
5. உத்தமனுய் வாழும் வழி யாது ?
6. மறுமைப் பேறு பெறத்தக்கவர் எவர் ?
7. சிறுபஞ்ச மூலம் - குறிப்பு வரைக.
8. கற்றவர், கல்லாதவர், இருகால் எருது - எவரெவர்?
9. ஒருவர்க்கு ஒன்றே எளிது என்பது எப்படி விளக்கப்படுகிறது?

10. பெண்டிர் சிறப்பு யாது ?

11. எங்ஙனம் வாழ்தல் நன்று ?

12. அறிவுடையார், அறிவில்லார் எவ்வாறு விளக்கப்படுகின்றனர் ?

II. *1.* பிரித்து எழுதுக:

வாளஞ்சான், வனப்பஞ்சான், வரவொழிதல், புணர்வுவத்தல், அன்புடையார், விருந்திற்குலையான், ஈத்துண்பானேல், ஏதமில், துன்பமிலேம், கூடரக்கு, வழக்கறிந்து, விருந்தோம்பி, நன்றறியார்.

2. சேர்த்து எழுதுக:

செல்லாது+உணர்வு, புரிந்து+யார்க்கும், செயல்+ஆகா, வனப்பு+உடையேம், ஆள்+அஞ்சான், வீடு+எய்திய.

3. பொருள் எழுதுக :

மூப்பு, வனப்பு, நாள்எஞ்சாக் காலன், கவறல், மென்புடையார், உலையான், ஏதமில், வெருவாமை, நாரூத.

4. சொற்றொடர்களில் அமைக்க :

பேதை, கடைப்பிடித்து, வாழ்தல், வருவாய், வழிபாடு, கற்றவர், இளமை, பிணி, அஞ்சான், உண்ணுன், வாணிகம்.

III. தொழிற் பெயர், வினையால் அணையும் பெயர், வியங்கோள் வினைமுற்று ஆகியவற்றுக்கு இரண்டிரண்டு சான்றுகள் தருக.

4. புறநானூறு

புறம்+நான்கு+நூறு=புறநானூறு. புறப் பொருளைப் பற்றிய நானூறு பாக்கள் கொண்ட நூல். இது இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. இந்நூல் முடியுடை மூவேந்தர், குறுநில மன்னர், கொடைவள்ளல்கள், புலவர்கள் முதலானோரைப் பற்றியும், தமிழர் நாகரிகம், பண்பாடு, வாழ்க்கை முதலியன பற்றியும் அறிந்து கொள்ளுதற்குப் பயன்படும். இது எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாகும். இந்நூலில் உள்ள ஒவ்வொரு பாட்டும் தொல்காப்பியம் என்ற பழைய இலக்கண நூலுக்கு இலக்கியமாய் அமைந்துள்ளது.

இந்நூல் ஒருவரால் பாடப் பெற்றதன்று; 159 புலவர்கள் பல சமயங்களில் பல இடங்களில் பாடிய பாக்களைத் தொகுத்திருப்

பதே இந்நூலாகும். இதனைத் தொகுத்தவர் எவரெனத் தெரிய வில்லை. இது கடைச்சங்க கால நூலாகும்'

பின்வரும் செய்யுளை இயற்றியவர் கணியன் பூங்குன்றனர் ஆவார். இராமநாதபுர மாவட்டத்தில் இன்று மகிபாலன்பட்டி என வழங்கும் பூங்குன்றம் என்னும் ஊரினர். கணியன் என்பதால் இவர் வான நூற்புலமை யுடையோர் எனத் தெரிகிறது.

நன்மையும் தீமையும் பிறர்தர வ

யாதும் ஊரே யாவருங் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தணிதலும் அவற்றோர் அன்ன
சாதலும் புதுவ தன்றே வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன்றும் இலமே முனிவின்
இன்னு தென்றலும் இலமே மின்னெடு
வானம் தண்டுளி தலைஇ யானது
கல்பொரு திரங்கு மல்லற் பேரியாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியில் தெளிந்தனம் ஆகலின் மாட்சியில்
பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே.

அருஞ்சொற்பொருள்

கேளிர் - சுற்றத்தார்; நோதல் -வருந்துதல்; தணிதல் - நீத்தல்; முனிவின் - வெறுப்பு வந்தவிடத்து; தண்துளி - குளிர்ந்த மழைத் துளி; தலைஇ - பெய்தலால்; ஆனது - அமையாது; மல்லல் - வளம் பொருந்திய; புணை - தெப்பம்; திறவோர் - பெரியோர்; காட்சி - நூல்; நீர்வழிப் படூஉம், முறைவழிப் படூஉம் - இன்னிசை அளபெடைகள். தலைஇ - சொல்லிசை அளபெடை.

பயிற்சி

I விடை எழுதுக :

1. புறநானூறு — குறிப்பு வரைக.
2. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்'—இத்தொடரை விளக்குக.

3. ஊழின் வழியே எதுவும் நடக்கும் என்பது எவ்வாறு விளக்கப்பட்டுள்ளது ?

4. 'பெரியோரை வியத்தலும் இலம், சிறியோரை இகழ்தல் அதனினும் இலம்'—ஏன் ?

5. 'யாற்றுநீர் வழிப்படும் புணை'—இந்த உவமையை உவமேயத்துடன் பொருத்திக் காட்டுக.

II 1. பிரித்து எழுதுக :

இனிதென, இன்னுதென்றலும், பொருதிரங்கு, பேரியாற்று, மின்னொடு, ஆருயிர்.

2. சேர்த்து எழுதுக :

யாவரும்+கேளிர், புதுவது+அன்று, யாதும்+ஊரே, தண்+துளி, அவற்றோர்+அன்ன.

3. சொற்றொடர்களில் அமைக்க :

யாதும், கேளிர், வாரா, சாதல், இனிது, வானம், புணை, ஆருயிர்.

4. பொருள் கூறுக :

மகிழ்ந்தன்று, நீர்வழிப்படூஉம், முறைவழிப்படூஉம், வியத்தல், மாட்சி.

III 1. புறநானூறு மூலம் நாம் அடையக் கூடிய பயன் யாது ?

2. ஊழின் வலிமை குறித்துப் பூங்குன்றனர் கருத்தை ஒட்டி ஒரு கட்டுரை வரைக.

3. பண்புத்தொகை, இன்னிசை அளபெடை ஆகியவற்றுக்கு இரண்டிரண்டு சான்றுகள் தருக.

III. தொடர்நிலைச் செய்யுள்

1. மணிமேகலை

உலக அறவி புக்க காதை

செந்தமிழ் மொழியில் சுவைமிக்கு விளங்கும் ஐம்பெருங் காப்பியங்களில் மணிமேகலை ஒன்றாகும். மற்றவை சிந்தாமணி, சிலப்பதிகாரம், குண்டலகேசி, வளையாபதி என்பவை ஆகும். மணிமேகலை துறவு என்னும் வேறு பெயரும் இந்நூலுக்கு வழங்கப்படுகிறது. இந்நூல் முப்பது காதைகளை உடையது. சிலப்பதிகாரக் கதைத் தலைவனாகிய கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்த மணிமேகலையின் வரலாற்றை இந்நூல் அழகுபட எடுத்துரைக்கிறது.

இந்நூலாசிரியர் பெயர் மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் என்பதாகும். இவர் ஊர் சீத்தலை. இவர் மதுரையில் பதினெட்டு வகைக் கூல (தானிய) வாணிகம் செய்தார். காலம்—கடைச்சங்க காலம். கடைச் சங்கப் புலவருள் இவரும் ஒருவர். இவர் பௌத்த சமயத்தவர். சீத்தலை என்பதைச் சீழ்+தலை எனப் பிரித்துக் கதை யொன்றும் கூறுவார்கள். இஃது வெறுங் கட்டுக் கதையாகும்.

மணிமேகலை அமுதசுரபி மூலம் ஏற்போர் பசியைப் போக்கி வந்தாள். இது கண்ட யானைத்தீ நோயால் பீடிக்கப்பட்டிருந்த காயசண்டிகை, மணிமேகலையிடம் அமுது வாங்கியுண்டு தனது தீராப் பசியைத் தீர்த்துக்கொண்டாள். பிறகு, சக்கரவாளக் கோட்டத்திலுள்ள உலக அறவி எனும் அம்பலம் சென்று அங்குள்ளாருக்கு உதவுவாறு மணிமேகலையை வேண்டினள். மணிமேகலை அவ்வாறே உலக அறவி சென்று பசியால் வாடிய அனைவருக்கும் உணவளித்தாள். இந்தப் பகுதியே இங்குப் பாடமாக வந்துள்ளது.

அமுதசுரபியின் பெருமை

பத்தினிப் பெண்டிர் பாத்தூ ணேற்ற
பிச்சைப் பாத்திரப் பெருஞ்சோற் றமலை
அறத்தின் ஈட்டிய ஒண்பொருள் அறவோன்
திறத்து வழிப்படூஉஞ் செய்கை போல

வாங்குகை வருந்த மன்னுயிர்க் களித்துத்
தான்தொலை வில்லாத் தகைமை நோக்கி

காயசண்டிகையின் யானைப்பசி தணிதல்

யானைத் தீநோய் அகவயிற் றடக்கிய
காயசண் டிகையெனுங் காரிகை வணங்கி,
"நெடியோன் மயங்கி நிலமிசைத் தோன்றி
அடலரு முந்நீர் அடைத்த ஞான்று
குரங்குகொணர்ந் தெறிந்த நெடுமலை யெல்லாம்
அணங்குடை அளக்கர் வயிறு புக்காங்(கு)
இட்ட தாற்றுக் கட்டழற் கடும்பசிப்
பட்டேன் என்றன் பழவினைப் பயத்தால்
அன்னை! கேணீ ஆருயிர் மருத்துவி!
துன்னிய என்னோய் துடைப்பாய்" என்றலும்,
எடுத்த பாத்திரத் தேந்திய வமுதம்
பிடித்தவள் கையிற் பேணினள் பெய்தலும்,
வயிறுகாய் பெரும்பசி நீங்கி மற்றவள்
துயரம் நீங்கித் தொழுதனள் உரைக்கும்

காயசண்டிகை வரலாறு

"மாசில் வாலொளி வடதிசைச் சேடிக்
காசில்காஞ் சனபுரக் கடிநகர் உள்ளேன்;
விஞ்சையன் றன்னொடென் வெவ்வினை யுருப்பத்
தென்றிசைப் பொதியில் காணிய வந்தேன்;
கடுவரல் அருவிக் கடும்புனல் கொழித்த
விடுமணற் கானியாற் றியைந்தொருங் கிருந்தேன்
புரிநூன் மார்பிற் றிரிபுரி வார்சடை
மரவுரி யுடையன் விருச்சிகன் என்போன்
பெருங்குலைப் பெண்ணைக் கருங்கனி யனையதோர்
இருங்கனி நாவற் பழமொன் றேந்தித்
தேக்கிலை வைத்துச் சேணுறு பரப்பிற்

பூக்கமழ் பொய்கை ஆடச் சென்றான்
தீவினை உருத்தலிற் செருக்கொடு சென்றேன்;
காலால் அந்தக் கருங்கனி சிதைத்தேன்;
உண்டல் வேட்கையின் வரூஉம் விருச்சிகன்
கண்டனன் என்னைக் கருங்கனிச் சிதைவுடன்
'சீர்திகழ் நாவலிற் றிப்பிய மானது
ஈரா றாண்டில் ஒருகனி தருவது
அக்கனி யுண்டோர் ஆறீ ராண்டு
மக்கள் யாக்கையின் வரும்பசி நீங்குவர்
பன்னீ ராண்டில் ஒருநாள் அல்ல(து)
உண்ணா நோன்பினேன் உண்கனி சிதைத்தாய்
அந்தரஞ் செல்லும் மந்திரம் இழந்து
தந்தித் தீயாற் றனித்துய ருழந்து
முந்நா லாண்டின் முதிர்கனி நானீங்(கு)
உண்ணா நாளுன் னுறுபசி களைக' என
அந்நாள் ஆங்கவன் இட்ட சாபம்
இந்நாள் போலும் இளங்கொடி கெடுத்தனை

காயசண்டிகை புகார் புகுதல்

வாடுபசி உழந்து மாமுனி போயபின்
பாடிமிழ் அருவிப் பயமலை ஒழிந்தென்
அலவலைச் செய்திக் கஞ்சின னகன்ற
இலகொளி விஞ்சையன் விழுமமோ டெய்தி
'ஆரணங் காகிய அருந்தவன் தன்னாற்
காரண மின்றியுங் கடுநோ யுழந்தனை;
வானூ டெழுகென மந்திரம் மறந்தேன்;
ஊனுயிர் நீங்கும் உருப்பொடு தோன்றி
வயிறுகாய் பெரும்பசி வருத்தும் என்றேற்குத்
தீங்கனி கிழங்கு செழுங்காய் நல்லன
ஆங்கவன் கொணரவும் ஆற்றேன் ஆக
நீங்கல் ஆற்றான் நெடுந்துயர் எய்தி

ஆங்கவன் ஆங்கெனக் கருளொடும் உரைப்போன்
'சம்புத் தீவினுள் தமிழக மருங்கில்
கம்ப மில்லாக் கழிபெருஞ் செல்வர்
ஆற்றா மாக்கட் காற்றுந்துணை யாகி
நோற்றோ ருறைவதோர் நோனகர் உண்டாற்
பலநா ளாயினும் நிலனெடு போகி
அப்பதிப் புகு'கென் றவனருள் செய்ய
இப்பதிப் புகுந்தீங் கியானுறை கின்றேன்
இந்திர கோடணை விழவணி வருநாள்
வந்து தோன்றியிம் மாநகர் மருங்கே
என்னுறு பெரும்பசி கண்டனன் இரங்கிப்
பின்வரும் யாண்டவ னெண்ணினன் கழியும்
தணிவில் வெம்பசி தவிர்த்தனை வணங்கினேன்

உலக அறவியின் இயல்பு

மணிமே கலைஎன் வான்பதிப் படர்கேன்
துக்கந் துடைக்குந் துகளறு மாதவர்
சக்கர வாளக் கோட்டமுண் டாங்கதிற்
பலர்புகத் திறந்த பகுவாய் வாயில்
உலக வறவி யொன்றுண் டதனிடை
ஊரூர் ஆங்கண் உறுபசி உழந்தோர்
ஆரும் இன்மையின் அரும்பிணி யுற்றோர்
இடுவோர்த் தேர்ந்தாங் கிருப்போர் பலரால்
வடுவாழ் கூந்தல்! அதன்பாற் போ''கென்(று)
ஆங்கவள் போகிய பின்னர் ஆயிழை

மணிமேகலை உலக அறவி புகுதல்

ஓங்கிய வீதியின் ஒருபுடை ஒதுங்கி
வலமுற மும்முறை வந்தனை செய்தவ்
வுலக வறவியி னொருதனி யேறிப்
பதியோர் தம்மொடு பலர்தொழு தேத்து
முதியோள் கோட்டம் மும்மையின் வணங்கிக்
கந்துடை நெடுநிலை காரணம் காட்டிய

தந்துணைப் பாவையைத் தான்தொழு தேத்தி
'வெயில்சுட வெம்பிய வேய்கரி கானத்துக்
கருவி மாமழை தோன்றிய தென்னப்
பசிதின வருந்திய பைதன் மாக்கட்(கு)
அமுத சுரபியோ டாயிழை தோன்றி
"ஆபுத் திரன்கை அமுத சுரபியிஃ(து)
யாவரும் வருக ஏற்போர் தாம்"என
ஊணொலி அரவத் தொலியெழுந் தன்றே
யாணர்ப் பேரூர் அம்பல மருங்கென்

அருஞ்சொற்பொருள்

1—25 வரிகள்: பாத்தூண் - பகுத்துண்ணும் உணவு. சோற்றமலை - சோற்றுத் திரளை. ஒண் பொருள் - சிறந்த பொருள். வழிப்படூஉம் - இன்னிசை அளபெடை. 3,4 வரிகள் உவமை. பெருஞ்சோறு=பெருமை+சோறு - பண்புத்தொகை.

அகவயிறு - தன் வயிறு. அடலருமுந்நீர் - வெல்லுதற்கரிய கடல். நெடியோன் - திருமால். மிசை - 7 ஆம் வேற்றுமை உருபு. முந்நீர் - ஆற்றுநீர், ஊற்றுநீர், மழைநீர் என மூவகை நீர் சேர்ந்த கடல். ஆக்கல், காத்தல், அழித்தல் என்னும் முத்தன்மையுடைய கடல் என்றும் கூறலாம். அணங்குடை - வருத்தந்தரும். அளக்கர் - கடல். புக்காங்கு - புகுந்தாற்போல. அழல் கடும்பசி - தீயினை யொத்த கடுமையான பசி. கேணீ - கேள்+நீ. 9—12 வரிகள் உவமை. கடும்பசி - கடுமை+பசி, பழவினை - பழமை+வினை - பண்புத் தொகைகள். துன்னிய - நெருங்கிய. துடைப்பாய் - நீக்குவாய். வால் ஒளி - வெள்ளிய ஒளி. வடதிசை சேடி - வட திசையில் உள்ள விஞ்சையருலகு. காசில் - குற்றமற்ற. கடிநகர் - காவல் பொருந்திய நகரம். வெவ்வினை - கொடிய வினை. காணிய - செய்யிய என்னும் வாய்பாட்டு வினை எச்சம்.

26—60 வரிகள்: புரிநூல் - முறுக்கிய பூணூல். இருங்கனி - பெருமை பொருந்திய கனி. வார்சடை - நீண்ட சடை. பெண்ணைக் கருங்கனி - கருமையான பனம் பழம். கருங்கனி - கருமை+கனி—பண்புத்தொகை. சேண்+நாறு - சேணாறு—நீண்டதொலை மணம் வீசுகின்ற. வரூஉம் - இன்னிசை அளபெடை. திப்பியது—தெய்வத் தன்மை உடையது. திகழ் நாவல் - வினைத்தொகை. அந்தரம் - விண்மீது. தந்தித் தீ - யானைத் தீ. உண்ணா—ஈறுகெட்ட எதிர் மறைப் பெயரெச்சம். உண் கனி—வினைத்தொகை. உழந்து -

வருந்தி. உறுபசி - மிக்க பசி, வினைத்தொகை. இளங்கொடி - பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. முதிர்கனி - வினைத்தொகை. வாடுபசி - வினைத்தொகை. மாமுனி - உரிச்சொல் தொடர். இலகொளி - விளங்குகின்ற ஒளி. விழுமம் - துன்பம். எய்தி - அடைந்து. ஆரணங்கு - தெய்வத்தன்மை. கடு நோய் - பண்புத்தொகை. எழுக - வியங்கோள் வினைமுற்று. ஊன் - உடம்பு. உருப்பொடு - வெப்பத்தோடு. நெடுந்துயர்-பண்புத் தொகை.

61—85 வரிகள் : கம்பம் இல்லா - நடுக்கம் இல்லாத. கழி பெருஞ் செல்வம் - மிக்க பெருஞ்செல்வம். ஆற்று மாக்கள் - வறியவர். ஈங்கு+யான்—ஈங்கியான் - குற்றியலிகரம். நிலனொடு போகி - காலால் நடந்து சென்று. பெரும்பசி - பண்புத்தொகை. வெம்பசி, கொடிய பசி - பண்புத் தொகைகள். துகளறு - குற்றமற்ற. பகு வாய் - பிளந்த வாய். ஆரும் இன்மையின் - பாதுகாப்போர் இல்லாமையினால். வடுவாழ் கூந்தல் - வகிர் பொருந்திய குழலினை யுடையாய். ஆயிழை - வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை.

86—98 வரிகள் : முதியோள் கோட்டம் - மூத்தவளாகிய சம்பாபதியின் கோவில். மும்மை - மனம், மொழி, மெய். கந்து - தூண். நெடுநிலை - பழவினை. வேய்கரி கானத்து - மூங்கில் கரிந்த காட்டின் கண். கருவி மாமழை - தொகுதி யாகிய முகில்கள் தோன்றினால் போல. பைதல் - துன்பமுடைய. மாமழை - உரிச்சொல் தொடர். ஆயிழை - மணிமேகலை, வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. ஊண் ஒலி-உணவு உண்ணும் ஆரவாரம். யாணர்-புது வருவாய். மருங்கென்-அம்பலத்தின் கண்.

பயிற்சி

I விடை எழுதுக :

1. மணிமேகலை, சீத்தலைச் சாத்தனார் — குறிப்பு வரைக.
2. அமுதசுரபியின் பெருமை எவ்வாறு விளக்கப்படுகிறது ?
3. காயசண்டிகை, பத்தினிப் பெண்டிர், விருச்சிக முனிவர், உலக அறவி—குறிப்பு வரைக.
4. காயசண்டிகையின் யானைத் தீ நோய்க்குக் காரணம் என்ன ?
5. காயசண்டிகையின் நோய் எவ்வாறு அகன்றது ?
6. காயசண்டிகை பொதிகை மலைக்கும், பின் புகார் நகருக்கும் வந்ததேன் ?

7. விருச்சிக முனிவர் இட்ட சாபம் யாது ?

8. விஞ்சையன் புகார் நகர் பற்றிக் கூறியவை யாவை ?

9. மணிமேகலை உலக அறவியில் என்ன செய்தாள் ?

II 1. பிரித்து எழுதுக :

பாத்தூணேற்ற, பெருஞ்சோற்றமலை, இட்டதாற்று, கேணீ, வாலொளி, கானியாற்றியைந் தொருங்கிருந்தேன், தேக்கிலே.

2. சேர்த்து எழுதுக :

என்+நோய், பாத்திரத்து+ஏந்திய+அமுதம், பழம்+ஒன்று+ஏந்தி. ஈர்+ஆறு+ஆண்டில், தனி+துயர்+உழந்து, நோற்றோர்+உறைவது+ஓர், புகுக+என்று+அவன்+அருள்+செய்ய, மூன்று+நீர்.

3. பொருள் வரைக :

மன்னுயிர், காரிகை, மருத்துவி, உருப்ப, தீங்கனி, பொய்கை, என்றேற்கு, மாதவர், நோனகர்.

4. சொற்றொடரில் அமைத்து எழுதுக :

நெடியோன், பெருஞ்சோறு, கடும்பசி, அந்தரம், கடுநோய், மாமழை.

III 1. மணிமேகலை காயசண்டிகையின் பசித்துயர் தீர்த்த நிகழ்ச்சியை ஒரு கட்டுரையாக வரைக.

2. முற்றெச்சம், பண்புத்தொகை, உரிச்சொல் தொடர் வினைத்தொகை ஆகியவற்றுக்கு இரண்டிரண்டு சான்றுகள் தருக.

2. பெருங்கதை

குணாட்டியர் எனும் வடமொழியாளர் பைசாச மொழியில் எழுதிய நூலைத் தழுவி, ஐந்து காண்டங்களாக இந்நூல் இயற்றப் பெற்றுள்ளது. இது கோசாம்பி மன்னனாகிய உதயணன் கதையை அடிப்படையாகக்கொண்டு பல கிளைக்கதைகளைப் பெற்று விளங்குகிறது. இந்நூலினை இயற்றியவர் கொங்குவேளிர் என்பவராவர். இவர் கொங்கு நாட்டில் விசயமங்கலம் என்னும் ஊரில் பிறந்தவர். காலம்: 7 ஆம் நூற்றாண்டு. சமயம்—சமணம். இது பல பெரிய கதைகளைக் கொண்ட நூல் ஆதலின் பெருங்கதை என வழங்கப்படுகிறது. கதை, மாக்கதை என்னும் வேறு பெயர்களும் இதற்கு உண்டு. உதயணனின் மனைவியராகிய வாசவதத்தையும் பதுமாவதியும் தங்கள் தோழியர் பந்தாடுதலின் திறமையினைக் கண்டு மகிழ்வதாக உள்ள பகுதி இதுவாகும்.

பந்தடி கண்டது

விராய்மலர்க் கோதை இராசனை என்போள்
கணங்குழை முகத்தியை வணங்கினள் புகுந்து
மணங்கமழ் கூந்தலும் பிறவுந் திருத்தி,
வெண்மையுஞ் செம்மையுங் கருமையும் உடையன
தண்வளி யெறியினுந் தாமெழுந் தாடுவ
கண்கவர் அழகொடு நெஞ்சக லாதன
ஒண்பந் தோரேழ் கொண்டன ளாகி,
ஒன்ருென் ருெற்றி யுயரச் சென்றது;
பின்பின் பந்தொடு வந்துதலை சிறப்பக்
கண்ணிமை யாமல் எண்ணுமி னென்று
வண்ண மேகலை வளையொடு சிலம்பப்
பாடகக் கால்மிசைப் பரிந்தவை விடுத்தும்
சூடக முன்கையிற் சுழன்றுமா றடித்தும்
அடித்த பந்துகள் அங்கையில் அடக்கியும்
மறித்துத் தட்டியும் தனித்தனிப் போக்கியும்
பாயிர மின்றிப் பல்கலன் ஒலிப்ப
ஆயிரங் கைநனி அடித்தவள் அகல,
அன்ன மென்னடை அவந்திகை யுவந்தவள்
கண்மணி யனைய ஒண்ணுதற் பாவை
காஞ்சன மாலை வாங்குபு கொண்டு
பிடித்த பூம்பந் தடித்துவிசும் பேற்றியும்,
அடித்த பந்தால் விடுத்தவை யோட்டியும்
குழன்மேல் வந்தவை குவிவிரற் கொளுத்தியும்
நிழன்மணி மேகலை நேர்முகத் த்டித்தும்
கண்ணியிற் சார்த்தியும் கைக்குட் போக்கியும்
உண்ணின்று திருத்தியும் விண்ணுறச் செலுத்தியும்
வேயிருந் தடந்தோள் வெள்வளை யார்ப்ப
ஆயிரத் தைந்நூ றடித்தனள் அகலச்
செயிர்தீர் பதுமைதன் செவிலித் தாய்மகள்
அயிரா பதியெனும் அம்பணைத் தோளி

மானேர் நோக்கிற் கூனி மற்றவள்
தானேர் வாங்கித் தனித்தனிப் போக்கி
நாற்றிசைப் பக்கமும் நான்கு கோணமும்
காற்றினுங் கடிதாக் கலந்தன ளாகி
அகைத்தகைத் தட்டியுங் குதித்துமுன் புரியா
அகங்கை யொட்டியும் புறங்கையிற் புகுத்தியும்
தோண்மேற் பாய்ச்சியும் மேன்மேற் சுழன்றும்
வாக்குறப் பாடியும் மேற்படக் கிடத்தியும்
நோக்குநர் மகிழப் பூக்குடல் முடித்தும்
பட்ட நெற்றியிற் பொட்டிடை யேற்றும்
மற்றது புறங்கையில் தட்டினள் ஒற்றியும்
முன்னிய வகையால் முன்னீ ராயிரங்
கைந்நனி யடித்துக் கையவள் விடலும்
பேசிய முறைமையின் ஏசா நல்லெழில்
வாசவ தத்தைக்கு வலத்தோள் அனைய
அச்சமில் காரிகை விச்சுவ லேகையென்
றுற்ற நாமப் பொற்றொடிக் குறளி
"யானிவண் நிற்பக் கூனியைப் புகழ்தல்
ஏலா தெ"ன்றவள் சேலந் திருத்திக்
கருவிக் கோல்நனி கைப்பற் றினளாய்
முரியுங் காலைத் தெரிய மற்றதில்
தட்டினள் ஒன்றொன் றுற்றனள் எழுப்பிப்
பத்தியிற் குதித்துப் பறப்பன ளாகியும்
வாங்குபு கொண்டு வானவிற் போல
நீங்கிப் புருவம் நெரிவுடன் எற்றியும்
முடக்குவிரல் எற்றியும் பரப்புவிரற் பாய்ச்சியும்
தனித்துவிரல் தரித்தும் மறித்தெதிர் அடித்தும்
குருவிக் கவர்ச்சியின் அதிரப் போக்கியும்
அருவிப் பரப்பின் முரியத் தாழ்த்தியும்
ஒருபாற் பந்தின் ஒருபாற் பந்துற
இருபாற் றிசையும் இயைவன ளாகிப்
பாம்பொழுக் காக ஓங்கின ஓட்டியும்

காம்பிலை வீழ்ச்சியின் ஆங்கிழித் திட்டும்
முன்னிய வகையான் முன்னீ ராயிரத்
தைந்நூ றடித்துப் பின்னவள் விடலும்

சீரியல் பதுமைதன் சிந்தைக் கொப்பெனும்
காரியை மயிலென ஆரியை புகுதர,
நுணங்குகொடி மருங்குல் நோவ அசைஇ
மணங்கமழ் கூந்தல் வகைபெற முடித்தும்
சூடக மேற்றியும் பாடகந் திருத்தியும்

நாடக மகளிரின் நன்கனம் உலாவியும்
இருகையும் அடிப்ப விசும்பொடு நிலத்திடை
திரிபுவீழ் புட்போல் ஒருவயின் நில்லா
தெழுந்துவீழ் பந்தோ டெழுந்துசெல் வனள்போல்
கருதரு முரிவொடு புருவமுங் கண்ணும்

வரிவளைக் கையும் மனமும் ஓட
அரியார் மேகலை ஆர்ப்பொடு துளங்கவும்
அரிமலர்க் கோதையொ டணிகலஞ் சிதறவும்
இருந்தனள் நின்றனள் என்பதை யறியார்,
பரந்த பஃறேள் வடிவின ளாகித்

திரிந்தனள் அடித்துத் திறத்துளி மறித்தும்
முரியும் தொழிலொடு மூவா யிரங்கை
முறையின் ஏற்றிப் பந்துநிலத் திட்டாள்.

அருஞ்சொற்பொருள்

1—25 : கணங்குழை முகத்தியை-பதுமாவதியை. **தண்வளி** - குளிர்ச்சி பொருந்திய காற்று. ஒண்பந்து - ஒளிபொருந்திய பந்து. மேகலை - இடையில் அணியும் அணிகலன். பாடகம் - காலணி. சூடகம் - கையணி. பாயிரம் - முன்னுரை. அவந்திகை - அவந்தி என்னும் நாட்டிற் பிறந்த வாசவத்தை. விசும்பு - ஆகாயம். நிழல் - ஒளி. கண்ணி - தலைமாலை.

26—50 : வேயிருந்தடந்தோள் - பசுமையான மூங்கிலை யொத்த தோள்களையுடைய. ஆர்ப்ப - ஒலிக்க. செயிர்தீர் - குற்றமற்ற. அயிராபதி என்பவள் முதுகு கூனனவள். அம்பணைத் தோளி-

அழகிய மூங்கிலைப் போன்ற தோள்களையுடையவள். நான்கு கோணம் - வடமேற்கு, தென்மேற்கு, வடகிழக்கு, தென்கிழக்கு. அகைத்த - செலுத்திய. ஏசா நல்லெழில்-குற்றமற்ற சிறந்த அழகு. காரிகை - பெண். குறளி - குறுகிய வடிவமுடையவள். சேலம் - ஆடை. கருவிக் கோல் - பந்தடிக்க உதவும் கோல்.

51—80 : வாங்குபு - வாங்கி, இது 'செய்பு' என்னும் வாய்பாட்டு வினை எச்சம். முடக்குவிரல் - மடித்தவிரல். பரப்பு விரல் - விரித்த விரல். குருவிக் கவர்ச்சி - குருவி பல வழிகளாகச் செல்லுதலைப் போல. முரிய -வளையும்படி. பாம்பு ஒழுக்கு - பாம்பு செல்லுதலைப் போல வளைந்து செல்லுதல். காம்பிலை வீழ்ச்சியின் - மூங்கில் இலை விழுதலைப்போல. புகுதர - புகவும். மருங்குல் - பக்கம், இடை. அசைஇ - சொல்லிசை அளபெடை. நன்கனம் - நன்றாக. துளங்க - நடுங்க. அரிமலர் - நல்ல நிறத்தையுடைய மலர்களணிந்த. பஃறோள்-பலதோள்.

பயிற்சி

I. விடை எழுதுக :

1. பெருங்கதை - குறிப்பு வரைக.
2. பதுமாவதி, வாசவதத்தை ஆகியோரின் தோழிகள் யாவர் ?
3. பந்துகளின் வகைகளை விளக்குக.
4. இராசனை பந்தாடிய விதம் யாது ?
5. காஞ்சன மாலை எங்ஙனம் பந்தாடினாள் ?
6. அயிராபதி பந்தடித்த வகையினை விளக்குக.
7. விச்சுவலேகை பந்தடித்த வகை யாது ?
8. ஆரியை பந்தாடிய விதம் யாது ?

II. 1. பிரித்து எழுதுக:

தாமெழுந்தாடுவ, நெஞ்சகலாதன, பந்தோரேழ், ஒன்றொன்றொற்றி, சுழன்றுமாறடித்தும், உண்ணின்று, வேயிருதடந்தோள், அகைத்தகை, முன்னீராயிரத்தைந்நூறடித்து.

2. சேர்த்து எழுதுக :

மற்று + அது, கலந்தனள் + ஆகி, தோள் + மேல் + பாய்ச்சி, பொன் + தொடி, ஏலாது + என்று + அவள், ஒன்று + ஒன்று + உற்றனள், மறித்து + எதிர், பல + தோள்.

3. பொருள் வரைக :

வண்ண, சிலம்ப, பல்கலன், ஒண்ணுதற்பாவை, முன்னிய, நுணங்குகொடி, திரிபுவீழ் புட்போல், ஒருவயின்.

4. சொற்றொடர்களில் அமைத்து எழுதுக :

மணங்கமழ் கூந்தல், கண்கவர், கண்ணிமையாமல், சுழன்று, அடக்கி, தனித்தனி, நாற்றிசை, புறங்கை.

III. 1. பெண்கள் பந்தாடிய சிறப்பினை ஒரு கட்டுரையாக வரைக.

2. பண்புத் தொகை, அடுக்குத்தொடர், வினைத்தொகை - இவற்றிற்கு ஒவ்வொரு சான்று தருக.

3. வில்லி பாரதம்

கன்னனது கடைநாள்

வில்லி என்பது வில்லிபுத்தூரார் என்பவரைக் குறிக்கும். வில்லி புத்தூரார் என்பது இவரது முழுப்பெயர். இவர் தென்ஆர்க்காடு மாவட்டத்தில் சனியூரில் பிறந்தவர். வைணவ சமயத்தினர்; சிறந்த கவிஞர்; நடுநாட்டில் வக்கபாகை என்னும் பகுதிக்கு அரசனாக இருந்த வரபதி யாட்கொண்டான் என்பவன் விரும்பிய படி இவர் பாரதத்தைப் பாடினார். வில்லிபுத்தூரார் பாடிய பாரத நூல் 4440 பாக்களைக் கொண்டது; முதல் பத்துப்பருவங்களைக் கொண்டது. இற்றைக்கு இருநூறு ஆண்டுகட்கு முன் வாழ்ந்த நல்லாப்பிள்ளை என்ற கவிஞர், வில்லிபுத்தூரார் பாடாது விட்ட பருவங்களையும் கதைகளையும் விரித்துப் பாடி வில்லிபாரதத்துடன் சேர்த்துப் பதினெயாயிரம் பாடல்களாக வெளியிட்டார். அந்நூல் நல்லாப்பிள்ளை பாரதம் என வழங்குகின்றது.

நமது பாடப்பகுதி கன்ன பருவத்தைச் சேர்ந்தது. பதினேழாம் நாட் போரில் கன்னன் இறத்தலைக் கூறுவது.

வேதியன் வடிவில் கண்ணன்

அத்தவெற் பிரண்டு விற்கிடை யெனப்போய்
ஆதவன் சாய்தல்கண் டருளி
முத்தருக் கெல்லா மூலமாய் வேத
முதற்கொழுந் தாகிய முகுந்தன்

சித்திரச் சிலைக்கை விசயனைச் "செருநீ
யொழிகெ"னத் தேர்மிசை நிறுத்தி
மெய்த்தவப் படிவ வேதிய னாகி
வெயிலவன் புதல்வனை அடைந்தான். 1

வேதியன் கேட்ட தானம்

தாண்டிய தரங்கக் கருங்கட லுடுத்த
தரணியிற் றளர்ந்தவர் தமக்கு
வேண்டிய தருதி நீயெனக் கேட்டேன்;
மேருவி னிடைத்தவம் பூண்டேன்;
ஈண்டிய வறுமைப் பெருந்துயர் உழந்தேன்;
இயைந்ததொன் றிக்கணத் தளிப்பாய்;
தூண்டிய கவனத் துரகதத் தடந்தேர்
சுடர்தரத் தோன்றிய தோன்றால்! 2

என்றுகொண் டந்த அந்தணன் உரைப்ப,
இருசெவிக் கமுதெனக் கேட்டு,
வென்றிகொள் விசயன் விசயவெங் கணையால்
மெய்தளர்ந் திரதமேல் விழுவோன்,
நன்றென நகைத்துத் "தரத்தகு பொருணீ
நவில்கெ"ன நான்மறை யவனும்,
"ஒன்றிய படிநின் புண்ணிய மனைத்தும்
உதவுகெ"ன் றலுமுள மகிழ்ந்தான். 3

கன்னனது கொடை

ஆவியோ நிலையிற் கலங்கிய தியாக்கை
அகத்ததோ புறத்ததோ அறியேன்;
பாவியேன் வேண்டும் பொருளெலா நயக்கும்
பக்குவந் தன்னில்வந் திலையால்;
ஓவிலா தியான்செய் புண்ணிய மனைத்தும்
உதவினேன் கொள்கநீ; உனக்குப்
பூவில்வாழ் அயனும் நிகரலன் என்றால்
புண்ணியம் இதனினும் பெரிதோ! 4

இரத்தத்தால் தத்தம்

என்னமுன் மொழிந்து கரங்குவித் திறைஞ்ச,
இறைஞ்சலர்க் கெழிலியே றனையான்
கன்னனை யுவகைக் கருத்தினல் நோக்கிக்
''கைப்புன லுடன்றரு கெ'' ன்ன
அன்னவ னிதயத் தம்பின்வா யம்பால்
அளித்தலும் அங்கையால் ஏற்ருன்
முன்னமோர் அவுணன் செங்கைநீர் ஏற்று
மூவுல கமுமுடன் கவர்ந்தோன் 5

கன்னன் வேண்டுகோள்

மல்லலந் தொடைய னிருபனை முனிவன்
மகிழ்ந்து,''நீ வேண்டிய வரங்கள்
சொல்லுக; உனக்குத் தருதும்''என் றுரைப்பச்
சூரன்மா மதலையுஞ் சொல்வான்;
''அல்லல்வெவ் வினையால் இன்னமுற் பவமுண்
டாயினு மேழெழு பிறப்பும்
இல்லையென் றிரப்போர்க் கில்லையென் றுரையா
இதயநீ அளித்தருள்'' என்ருன். 6

கண்ணன் கருணை

மைத்துனன் உரைத்த வாய்மைகேட் டையன்
மனமல ருகந்துகந் தவனைக்
கைத்தல மலரான் மார்புறத் தழுவிக்
கண்மலர்க் கருணைநீ ராட்டி,
''எத்தனை பிறவி யெடுக்கினும் அவற்றுள்
ஈகையுஞ் செல்வமும் எய்தி
முத்தியும் பெறுதி முடிவில்''என் றுரைத்தான்
மூவரும் ஒருவனு மூர்த்தி. 7

கன்னன் களிப்பு

''அருந்தழன்மா மகம்புரிந்துங் கடவுட் கங்கை
ஆதியாம் புனல்படிந்தும் அனிலயோகத்
திருந்துமணி மலர்தூவிப் பூசை நேர்ந்தும்,
எங்குமா கியவுன்னை யிதயத்துள்ளே

திருந்தநிலை பெறக்கண்டும் போக மெல்லாம்
சிறுக்கியனைத் துயிருக்குஞ்செய்ய வொண்ணுப்
பெருந்தவங்கள் மிகப்பயின்றும் பெறுதற் கெட்டாப்
பெரும்பயனின் றிருவருளாற் பெறப்பெற் றேனே. 8

"தருமன்மகன் முதலான அரிய காதற்
றம்பியரோ டெதிர்மலைந்து தறுக ணுண்மைச்
செருவிலென துயிரனைய தோழற் காகச்
செஞ்சோற்றுக் கடன்கழித்தேன் தேவர் கோவுக்(கு)
உரைபெறுநற் கவசகுண் டலமு மீந்தேன்;
உற்றபெரு நல்வினைப்பே றுனக்கே தந்தேன்;
மருதிடைமுன் றவழ்ந்தருளுஞ் செங்கண் மாலே!
மாதவத்தா லொருதமியன் வாழ்ந்த வாறே. 9

வான்பெற்ற நதிகமழ்தாள் வணங்கப் பெற்றேன்;
மதிபெற்ற திருவுளத்தால் மதிக்கப் பெற்றேன்;
தேன்பெற்ற துழாயலங்கற் களப மார்புந்
திருப்புயமுந் தைவந்து தீண்டப் பெற்றேன்;
ஊன்பெற்ற பகழியினு லழிந்து வீழ்ந்தும்
உணர்வுடனின் றிருநாம முரைக்கப் பெற்றேன்;
யான்பெற்ற பெருந்தவப்பே றென்னை யன்றி,
இருநிலத்திற் பிறந்தோரில் யார்பெற் ருரே!" 10

அருஞ்சொற்பொருள்

1. அத்த வெற்பு - சூரியன் மறையும் மலை. விற்கிடை - வில் லளவுத் தொலைவு. ஆதவன் - சூரியன். முத்தர்-ஞானிகள். சித்திர - அழகிய. படிவம் - வேடம். வேதியன் - வேதங்களில் வல்லவன். வெயிலவன் புதல்வன் - சூரியன் மகனுகிய கன்னன்.

2. தரங்கம் - அலை. தரணி - உலகம். தருதி - தருகிருய். ஈண்டிய - மிகுந்த. இயைந்தது - பொருந்துவது, உன்னுல் தரத்தகுவது. துரகம் - குதிரை. சுடர் - சூரியன். தோன்ருல் - சிறந்தவனே.

3. நவில்க - சொல்லுவாயாக, வியங்கோள் வினைமுற்று. ஒன்றியபடி - சேர்ந்துள்ளபடி. விசயவெங்கணை - வெற்றி பொருந்திய கூர்மையான அம்பு. பொருணீ-பொருள்+நீ. நான்மறையவன்- நான்கு வேதங்களில் வல்ல வேதியன்.

4. ஆவி - உயிர். யாக்கை - உடல். நயக்கும் - அளிக்கும். ஒவிலாது - இடைவிடாமல், குறைவின்றி. அயன் - பிரமன்.

5. முன் மொழிந்து - உபசாரங்கூறி. இறைஞ்சலர் - வணங்காதவர். இறைஞ்ச - வணங்க. எழிலியேறு - இடி. உவகை - மகிழ்ச்சி. கைப்புனலுடன் தருக-தாரை வார்த்துத் தருக. 'முன்னமோர்...கவர்ந்தோன்'—மகாபலிச் சக்கரவர்த்தியிடம் மூன்றடி மண் கேட்டு மூவுலகமும் கவர்ந்த திருமால். இதயத்து அம்பின் வாய் அம்பால் - இதயத்தில் பதிந்திருந்த அம்பின் வழி ஒழுகிய இரத்தமாகிய நீரால். அப்பு - அம்பு, மெலித்தல் விகாரம். அப்பு - தண்ணீர். அவுணன் - மகாபலிச் சக்கரவர்த்தி.

6. மல்லல் - வளம். அம் - அழகிய. தொடையல் - மாலை. நிருபன் - மன்னன், கன்னன். சூரன் - சூரியன். மாமதலை - சிறந்த மகன். உற்பவம் - பிறப்பு. அல்லல் - துன்பம். இதயம் - மனம்.

7. மைத்துனன் - கன்னன், கண்ணனுக்கு அத்தையாகிய குந்தியின் மகன் கன்னன் ஆதலால் மைத்துனன் என்றார். வாய்மை - உண்மை. ஐயன் - பெரியோனாகிய கண்ணன். உகந்து - மகிழ்ந்து. மனமலர், கைத்தலமலர், கண்மலர் - உருவகங்கள். பெறுதி - பெறுவாயாக, முன்னிலை ஒருமை வினைமுற்று.

8. அருந்தழல் - வேள்வித்தீ. மாமகம் - பெரிய யாகம். புனல் படிந்தும் - தீர்த்தங்களில் முழுகியும். அனிலயோகம் - சிறந்த யோகநிலை. சிறுக்கி - குறைத்து, ஒழித்து.

9. தருமன் மகன் - எமதருமன் மகனாகிய (பஞ்சபாண்டவருள் மூத்தவனாகிய) தருமன். எதிர்மலைந்து-எதிர்த்துப்போரிட்டு. தறுகண் - அஞ்சாமை. செருவில் - போரில். உயிரனையதோழன் - உயிர்போன்ற நண்பன் துரியோதனன். செஞ்சோற்றுக் கடன் - நன்றியறிதற் கடமை. தேவர்கோ - இந்திரன். உரைபெறு - புகழ் பெற்ற. பேறு - பாக்கியம். தமியள் - தனிப்பட்ட ஏழை.

10. வான் பெற்ற நதி-கங்கை. மதிபெற்ற - மதிப்புப்பெற்ற. துழாய் - துளசி. அலங்கல் - மாலை. களபம் - சந்தனம். தைவந்து - தடவி. பகழி - அம்பு. இருநிலத்தில் - பெரிய உலகில்.

பயிற்சி

I. விடை எழுதுக :

1. வேத முதற்கொழுந்தாகிய முகுந்தன் வெயிலவன் புதல்வனை எவ்வாறு அடைந்தான் ?

2. வேதியன், சுடர்தரத் தோன்றிய தோன்றலிடம் என்ன, எப்படிக் கேட்டான் ?

3. வேதியனிடம் கன்னன் கூறியது யாது? வேதியன் கன்ன னிடம் கேட்ட தானம் யாது?

4. 'புண்ணியமனைத்தும் உதவுக' என்று கேட்ட வேதியனிடம் கன்னன் கூறியவை யாவை?

5. கன்னன் தன் புண்ணியமனைத்தையும் எவ்வாறு தானம் செய்தான்?

6. 'மூவுலகமும் உடன் கவர்ந்தோன் அங்கையால் ஏற்றான்'— இத்தொடரில் உள்ள கதை யாது?

7. கன்னன், கண்ணனிடம் வேண்டியது யாது?

8. மூவரும் ஒருவனும் மூர்த்தி வரம் அளித்த வகையையும் வரத்தையும் விளக்குக.

9. கன்னன் அடைந்த மகிழ்ச்சியையும், அதன் பயனாக அவன் கூறியவற்றையும் வரைக.

10. 'பெறுதற் கெட்டாப் பெரும் பயன்' - எவையெல்லாம் செய்தாலும் பெறுதற் கெட்டாதவன்?

11. கன்னன் தான் செய்ததாகக் கூறிய அறங்கள் யாவை?

II 1. பிரித்து எழுதுக:

வெற்பிரண்டு, கண்டருளி, தரணியிற்றளர்ந்தவர், இயைந்த தொன்றிக்கணத்தளிப்பாய், செவிக்கமுதென, உதவுகென்றலுமுள மகிழ்ந்தாள், கலங்கியதியாக்கை, பொருளெலாநயக்கும்.

2. சேர்த்து எழுதுக:

ஒவிலாது + யான், நிகர் + அலன், குவித்து + இறைஞ்ச, புன லுடன் + தருக, மல்லல் + அம் + தொடையல் + நிருபன், என்று + உரைப்ப.

3. பொருள் கூறுக:

தாண்டிய தரங்கம், சிலைக்கை, ஈண்டிய, தூண்டிய கவனம், தடந்தேர், அகத்ததோ புறத்ததோ, அம்பின்வாய் அம்பு, ஊன், ஊண்.

4. சொற்றொடரில் அமைக்க:

எத்தனை, தழுவி, நீராட்டி, வேண்டிய, செவிக்கமுது, வெயில வன், புதல்வன், வறுமை, பெருந்துயர்.

III 1. இதை உரைநடையாகச் சுருக்கி வரைக.

2. பண்புத்தொகை, வினைத்தொகை, வேற்றுமைத்தொகை, உருவகம்—ஆகியவற்றுக்கு இரண்டிரண்டு சான்றுகள் தருக.

4. பெரிய புராணம்

திருநாளைப்போவார் நாயனார் புராணம்

இந்நூல் செயற்கரிய செயல்களைச் செய்து பெருமை பெற்ற சிவனடியார்களின் கதைகளைக் கூறுவதால் பெரிய புராணம் எனப் பெயர் பெற்றது. இதற்கு ஆசிரியர் இட்டபெயர் திருத்தொண்டர் புராணம் என்பது. இது சைவத்திருமுறைகளில் பன்னிரண்டாம் திருமுறை ஆகும். இந்நூல் இரு பெருங் காண்டங்களாகவும், பதின்மூன்று சருக்கங்களாகவும் அமைந்துள்ளது. சிவனடியாருள் தனியடியார் அறுபத்து மூவர்; தொகையடியார், ஒன்பதின்மர் ஆக எழுபத்திருவரின் பெருமைமிக்க வரலாற்றினைக் கூறுவது இந் நூல்.

இதன் ஆசிரியர் சேக்கிழார். இவருடைய இயற்பெயர் அருண் மொழித்தேவர். சேக்கிழார் என்பது குடிப்பெயர். இவர் தொண்டை நாட்டில் உள்ள குன்றத்தூரில் தோன்றியவர். இரண்டாம் குலோத்துங்கனிடம் அமைச்சராக இருந்தபோது, 'உத்தம சோழப் பல்லவன்' என்னும் பட்டம் பெற்றார். பெரிய புராணம் பாடி அரங்கேற்றியபோது 'தொண்டர் சீர்பரவுவார்' என்னும் சிறப்புப் பெயர் பெற்றார். இவர் காலம் கி.பி. 12ஆம் நூற்றாண்டு.

'திரு நாளைப்போவார்' என்ற வேறு பெயர் பெற்ற நந்தனார் வரலாற்றை யுணர்த்துவது நம் பாடப்பகுதி. நந்தனார் சிதம்பரத் திற்குச் செல்ல வேண்டுமென்னும் ஆசை மிக, இவர் 'நாளைப் போவேன்' என்று சொல்லிய வண்ணம் சில காலங்கழித்ததனால் திருநாளைப் போவார் என்று பெயர் பெற்றார்.

ஆதனூரின் வளம்

பகர்ந்துலகு சீர்போற்றும் பழையவளம் பதியாகும்
திகழ்ந்தபுனற் கொள்ளிடம்பொன் செழுமணிக டிரைக்
கரத்தான்
முகந்துதர விருமருங்கு முளரிமலர்க் கையேற்கு
மகன்பணைநீர் நன்னாட்டு மேற்காநாட் டாதனூர்

நீற்றலர்பே ரொளிநெருங்கு மப்பதியி னிறைகரும்பின்
சாற்றலைவன் குலைவயலிற் றகட்டுவரா லெழப்பகட்டே
ராற்றலவன் கொழுக்கிழித்த சால்வழிபோ யசைந்தேறிச்
சேற்றலவன் கருவுயிர்க்க முருகுயிர்க்குஞ் செழுங்கமலம் 2

புலைப்பாடியின் இயல்பு

மற்றவ்வூர்ப் புறம்பணையின் வயன்மருங்கு பெருங்குலையிற்
சுற்றம்விரும் பியகீழ்மைத் தொழிலுழவர் கிளைதுவன்றிப்
பற்றியபைங் கொடிச்சுவரைமேற் படர்ந்தபழங் கூரை
யுடைப்
புற்குரம்பைச் சிற்றில்பல நிறைந்துளதோர் புலைப்பாடி 3

கூருகிர்மெல் லடியளகின் குறும்பார்ப்புக் குழுச்சுழலும்
வார்பயின்முன் றிலினின்ற வள்ளுகிர்நாய்த் துள்ளுபறழ்
காரிரும்பின் சரிசெறிகைக் கருஞ்சிறார் கவர்ந்தோட
வார்சிறுமென் குரைப்படக்கு மரைக்கசைத்த விருப்பு
மணி 4

வன்சிறுதோன் மிசையுழத்தி மகவுறக்கு நிழன்மருதுந்
தன்சினைமென் பெடையொடுங்குந் தடங்குழிசிப் புதை
நீழன்
மென்சினைய வஞ்சிகளும் விசிப்பறைதூங் கினமாவும்
புன்றலைநாய்ப் புனிற்றுமுழைப் புடைத்தெங்கு முடைத்
தெங்கும் 5

புள்ளுந்தண் புனற்கலிக்கும் பொய்கையுடைப் புடை
யெங்கும்
தள்ளுந்தா ணடையசையத் தளையவிழ்பூங் குவளைமது
விள்ளும்பைங் குழற்கெதிர்நென் மிலைச்சியபுன் புலைச்
சியர்கள்
கள்ளுண்டு களிதூங்கக் கறங்குபறை யுங்கலிக்கும். 6

நந்தனர் இயல்பும் தொழிலும்

இப்படித்தா கியகடைஞ ரிருப்பின்வரைப் பினின்வாழ்
வார்
மெய்ப்பரிவு சிவன்கழற்கே விளைத்தவுணர் வொடும்வந்தா

ரப்பதியி லூர்ப்புலைமை யான்றதொழிற் ருயத்தா
ரொப்பிலவர் நந்தனா ரெனவொருவ ருளரானார் 7

பிறந்துணர்வு தொடங்கியபின் பிறைக்கண்ணிப் பெருந்
தகைபாற்
சிறந்தபெருங் காதலினாற் செம்மைபுரி சிந்தையராய்
மறந்துமய னினைவின்றி வருபிறப்பின் வழிவந்த
வறம்புரிகொள் கையரா யடித்தொண்டி னெறிநின்றார் 8

ஊரில்விடும் பறைத்துடைவை யுணவுரிமை யாக்கொண்டு
சார்பில்வருந் தொழில்செய்வார் தலைநின்றார் தொண்
டினாற்
கூரிலைய முக்குடுமிப் படையண்ணல் கோயிறொறும்
பேரிகையே முதலாய முகக்கருவி பிறவினுக்கும் 9

போர்வைத்தோல் விசிவாரென் றினையனவும் புகலுமிசை
நேர்வைத்த வீணைக்கும் யாழுக்கு நிலைவகையிற்
சேர்வுற்ற தந்திரியுந் தேவர்பிரா னர்ச்சனைகட்
கார்வத்தி னுடன்கோரோ சனையுமிவை யளித்துள்ளார் 10

இவ்வகையாற் றந்தொழிலி னியன்றவெலா மெவ்
விடத்துஞ்
செய்வனவுங் கோயில்களிற் றிருவாயிற் புறநின்று
வெவ்விரவு பேரன்பு மிகுதியினா லாடுதலு
மவ்வியல்பிற் பாடுதலு மாய்நிகழ்வா ரந்நாளில் 11

திருப்புன்கூரில் நந்தி விலகியது

திருப்புன்கூர்ச் சிவலோகன் சேவடிகண் மிகநினைந்து
விருப்பினொடுந் தம்பணிகள் வேண்டுவன செய்தற்கே
யருத்தியினா லொருப்பட்டங் காதனூர் தனினின்றும்
வருத்தமுறுங் காதலினால் வந்தவ்வூர் மருங்கணைந்தார் 12

சீரேறு மிசைபாடித் திருத்தொண்டர் திருவாயி
னேரேகும் பிடவேண்டு மெனநினைந்தார்க் கதுநேர்வார்
காரேறு மெயிற்புன்கூர்க் கண்ணுதலார் திருமுன்பு
போரேற்றை விலங்கவருள் புரிந்தருளிப் புலப்படுத்தார்
13

தில்லை காண 'நாளைப் போவேன்' என்றது

இத்தன்மை யீசர்மகிழ் பதிபலவுஞ் சென்றிறைஞ்சி
மெய்த்ததிருத் தொண்டுசெய்து விரவுவார் மிக்கெழுந்த
சித்தமொடுஞ் திருத்தில்லைத் திருமன்று சென்றிறைஞ்ச
உய்த்தபெருங் காதலுணர் வொழியாது வந்துதிப்ப 14

அன்றிரவு கண்டுயிலார் புலர்ந்ததற்பி னங்கெய்த
வொன்றியணை தருதன்மை யுறுகுலத்தோ டிசைவில்லை
யென்றிதுவு மெம்பெருமா னேவலெனப் போக்கொழி
வார்
நன்றுமெழுங் காதன்மிக நாளைப்போ வேனென்பார். 15

தில்லையிலே திருநாளைப் போவார்

நாளைப்போ வேனென்று நாள்கள்செலத் தரியாது
பூளைப்பூ வாம்பிறவிப் பிணிப்பொழியப் போவாராய்ப்
பாளைப்பூங் கமுகுடுத்த பழம்பதியி னின்றும்போய்
வாளைப்போத் தெழும்பழனஞ் சூழ்தில்லை மருங்கணைவார்.
16

செல்கின்ற போழ்தந்தத் திருவெல்லை பணிந்தெழுந்து
பல்குஞ்செந் தீவளர்த்த பயில்வேள்வி யெழும்புகையு
மல்குபெருங் கிடையோது மடங்கணெருங் கினவுங்கண்
டல்குந்தங் குலநினைந்தே யஞ்சியணைந் திலர்நின்றார். 17

கனவில் இறைவன் தோற்றம்

இவ்வண்ண மிரவுபகல் வலஞ்செய்தங் கெய்தரிய
வவ்வண்ண நினைந்தழிந்த வடித்தொண்ட ரயர்வெய்தி
மைவண்ணத் திருமிடற்றார் மன்றினடங் கும்பிடுவ
தெவ்வண்ண மெனநினைந்தே யேசறவி னெடுந்துயில்வார்
18

இன்னறரு மிழிபிறவி யிதுதடையென் றேதுயில்வா
ரந்நிலைமை யம்பலத்து ளாடுவா ரறிந்தருளி
மன்னுதிருத் தொண்டரவர் வருத்தமெலாந் தீர்ப்பதற்கு
முன்னணைந்து கனவின்கண் முறுவலொடு மருள்செய்வார்
19

இப்பிறவி போய்நீங்க வெரியினிடை நீமூழ்கி
முப்புரிநூன் மார்பருடன் முன்னணேவா யென்னமொழிந்
தப்பரிசே தில்லைவா ழந்தணர்க்கு மெரியமைக்க
மெய்ப்பொருளா ஞரருளி யம்பலத்தே மேவினர். 20

உருமாறிய நந்தனரை அந்தணர் தொழுதல்

கைதொழுது நடமாடுங் கழலுன்னி யழல்புக்கா
ரெய்தியவப் பொழுதின்கண் ணெரியின்க ணிம்மாயப்
பொய்தகையு முருவொழித்துப் புண்ணியமா முனிவடிவாம்
மெய்திகழ்வெண் ணூல்விளங்க வேணிமுடி கொண்டெழுந்தார் 21

திருவுடைய தில்லைவா ழந்தணர்கள் கைதொழுதார்
பரவரிய தொண்டர்களும் பணிந்துமனங் களிபயின்று
ரருமறைசூழ் திருமன்றி லாடுகின்ற கழல்வணங்க
வருகின்ருர் திருநாளைப் போவாரா மறைமுனிவர் 22

இறையொடு நந்தனர் கலந்தது

தில்லைவா ழந்தணரு முடன்செல்லச் சென்றெய்திக்
கொல்லைமான் மறிக்கரத்தார் கோபுரத்தைத் தொழுதிறைஞ்சி
யொல்லைபோ யுள்புகுந்தா ருலகுய்ய நடமாடு
மெல்லையினைத் தலைப்பட்டார் யாவர்களுங் கண்டிலரால். 23

அருஞ்சொற்பொருள்

1. புனல் - நீர். திரைக்கரத்தால் - அலைகளாகிய கரத்தால். மருங்கும் - பக்கங்களிலும். முளரி மலர் - தாமரை மலர். அகல் - அகன்ற. பணை - வயல். நீர்நல்நாட்டு - நீர் வளமுள்ள சோழ நாட்டிலுள்ள. மேற்கா நாட்டு ஆதனூர் - மேற்கா நாட்டைச் சேர்ந்த ஆதனூர். பகர்ந்து - சொல்லி.

2. நீறு அலர் - திருநீறு பரவிய. கரும்பின் சாற்றலைவன்குலை - கரும்பின்+சாறு+அலை+வல்+குலை—கரும்புச் சாற்றினல் அலைகின்ற வலிய நெற்குலை. தகடு வரால் - தகடு போன்ற வரால் மீன். பகடு - எருமை. ஆறு - வழி. அலம் - கலப்பை. வன் கொழு -

வலிய கொழுவினுல். சேறு அலவன் - சேற்று நண்டு. முருகு உயிர்க்கும் - தேன் சொரியும்.

3. புறம் - வெளியே. கிழமை தொழில் - உரிமையால் செய்யும் தொழில். கிளை - கூட்டம். துவன்றி - நெருங்கி. பைஞ்சுரை - பசுமையான சுரைக் கொடி. புல் குரம்பை - புல் வேய்ந்த குடிசை.

4. கூர் உகிர் - கூர்மையான நகம். அடி - பாதம். அளகு - பெட்டைக்கோழி. குறும் பார்ப்பு குழு - சிறிய குஞ்சுகளின் கூட்டம். வார் பயில் முன்றிலின் - வலைகள் இருக்கின்ற முற்றத்தில். வள் உகிர் - கூரிய நகம். துள்ளு பறழ்- துள்ளியோடும் நாய்க்குட்டி. சரி செறி கை - சரி எனப்படும் வளையல்கள் நெருங்கிய. ஆர் - நிறைந்த. அரைக்கு அசைத்த - இடையில் கட்டிய.

5. வல்சிறு- வலிய சிறிய. உழத்தி - உழவப் பெண். உறக்கும்- உறங்கச் செய்யும். மருதம் - மருத மரம். மெல்பெடை - மென்மையான பெட்டைக்கோழி. ஒடுங்கும் - படுப்பதற்கு இடமான. தட குழிசிபுதை - பெரிய பானைகள் புதைக்கப் பெற்ற. நீழல் - நிழல். மெல்சினை - மெல்லிய கிளைகள். வஞ்சிகளும் - வஞ்சி மரங்களும். விசி பறை தூங்கின மாவும் - இழுத்துக் கட்டப்பட்ட பறைகள் தொங்கும் மாமரமும். புன் தலை - சிறிய தலை. புனிறு - குட்டி முழை - பள்ளம். புடை - அருகில்.

6. கலிக்கும் - ஒலிக்கும். தள்ளும் நடை - தள்ளாடி நடக்கின்ற நடை. விள்ளும் - சொரியும். மிலைச்சிய - அணிந்த. புல் - இழிவான. களிதூங்க - களிப்பினுல் அசைந்தாட. கறங்கு - முழக்கப்படும்.

7. கடைஞர் - புலையர். வரைப்பினில் - எல்லையில். கழற்கே- பாதங்களில். பரிவு - அன்பு. ஆன்ற - சிறந்த. தாயத்தார் - பங்காளிகள்.

8. பிறை கண்ணி - பிறைச் சந்திரனை முடி மாலையாக. அடித் தொண்டு - திருவடிகளுக்குத் தொண்டு. நெறி - வழி.

9. துடைவை - நிலத்தில். கூர் இலைய முக்குடுமிப் படையண்ணல் - கூர்மையான இலை வடிவில் அமைந்த மூன்று தலையுடைய சூலப்படை ஏந்திய சிவபெருமான். முகக் கருவி - தோல் கருவி.

10. விசிவார்-கட்டுவதற்கு வேண்டிய வார். தந்திரி - நரம்பு.

11. மெய் விரவு - உண்மை பொருந்திய.

12. அருத்தியினுல் - ஆசையினுல். காதலினுல் - அன்பினுல், அணைந்தார் - சேர்ந்தார்.

13. சீர் ஏறும் இசை - சிறப்பு மிகுந்த புகழ். அது நேர்வார்- அப்படியே காட்சி கொடுக்க விரும்பியவரான. கார் - மேகம். எயில் - மதில். போர் ஏற்றை - போர் செய்ய வல்ல நந்தியை. விலங்க - விலகி நிற்கும்படி. புலப்படுத்தார் - காட்டியருளினார்.

14. இறைஞ்சி - வணங்கி. மெய்த்த - உண்மையான. விரவு வார் - கலந்து வாழ்பவராகிய. சித்தமொடு - மனத்தோடு. திரு மன்று - சிற்றம்பலம். உய்த்த-தூண்டுகின்ற. பெருகாதல் உணர்வு- மிகுந்த பக்தியோடு கூடிய ஞானம்.

15. ஒன்றி அணைதரு - (இறைவனை) நெருங்கிச் செல்வதற் குரிய. உறுகுலம் - பொருந்திய குலம். இசைவு - பொருத்தம். நன்று - பெரிதும்.

16. பூளைப் பூவாம் - பூளைச்செடியின் பூவைப்போல். கமுகு - பாக்கு மரம். வாளை போத்து - ஆண் வாளை மீன். பழனம்- வயல்.

17. பல்கும் - தழைக்கும்- பயில்வேள்வி - செய்யப்படும் யாகம். மல்கு பெருங்கிடை - மிகச் சிறந்த வேதியச் சிறுவரின் கூட்டம். அல்கும் - இழிந்த.

18. எய்த அரிய - அடைதற்கு முடியாத. மைவண்ணம் - கரு நிறம். திருமிடற்றார் - அழகிய கழுத்தையுடைய சிவபெருமான். மன்றில் - பொன்னம்பலத்தில். ஏசறவு - மனக் கவலை.

19. இன்னல் - துன்பம். மன்னு - நிலைபெற்ற. முறுவலோடு - புன்னகையுடன்.

20. எரியினிடை - தீயில். அப்பரிசே - அங்ஙனமே.

21. உன்னி - நினைத்து. புக்கார் - புகுந்தார். பொய்தகையும் - பொய்த்தன்மை பொருந்திய. மெய் - மார்பில். வேணி முடி - சடை முடி.

22. பரவ - புகழ. களிபயின்றார் - மகிழ்ச்சி கொண்டார்.

23. கொல்லை மான் மறி-புனத்தில் விளையாடும் மான்குட்டி. கரத்தார் - கையில் கொண்ட சிவபெருமான். ஒல்லை - விரைவாக. உய்ய - நல்ல கதியடைய.

பயிற்சி

I விடை எழுதுக :

1. ஆதனூரின் வளத்தை விளக்குக. அவ்வூர் எங்குள்ளது?
2. புலைப்பாடி எங்குள்ளது?

3. புலைப்பாடியின் சிறுவர்கள் பற்றி என்ன கூறப்பட்டுள்ளது ?
4. புலைப்பாடியின் இயல்பு யாது ?
5. நந்தனாரின் இயல்பு யாது ?
6. நந்தனார் செய்த தொழில் யாது ?
7. திருப்புன்கூரில் நந்தனார் இறைவனை வணங்க விரும்பிய போது நடந்த நிகழ்ச்சி யாது ?
8. 'திருநாளைப் போவார்' என்ற பெயர் நந்தனாருக்கு வரக் காரணம் என்ன ?
9. 'தங்குல நினைந்தேயஞ்சி யணைந்திலர் நின்றார்'—எவர் ? ஏன் ? எவ்விடத்தில் ?
10. கனவில் இறைவன் தோன்றிக் கூறியது என்ன ?
11. தில்லை வாழ் அந்தணர் நந்தனாரை வணங்கியது ஏன் ?
12. நந்தனார் இறைவனுடன் கலந்த வகையை எழுதுக.

II 1. பிரித்து எழுதுக :

செழுமணிகடிரைக்கரத்தான், நீற்றலர் பேரொளி, ஆற்றவன் கொழு, முருகுயிர்க்கும், நிறைந்துளதோர், தள்ளுந்தாணடை, கோயிறெறும், மடங்கணெருங்கின, முப்புரி, மருங்கணைவார், புகுந்தாருலகுய்ய.

2. சேர்த்து எழுதுக :

பகடு+ஏர், கருமை+இரும்பு, புன்மை+தலை, புனிறு+முழை, பெருமை+ஒளி, செழுமை+கமலம், நிறைந்து+உளது+ஓர். அரைக்கு+அசைத்த, பசுமை+குழல், சிறுமை+இல்.

3. பொருள் வரைக :

பகர்ந்து, சீர், கால்வழி, பார்ப்பு, மகவு, புள், கறங்கு, குழு, பறழ், கருஞ்சிறார், களிதூங்க.

4. சொற்றொடரில் அமைக்க :

பழைய, போற்றும், முகந்து, சுற்றம், சிறார், சிற்றில், பிறந்து, சிறந்த, தொண்டு, உணர்வு, தொடங்கி, பேரன்பு.

III 1. நந்தனார் கதையைப் பதினைந்து வரிகளில் சுருக்கி வரைக.

2. உவமைத் தொகை, உருவகம், ஆகுபெயர்கள், இலக்கணப் போலி முதலியவற்றுக்கு ஒவ்வொரு சான்று தருக.

5. பாஞ்சாலி சபதம்

பாஞ்சாலியினுடைய சபதத்தைப் பற்றிக் கூறுவது பாஞ்சாலி சபதம். ஆரும் வேற்றுமைத் தொகை. பாஞ்சாலி—பாஞ்சால நாட்டு அரசன் மகளாகிய திரௌபதி. இதனைப் பாடியவர் அமர கவி சி. சுப்பிரமணிய பாரதியார். இவர் வரலாறு முற்பகுதியில் காண்க.

திரௌபதி கூற்று

"தேவர் புவிமிசைப் பாண்டவ—ரவர்
தேவி துருபதன் கன்னிநா—னிதை
யாவரு மிற்றை வரையினும்—தம்பி
யென்முன் மறந்தவ ரில்லைகாண்—தம்பி
காவலி ழந்த மதிகொண்டா—யிங்குக்
கட்டுத்தவறி மொழிகிறாய்—தம்பி
நீவந்த செய்தி விரைவிலே—சொல்லி
நீங்குக'' வென்றனள் பெண்கொடி 1

துச்சாதனன் கூற்று

''பாண்டவர் தேவியு மல்லைநீ—புகழ்ப்
பாஞ்சாலத் தான்மக ளல்லைநீ—புவி
யாண்டருள் வேந்தர் தலைவனு—மெங்க
ளண்ண னுக்கேயடி மைச்சிநீ—மன்னர்
நீண்ட சபைதனிற் சூதிலே—யெங்க
ணேசச் சகுனியோ டாடியங்—குன்னைத்
தூண்டும் பணய மெனவைத்தா—னின்று
தோற்று விட்டான்தரு மேந்திரன் 2

"ஆடி விலைப்பட்ட தாதிநீ—யுன்னை
யாள்பவ னண்ணன் சுயோதனன்—மன்னர்
கூடி யிருக்குஞ் சபையிலே—யுன்னைக்
கூட்டி வருகென்று மன்னவன்—சொல்ல

வோடி வந்தேனிது செய்திகா—ணினி
யொன்றுஞ் சொலாதென் னேடேகுவா—யந்தப்
பேடி மகனெரு பாகன்பாற்—சொன்ன
பேச்சுகள் வேண்டிலன் கேட்கவே 3

திரௌபதி மறுமொழி

"என்னை யழைத்த லியல்பில்லை யன்றியுமே
சோதரர்தந் தேவிதனைச் சூதில் வசமாக்கி
யாதரவு நீக்கி யருமை குலைத்திடுதல்
மன்னர் குலத்து மரபோகா ணண்ணன்பா
லென்னிலைமை கூறிடுவா யேகுகனீ" யென்றிட்டாள் 4

பாஞ்சாலியை இழுத்துச் செல்லல்

"கக்கக்க வென்று கனைத்தே பெருமூடன்
பக்கத்தில் வந்தேயப் பாஞ்சாலி கூந்தலினைக்
கையினுற் பற்றிக் கரகரெனத் தானிழுத்தான்
"ஐயகோ" வென்றே யலறி வுணர்வற்றுப்
பாண்டவர்தந் தேவியவள் பாதியுயிர் கொண்டுவர
நீண்ட கருங்குழலை நீசன் கரம்பற்றி
முன்னிழுத்துச் சென்ருன் வழிநெடுக மொய்த்தவரா
"யென்ன கொடுமை யிது"வென்று பார்த்திருந்தார். 5

திரௌபதி அழுகை

பேரழகு கொண்ட பெருந்தவத்து நாயகியைச்
சீரழியக் கூந்தற் சிதையக் கவர்ந்துபோய்க்
கேடுற்ற மன்ன ரறங்கெட்ட சபைதனிலே
கூடுதலு மங்கேபோய்க் 'கோ'வென் றலறினள். 6

சபையில் திரௌபதி முறையீடு

"கேள்வி பலவுடையோர் கேடிலா நல்லிசையோர்
வேள்வி தவங்கள் மிகப்புரிந்த வேதியர்கள்
மேலோ ரிருக்கின்ருர் வெஞ்சினமேன் கொள்கிலரோ
வேலோ ரெனையுடைய வேந்தர் பிணிப்புண்டார்

இங்கிவர்மேற் குற்ற மியம்ப வழியில்லை
மங்கியதோர் புன்மதியாய் மன்னர் சபைதனிலே
யென்னைப் பிடித்திழுத்தே யேச்சுக்கள் சொல்லுகின்றாய்
நின்னை யெவரு 'நிறுத்தடா' யென்பதிலர்
என்செய்கே'' னென்றே யிரைந்தழுதாள் பாண்டவரை
மின்செய் கதிர்விழியால் வெந்நோக்கு நோக்கினள்
மற்றவர்தா முன்போல வாயிழந்து சீர்குன்றி
பற்றைகள்போல் நிற்பதனைப் பார்த்து வெறிகொண்டு
''தாதியடி தாதி''எனத் துச்சா தனனவளைத்
தீதுரைகள் கூறினான் கர்ணன் சிரித்திட்டான்
சகுனி புகழ்ந்தான் சபையினோர் வீற்றிருந்தார்.

அருஞ்சொற்பொருள்

1. புவிமிசை - உலகில். துருபதன் - பாஞ்சால நாட்டரசன். தேவி - மனைவி; இற்றை வரை - இன்று வரை; மறந்தவர் - வினையாலணையும் பெயர். காவல் - தொழில் பெயர்; இழந்த - பெயரெச்சம்; கட்டு - நிலை; பெண்கொடி - திரௌபதி, அன்மொழித் தொகை.

2. பணயம் - பந்தயப் பொருள்; தருமேந்திரன் - தருமன். விட்டான்—விடு+ஆன். விடு+பகுதி. ஆன்—விகுதி. பகுதி ஒற்று இரட்டித்து இறந்த காலம் காட்டியது. எங்கணேசச் சகுனி எங்கள்+நேசச் சகுனி.

3. சுயோதனன் - துரியோதனன். பேடி - ஆண்மையற்றவன்; வேண்டிலன் - எதிர்மறை வினைமுற்று. காண்-முன்னிலை வினை முற்று.

4. சோதரர் - சகோதரர். ஆதரவு - அன்பு. அருமை-சிறப்பு. மரபோ - தன்மையோ; ஓ - வினா. ஏகுக - வியங்கோள் வினைமுற்று. அழைத்தல் - தொழிற்பெயர்.

5. கக்கக்க - ஒலிக் குறிப்பு. உணர்வு - தொழிற்பெயர். நீசன்- இழிந்தவன், துச்சாதனன். கரகர - இரட்டைக் கிளவி. ஐயகோ - வியப்பிடைச் சொல். கருங்குழல் - பண்புத்தொகை.

6. சிதைய - குலைய; கேடு - முதனிலை திரிந்த தொழிற்பெயர்; அறங்கெட்ட - நீதி தவறிய; பேரழகு (பெருமை+அழகு)-பண்புத் தொகை, பெருந்தவத்து நாயகி - தவத்திற் பிறந்த திரௌபதி.

7. கேள்வி, வேள்வி-தொழிற்பெயர்கள். கேடிலா-ஈறுகெட்ட எதிர்மறைப் பெயர் எச்சம். நல்லிசை (நன்மை+இசை) - பண்புத் தொகை. வெஞ்சினம் - (வெம்மை+சினம்) பண்புத்தொகை. புன்மதி - (புன்மை+மதி) பண்புத்தொகை. பிணிப்பு - கட்டு, தொழிற்பெயர். பற்றை - சிறு தூறு (இழிந்தவர்களுக்கு உவமை). வேள்வி - யாகம். வெந்நோக்கு - சினப் பார்வை (வெம்மை+நோக்கு) பண்புத் தொகை. மன்னர் சபை - ஆறும் வேற்றுமைத் தொகை. செய்கதிர் - வினைத்தொகை.

பயிற்சி

I விடை எழுதுக :

1. பெண்கொடி துச்சாதனனைக் கண்டித்துக் கூறியன யாவை ?
2. துச்சாதனன் திரௌபதியை, "எங்கள் அண்ணனுக்கே அடிமைச்சி நீ" என்று கூறக் காரணம் என்ன ?
3. 'ஆடி விலைப் பட்ட தாதி நீ' என்று துச்சாதனன் கூறி, மேலும் யாது கூறினன் ?
4. 'இனி ஒன்றும் சொல்லா தென்னோடு ஏகுவாய்' என்று கூறிய துச்சாதனனிடம் திரௌபதி கூறியது யாது ?
5. திரௌபதியை இழுத்துச் சென்ற காட்சியினை விளக்குக.
6. துரியோதனன் சபையில் திரௌபதி முறையிட்டவை யாவை ?
7. துச்சாதனன், சபையில் திரௌபதியை எவ்வாறு ஏசினன் ?
8. சபையில் மற்றவர் எவ்வாறு இருந்தனர் ? கர்ணன், சகுனி என்ன செய்தனர் ?

II 1. பிரித்து எழுதுக :

நானிதை, யாவருமிற்றை, மறந்தவரில்லை, மகளல்லை, தலைவனு மெங்களண்ணனுக்கேயடிமைச்சி, சகுனியோடாடியங்குன்னை, சூதிலேயெங்கணேசச் சகுனி.

2. சேர்த்து எழுதுக :

பணயம்+என, உன்னை+ஆள்பவன், வருக+என்று, காண்+இனி, என்னோடு+ஏகுவாய், இயல்பு+இல்லை, ஏகுக+நீ.

3. சொற்றொடரில் அமைத்து எழுதுக :

மறந்தவர் இல்லை, வந்த செய்தி, வேண்டிலன், வசமாக்கி, கரகரென, வழி நெடுக, ஏச்சு, சீர்குன்றி.

III 1. சபையில் திரௌபதி முறையிட்டதை உரைநடைப் படுத்தி வரைக.

2. வியங்கோள் வினைமுற்று, அன்மொழித் தொகை, வியப் பிடைச் சொல், ஒலிக்குறிப்பு-முதலியவற்றுக்கு ஒவ்வொரு சான்று தருக.

6. மனோன்மணீயம்

இது, மனோன்மணி என்பவளது கதையைக் கூறும் ஒரு நாடக நூல். இந்நாடகத் தலைவி மனோன்மணி யாதலால், இந்நூல் மனோன்மணீயம் எனப் பெயர் பெற்றது. இந்நாடகம் ஆங்கிலத்தில் லிட்டன் பிரபு என்பவர் இயற்றியுள்ள 'மறைவு வழி' என்னும் நூலைத் தழுவியதாகும். இது தமிழில் உள்ள நாடக நூல்களில் தலைசிறந்தது. இந்நூல் சிறந்த கற்பனைகளையும், இயற்கை வரு ணனைகளையும், தத்துவப் பொருள்களையும், உலகியல் உண்மைகளை யும் கொண்டு விளங்குகிறது. இஃது ஐந்து அங்கங்களைக் கொண்ட இன்பியல் நாடகமாகும்.

இதன் ஆசிரியர்—திருவனந்தபுரம் இராவ்பகதூர் பெ. சுந்தரம் பிள்ளை எம். ஏ., பிறப்பிடம் - ஆலப்புழை. தந்தையார்—பெருமாள் பிள்ளை. தாயார்—மாடத்தி அம்மையார். குரு—கோடக நல்லூர் சுந்தர சுவாமிகள். இவர் திருவனந்தபுரம் மகாராஜா கல்லூரியில் தத்துவப் பேராசிரியராகத் திகழ்ந்தவர். இவர் நூற்றொகை விளக்கம், திருஞான சம்பந்தர் காலவாராய்ச்சி முதலிய நூல்களை யும் இயற்றியுள்ளார். இவர் காலம் கி.பி. 1855—1897.

நடராசன் தனிமொழி

(நடராசன் என்பவன் மனோன்மணியின் தந்தையும் பாண்டிய மன்னருமாகிய சீவக வழுதியின் மெய்க்காவலன்: எதனையும் நுட்பமாக நோக்கியறியும் தன்மை உடையவன். அவன் ஒரு நாள் ஊருக்குப் புறத்தேயுள்ள இயற்கைக் காட்சிகளைக் கண்டு அவற்றின் இயல்புகளை உய்த்துணரும் நிலை இப்பகுதியில் கூறப்பட் டுள்ளது.)

இடம் : ஊர்ப்புறம் ஒரு சார்.

பொழுது : எற்பாடு.

(புல்லை நோக்கி)

இதோஓ! இக்கரை முளைத்தவிச் சிறுபுல்
சதா தன் குறிப்பொடு சாருதல் காண்டி
அதன்சிறு பூக்குலை யடியொன் றுயர்த்தி
இதமுறத் தேன்றுளி தாங்கி ஈக்களை
நலமுற அழைத்து நல்லூண் அருத்திப்
பலமுறத் தனதுபூம் பராகம் பரப்பித்து
ஆசிலாச் சிறுகா யாக்கி, இதோ!என்
தூசிடைச் சிக்குந் தோட்டியுங் கொடுத்தே,
"இவ்வயின் யாமெலாம் செவ்விதிற் றுன்னில்
தழைப்பதற் கிடமிலை, சிறார்நீர் பிழைப்பதற்கு
ஏகுமின்! புள்ஆ எருதுஅயத் தொருசார்
சிக்கிநீர் சென்மின்!" எனத்தன் சிறுவரைப்
புக்கவிட் டிருக்குமிப் புல்லின் பரிவும்
பொறுமையும் புலனுங் காண்போர் ஒன்றையுஞ்
சிறுமையாச் சிந்தனை செயாதுஆங் காங்கு
தோற்றுபே ரழகும் ஆற்றல்சா லன்பும்
போற்றுதங் குறிப்பிற் கேற்றதோர் முயற்சியும்
பார்த்துப் பார்த்துத் தம்கண் பனிப்ப
ஆர்த்தெழு மன்பினா லனைத்தையுங் கலந்துதம்
என்பெலாங் கரைக்குநல் லின்பம் திளைப்பர்

வாய்க்காலை நோக்கி

தமக்கூண் நல்கும் வயற்குப யோகம்
எனப்பலர் கருதும் இச்சிறு வாய்க்கால்
செய்தொழில் எத்தனை விசித்திரம்! ஐயோ!
அலைகடல் மலையா மலையலை கடலாப்
புரட்டிட வன்றோ நடப்பதிச் சிறுகால்!
பாரிதோ! பரற்களை நெறுநெறென் றுரைத்துச்
சீரிய தூளியாத் தெள்ளிப் பொடித்துத்
தன்வலிக் கடங்கிய மண்கல் புல்புழு
இன்னதென் றில்லை; யாவையும் ஈர்த்துத்

தன்னுட் படுத்தி முந்நீர் மடுவுள்
காலத் தச்சன் கட்டிடும் மலைக்குச்
சாலத் தகுமிவை எனவோர்ந் துருட்டிக்
கொண்டு சென்றிட்டு மற்று "ஐயா!
அண்ட யோனியின் ஆணையின் மழையாய்ச்
சென்றபின் பெருமலைச் சிகரம் முதலாக்
குன்றுவீ ழருவியாய்த் தூங்கியும் குகைமுகம்
இழிந்தும் பூமியின் குடர்பல நுழைந்தும்
கதித்தெழு சுனையாய்க் குதித்தெழுந் தோடியும்
ஊறிடுஞ் சிறிய வூற்றாய்ப் பரந்தும்
ஆறாய் நடந்தும் மடுவாய்க் கிடந்தும்
மதகிடைச் சாடியும் வாய்க்கா லோடியும்
பற்பல பாடியான் பட்டங் கீட்டியது
அற்பமே யாயினு மாதர வாய்க்கொள்;
இன்னமு மீதோ ஏகுவன்' எனவிடை
பின்னரும் பெற்றுப் பெயர்த்தும் எழிலியாய்
வந்திவ ணடைந்துமற் றிராப்பகல் மறந்து
நிரந்தர முழைக்குமிந் நிலைமையர் யாவர்?

நீரைக் கையாற்றடுத்து

நிரந்தரம்! ஐயோ! நொந்தனை! நில்! நில்!
இரைந்ததென் அழுவையோ? ஆயின் ஏகுதி
நீரே! நீரே! என்னையுன் நிலைமை?
யாரே உனைப்போ லனுதின முழைப்போர்
நீக்கமி லன்பு மூக்கமு முறுதியும்
உனைப்போ லுளவேற் பினைப்பே றென்னை?

அருஞ்சொற்பொருள்

1—20. சதா - எப்பொழுதும். சாருதல் - பொருந்தியிருத்தல். காண்டி - காண்பாயாக. இதம் உற - இனிமை பொருந்த. ஊண்-உணவாகிய (தேன்). பலம் உற - பயன் அடையுமாறு. ஆசு இலா - குற்றம் இல்லாத. பூம்பராகம் பரப்பித்து - பூந்தாதினைப் பரவச் செய்து. தூசு - ஆடை. தோட்டி - துறட்டி முள். இவ்வயின் - இவ்

விடத்தில். செவ்விதில்-செம்மையாக. துன்னில்-அடர்ந்திருந்தால். ஏகுமின் - செல்லுங்கள். புள் - பறவை. ஆ - பசு. அயத்து-ஆடுகள் ஆகிய இவற்றில். ஒரு சார் - ஒன்றினிடத்தில். புலனும் - அறிவும். சால் - மிக்க. பனிப்ப - துளிர்க்க. ஆர்த்து - பொங்கி. திளைப்பர் - அனுபவிப்பர்.

21—53—பரற்களை - பருக்கைக் கற்களை. உரைத்து - தேய்த்து. சீரிய தூளியா - சிறந்த பொடியாக. : முந்நீர் - கடல். ஓர்ந்து - ஆராய்ந்தறிந்து. அண்ட யோனியின் ஆணையின் - உலகத்தைப் படைத்த கடவுளின் கட்டளையால். தூங்கியும் - தாழ்ந்தும். இழிந்தும் - இறங்கியும். கதித்து - பெருகி. சாடியும் - மோதியும். ஈட்டியது - சேர்த்தது. :எழிலியாய் - மேகமாகி. இவண் - இவ்விடம். நிரந்தரம் - இடைவிடாமல். உளவேல் - இருந்தால்.

பயிற்சி

I விடை எழுதுக :

1. புல் சதா தன் குறிப்போடு சார்ந்திருத்தல் எங்ஙனம் ?
2. புல் ஆசிலாச் சிறுகாய் ஆக்குவது எப்படி ?
3. புல்லின் பரிவும், பொறுமையும், புலனும் எவ்வாறு விளங்குகின்றன ?
4. 'என்பெலாங்கரைக்கும் நல்லின்பம் திளைப்பர்'—எவர் ? ஏன் ?
5. நடராசன் புல்லை நோக்கிக் கூறியவற்றைத் தொகுத்து 15 வரிகளில் எழுதுக.
6. 'காலத் தச்சன் கட்டிடும் மலைக்குச் சாலத் தகும் இவை'— எவை ?
7. பற்பல பாடியான் பட்டு'—யார் பட்டது ? ஏன் ? எப்படி?
8. வாய்க்கால் இராப்பகல் மறந்து நிரந்தரம் உழைப்பது எப்படி ?
9. நீரைக் கையால் தடுத்து நடராசன் கூறியவை யாவை ?
10. நடராசன் வாய்க்காலை நோக்கிக் கூறியவற்றைத் தொகுத்து 15 வரிகளில் எழுதுக.

II 1. பிரித்து வரைக :

பூக்குலையடியொன்றுயர்த்தி, தேன்றுளி, நல்லூரண், ஆசிலா, தூசிடை, செவ்விதிற்றுன்னில், பூம்பராகம், எருதயத்து, பிணைப்பே றென்னை.

2. சேர்த்து எழுதுக :

காய்+ஆக்கி. யாம்+எலாம், புக்கவிட்டு+இருக்கும். ஆங்கு+ஆங்கு. பெருமை+அழகும். ஏற்றது+ஓர். ஆர்த்து+எழும்+அன்பினுல், என்பு+எலாம்.

3. சொற்றொடரில் அமைக்க :

குறிப்போடு, தேன்துளி, சிறுர், பிழைப்பதற்கு, பரிவு, பொறுமை, அனைத்தையும், முயற்சி, இன்பம், பாடுபட்டு, இராப்பகல், ஊக்கமும் உறுதியும்.

III 1. புல்லின் செயல்களை ஒரு கட்டுரையாக எழுதுக.

2. வாய்க்காலின் செயல்களை ஒரு கட்டுரையாக எழுதுக.

3. உரிச்சொல் தொடர், வினையாலணையும் பெயர், கடைப்போலி, வினைத்தொகை—ஆகியவற்றுக்கு ஒவ்வொரு சான்று தருக.

IV. பல்சுவை

1. வருணனை

1. மருத நிலத்தின் சிறப்பு

மருதநிலம்—வயலும் வயல் சார்ந்த இடமும். அதன் சிறப்பைக் கம்பர் தம்முடைய இராமகாதையில் (கம்பராமாயணத்தில்) கூறுகிறார். இவர் சோழ நாட்டிலுள்ள திருவழுந்தூரில் பிறந்தார். தந்தை—ஆதித்தன். காலம் கி. பி. 12 ஆம் நூற்றாண்டு. சமயம் - வைணவம் என்பர். இவர் திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளலால் ஆதரிக்கப்பட்டவர்.

தண்டலை மயில்கள் ஆடத்
    தாமரை விளக்கந் தாங்க
கொண்டல்கள் முழவின் ஏங்கக்
    குவளைகண் விழித்து நோக்கத்
தெண்டிரை எழினி காட்டத்
    தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட
    மருதம்வீற் றிருக்கும் மாதோ

அருஞ்சொற்பொருள்

தண்டலை-சோலையில். விளக்கம் - விளக்கு. முழவின் -மத்தளம் போல. ஏங்க - ஒலிக்க. எழினி - திரைச் சீலை. தேம்பிழி - இனிய தேன். மருதம் - மருதமாகிய அரசன் (உருவகம்). வீற்றிருத்தல் - கொலு வீற்றிருத்தல்.

2. தென்றல்

தென்றலின் சிறப்பை விளக்கும் இச்செய்யுள் திருவிளையாடற் புராணத்தில் உள்ளது. இதனை இயற்றியவர் பரஞ்சோதி முனிவர். இவருடைய காலம் 16 ஆம் நூற்றாண்டு. சோழ நாட்டில் உள்ள திருமறைக்காடு இவர் பிறப்பிடம். இவர் வடமொழி தென்மொழி

களில் நல்ல புலமையும், சைவ சித்தாந்த சாத்திரங்களில் நல்ல தேர்ச்சியும் பெற்றவர். தந்தையின் பெயர்—மீனாட்சி சுந்தர தேசிகர்.

பொங்கரின் நுழைந்து வாவி
புகுந்துபங் கயந் துழாவிப்
பைங்கடி மயிலை முல்லை
மல்லிகைப் பந்தர் தாவிக்
கொங்கலர் மணம்கூட் டுண்டு
குளிர்ந்துமெல் லென்று தென்றல்
அங்கங்கே கலைகள் தேரும்
அறிவன்போல் இயங்கும் அன்றே

அருஞ்சொற்பொருள்

பொங்கர் - சோலை. வாவி - தடாகம். பங்கயம் - தாமரை மலர். மயிலை - இருவாட்சி மலர். கலைகள் - இலக்கியங்கள். தேரும் - ஆராயும். கொங்கு - மகரந்தம்.

3. நினைவும் முடிவும்

இக்கவியினைப் பாடியவர் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை. இவர் திருவிதாங்கூரைச் சார்ந்த சுசீந்திரத்தை அடுத்த தேரூரில் பிறந்தவர். ஆசியசோதி, மலரும் மாலையும் முதலிய நூல்களை இயற்றியவர். காலம் : கி. பி. 1876—1954.

இருளும் அகலும் இரவியும் தோன்றும்
பொருவிலித் தாமரைப் பூவும் மலரும்
மலரும் பொழுதிவ் வன்சிறை நீங்கி
உலகில் எங்கும் உலவித் திரிந்து
பூவெழு பற்பல புதுவனங் கண்டு
நாவெழு சுவைதரு நறைமிக வுண்டு
வாழ்குவன் என்றொரு மதுகரம் இருப்பத்
தாழ்மத வேழமொன் றாழ்கய மிறங்கிப்
பாசிலைப் பூவெலாம் பறித்து
வீசி யெறிந்து வெறிகொண் டதுவே.

அருஞ்சொற்பொருள்

இரவி - சூரியன். பொருவு இல் - ஒப்பு இல்லாத. நறை - தேன். மதுகரம் - வண்டு. வேழம் - யானை. கயம்-குளம். பாசிலை - பசுமையான இலை.

4. முகில்

இக்கவியினைப் பாடியவர் பரிதிமாற் கலைஞர் எனப்படும் வி. கோ. சூரியநாராயண சாத்திரியார் ஆவர். இவர் கி. பி. 1871 முதல் 1903 வரை தமிழ் நாட்டில் வாழ்ந்தவர். தனித் தமிழ் இயக்கத்திற்கு வித்திட்ட முதல் வித்தகர் இவரே. இவர் பல நாடக நூல்களையும், மொழியாராய்ச்சி நூல்களையும் எழுதித் தமிழ்த் தாய்க்கு நற்பணியாற்றியவர்.

முகிலே! மைந்நிற முகிலே! கடல்மகள்
பயந்த மகவே! நயந்திவ் வுலகினைக்
குளிர்செய் ததனுயிர்க் குழுவினை என்றுங்
களிசெயும் செய்ய கருவியே! அறத்தினுக்கு
ஆக்கமே! பொருளிற் கரும்பெறல் துணையே!
போக்கரு வற்கடப் பொல்லா நோய்க்குநன்
மருந்தே! நீயெழுந் திருந்துவான் பொழிவது
தண்ணீர் என்கோ! தயைமீக் கூர்ந்திழி
கண்ணீர் என்கோ! கழைச்சா றென்கோ
தீம்பால் என்கோ தெள்ளமு தென்கோ
ஏம்பலுற் றென்னுளம் இனைத்தென் றுணர்ந்தின்று
அம்ம!நீ ஒப்புர வாற்றுமா றறிந்தேன்
எம்மையும் அஃதே என்கடன்
எனக்குறிக் கொண்டேன் எனக்குறு காட்டே!

அருஞ்சொற்பொருள்

முகில் - மேகம். பயந்த - பெற்ற. நயந்து - விரும்பி குழு - கூட்டம். அரும்பெறல்-பெறுதற்கரிய. வற்கடம் - பஞ்சம். என்கோ - என்று சொல்லுவேனோ. கழை - கரும்பு. ஏம்பல் - மகிழ்ச்சி உணர்ந்தின்று - அறிந்ததில்லை. அம்ம - வியப்பிடைச் சொல். எம்மை - எப்பிறப்பினும். எனக்கு உறுகாட்டு- நின்செயல் எனக்கு ஓர் எடுத்துக்காட்டேயாகும்.

பயிற்சி

I. விடை எழுதுக :

1. கம்பர் மருதநிலச் சிறப்பை எவ்வாறு நயம்பட விளக்கியுள்ளார் ?
2. 'அங்கங்கே கலைகள் தேரும் அறிவன்போல் இயங்கும்'— எது ? எப்படி ?
3. 'ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட்டொன்றாகும்' என்பதை கவிமணி எவ்வாறு விளக்கியுள்ளார் ?
4. மதுகரம் என்ன நினைத்தது ?
5. பரிதிமாற் கலைஞர் முகிலை விளித்து என்ன கூறுகின்றார் ?
6. முகிலின் தாய் எது ? எப்படி ?
7. முகில் எழுந்து மழை பொழிவது என்னென்னவென்று கூறப்பட்டுள்ளது ?

II 1. பிரித்து எழுதுக :

தெண்டிரை, வீற்றிருக்கும், கொங்கலர், வேழமொன்றாழ் கயமிறங்கி, நயந்திவ்வுலகினை, ஒப்புரவாற்றுமாறறிந்தேன்.

2. சேர்த்து எழுதுக :

மெல்+என்று, அங்கு+அங்கே, என்று+ஒரு, பூ+எலாம், நீ+எழுந்து+இருந்து, கழைச்சாறு+என்கோ.

3. பொருள் கூறுக :

கொண்டல், தெண்டிரை, எழினி, மயிலை, வன்சிறை, அரும் பெறல் துணை ஒப்புரவு, குழு.

4. விளக்குக :

(1) வற்கடப் பொல்லா நோய்க்கு நன்மருந்து. (2) தயை மீக் கூர்ந்திழி கண்ணீர்.

III. 1. மருதநிலக் காட்சியை உரைநடை யாக்குக.

2. எண்ணியபடியே எதுவும் நடந்துவிடாது என்பதைக் கவிமணி கூறியுள்ளவாறு உரைநடையில் விளக்கி வரைக.

3. பரிதிமாற் கலைஞரின் செய்யுளை உரைநடையாக்குக.

2. சீட்டுக்கவி

நம் நாட்டில் பண்டைக் காலத்தில் புலவர்கள் மற்றவர்களுக்குக் கடிதம் எழுதவேண்டுமானுல் பாடலாகவே எழுதுவர். அவ்வாறு கடித உருவில் அமைந்த பாடலே சீட்டுக் கவியாகும். இதற்குத் திருமுகப் பாசுரம் என்றும் பெயர் வழங்குகிறது. திருமுகம் - கடிதம். பாசுரம் - பாடல்.

பின்வரும் செய்யுளை இயற்றியவர் மதுரையில் உள்ள மதியழகர் (சோமசுந்தரக் கடவுள்) ஆவர். இவர் தம் அன்பனுகிய பாணபத்திரனுக்கு உதவி செய்யுமாறு சேர மன்னனுக்கு விடுத்த கடிதமே இதுவாகும். இது சைவத்திருமுறைகள் பன்னிரண்டில் பதினேராம் திருமுறையில் உளது. இது எழுதப்பட்ட காலம் கி. பி. எட்டாம் நூற்ருண்டு.

திருமுகப் பாசுரம்

மதிமலி புரிசை மாடக் கூடல்
பதிமிசை நிலவும் பானிற வரிச்சிற
கன்னம் பயில்பொழி லால வாயின்
மன்னிய சிவன்யான் மொழிந்திடு மாற்றம்
பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்
கொருமையி னுரிமையி னுதவி யணிதிகழ்
குருமா மணிதிகழ் குலவிய குடைக்கீழ்ச்
செருமா வுகைக்குஞ் சேரலன் காண்க
பண்பால் யாழ்பயில் பாண பத்திரன்
தன்போ லென்பா லன்பன் றன்பால்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே

அருஞ்சொற்பொருள்

மதிமலி புரிசை - சந்திரன் தோய்கின்ற உயரமான மதில்கள் சூழ்ந்த. கூடல் பதிமிசை - மதுரை மாநகரில். பானிற - பால் நிறமுடைய. பயில் - வாழ்கின்ற. பொழில் - சோலே. மன்னிய - நிலே பெற்ற. ஒருமையின் - முழு மனத்தோடு. குருமாமணி - நிறம் அமைந்த சிறந்த மணிகள். குலவிய - விளக்கமான். செருமா உகைக்கும் - போர் செய்யும் ஆற்றல் மிக்க குதிரையைச் செலுத்து

கின்ற. சேரலன் - சேர மன்னன். மாண் பொருள் - சிறந்த பொருள்.

பயிற்சி

I. விடை எழுதுக :

1. திருமுகப் பாசுரம் என்றால் என்ன ?
2. மதியழகர் யாருக்குத் திருமுகப் பாசுரம் எழுதினார் ?
3. சேரனை மதியழகர் எவ்வாறு சிறப்பிக்கிறார் ?
4. மதியழகர் தம் பாசுரத்தில் கேட்டிருப்பவை யாவை ?
5. மதியழகர் நிலைத்து வாழும் இடம் எவ்வாறு கூறப்பட்டுள்ளது ?

II. 1. பிரித்து எழுதுக :

வரிச்சிறகன்னம், பாவலர்க்கொருமையினுரிமையினுதவி, பொழிலாலவாய், செருமாவுகைக்கும்.

2. பொருள் கூறுக :

புரிசை, கொண்மூ, திகழ், மன்னிய, உகைக்கும், குலவிய மாற்றம், பண்பால்.

3. சேர்த்து எழுதுக :

தன்போல் + என்பால் + அன்பன். வரிச்சிறகு + அன்னம். பால்+நிறம்.

சொற்றொடரில் அமைக்க :

குடைக்கீழ், அன்பன், பொருள், பொழில், உதவி.

III 1. இத்திருமுகப் பாசுரத்தை உரைநடைப்படுத்தி இக்காலக் கடிதம் போல் அமைத்து எழுதுக.

2. பெயரெச்சம், காரணப் பெயர், வியங்கோள்—இவைகளுக்குச் சான்றுகள் தருக.

3. இரட்டுற மொழிதல்

இரு பொருள் படுமாறு ஒரு சொல்லையேனும், சொல் தொடரையேனும் அமைத்துச் செய்யுள் இயற்றுவது இரட்டுற மொழிதல் அல்லது சிலேடை எனப்படும். இது செம்மொழிச் சிலேடை, பிரிமொழிச் சிலேடை என இருவகைப்படும். ஒரு சொல் பிரிக்கப்படாமல் இரு வேறு பொருள் தருவது செம்மொழிச் சிலேடை. ஒரு சொல்லேனும் தொடரேனும் பிரிந்து இரு வேறு பொருளைத் தருவது பிரிமொழிச் சிலேடை.

கீழுள்ள முதல் இரு செய்யுட்களைப் பாடியவர் காளமேகப் புலவர். இவரது இயற்பெயர் வரதன் என்பது. இவர் கும்பகோணத்திற்கு அருகில் உள்ள ஒரு சிற்றூரில் பிறந்தவர்; திருவரங்கம் கோவில் மடைப்பள்ளியில் வேலை செய்தவர். பின் திருவானைக்காவில் வாழ்ந்தவர். இவர் கார்மேகம் மழை பொழிவதுபோலப் பாக்களைத் தங்கு தடையில்லாமல் பாடி வந்தமையால் காளமேகம் எனப்பெயர் பெற்றார். இவர் கி. பி. 15 ஆம் நூற்றாண்டைச்சேர்ந்தவர். திருவானைக்கா உலா, சித்திரமடல் முதலியவை இவரால் எழுதப் பட்டவை. தனிப் பாடல்கள் பல இவரால் பாடப்பட்டுள்ளன.

மூன்றாவது செய்யுளைப் பாடியவர் சொக்கநாதப் புலவர். இவர் தொண்டை மண்டலத்தில் பிறந்து மதுரையில் வாழ்ந்தவர் என்றும், திருநெல்வேலியில் வாழ்ந்தவர் என்றும் கூறப்படுகிறது. இவர் பலபட்டடைக் கணக்கு என்னும் ஒருவகைக் கணக்கராக அலுவல் பார்த்தமையால் பலபட்டடைச் சொக்கநாதர் என்றும் வழங்கப்பட்டார்.

வைக்கோலும் யானையும் ஒன்று

வாரிக் களத்தடிக்கும் வந்துபின்பு கோட்டைபுகும்
போரிற் சிறந்து பொலிவாகும்—சீருற்ற
செங்கோல மேனித் திருமலைரா யன்வரையில்
வைக்கோலும் மால்யானை யாம்.

பாம்பும் எள்ளும் ஒன்று

ஆடிக் குடத்தடையு மாடும்போ தேயிரையும்
மூடித் திறக்கின் முகங்காட்டும்—ஓடிமண்டை
பற்றிற் பரபரெனும் பாரிற்பிண் ணாக்குமுண்டாம்
உற்றிடுபாம் பெள்ளெனவே யோது.

சீரகம் தந்தால் பெருங்காயம் வேண்டாம்

வெங்காயஞ் சுக்கானால் வெந்தயத்தால் ஆவதென்ன?
இங்கார் சுமந்திருப்பார் இச்சரக்கை?—மங்காத
சீரகத்தைத் தந்தீரேல் தேடேன் பெருங்காயம்
ஏரகத்துச் செட்டியா ரே.

அருஞ்சொற்பொருள்

1. களம்—1. நெற்களம். 2. போர்க்களம். கோட்டை—1. நெற்கோட்டை. 2. அரணுகிய கோட்டை. போர்—1. வைக்கோல் போர். 2. சண்டை. சீர் உற்ற - சிறப்புப் பொருந்திய. செங்கோல மேனி - அழகிய உடலையுடைய. திருமலைராயன் - தஞ்சை மாவட்டத்தில் உள்ள திருமலைராயன் பட்டணத்தைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட அரசன். மால்—பெரிய. (இது செம்மொழிச் சிலேடை)

2. ஆடி - 1. படம் எடுத்து ஆடி. 2. செக்கிலே ஆடி. குடத்து அடையும் - 1. பாம்பாட்டியின் குடத்தில் புகும். 2. எண்ணெய்க் குடத்தை அடையும். முகம் காட்டும்-1. தன் படமுடைய தலையைத் தூக்கிக் காட்டும். 2.பார்ப்பவர்களின் முகம் தெரியும்படி காட்டும். ஓடி மண்டை பற்றில் - 1. விஷம் ஓடித் தலைக்கேறினுல். 2. தலையில் ஊற்றி வழிந்தால். பிள் நாக்கும் உண்டாம் - 1. பிளவுபட்ட நாக்கும் உண்டு. 2. பிண்ணுக்கும் உண்டாகும். (இது பிரிமொழிச் சிலேடை).

3. வெங்காயம் - (வெம்+காயம்) தீய உடம்பு. சுக்கானுல் - மெலிந்தால். வெந்தயம் - (வெந்த+அயம்)—புடமிட்ட அயச் செந்தூரம். சீரகம் - (சீர்+அகம்)—சிறந்த மோட்ச வீடு. ஏரகத்துச் செட்டியார் - திருவேரகத்தில் உள்ள முருகன். (இது செம்மொழிச் சிலேடை).

பயிற்சி

I விடை எழுதுக :

1. சிலேடை என்றுல் என்ன ? அது எத்தனை வகைப்படும் ?
2. செம்மொழிச் சிலேடை என்பது யாது ?
3. பிரிமொழிச் சிலேடை என்பது யாது ?
4. வைக்கோலும் யானையும் ஒன்று எனப்படுவது எங்ஙனம் ?
5. பாம்பும் எள்ளும் எவ்வாறு ஒன்றுக்கிக் காட்டப்படுகின்றன ?
6. ஏரகத்துச் செட்டியாரிடம் சொக்கநாதப் புலவர் என்ன கேட்கிறுர் ?

II 1. பிரித்து எழுதுக :

களத்தடிக்கும், பொலிவாகும், செங்கோலமேனி, குடத்தடையும், ஆடும்போதேயிரையும், பாம்பெள்ளெனவே யோது, ஆவதென்ன.

2. சேர்த்து எழுதுக :

பெருமை+காயம், வெம்மை+காயம், சுக்கு+ஆனல், வெந்த+அயத்து+ஆல், பிண்ணுக்கும்+உண்டாம், சீர்+உற்ற.

3. சொற்றொடர்களில் அமைக்க :

பின்பு, களம், பொலிவு, மேனி, வைக்கோல், எள், பரபர, சுக்கு, சீரகம், வெந்தயம், பெருங்காயம்.

4. சிலேடைப் பொருள் எழுதுக :

வெங்காயம், சுக்கு, வெந்தயம், சீரகம், பெருங்காயம், போர், களம்.

III 1. இங்குக் காணப்படும் செய்யுட்களை இரண்டிரண்டு வரிகளாகப் பொருள் கண்டு உரைநடைப்படுத்தி எழுதுக.

2. இரட்டைக் கிளவி, பண்புத்தொகை—ஆகியவற்றுக்குச் சான்றுகள் தருக.

4. தமிழ் விடு தூது

இந்நூல் மதுரை சோமசுந்தரக் கடவுள்பால் அன்புகொண்ட ஒரு தலைவி, தமிழ்மொழியை அவரிடம் தூதுவிட்டதாகப் பாடப் பட்டுள்ளது. தூது என்பது அன்புடைய இருவருள் ஒருவர் மற்றொருவர் பால் தம்முடைய வருத்தத்தைத் தெரிவிக்குமாறு உயர்திணைப் பொருள்களையேனும் அஃறிணைப்பொருள்களையேனும் தூது விடுவதாகக் கற்று வல்லோரால் பாடுவது. இந்நூல் 268 கண்ணிகளைக் கொண்டது.

இதன் ஆசிரியர் இன்னார் என்பது விளங்கவில்லை. இந்நூலால் இவ்வாசிரியர் தமிழ் இலக்கண இலக்கியங்களைத் துறைபோகக் கற்றவர் என்பதும், தமிழ் மொழிப் பற்று மிக்கவர் என்பதும் சிவபெருமானிடத்தும் அடியவரிடத்தும் பேரன்புடையவர் என்பதும் விளங்கும்.

1 எண்முதலா கப்பகரு மீரா றெனும்பருவம்
மண்முதலோர் செய்து வளர்க்குநாட்—கண்மணி
போற்

2 பள்ளிக்கூ டத்தசையாம் பற்பலதொட் டிற்கிடத்தித்
தள்ளிச் சிறூர்கூடித் தாலாட்டி—உள்ளிலகு

3 மஞ்சட் குளிப்பாட்டி மையிட்டு முப்பாலும்
மிஞ்சப் புகட்ட மிக வளர்ந்தாய்—மஞ்சரையே

4 பன்னியொரு பத்துப் பருவமிட்டு நீ வளர்ந்தாய்
உன்னை வளர்த்துவிட வொண்ணுமோ—முன்னே

5 நினையும் படிப்பெல்லா நின்னைப் படிப்பார்
உனையும் படிப்பிப்பா ருண்டோ—புனைதருநற்

6 செய்யுட்சொன் னான்குமுயர் செந்தமிழ்ச்சொல்
லோர் நான்கும்
மெய்யுட் பொருளேழ் விதத்திணையும்-மையிலெழுத்

7 தாதியாப் பெட்டு மலங்கார மேழைந்தும்
பேதியாப் பேரெழின்மாப் பிள்ளையாய்ச்—சாதியிலே

8 ஆங்கமைசெப் பற்பண் ணகவற்பண் டுள்ளற்பண்
தூங்கற்பண் பட்டத்துத் தோகையரா—ஓங்குமனத்

9 தெண்கருவி யைந்தீன் றிடுநூற்று மூன்றான
பண்களும்பின் கல்யாணப் பாவையரா—எண்
கொளும்

10 நற்றா ரகமா நவரசமாம் பிள்ளைகளை
பெற்றாய் பெருவாழ்வு பெற்றாயே

அருஞ்சொற்பொருள்

1—3. மேல்பட - மேன்மை பொருந்துமாறு. எண்முதலாக பகரும் - எண் முதலாகச் சொல்லப்படுகின்ற. ஈராறு—பன்னிரு. மண்முதலோர் - இவ்வுலகில் முதன்மை பெற்றவர்களாகிய புலவர்கள். அசையாம் - சுவடி தூக்கும் பலகைகள் ஆகிய. தொட்டில் கிடத்தி-தொட்டில்களில் கிடத்தி. தாலாட்டி - நாவை அசைத்துப் பாடி. உள் இலகு - தன்னுள்(நிறம்)விளங்குகின்ற. மஞ்சள் குளிப்பாட்டி-மஞ்சளிற் குளிப்பாட்டி. மையிட்டு - அஞ்சனமிட்டு. முப்பாலும்-அறம் பொருள் இன்பம் என்னும் முப்பால்களையும். மிஞ்சபுகட்ட - மிகுதியாகப் புகட்ட.

4—5. மஞ்சரை - மைந்தர்களை. ஒரு பத்து பருவம் இட்டு - ஒப்பற்ற காப்புப் பருவம் முதலாகிய பத்துப் பருவங்களை அமைத்து. பன்னி - சிறப்பித்துக் கூறி. ஒண்ணுமோ - இயலுமோ. நினையும்- நினைக்கின்ற.

6—7. புனைதரும் - புனையப்படுகின்ற. ஏழ்விதத் திணையும் - அகப்பொருள், புறப்பொருள் ஆகியவற்றின் ஏழுவகைத் திணைகளும், மை இல் - குற்றமில்லாத, யாப்பு எட்டும் - யாப்பிலக்கணப் பிரிவுகள் எட்டும். அலங்காரம் ஏழ் ஐந்தும் - பொருள் அணிகள் முப்பத்தைந்தும். பேதியா - வேறுபடுதல் இல்லாத.

8—9. சாதியிலே அமை - வெண்பா முதலிய நால்வகைச் சாதிகளாய் அமைந்துள்ள. செப்பல் பண் - வெண்பாவிற்கு உரிய செப்பல் ஓசையும். அகவல் பண் - ஆசிரியப்பாவுக்குரிய அகவல் ஓசையும். துள்ளல் பண் - கலிப்பாவுக்குரிய துள்ளல் ஓசையும். தூங்கல் பண் - வஞ்சிப்பாவிற்குரிய தூங்கல் ஓசையும் (ஆகிய நான்கு சாதிப் பண்களும்). பட்டத்துத் தோகையரா - பட்டத்து அரசியர் ஆகவும். கருவி ஐந்து - மிடற்றுக் கருவி, தோல் கருவி, துளைக்கருவி, நரம்புக் கருவி, கஞ்சக் கருவி என ஐந்து வகை இசைக் கருவிகளும். பாவையர் - மகளிர். நூற்று மூன்று ஆன பண்-பெரும் பண்கள் 16; திறங்கள் 84; தாரப்பண்டிறம், பையுள் காஞ்சி, படுமலை என்பவை சேர, 103 பண்கள்.

10—எண்—உயர்ந்தோர் எண்ணத்துள். நல் தாரகமா கொளும்—நல்ல ஆதாரமாய்க் கொள்கின்ற. நவரசமாம்—ஒன்பது சுவைகளாம் (வீரம், அச்சம், இளிப்பு, வியப்பு, வெகுளி, உவகை, நகை, அழுகை, சமநிலை)

பயிற்சி

I விடை எழுதுக :

1. தமிழரசின் பிள்ளைப் பருவம் பற்றிக் கூறப்பட்டிருப்பது என்ன ?
2. 'உன்னை வளர்த்துவிடல் ஒண்ணுமோ ?'—'உனையும் படிப்பிப்பார் உண்டோ ?'—இத்தொடர்களை விளக்குக.
3. தமிழரசு மணமகளாக விளங்கும் தன்மை எவ்வாறு புனைந்துரைக்கப்பட்டுள்ளது ?
4. தமிழரசின் பட்டத்தரசிகள் எனப்படுபவை யாவை ?
5. 'பின் கல்யாணப் பாவையர்' என எவை குறிப்பிடப்படுகின்றன ?
6. தமிழரசின் மக்கள் என எவை குறிப்பிடப்பட்டிருக்கின்றன ?

II 1. பிரித்து எழுதுக :

பகருமீராறெனும், படிப்பிப்பாருண்டோ, படிப்பெல்லாம், வளர்த்துவிடவொண்ணுமோ, சொன்னுன்கும், யாப்பெட்டுமலங்காரமேழைந்தும்.

2. சேர்த்து எழுதுக :

செம்மை+தமிழ்ச்சொல்+ஓர்+நான்கும். ஆங்கு+அமை. மனம்+அத்து+எண்+கருவி. ஐந்து+ஈன்று. நல்+தாரகமாய். பெருமை+எழில்.

3. பொருள் கூறுக :

பகரும், மண்முதலோர். முப்பால், பேதியா, பேரெழில், தோகையர், பாவையர், நவரசம், தாரகம்.

4. சொற்றொடரில் அமைத்து எழுதுக :

தாலாட்டி, குளிப்பாட்டி, படிப்பெல்லாம், பேரெழில், நவரசம், பெருவாழ்வு.

III 1. இந்தத் தூதுப் பகுதியை உரைநடை ஆக்குக.

2. 'உள்ளிலகு மஞ்சள் குளிப்பாட்டி, மையிட்டு, முப்பாலும் மிஞ்சப் புகட்ட மிக வளர்ந்தார்'—விளக்கம் வரைக.

5. பிள்ளைத் தமிழ்

மீனாட்சியம்மைப் பிள்ளைத்தமிழ்

புலவர் தாம் புகழ்ந்து பாடக் கருதிய கடவுளையோ மக்களுட் சிறந்தோரையோ குழந்தையாகக் கருதி,இரண்டாம் மாதம் முதல் ஐந்து ஆண்டு வரை அக்குழந்தையின் பண்பெல்லாம் கனிந்து தோன்றக் காப்பு முதலாகப் பத்துப் பருவங்கள் அமைத்துப்பருவம் ஒன்றிற்குப் பத்துச் செய்யுட்களாகப் பாடுவது பிள்ளைத் தமிழின் இலக்கணமாகும். இது ஆண்பால் பிள்ளைத்தமிழ், பெண்பால் பிள்ளைத் தமிழ் என இருவகைப்படும். காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிற்றில், சிறுபறை, சிறுதேர் என்னும் பத்துப் பருவங்களும் ஆண்பாற் பிள்ளைத் தமிழுக்குரிய பருவங்கள்.

இறுதியில் உள்ள மூன்று பருவங்களாகிய சிற்றில், சிறுபறை, சிறுதேர் என்பவைகளுக்குப் பதிலாகக் கழங்கு, அம்மானை, ஊசல் என்பவற்றைச் சேர்த்துக் கூறுவது பெண்பாற் பிள்ளைத் தமிழ் ஆகும்.

மீனாட்சியம்மைப் பிள்ளைத் தமிழ், மதுரையில் கோவில்கொண்டருளியுள்ள மீனாட்சியம்மை மீது பிள்ளைத் தமிழ் இலக்கணம் அமையப் பாடப்பட்ட நூல்.

இந்நூலின் ஆசிரியர் குமரகுருபரர். இவர் பாண்டிய நாட்டு ஸ்ரீவைகுண்டத்தில் பிறந்தவர். பெற்ரோர் : சண்முகசிகாமணிக் கவிராயரும் சிவகாமசுந்தரியுமாவர். இவர் ஐந்து வயது வரை ஊமையாயிருந்து திருச்செந்தூர் முருகனருளால் பேசும் தன்மை பெற்ருர் என்பர். பிள்ளைத்தமிழ், கலம்பகம், அந்தாதி முதலிய நூல்களை இவர் பாடியுள்ளார். இவர் காலம் : கி. பி. 17 ஆம் நூற்ருண்டு ஆகும்.

வருகைப் பருவம்

தொடுக்குங் கடவுட் பழம்பாடல்
தொடையின் பயனே நறைபழுத்த
துறைத்தீந் தமிழி னொழுகுநறுஞ்
சுவையே யகந்தைக் கிழங்கையகழ்ந்

தெடுக்குந் தொழும்ப ருளக்கோயிற்
கேற்றும் விளக்கே வளர்சிமய
விமயப் பொருப்பில் விளையாடு
மிளமென் பிடியே யெறிதரங்கம்

உடுக்கும் புவனங் கடந்துநின்ற
வொருவன் திருவுள் ளத்திலழ
கொழுக வெழுதிப் பார்த்துவக்கு
முயிரோ வியமே மதுகரம்வாய்

மடுக்குங் குழற்கா டேந்துமிள
வஞ்சிக் கொடியே வருகவே
மலயத் துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே!

அருஞ்சொற்பொருள்

வருகைப்-பருவம் இது பிள்ளைத்தமிழின் பத்துப் பருவங்களுள் ஒன்று; ஓராண்டு நிரம்பப்பெற்ற குழந்தையை வருக வருக என்று அழைப்பது போலப் பாடுவது. நறை- தேன். துறை - பொருள்களை நுகர்தற்குச் செல்லும் வழி. அகந்தை - அஞ்ஞானம். அகழ்ந்து - தோண்டி. தொழும்பர் - அடியார்கள். இமயப்பொருப்பு - இமய மலை, இரு பெயரொட்டுப் பண்பு. தரங்கம்-அலை (கடல்). ஒருவன்- ஒப்பற்றவனாகிய சிவபெருமான். உயிரோவியம் - உயிர் போலரிய

சித்திரம். மதுகரம் - வண்டு. வாய்மடுக்கும் - உண்ணும். மலயத்துவசன் -ஒரு பாண்டியன் (மலயமலையைக் கொடியில் எழுதியவன்; இவனுடைய மகளாய் உமையம்மை தடாதகைப் பிராட்டியாக அவதரித்தாள்.)

பயிற்சி

I. விடை எழுதுக :

1. மீனாட்சியம்மை எவ்வாறு சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளார்?

2. 'உடுக்கும் புவனங் கடந்துநின்ற ஒருவன் திருவுள்ளத்தில் அழகொழுக எழுதிப்பார்த்திருக்கும் உயிரோவியமே'—விளக்கம் வரைக.

3. 'மலயத்துவசன் பெற்ற பெருவாழ்வே'- இதிலடங்கியுள்ள கதை யாது?

II. 1. பொருள் எழுதுக :

குழற்காடு, உயிரோவியம், புவனம், பிடி, சிமயம்.

2. சொற்றொடரில் அமைத்து எழுதுக:

கடவுள், பாடல், சுவை, அகந்தை, உளக்கோயில், விளையாடும், இமயப்பொருப்பு.

III 1. இச்செய்யுளை உரைநடையாக வரைக.

2. உருவகம், பண்புத்தொகை, வியங்கோள் - இவற்றிற்குச் சான்றுகள் தருக.

6. மதுரைக் கலம்பகம்

'கலம்பகம்' என்பது தமிழில் வழங்கும் தொண்ணூற்றாறு வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று. புயவகுப்பு, மதங்கு, அம்மானை, காலம், சம்பிரதம், கார் முதலிய பதினெட்டு உறுப்புக்கள் வருமாறு பல்வகைப் பாக்களால் கடவுள் மீதும். மக்கள் மீதும் பாடப்படும் சிறுநூலே கலம்பகம் எனப்படுவது.

பின்வரும் செய்யுள் மதுரைக் கலம்பகத்தில் உள்ளது. மதுரைக் கலம்பகத்தை இயற்றியவர் குமரகுருபர அடிகள். இவர் பாண்டிய நாட்டில் ஸ்ரீவைகுண்டமென்னும் கைலாசபுரத்தில் பிறந்தவர். இவர்தம் தந்தையார் சண்முக சிகாமணிக் கவிராயர். தாயார் சிவகாமசுந்தரி அம்மையார். குமரகுருபரர் இளமையிலே துறவறம் பூண்டார். இவர் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், நீதிநெறிவிளக்கம்

முதலிய பல நூல்களை இயற்றி உள்ளார். இவரது காலம் 300 ஆண்டுகட்கு முற்பட்டது.

தொடுத்த ணிந்ததும் அம்புத ரங்கமே ;
சுமந்தி ருந்ததும் அம்புத ரங்கமே ;
அடுத்து நின்றது மாயவ ராகமே;
எயிறி றுத்தது மாயவ ராகமே;
அடுப்ப தந்தணர் பன்னக ராசியே;
அணிவ துஞ்சில பன்னக ராசியே;
கொடுப்ப தையர்க டம்பவ னத்தையே;
கொள்வ தையர் கடம்பவ னத்தையே.

அருஞ்சொற்பொருள்

அம்புதர் அங்கம் - அழகிய தேவருடைய எலும்பு. அம்புத ரங்கம் - அலைகளுடைய கங்கை நீர். மாயவர் ஆகம்-திருமாலாகிய திருவிக்கிரம மூர்த்தியின் உடல். மாய - அழியும்படி. வராகம் - வராக அவதாரம். அடுப்பது - பொருந்தியிருப்பது. ஆசி அந்தணர் பல் நகர் - ஆசீர்வாதம் செய்யும் அந்தணர்களின் பல நகரங்கள் பன்னகம் - பாம்பு; ராசி - கூட்டம். ஐயர்கள் தம் பவனம் - தேவர் உலகம். கடம்ப வனம் - மதுரை.

பயிற்சி

I. விடை எழுதுக :

1. கலம்பகம் என்பது யாது ?
2. அம்புதரங்கம், மாயவராகம், பன்னகராசி, கடம்பவனம் இவை எவ்வாறு பொருள்படுத்தப்பட்டுள்ளன ?

II. 1. பிரித்து எழுதுக :

தொடுத்தணிந்தது, அம்புதரங்கம், மாயவராகம், சுமந்திருந்தது, எயிறிறுத்தது, கொடுப்பதையர் கடம்பவனத்தையே.

2. சேர்த்து எழுதுக :

ஐயர்கள்+தம், கொடுப்பது+ஐயர், அடுப்பது+அந்தணர். அம்புதர்+அங்கம், மாயவர்+ஆகம்.

III இச்செய்யுளை உரைநடைப்படுத்தி வரைக.

7. வழிபாட்டுப் பாடல்கள்

(1) தேவாரம்

இப்பாடல் தேவாரத்திலிருந்து எடுக்கப்பட்டது. இதனை இயற்றியவர் திருநாவுக்கரசர் என்பவர் ஆவார். இவர் கி. பி. 7 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். சமயம் - சைவம். இவர் சைவ சமய குரவர்கள் நால்வருள் ஒருவர். தேவாரம் - தேவனுக்குரிய பாமாலை.

பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி
பாவிப்பார் பாவம் அறுப்பாய் போற்றி
எண்ணும் எழுத்துஞ் சொல்லானாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
விண்ணும் நிலனுநீ யானாய் போற்றி
மேலவர்க்கு மேலாகி நின்றாய் போற்றி
கண்ணின் மணியாகி நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

அருஞ்சொற்பொருள்

பண்-இராகம். பாவிப்பார்-தொழுவார். இறைவன் -தலைவன்.

(2) நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்

ஆழ்வார்கள் பன்னிருவர் அருளிச் செய்தது நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் ஆகும். இது நாலாயிரம் அருங்கவிகளையுடையது. இது முதலாயிரம், பெரிய திருமொழி, இயற்பா, திருவாய்மொழி என நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

கீழ்வரும் பாடலின் ஆசிரியர் தொண்டரடிப் பொடியாழ்வார். இவர் காலம் கி. பி. 8 ஆம் நூற்றாண்டு ஆகும்.

பச்சைமா மலைபோல் மேனி, பவளவாய்க் கமலச்செங்
கண்
அச்சுதா! அமரர்ஏறே! ஆயர்தம் கொழுந்தே! என்னும்
இச்சுவை தவிர யான்போய் இந்திர லோகம்ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே!

அருஞ்சொற்பொருள்

மேனி - உடல். அமரர் - தேவர். ஏறு - தலைவன். அரங்கம் - திருவரங்கம்.

(3) தேம்பாவணி

தேம்பா + அணி = வாடாத மாலை என்பது இதன் பொருள்; இந்நூல் முப்பத்தாறு படலங்களையும். 3600 திருவிருத்தங்களையும் கொண்டுள்ளது. இந்நூலாசிரியர் வீரமாமுனிவர். இவர் இயற்பெயர் கான்ஸ்டன்டைன் ஜோசப் பெஸ்கி. இவர் இத்தாலிய நாட்டினர். கிறித்தவ சமயத்தைப் பரப்புவதற்காக இவர் இந்தியாவுக்கு வந்தார். திருநெல்வேலியில் சுப்பிரதீபக் கவிராயரிடம் தமிழ் பயின்று புலவரானார். இவர் காலம் 18 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி.

கார்த்திரள் மறையாக் கடலினுள் மூழ்காக்
கடையிலா தொளிர் பரஞ்சுடரே!
நீர்த்திரள் சுருட்டி மாறலை யின்றி
நிலைபெறும் செல்வநற் கடலே!
போர்த்திரள் பொருதக் கதுவிடா வரணே!
பூவனந் தாங்கிய பொறையே
சூர்த்திரள் பயக்கும் நோய்த்திரள் துடைத்துத்
துகந்திடைத் துயிர்தரும் அமுதே!

அருஞ்சொற்பொருள்

தேம்பா + அணி = தேம்பாவணி = வாடாதமாலை. தேம் + பா + அணி எனப் பிரித்தால் இனிய பாமாலை எனப்பொருள் படும். கார்த்திரள் - மேகக்கூட்டம். கதுவிடா - பற்றிடா. பூவனம் - நிலம். சூர் - அச்சம்.

(4) சீறாப்புராணம்

பின்வரும் பாடல் சீறாப்புராணம் எனும் நூலில் இருந்து எடுக்கப்பட்டது ஆகும். 'ஸீரத்' என்னும் அரபுமொழியின் திரிபே 'சீறா' என்பது. வாழ்க்கை வரலாறு என்பது இதன்பொருள். இது நபிகள் நாயகத்தின் வரலாற்றைக் குறிப்பது. இதன் ஆசிரியர் உமறுப் புலவர். இவர் காலம் கி.பி.17 ஆம் நூற்றாண்டு ஆகும்.

சிறந்தமெய்ப் பொருளை யழிவிலா மணியைத்
தெரிந்துமுக் காலமு முணர்ந்து
துறந்தவ ரிதயா சனத்திருந் தவனைத்
தொடரின்ப துன்பமற் றவனைப்
பிறந்தபல் லுயிரின் மனத்தள வுறைந்து
பிறப்பிறப் பென்றிலா தவனை
மறந்தவர் சுவர்க்கப் பதியையு மறந்து
மண்ணினில் மதிமறந் தவரே.

அருஞ்சொற்பொருள்

இதயாசனம் - இதயம்+ஆசனம். உறைந்து - வாழ்ந்து. பதி - ஊர். மதி - அறிவு.

பயிற்சி

I. விடை எழுதுக :

1. திருநாவுக்கரசர் இறைவனை எவ்வண்ணம் போற்றுகிறார் ?
2. தொண்டரடிப் பொடியாழ்வார் எச்சுவையை விரும்புகின்றார்? எதனை வேண்டா என்கிறார் ?
3. வீரமாமுனிவர் இயேசு பெருமானை எவ்விதம் போற்றியுள்ளார் ?
4. உமறுப்புலவர், 'சுவர்க்கப்பதியையும் மறந்து மண்ணினில் மதிமறந்தவர்' என்று எவரைக் கூறுகிறார் ?

II. 1. பிரித்து எழுதுக :

சொல்லானும், துறந்தவரிதயாசனத்திருந்தவனை, பல்லுயிரின், பிறப்பிறப் பென்றிலாதவனை, மாறலே, கடையிலாதொளிர்.

2. சேர்த்து எழுதுக :

அமரர்+ஏறே, பாவம்+அறுப்பாய், அழிவு+இலா, மூன்று+காலமும்+உணர்ந்து.

3. பொருள் எழுதுக :

முக்காலம், மண்ணினில், பொருத, பொறை, செங்கண், போற்றி.

4. சொற்றொடரில் அமைத்து எழுதுக :

சிந்தை, இன்ப துன்பம், மறந்தவர், முக்காலம், நோய்த்திரள்.

III 1. வழிபாட்டுப் பாடல்கள் ஒவ்வொன்றினையும் உரைநடையாக வரைக.

2. உருவகம், உம்மைத் தொகை, உவமைத்தொகை, வேற்றுமைத்தொகை ஆகியவற்றிற்குச் சான்றுகள் தருக.

உரைநடைப் பகுதி

1. நம் பாரத நாடு

(வித்துவான் பு. செல்வராசன்)

"பாருக்குள்ளே நல்ல நாடு நம் பாரத நாடு" என்று பாரதியார் நம் இந்திய நாட்டைப் புகழ்ந்து பாடி யுள்ளார். நம் இந்திய நாடு பாரத நாடு என வழங்கப் படுவதேன்? இதற்குப் பாரதம் எனப் பெயரிட்டவர் எவர்?

பல்லாயிரம் ஆண்டுகட்கு முன் இருடபர் என்ற முனிவருக்கும் அவர் மனைவியாகிய சயந்திக்கும் பிறந்த ஆண் குழந்தைக்குப் பரதன் என்று பெயர் சூட்டப்பட்டது. பரதன் வளர்ந்து வருகையில் தம் தந்தையாரிடம் கலைகள் அனைத்தையும் நன்கு கற்றார். ஞானமும் வீரமும் அவரிடம் சிறந்து காணப்பட்டன. அவர் ஒரு துறவிக்குரிய ஞானத்தையும் பேரரசனுக்குரிய பெருவீரத்தையும் பெற் றிருந்தார். அவருடைய உடல் வன்மையையும், வீரத்தை யும் அறிவையும் ஆற்றலையும் கண்ட மக்கள், அவரைத் தங்கள் அரசனாக்கிக் கொண்டனர். அவர் நீண்ட காலம் அரசாண்டார்; பிறகு அரசபதவியைத் துறந்து புலகரின் ஆசிரமம் சென்று யோகத்தில் அமர்ந்தார். அது முதல் அவர் சடபரதர் எனவும் வழங்கப்பட்டார். நீண்ட காலம் அவர் ஆண்டதால், இந்த நாடு பரதக்கண்டம் எனவும் பாரத நாடு எனவும் பெயர் பெற்றது.

இது குறித்து மற்றொரு கதையும் வழங்கப்படுகிறது. துஷ்யந்தனுக்கும் சகுந்தலைக்கும் பிறந்த மைந்தன்

பரதன் எனப் பெயரிடப்பட்டு வளர்ந்தான். இவன் எல்லாக் கலைகளையும் கற்றுத் தேர்ந்து அச்சத்தை அறியாமல் வளர்ந்து வீரத்தில் சிறந்து விளங்கினான். இவன் தக்க வயது அடைந்ததும் இவனுக்கு முடிசூட்டி விட்டுத் துஷ்யந்தன் அரச பதவியிலிருந்து விலகி ஓய்வு பெற்றான். பரதன் நாட்டை மிகச் சிறந்த முறையில் ஆட்சி செய்தான். பரதன் இந்நாடு முழுவதையும் தன் ஆட்சிக்கு உட்படுத்தினான். இவன் ஆட்சியில் மக்கள் எந்தக் குறைவுமில்லாமல் மகிழ்ச்சியுடன் வாழ்ந்தனர். இவன் பெயரும் புகழும் நாடு முழுவதும் பரவியது. அது முதல் இவன் பெயரால் இந்த நாடு பாரத நாடு என வழங்கியது.

எனவே, நம் நாடு பாரத நாடு என வழங்கப்படுவதற்குக் காரணமாயிருந்தவர்கள் இருவர். மகரிஷியாக விளங்கிய சடபரதர் ஒருவர்; துஷ்யந்தனின் மகனாகிய பரதன் மற்றொருவர்.

பாரதம் என்பது இதன் பழைய பெயர். இந்தியா எனப் பெயர் வந்தது எவ்வாறு? முதன் முதலில் நம் நாட்டின் மீது படைஎடுத்து வந்தவர்கள் பாஞ்சால ஆற்றங்கரையில் பாடிவீடு அமைத்தபோது, கடல்போலக் காட்சி அளித்த அந்த ஆற்றைக் கடல் எனும் பொருள் தரும் சிந்து எனும் பெயரால் அழைத்தனர். அந்த ஆற்றிற்கு அவர்களிட்ட பெயரே மருவி நாட்டிற்குப் பெயரும் இந்தியா என்றாயிற்று. இந்த நாட்டு மக்களும் இந்துக்கள் என வழங்கப்படலாயினர்.

பாரதியார் நம் பாரத நாட்டைப் பற்றிப் பாடுகையில்,

“வண்மையி லேஉளத் திண்மையிலே—மனத்
 தன்மையி லேமதி நுண்மையிலே
உண்மையி லேதவ றாதபுலவர்
 உணர்வினி லேஉயர் நாடு—
“ஆற்றினி லேசுனை யூற்றினிலே—தென்றல்
 காற்றினி லேமலைப் பேற்றினிலே
ஏற்றினி லேபயன் ஈந்திடும் காலி
 இனத்தினி லேஉயர் நாடு—

என்று இந்த நாட்டின் சிறப்பைப் புகழ்ந்துள்ளார்.

ஆம். பாரதியார் கூறியபடி பெரிய மலைப் பகுதிகளையும் உயர்ந்த பீட பூமிகளையும், வளம்பொருந்திய சமவெளிகளையும் பள்ளத்தாக்குகளையும் கொண்டது நம் நாடு. இதனால் இதன் இயற்கை அமைப்புப் பல்வேறிடங்களில் பல்வேறு விதமாக மாறுபட்டிருக்கிறது. தட்பவெப்ப நிலையும் விளைபொருள்களும் இடத்திற்கேற்றவாறு மாறி இருக்கின்றன. நம் நாட்டில் வாழும் மக்களும் பல இனத்தவராயும், பல மதத்தவராயும், பல்வேறு மொழிகள் பேசுபவராயும் இருக்கின்றனர்.

நம் நாடு ஒழுங்கில்லாத நாற்கோட்டுருவ வடிவமாய் அமைந்துள்ளது. வடநாடு நீண்ட சதுர வடிவமாயும், தீபகற்ப இந்தியா முக்கோண வடிவமாயும் இருக்கிறது. இதன் பரப்புச் சற்றேறத்தாழ 32,74,600 சதுரக் கிலோ மீட்டராகும். தென் வடக்காக ஏறத்தாழ 3200 கிலோ மீட்டர் நீளமும், கிழக்கு மேற்காக ஏறத்தாழ 3000 கிலோ மீட்டர் அகலமும் உள்ளது. இதன் கடற்கரை ஏறத்தாழ, 5700 கிலோ மீட்டர் நீளமுடையது. இக்கடற்கரை உடையாமல் இருப்பதால், இயற்கைத் துறைமுகங்கள் இந்தியாவில் மிகுதியாக இல்லை. பொதுவாக, நம் நாடு பிரிட்டிஷ் தீவுகளைப்போல் பதின்மூன்று மடங்கு பெரிய நிலப்பகுதியைக் கொண்டதாகும்.

''மன்னும் இமயமலை எங்கள் மலையே மாநிலமீதது போற்பிறிதிலையே'' என்று பாரதியாரால் புகழப்படும் வடக்கிலுள்ள பெரிய இமயமலைத் தொடரானது நம் நாட்டை ஆசியாவின் பிற பகுதிகளினின்றும் பிரித்து வைக்கிறது. இம்மலைத் தொடர் கிழக்குக் கோடியில் உள்ள அஸ்ஸாம் பகுதியிலிருந்து காஷ்மீர் வரை 3200 கிலோ மீட்டர் வளைந்து செல்கிறது. இதன் அகலம் 256 கிலோ மீட்டர் முதல் 320 கிலோ மீட்டர் வரை இருக்கிறது. பனி கவிந்து கொண்டிருக்கும் சிகரங்களைக் கொண்ட வெள்ளிப் பனிமலையாம் இம்மலைத் தொடரில் 7000 மீட்டர்களுக்கு மேல் உயரமுடைய நூற்றுப் பதினொன்கு சிகரங்கள் இருக்கின்றன. இவற்றுள் நந்தா தேவி சிகரம் 7817 மீட்டர் உயரம் இருக்கிறது. நங்க பர்வதம் எனும் பெயருடைய சிகரத்தின் உயரம் 8126 மீட்டர். தவளகிரி சிகரத்தின் உயரம் 8172 மீட்டர். கிஞ்சின்சிங்கா சிகரம் 8598 மீட்டர் உயரம் இருக்கிறது.

காட்வின் ஆஸ்டின் எனும் பெயருடைய சிகரத்தின் உயரம் 8611 மீட்டர். எவரெஸ்ட் சிகரத்தின் உயரம் 8848 மீட்டர். இதுதான் இமயமலையில் மிக உயரமான சிகரம். இவ்வளவு உயரமான சிகரமுடைய மலை உலகில் வேறு எந்த நாட்டிலும் இல்லை. இந்த உயரமான சிகரங்களே இமயமலையின் தனிப்பெருஞ் சிறப்பை விளக்குவனவாகும்.

இமயமலைத் தொடர்களால் நம் நாட்டிற்குப் பல நன்மைகள் உண்டாகின்றன. பனிமூடிய இதன் சிகரங்களில் உற்பத்தியாகும் ஆறுகள் என்றும் வற்றாத நீர்ப் பெருக்கோடு ஓடி வடஇந்தியச் சமவெளியை வளப்படுத்து கின்றன. நடு ஆசியாவிலிருந்து வீசும் குளிர் காற்று இந்தியாவின் மீது வீசாதவாறு இமயமலை அரண்போல் நின்று தடுக்கிறது; பருவக்காற்றுகளைத் தடுத்து நிறுத்தி நல்ல மழைபொழியத் துணை செய்கிறது.

இமயமலையின் ஒரு பகுதியாகிய கைலாச மலையில் சிந்து ஆறு உற்பத்தி ஆகிறது. இந்த ஆற்றின் பெயர்க் காரணத்தை முன்னரே படித்தீர்கள். இமயமலையின் பிற பாகங்களில் உற்பத்தியாகும் ஜீலம், சீனப், ராவி, பியாஸ், சட்லெஜ் என்னும் ஐந்து ஆறுகளும் சிறிதுதொலை தனித் தனியே ஓடிவந்து சிந்து ஆற்றில் கலந்து விடுகின்றன.

சிந்து ஆறு தன் ஐந்து துணையாறுகளுடன் பாயும் நிலப் பகுதி பஞ்சாப் எனும் பெயர் பெற்றது. பஞ்சாப் என்பது ஐந்து ஆறு எனப்பொருள் படும். மேலும், மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் நம் நாட்டவர் எத்தகைய சிறந்த நாகரிகத்துடன் வாழ்ந்தார்கள் என்பதை விளக் கிக் காட்டும் ஹரப்பா, மொகஞ்சதாரோ முதலிய நகரங்கள் இந்த ஆற்றங்கரையில் விளங்கியிருந்து பின் மண்மேடிட்டு மறைந்து போய் இப்போது அகழ்ந்து காணப்பட்டிருக்கின்றன.

"இன்னறு நீர்க்கங்கை யாறெங்கள் யாறே இங்கி தன் மாண்பிற் கெதிரெது வேறே" என்று பாரதியார் புகழ்ந்து பாடும் புனிதப் பேராறாகிய கங்கை, இமய மலையில் கார்வால் தொடர்ச்சியில் கங்கோத்ரி என்னும் பனிக்கட்டி ஏரியில் உற்பத்தியாகி, மலைகளையும் பாறை

களையும் கடந்து வந்து ஹரித்துவாரம் என்னும் இடத்தில் சமவெளிப் பகுதியை அடைகிறது. இமயமலையின் மற்றொருபுறம் உற்பத்தியாகும் யமுனை ஆறு நெடுந்தொலை தனியே ஓடிவந்து பிரயாகை (அலகாபாத்) என்னுமிடத்தில் கங்கையுடன் சேர்கிறது. இந்த ஆற்றுடன் பல துணையாறுகள் வந்து கலக்கின்றன. இந்த ஆற்றின் கரை நெடுகப் புனிதத் தலங்களும், வரலாற்றுச் சிறப்புடைய நகரங்களும் பல இருக்கின்றன.

முக்கோண வடிவமாயுள்ள தக்கணத்தில், குறுக்கே கிழக்கு மேற்காக விந்திய, சாத்பூரா மலைகள் இருக்கின்றன. மேற்கே மலைத்தொடர் ஒன்று தென்கோடி வரை மதிற்சுவர் வைத்தது போன்று செங்குத்தாக அமைந்திருக்கிறது. கிழக்கே இடையே விட்டு விட்டு ஆனால் தொடராகப் பல மலைகள் தென்கோடி வரை அமைந்திருக்கின்றன. இவை யிரண்டும் மேற்குமலைத் தொடர், கிழக்குமலைத் தொடர் என வழங்கப்படுகின்றன. இவை யிரண்டும் நீலகிரி மலைகளால் இணைக்கப்படுகின்றன.

தக்கணத்தில் வடக்கே நர்மதை, தபதி எனும் ஆறுகளும்,தெற்கே பெரியாறும் மேற்கே தோன்றிக் கிழக்காக ஓடி அரபிக் கடலில் கலக்கின்றன. மகாநதி, கோதாவிரி, கிருஷ்ணை, வடபெண்ணை, தென்பெண்ணை, பாலாறு, காவிரி, வைகை, பொருநை முதலியவை மேற்கே தோன்றிக் கிழக்காகப் பாய்ந்து வங்காளக் குடாக்கடலில் கலக்கின்றன. இவற்றுள் கோதாவிரி, கிருஷ்ணை, காவிரி, வைகை புனித ஆறுகளாகக் கருதப்படுகின்றன.

நம் நாடு கனிவளம் பொருந்தியதாகும். இரும்பு, பெட்ரோல், தங்கம், அப்ரகம், நிலக்கரி, மங்கனீசு, இல்மனைட் (வெள்ளீயம் போன்றது), மோனஸைட் (அணுசக்தி உற்பத்தி செய்வதற்கேற்ற தோரியமும் யுரேனியமும் கலந்த மணல்) முதலியவை நம் நாட்டில் கிடைக்கின்றன.

நம் நாட்டில் பசுங்காடுகள், பருவக்காற்றுக்காடுகள், ஊசியிலைக் காடுகள், மாங்குரோவ் காடுகள், புல்தரைகள்,

பாலைவன முட்புதர்கள் எனப் பலவகைத் தாவரங்களுக்குரிய நிலப் பகுதிகளைக் காண்கிறோம்.

நம் நாட்டுக் காடுகளிலிருந்து சால், தேக்கு, கருங்காலி, ஓக், சந்தனமரம் முதலிய உயர்ந்த ரக மரவகைகள் கிடைக்கின்றன. காகிதங்கள் செய்வதற்குரிய மிருதுவான மரங்களும், மூங்கில், பிரம்பு போன்றவைகளும், அரக்கு, மரப்பிசின், தேன் முதலியவைகளும் பெரும் அளவில் கிடைக்கின்றன.

''கன்னலும் தேனும் கனியும் இன்பாலும்
கதலியும் செந்நெலும் நல்கும் எக்காலும்
உன்னத பாரத நாடெங்கள் நாடே
ஓதுவம் இஃதை எமக்கிலை ஈடே''

என்றும்,

''தோட்டத்தி லேமரக் கூட்டத்திலே—கனி
ஈட்டத்தி லேபயிர் ஊட்டத்திலே
தேட்டத்தி லேஅடங்காத நிதியின்
சிறப்பினி லேஉயர் நாடு''

என்றும் அமரகவி பாரதியார் கூறியிருப்பது போன்று எல்லா நலன்களிலும் சிறந்தது நம் நாடு.

ஆனால், உலக நாடுகளைப் போல் இது முன்னணி பெருமைக்குக் காரணமென்ன? பன்னெடுங்காலமாய் நம் நாடு பிறருக்கு அடிமைப்பட நேர்ந்து விட்டதுவும், அவ்வாறு அடிமைப்பட நம்மிடை இருந்த குறைபாடுகளுமே காரணமாகும். ஆனால் 1947 ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் பதினைந்தாம் நாள் முதல் நம் நாடு முழு உரிமை பெற்ற நாடாக விளங்குகிறது. நம் நாடு அடிமைப் படுவதற்குக் காரணமாயிருந்த நம் குறைகள் மீண்டும் நம்மிடை ஏற்படா வண்ணம் அகற்றினோமாயின், உரிமை பெற்றநம் நாடு, உலகின் சிறந்த நாடுகளில் ஒன்றாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

நம் நாடு அடிமைப் படுவதற்குக் காரணமாயிருந்த குறைகள் என்ன? நம் நாட்டு மக்கள் பல இனத்தவராக,

பல சாதியினராகப் பிரிந்து, ஒருவருக் கொருவர் உயர்வு தாழ்வு கற்பித்துக்கொண்டு, அவிழ்த்துக்கொட்டிய நெல்லிக்காய் மூட்டைபோல வாழ்க்கை நடத்தியது ஒரு காரணம். நம் நாட்டவருள் பலரைத் தீண்டத்தகாதவராக ஒதுக்கிவைத்தது ஒரு காரணம். அரசர்களாக வந்தவர்கள் ஒற்றுமையற்று ஒருவருக்கொருவர் பொருமையாலும் மண்ணுசையாலும் பிற ஆசைகளாலும் பகைமை கொண்டிருந்தது ஒரு காரணம்.

இவற்றுள் பல, நம் நாடு உரிமை பெற்றவுடன், அமைந்த அரசாங்கத்தாரால் நீக்கப்பட்டு விட்டன. தீண்டாமை அகற்றப்பட்டது. ஆடம்பரத்திலும் ஒழுக்கக் கேடுகளிலும் பொருமையிலும், மண்ணுசையிலும் மூழ்கி ஒற்றுமையற்றுக் கிடந்த அரச சமுதாயம் ஒழிக்கப்பட்டது. எனவே, இப்பெருந் தீமைகள் இனி நம் நாட்டு ஒற்றுமையைச் சீர்குலைக்க மாட்டா.

ஆயின், சாதி இன வேறுபாடுகள் இன்னும் ஒழிந்தபாடில்லை. அரசாங்கம் இதனையும் ஒழிக்க முயன்றுவருகிறதெனினும், மக்கள் வழக்கத்தில் இத்தீமையை இன்னும் ஒழிக்கவில்லை. இத்தீமையும் ஒழிந்தால், நம் நாட்டு மக்கள் அனைவரும் ஒரே இனத்தவராய் வாழ முடியும்.

மதமோ, மொழியோ நம் ஒற்றுமையைக் குலைக்க முடியா. இமயமலையிலிருந்து குமரி முனைவரை, இந்து மதம், கிறித்துவமதம், இஸ்லாமிய மதம் பரவியிருக்கின்றன. இவற்றைத் தழுவிய மக்கள் ஒரே மொழி பேசுபவர்களல்லர். பலமொழிக்குரியவர்கள் இந்துக்களாகவும், கிறித்தவர்களாகவும், இஸ்லாமியர்களாகவும் இருப்பதை நாம் பார்க்கிறோம்.

எனவே, நாம் அனைவரும் ஒரே நாட்டினர், இந்தியர் என்னும் உணர்ச்சி பெறவேண்டும். நம் ஒற்றுமையைக் குலைக்க எதற்கும் இடந்தரக் கூடாது. ஒரே இனத்தவராகிய—இந்தியராகிய—நாம் நமக்கு விருப்பமான மதத்தினராயிருக்கலாம், மொழியினராயிருக்கலாம்—ஆனல் நாம் அனைவரும் இந்தியரே அன்றோ!

இவ்வாறு நாம் அனைவரும் ஒன்றுபட்ட நிலையைப் பெற மாணவப் பருவ முதலே பழகி வரவேண்டும். நம்முள் எழும் சில்லறை வேற்றுமைகளைக் களைந்து,

''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கெது வேண்டும்!
எப்பதம் வாய்த்திடு மேனும் நம்மில்
யாவர்க்கும் அந்த நிலைபொது வாகும்
முப்பது கோடியும் வாழ்வோம்—வீழில்
முப்பதுகோடி முழுமையும் வீழ்வோம்''

என்றும்,

''எல்லாரும் ஓர்குலம் எல்லாரும் ஓரினம்
எல்லாரும் இந்தியா மக்கள்
எல்லாரும் ஓர்நிறை எல்லாரும் ஓர்விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர்—நாம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர்—ஆம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர்—வாழ்க
பாரத சமுதாயம் வாழ்கவே வாழ்க வாழ்க
பாரத சமுதாயம் வாழ்கவே''

என்றும் அமரகவி பாரதியார் பாடியுள்ளவற்றை நன்கு மனத்தில் பதியவைத்துக்கொண்டு, நாம் முன்னேற்ற மடைந்து நம் நாட்டை முன்னணிபெறச் செய்தல் வேண்டும். இதுவே நம் தலையாய கடமையாகும்.

'பாரத நாடு பார்க்கெலாம் திலகம்
நீரதன் புதல்வர் இந்நினை வகற்றுதீர்'

அருஞ்சொற்பொருள்

வன்மை - வலிமை. ஆற்றல் - சக்தி. வண்மை - வளமை. திண்மை - உறுதி. மதிநுண்மை - நுட்ப அறிவு. மன்னும் - நிலை பெற்றிருக்கும். பிறிது இலையே - வேறு இல்லையே. அகழ்ந்து - தோண்டி. இன்னறு - இனிய புனிதமான. கனிவளம் - சுரங்கவளம்.

கன்னல் - கரும்பு. கதலி - வாழை, நல்கும் - கொடுக்கும். முப்பது கோடி - பாரதியார் இப்பாடலைப் பாடியபோது நம் நாட்டு மக்கள் தொகை முப்பது கோடி. இப்போது நாற்பத்தாறு கோடி.

கேள்விகள்

1. நம் இந்திய நாட்டிற்குப் பாரத நாடு என்ற பெயர் வந்ததேன்?
2. இந்தியா என்னும் பெயர் வரக் காரணம் என்ன?
3. நம் நாட்டின் சிறப்பைப் பாரதியார் எப்படிப் புகழ்ந்துள்ளார்?
4. நம் நாட்டின் அமைப்பு எத்தகையது?
5. இமயமலை தனிப்பெருஞ் சிறப்புப்பெறக் காரணம் யாது?
6. இமயமலைத் தொடரால் நம் நாடு அடையும் நன்மைகள் யாவை?
7. சிந்து ஆற்றின் சிறப்பு யாது?
8. கங்கையாற்றின் சிறப்பு யாது?
9. தக்கணத்தின் அமைப்பு யாது?
10. நம் நாடு எத்தகைய வளங்கள் பொருந்தியவை?
11. நம் நாடு அடிமைப்படக் காரணமாயிருந்த குறைகள் யாவை?
12. நம் நாடு முன்னணி பெற நாம் என்ன செய்ய வேண்டும்?

பயிற்சி

1. இப்பாடத்தில் வரும் பாக்களை உரைநடைப் படுத்துக.
2. எதிர்ச் சொற்களை அறிக:

   புகழ்ந்து, துறவி, நீண்ட காலம், தக்க, குறைவு, உண்மை, உயர்ந்த, ஒழுங்கில்லாத, பொதுவாக, பெரிய, பிரித்து, நன்மை.
3. பொருள் வேறுபாடு அறிக:

   பனி - பணி. தனி - தணி. வளம் - வலம். ஏரி - ஏறி. பாரை - பாறை. கரை - கறை. கனி - கணி.
4. நாட்டைப் புகழ்ந்து பாடியுள்ளார். இவரைத் தங்கள் அரசராக்கினர்—நாட்டை+புகழ்ந்து, இவரை+தங்கள் - இவ்விரண்டிலும் வல்லினம் மிகுந்துவரக் காரணம் என்ன?

2. கௌதம புத்தர்

(பாரத ரத்தினம் டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன்)
இந்தியாவின் ஜனதிபதி

கௌதம புத்தர், கி. மு. 563 ஆம் ஆண்டில் கபில வஸ்துவில், சாக்கியர் எனப்படும் அரச குடும்பத்தில் நேப் பாள நாட்டு எல்லையில், காசிக்கு வடக்கில் நூற்றறுபது கிலோ மீட்டர் தொலைவில் சுத்தோதனர் என்பவருக்குத் திருமகனுராய்ப் பிறந்தார்.

அவ்வாறு புத்தர் பிறந்த இடத்தைப் பேரரசர் அசோகர் பிற்காலத்தில் ஒரு மதிற்சுவர் எழுப்பி அடை யாளம் இட்டுக் குறிப்பிட்டுள்ளது இன்றைக்கும் காணப் படுவதாகும். அம்மதிற் சுவரில் காணப்படும் கல்வெட்டு ஒன்றில், "அரசரான தேவனும்பிரிய பிரியதரிசின் இருபது ஆண்டுக்கால அரசாட்சி செய்தபோது, அவர் தாமே இங்குவந்து இவ்விடத்தைத் தொழுது சென்றூர். இதற் குக் காரணம் புத்த சாக்கிய முனிவர் இவ்விடத்தில் பிறந் தாரென்பதே" என்று குறிக்கப்பட்டுள்ளது.

புத்தரது இயற்பெயர் சித்தார்த்தர் என்பதே, கௌதமர் என்பது அவரது குடும்பப் பெயராகும். அவர் பிறந்த பொழுது அங்கிருந்த சோதிட வல்லுநர்கள், அவர் அரசு ஏற்று நடத்த இசைந்தால் பேரரசராகி விளங்குவார் என்றும், நாடு சுற்றும் துறவியரின் வாழ்க்கையை மேற் கொண்டால் புத்தராகப் பரிணமிப்பார் என்றும் தெரி வித்தார்கள். ஒருவர் ஒரே சமயத்தில் பேரரசராகவும் புத்தராகவும் இருக்க முடியாது. ஏனெனில், சமயத் தத்துவங்களை ஆராய்பவர்களுக்கு இவ்வுலகப் பற்று அறவே நீங்கவேண்டுவது இன்றியமையாத தன்றே?

குழந்தையைக் காணவந்த அசிதர் என்ற முதிய ஞானி, சிமியோன் இயேசுவைக் கண்டதுபோல, அக் குழந்தையின் எதிர்காலப் புகழை எடுத்துக் கூறி, அவ்வளவு காலம் வரை, தாம் அதைக் கண்டுகளிக்கவும், அவருடைய தெய்விகச் சொற்களை இருந்து கேட்கவும்

இதனைத் தமிழாக்கம் செய்தவர் வி. எஸ். வி. இராகவன் அவர்கள்.

முடியாமைக்கு வருந்தி அழுததாகச் "சுத்தநிபாதம்" என்னும் நூலிலுள்ள கதையால் அறிகிறோம்.

குழந்தை பிறந்து ஏழு நாட்களுக்குப் பிறகு அதன் தாய் இறந்துவிடவே, அவள் தங்கையான மகாபிரசாபதி—சுத்தோதனரின் இரண்டாம் மனைவி—அக்குழந்தையை வளர்த்து வந்தாள். கௌதமரின் சிற்றன்னையாகிய மகாபிரசாபதிக்குப் பத்தகச்ச, கோபா என்னும் வேறு பெயர்களும் உண்டு.

கௌதமர் உரிய காலத்தில் தம் உறவினருள் ஒருத்தியான யசோதரை என்பாளைத் திருமணம் செய்துகொண்டு இராகுலன் என்னும் மகனைப் பெற்றார்.

கௌதமருடைய தந்தை, தம் மைந்தர் எத்துன்பத்தையும் காண்பதைத் தவிர்க்கவேண்டும் என்று எண்ணினர். விதியோ அல்லது தெய்வ எத்தனமோ அவர் போகும் வழியில் ஒரு நொண்டியையும், ஒரு நோயாளியையும், இறந்த ஒருவனது சடலத்தையும், ஊர் சுற்றும் ஒரு துறவியையும் ஒருவர் பின் ஒருவராக வருமாறு செய்தது. அதனல் கௌதமர் கடைசியில் சமய ஆசார சீலத்திலும், மனநிறைவு அடைவதிலும் விருப்பங்கொண்டு விட்டார். இக்கதைகள் அறிவிப்பன யாவையெனில், கௌதமர் சமயத்துறையில் பற்றுள்ளவர் என்பதும், உலகவாழ்க்கையில் காணப்படும் இன்பங்களும் ஆசைகளும் மனநிறைவு அளிப்பனவாகா என்பதுமே யாகும். துறவற வாழ்க்கையின் தூயதன்மையே அவரை மிகவும் கவர்ந்து விட்டது.

புத்தரின் தந்தை தம் மைந்தரின் மனத்தை உலக இன்பங்களில் ஈடுபடுமாறு செய்யச் செய்த ஏற்பாடுகள் அனைத்தும் பயனற்றுத் தோல்வியுற்றன. கௌதமர் தமது இருபத்தொன்பதாம் வயதில் இல்லத்தைத் துறந்து, துறவிக் கோலத்தை மேற்கொண்டு, உண்மையைக் காண விழையும் துறவியாய்த் தம் வாழ்க்கையைத் தொடங்கிவிட்டார். இதுதான் மகத்தான துறவறம் எனப்படும். உலகப்பற்றில் ஈடுபட்டுள்ள நாம் இந்துக்களின் மனம் அக்காலத்தில் சமயத்தில் எவ்வளவு பற்றுக்கொண்டது என்பதையும், அச்சமயத்தின் இறுதிக் கட்டத்தில் காணப்படும் பேரின்பத்தையடைய எத்தகைய இன்னல்களையும் போராட்டங்களையும் ஏற்கத்

த்யாராயிருந்ததென்பதையும் அறிந்து கொள்வது மிக மிகக் கடினமான செயலேயாகும்.

கௌதமரின் ஆழ்ந்து சிந்திக்கும் மனப்பண்பு அவரை, ஆலாரகாலாமா, உத்தக ராமபுத்ரா என்னும் வேதிய முனிவர்களுக்குச் சீடராக்கிற்று. அவர்கள் தங்கள் கோட்பாட்டின் படி, கௌதம புத்தருக்குத் தர்மமும் விநயமும் போதித்தார்கள். அவர்களிடமிருந்து கௌதமர், நம்பிக்கையின் இன்றியமையாமை, ஒழுக்கம், மனத்தை ஒருநிலைப்படுத்தும் தவத்திறம் ஆகியவற்றை ஒருவாறு கற்றுக் கொண்டாராயினும் அவர்களுடைய போதனைப் பொருள்கள், அவருக்குச் சரியெனத் தோன்றவில்லை.

கௌதமர் இடைவிடாத யோக சாதனைகளினால் ஞானசித்தியைப் பெறும் உறுதிப்பாட்டுடன், தம்முடைய சீடர் ஐவருடன் மகிழ்ச்சியும் அழகும் நிரம்பப்பெற்றதும் புலன்களுக்கு இதமானதும், மனத்துக்கு உற்சாகத்தை அளிக்கக் கூடியதுமான உருவேலா என்னும் காட்டினுட் சென்றுவிட்டார். சாந்தியும் அழகும் வாய்ந்த இடங்களில் மனத்துக்கு முழுநிறைவையும் ஆர்வத்தையும் கொடுக்கக் கூடிய புனிதமான வாழ்க்கை எளிதாக நடத்தப்பெறும் என்பது இந்தியாவில் நிலவி வந்த பொதுவான கொள்கையாகும்.

இத்தகைய அழகு வழிந்தோடுமிடத்தில் கௌதமர் கடுமையான யோக சாதனைகளில் ஈடுபட்டுக் கடுந் தவத்தை மேற்கொண்டார். ஈரமுள்ள இரு கட்டைகளைத் தேய்த்தால் எவ்வாறு நெருப்பு உண்டாகாதோ அவ் வாறே ஐம்புலன்களையும் வெல்லாதவர்கள்—ஆசையை அடக்காதவர்கள்—ஞானப் பேறு பெறமுடியாது என் பதை அவர் உணர்ந்தார். அது காரணமாகக் கடும் பட்டினி கிடந்து மனத்தை ஒரு நிலையில் நிறுத்தும் பல வகை யோக சாதனைகளைப் பயின்று பற்பல தவ விரதங் களையும் தம் அன்றாட வாழ்க்கையில் மேற்கொண்டார்.

அவருடைய உடல்நிலை தளர்வு எய்தவெய்த ஆன்ம சத்தியானது பன்மடங்கு பெருக்கமடைந்தது. இக்கடுந் தவக் காலத்தில், பலமுறை இறப்பின் வாயிலை அவர் எட்டிப்பார்த்த துண்டாயினும், வாழ்க்கைப் புதிரைப்

பற்றிய கருத்து சிறிதேனும் அவருக்குப் புலப்படவில்லை. அது காரணமாகக் கடுத்தவத்தால் ஞானப்பேறு அடைய முடியாதென்று கருதி, அதற்குரிய வேறு வழிகளைப்பற்றி அவர் சிந்திக்கத் தொடங்கினர். அவருடைய உள்மன நிலை சலனமுறாது ஒரே நிலையில் தொடர்ச்சியுற்று நின்றது. மிகுந்த மனப்போராட்டத்துக்குப் பிறகே அவர் தம்முடைய பழைய கொள்கைகளிலிருந்து விடுபட்டுப் புதிய முறைகளைத் தழுவ முயன்றார்.

இப்பரந்த பேரண்டங்கள் அனைத்தும் ஒரு நியதிக்குட் பட்டே நடக்கின்றன என்பதையும், அவற்றில் தத்தளிக் கும் சீவராசிகள் பல உள்ளன என்பதையும், அச்சீவராசி கள் இன்பமாகவோ துன்பமாகவோ, பெருமையாகவோ சிறுமையாகவோ ஒரு வாழ்க்கை நிலையிலிருந்து மற்றொரு நிலைக்குத் தொடர்ச்சியாகப் பரிணமித்துக் கொண்டிருக் கின்றன என்பதையும் அவர் கண்டார்.

இவ்வாறு தியானத்தில் அமர்ந்த ஓர் இரவின் முடிவு நேரத்தில் அவரது அறியாமை அழிக்கப்பட்டது; பேரறிவு முளைத்தெழுந்தது. அப்பொழுது அவர் முழுச் சிந்தனை யுடனும், ஆர்வத்துடனும் உறுதி மனப்பான்மையுடனும் உட்கார்ந்திருந்தார். கௌதமர் அப்பொழுதே 'போதி' அல்லது பேரறிவு விளங்கப்பெற்று ஞானப் பிழம்புப் புத்தராய்த் தோன்றினர்.

புத்தர் தாம் அறிந்தவற்றைப் போதிப்பதற்குப் புறப்பட்டார். அவர் மிகவும் எளிய போதனைகளை மட்டும் செய்ததுடன் நின்றுவிடாமல், மக்கள் எவ்வித வாழ்க்கையை மேற்கொண்டு ஒழுகவேண்டும் என்று தாம் அறிவுறுத்தினரோ, அதே வாழ்க்கையைத் தாமும் மேற்கொண்டு ஒழுகிக் காட்டினர்.

புத்தர் தமது கடுந்தவத்தில் இறுதிவரை தம் முடன் இருந்து வந்த சீடர் ஐவரையும் முதன் முதலாகத் தம் புதிய மதத்தைத் தழுவுமாறு செய்தார். இப் பொழுது சாரநாத்து என விளங்கும் இடத்தில் அவர் தமது முதற்கோட்பாட்டை எடுத்துரைத்தார். சீடர் பலர் அவரிடம் திரண்டுவந்து சேர்ந்தனர். மூன்று திங்கள் கழிந்த பிறகு, அவருடன் சுற்றுப்பிரயாணத்தில் முழுவதும் இருந்து வந்த, அவரிடம் மிகுந்த அன்பு

கொண்ட ஆனந்தர் என்பவர் உட்பட அறுபது சீடர்கள் இருந்தனர்.

நாற்பத்தைந்து ஆண்டுகள் வரை புத்தர் தாமே பற்பல இடங்களுக் கெல்லாம் நெடுந்தொலை பயணம்செய்து, பலரைத் தம் மதத்திற் சேர்த்துக் கொண்டார். அந்தணர், தபோதனர், முனிவர், ஒதுக்கப்பட்டோர், பெருந்தகை அணங்குகள், பாவமன்னிப்பைக் கோரிய ப்பாவிகள் எனப் பலர் புத்தரது குழுவில் சேர்ந்து கொண்டார்கள். புத்தரது முழு வேலையின் பெரும்பகுதி, தம்முடைய சீடர்களுக்கு அறிவுறுத்துவதிலும் சங்கங்கள் நிறுவுவதிலும் செலவிடப்பட்டது.

புத்தருடைய சொற்பொழிவுகளைப் படிக்கும் பொழுது, அவர் காரணம் காட்டி அழைத்துச் செல்லும் வழியானது நம்மைக் கவர்கிறது. அவரது நீதிவழி நேர்மையான கொள்கைகளையே முதற்படியாகக் கொண்டுள்ளது. அது ஒரு பகுத்தறிவுப் பாதையாகும். மனித இனத்தைப் பற்றியும் அதன் விதியைப் பற்றியும் காணப்படும் தீர்க்க தரிசனத்தை வழிமறிக்கும் ஒட்டடைகள் யாவற்றையும் அவர் அகற்றிச் சுத்தம் செய்ய முயன்றார்.

மற்ற மதங்களைப் பற்றிக் குறைகூறும் வழக்கத்தை புத்தர் கண்டிப்பாக வெறுத்தார். "பிற மதங்களைக் குறை கூறுவது எப்படி இருக்கிறது என்றால்,ஒருவன் அண்ணாந்து வானத்தை நோக்கித் துப்பினால் அவ்வெச்சில் வானத்தை எவ்வாற்றானும் அசுத்தப்படுத்தாமல், திரும்பிவந்து துப்பினவனையே அசுத்தப்படுத்துவது போல இருக்கிறது" என்று புத்தர் கூறினார்.

புத்தர் கோபத்தால் கொதித்தெழுந்தார் என்று கூறத்தக்க ஒரு நிகழ்ச்சியோ அல்லது அன்பற்ற சொல் ஏதேனும் அவர் நாவிலிருந்து புறப்பட்டது என்று சொல்லக்கூடிய ஒரு நிகழ்ச்சியோ என்றும் நிகழ்ந்ததில்லை. கொடியவர்களைக் கொடியவர்கள் என்பதைவிட அறியாதவர்கள் என்றும், சண்டையிடுபவர்கள் என்பதை விடச் சமாதானமாக வாழத் தெரியாதவர்கள் என்றும் புத்தர் கூறினார். எதிர்ப்பினை அமைதியாகவும், துணிவுடனும் அவர் வரவேற்றார். அதனால் மூளைக்கொதிப்போ,

கடுங்கோபமோ அவரிடம் காணப்பட்டதில்லை. மரியாதை யான பண்பாடும், நல்லெண்ணமும் அவரிடத்தில் காணப் பட்டன.

ஒரு முறை அவர் சுற்றுப்பயணம் செய்து வந்த போது, இல்லறத்தார் ஒருவர் அவரை மடக்கிக் கடுமை யான இழிசொற்களால் தூற்றினர். புத்தர் அவரை நோக்கி, "“அன்பரே, இல்லறத்தார் ஒருவர், ஒரு பிச்சைக் காரன் முன் உணவை வைத்தார் என்று பாவித்துக் கொள்ளும். அவன் அதை ஏற்றுக்கொள்ள மறுத்து விட் டால் அவ்வுணவு எவருக்குச் சொந்தமாகும்?'' என்று கேட்டார்.

அந்த இல்லறத்தார், “ஏன், அவ்வுணவு இல்லறத் தாருக்குச் சேர வேண்டுவது தானே?'' என்று விடை பகர்ந்தார்.

புத்தர் அவரை நோக்கி, “ஆகையால், நீர் கூறிய சுடு சொற்களை நான் ஏற்க மறுத்தேனானால் அவை உம்மையே சார்ந்துவிடும் அல்லவா? ஆனால் நான் நண்பன் ஒருவனை இழந்து விட்டால் இன்னும் வறியவனாகச் செல்ல வேண்டும்'' என்று கூறினர்.

நம்முடைய மடமையான ஆசைகள் காரணமாக நாம் மகிழ்ச்சியற்றிருக்கிறோம். நாமே களிப்படைய வேண்டுமானால், நமக்குள் புதிய ஓர் இதயப் பண்பை உண்டாக்கி, புது நோக்கோடு அதைக் காணவேண்டும். கெடுதல் வாய்ந்த எண்ணங்களை அடக்கி, தூய எண்ணங் களையே எண்ணப் பழக்கப்படுத்திக்கொண்டால், மகிழ்ச்சி யில்லாத கெட்ட மனத்தை மகிழ்ச்சி நிறைந்த நல்ல மன மாக்கிவிடலாம்.

புத்தர் மரணமடைந்த பொழுது அவருக்கு எண்பது வயது ஆகியிருந்தது. அவருடைய உடல் பயணத்தாலும், ஏற்பட்ட இன்னல்களாலும் மிகவும் தளர்ந்து காணப் பட்டது. கி. மு. 483 ஆம் ஆண்டில் காசிக்கு 192 கிலோ மீட்டர் வடகிழக்கில் உள்ள குசி நகரம் என்னும் சிற்றூருக்கு அருகில் விளங்கிய கிராமம் ஒன்றில் அவர் தம் ஆவியை நீத்தார்.

அருஞ்சொற்பொருள்

வல்லுநர் - வல்லமையுடையவர். இசைந்தால் - இணங்கினல். துறவி - பற்று ஏதும் இல்லாதவர். பரிணமிப்பார் - விளங்குவார். புத்தர் - ஞானமடைந்தவர். சீலம் - ஒழுக்கம். சடலம் - உடல். மனநிறைவு - திருப்தி. விழையும் - விரும்பும். எய்தவெய்த-அடைய அடைய. பேரண்டங்கள் - கிரகங்கள். நியதி - கட்டுப்பாடு. சீவ ராசிகள்-பலவகை உயிரினங்கள். திங்கள் - மாதம். தீர்க்கதரிசனம்- எதிர் காலத்தில் நடக்கவிருப்பதை அறிதல்.

கேள்விகள்

1. புத்தர் எங்கு எவருக்கு மகனுய்ப் பிறந்தார்?
2. புத்தர் பிறந்த இடத்துக்கும் அசோகருக்கும் என்ன தொடர்புளது?
3. புத்தர் பிறந்தபோது சோதிட வல்லுநர் கூறியது யாது?
4. குழந்தையைக் காண வந்த அசிதர் யாது கூறினுர்?
5. கௌதமர் எதில் மனநிறைவடைந்தார்? ஏன்?
6. புத்தரின் தந்தை எதில் தோல்வியடைந்தார்?
7. கௌதமர் முதலில் எவருக்குச் சீடரானுர்?
8. உருவேலா காட்டில் தவம் செய்து புத்தர் உணர்ந்தது யாது?
9. புத்தர் ஞானம் பெற்றபின் என்னென்ன செய்தார்?
10. புத்தருடைய சொற்பொழிவுகள் எத்தகையவை?
11. மற்ற மதங்கள் பற்றிப் புத்தர் கொண்ட கருத்து யாது?
12. தம்மை மடக்கிய இல்லறத்தாரைப் புத்தர் எப்படித் திருத்தினுர்?
13. புத்தருடைய பண்பாடுகள் யாவை?
14. புத்தருடைய இறுதி பற்றி வரைக.

பயிற்சி

1. சொந்தச் சொற்ருெடரில் அமைத்து எழுதுக:
   வடக்கே, பிற்காலத்தில், அடையாளம், தொழுது, இசைந்தால், ஆராய்பவர், இன்றியமையாதது, தவிர்க்க வேண்டும், நோயாளி, சடலம்.
2. எதிர்ச்சொற்கள் எழுதுக:
   துறவி, கடைசியில், விருப்பம், இன்பம், தோல்வி, பேரின்பம், இறுதி, பொதுவான, எளிதான, பெருக்கம், இரவு.
3. புத்தர் வரலாற்றைச் சுருக்கிக் கதையாக வரைக.

3. மொழித்திறத்தின் முட்டறுத்தல்

(மகாவித்துவான் மே. வி. வேணுகோபாலப் பிள்ளை)

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு"

என்பது வள்ளுவர் வாய்மொழி. '(அறியாதவர்) எண்ணென்று சொல்லுவனவும் மற்றை எழுத்தென்று சொல்லுவனவுமாகிய கலைகள் இரண்டனையும், (அறிந்தார்) சிறப்புடை உயிர்கட்குக் கண்ணென்று சொல்லுவர்' என்பது வள்ளுவர் வாய்மொழிக்குத் தெள்ளுதமிழ்ப் புலவர் பரிமேலழகர் கண்ட உரை. 'எழுத்தெனவே, அதனோடு ஒற்றுமையுடைய சொல்லும் அடங்கிற்று. இவ்விரு திறமும் அறமுதற் பொருளைக் காண்டற்குக் கருவியாகலின், கண்ணெனப்பட்டன,' என்பது அவர் தந்த விளக்கம்.

'எழுத்தறியத் தீரும் இழிதகைமை; தீர்ந்தான்
மொழித்திறத்தின் முட்டறுத்தா னாகும்;—மொழித்திறத்தின்
முட்டறுத்த நல்லோன்; முதனூற் பொருளுணர்ந்து
கட்டறுத்து வீடுபெறும்.'

என்னும் பழஞ்செய்யுள் மொழித்திறத்தின் முட்டறுப்பான் எய்தும் பயனுக்கு அவர் எடுத்துக் காட்டிய மேற்கோள்.

இவற்றான், வாழும் உயிராகிய மக்கள் உயிர்க்குக் கல்வி இன்றியமையாத தென்பதும், அதனைக் கற்பார் எழுத்தறிவும் சொல்லறிவும் பெறுதல் தக்கதென்பதும், அவற்றைப் பெறுங்கால் அவற்றின் முட்டற்ற நிலையறிதல் வேண்டற்பாலது என்பதும், அவற்றை அங்ஙனம் அறிந்து பெறாதவழி முதற்நூற்பொருளை நன்குணரல் இயலாதென்பதும் தேற்றம்.

ஆய்மொழி பலவற்றுள்ளும் நம் தாய் மொழியாகிய தமிழ் மொழி தனிச்சிறப்பு வாய்ந்த மொழியாம் என்பது தண்டமிழின் மேலாந்தரத்து நூல்களைக் கண்டறிந்தார் கூறுங் கூற்று. நற்றமிழ் மொழியின் நலந்தெரிக்கும் நூல்கள் சங்க காலச் சான்றோர்கள் தந்த பத்துப்பாட்டு, எட்டுத் தொகை, பதினெண் கீழ்க்கணக்கு என்னும் நூல் களும், பிற்காலச் சான்றோர்கள் கண்ட காப்பியங்களும் பிறவுமாம்.

நமக்குக் காலத்தாற் பழமையுடையதாகக் காட்சி யளிப்பது 'தொல்காப்பியம்' என்னும் தோமறு நூல். மரபு வழுவாத மாண்புடைய சங்க காலச் சான்றோர்கள், தொல்காப்பிய மரபு பற்றியே தங்கள் நூல்களைச் செய்துள்ளார்கள். பிற்காலப் புலவர்கள், வளருந் தமிழில் வந்து குடியேறிய சொற்களையும் கருத்துரைகளையும் வரவேற்று அவற்றையும் தமிழ் மரபிற்கேற்ற ஒலி நயம் தோன்றத் திருத்தியமைத்துத் தம் நூல்களிற் பயிலச் செய்தார்கள். தமிழறிவுடையார் பலரும் தமிழ் மரபிற்கு ஒவ்வாத வகையில் மொழித்திறம் உணராத மக்களால் வழங்கப்படும் எழுத்தொடு புணர்ந்தும் இன்னலம் பயவாச் சொற்களையும் தொடர்களையும் இன்னுதன எனக்கொண்டு, மரபு வழுவென விலக்கி, மொழித் திறங்காத்து வந்துள்ளனர்.

இங்ஙனமிருக்க, இந்நாள் வெளி வந்துலவும் தமிழ் ஏடுகளில் எழுத்துஞ் சொல்லும் தம் தூய்மை இழந்து காட்சியளிக்கக் காண்கிறோம். இதற்குக் காரணம் எது வென ஆராயின், இந்நாள் தமிழறிஞர் இலக்கணப் பயிற் சியை இகழ்ந்து வருவதே என்பது புலப்படும்.

இந்நாள் வரை ஆட்சி மொழி ஆங்கிலமாய் அமைந் திருந்தது காரணமாக அலுவல்களில் அமர்ந்து வயிறு வளர்ப்பார் பலருக்கும் அம்மொழியறிவு இன்றியமை யாததாயிற்று. ஆதலின், குற்றேவலர்க்கும் அம்மொழி யறிவு ஓரளவு வேண்டத் தகுவதாயிற்று. ஆதலின், தமிழர் தம்மொழி போற்றும் தகுதி இழந்து, பிறமொழி பேணும் பெற்றியர் ஆயினர். ஆங்கில மொழி அறிந் தவரே அறிவு சான்றவர் எனப் போற்றப்படுவாராயினர்.

ஆதலின் ஆங்கில மொழி வழக்கே அடுக்களை வரையிற் புகுந்து ஆட்சி புரிவதாயிற்று.

வந்தேறி மொழி வாழ்வு பெற்றதால், இருந்த மொழி எழிலிழந்து பஞ்சைக் கோலங்கொண்டு பாராட்டு வாரற்ற நிலை எய்துவதாயிற்று. இது காரணமாக நாட்டு வழக்கிலும் ஏட்டு வழக்கிலும் நலிவடைந்த தோற்றத் தோடு நற்றமிழ் மரபு இழந்து நிற்கும் நிலையைக் காண்கிறோம்.

தமிழ் மக்களுள் எண்ணற்றோர் தம் பெயரைத் தவறின்றி எழுதவும் அறியா நிலை எய்தினர். தமிழறிவு பெறாத மக்களே அயலாட்சியிலமைந்த அலுவலகங்களி லெல்லாம் அயல் மொழி கற்றுப் பணியாற்ற நேர்ந்தமை யால், அலுவல் துறைகளில் தமிழ் மொழி தன்னலனழிந்த நிலையிலேயே வாழ்ந்து வந்தது.

தெருக்கோடிகளில் அமைக்கப்பட்டுள்ள தெருப் பலகையில் காணும் தெருப் பெயர்களுங்கூட அம்மைத் தழும்புற்றனபோல அழகிழந்து காணப்படுகின்றன. நாட் செய்திகளைத் தாங்கி வெளிவரும் செய்தித் தாள் களிலும் நல்ல தமிழ் காட்சியளிக்கவில்லை. இலக்கிய நயம் போற்றும் ஏடுகளிலும் சிதைந்த சொற்களின் வடி வங்களும் மரபுக்கு முற்றும் மாறான சொல்லமைப்புகளும் தொடர் முடிவுகளும் இடம் பெற்று விடுகின்றன. ஆங்கிலங்கற்ற தமிழறிஞருள் ஒரு சாரார் ஆங்கில மொழியில் எண்ணும் கருத்துக்களை அம்மொழி மரபின் வழித் தமிழில் மொழி பெயர்த்துத் தம் நூல்களுள் நடையாட விடுகின்றனர். எடுத்துக்காட்டாக, 'இவை மூன்றினையும் கருத்து சொல், பொருள் என்று நாம் அழைக்கலாம்' என்பது அவர் கூற்று. 'வழங்கலாம்' என்னும் தமிழ் மரபே, இங்ஙனம் எழுதுங்கால் ஆங்கில மரபாயிற்று. 'ஓர் அரசன் அழைக்கப்படுகின்றான்' என்பதும் அது. பாவில் தளை பல அடுத்து நடத்தலின் அடியென வழங்கப்படுவதை 'வரி' என வழங்குவதும் ஆங்கில மரபே.

'அத்தறுவாய்' எனற் பாலது 'அத்தருவாய்' என எழுதப்படுகின்றது. 'ஆத்மா, சக்தி, பிரச்னை, அம்சங்

கள், பக்தி, முக்தி, பூர்வீகம், தாத்பர்யம்', என மெய்ம் மயக்க விதிக்கு மாருக வட சொற்கள் தமிழ் நூல்களில் ஆளப்படுவதும் பொருத்த மற்றதே.

'வண்ணத்துப் பூச்சி' வண்ணுத்திப் பூச்சியானது போலச் சொற்கள் உருமாறிக் கரந்துறை வாழ்க்கை நடத்துவதும் தமிழறிஞர் சிலர் சொல்லாட்சியிற் கருத் தூன்ருமை காரணமாக நிகழ்வதேயாகும்.

திருவள்ளுவர் முதலான செஞ்சொற் புலவர்கள் வழங்கும் சொல்லாட்சிகளைப் பின் பற்றுவோர், 'வேண் டாம்' முதலிய வேண்டா வழக்குகளை மேற் கொள்வதும் வியப்பிற்குரியதே.

கற்றவர் கல்லாதார்க்கு நல்வழி காட்டக் கடமைப் பட்டவராதலின் மொழித்திறத்தின் முட்டறுத்தலை அன்னுர் மேற் கொண்டொழுகுவது இன்றியமையாதது.

'கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக'

என்னும் வள்ளுவர் வாய்மொழி, மொழித்திறம் பேண லுக்கும் முன்னத் தகுவதன்ருே?

மொழியை இறை நிலையில் வைத்துப் பாராட்டினர் நம் முன்னேர். இந்நெறி பற்றி எழுந்ததே பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்கள் இயற்றிய 'மனேன்மணீயம்' என்னும் நாடக நூலுக்கே அணி செய்யும் தமிழ்த் தெய்வ வணக்கம். ஆதலின், தமிழர் அனைவரும்—சிறப் பாகத் தமிழறிஞர் அனைவரும் மொழித் திறத்திற்கு ஊறு நேராத வண்ணம் தாம் கற்ற வழி நிற்றலும், தம்மிடம் பயில்வார்க்கும் அந்நெறி பற்றி நடக்கப் பயிற்சியளித்தலும் ஒல்லும்வகை நல்ல தமிழை வளர்ப் பதற்குரிய செயலாகும்.

'எழுத்தறியார் கல்விப் பெருக்க மனைத்தும்
எழுத்தறிவார்க் காணின் இலையாம்'.

என்னும் அறிஞர் கூற்றும் நம் கருத்திற் பொருந்தத் தகுவதாம்.

வாழ்க மொழி வளம்!

அருஞ்சொற்பொருள்

இழிதகைமை - இழிவு. நலந்தெரிக்கும் - நன்மைகளைத் தெரிவிக்கும். தோம் அறு - குற்றமற்ற. புணர்ந்தும் - சேர்ந்தும். இன்னலம் - இனிய நலன்கள். பயவா - உண்டாக்காத. இன்னுதன - தீயவை. வழு - குற்றம். பெற்றியர் - தன்மையுடையவர். அடுக்களை - சமயலறை. கரந்துறை - மறைந்து வாழும். இறைநிலை - கடவுள் நிலை.

கேள்விகள்

1. "எண்ணென்ப...' எனும் குறளுக்குப் பரிமேலழகர் தந்த விளக்கம் யாது?
2. பழஞ்செய்யுள் எதனை எடுத்துரைக்கின்றது?
3. நற்றமிழ் மொழியின் நலந்தெரிக்கும் நூல்கள் யாவை?
4. பிற்காலப் புலவர்கள் மொழித்திறம் காத்தமை எங்ஙனம்?
5. ஆங்கில மொழி பெற்ற செல்வாக்கு எத்தகையது?
6. இக்காலத் தமிழறிஞர் இலக்கணப் பயிற்சியை இகழ்ந்து வருவதன் விளைவு யாது?
7. இன்றைய தமிழ் எந்நிலையில் உள்ளது?
8. ஆங்கிலங்கற்ற தமிழறிஞர் செய்யும் தவறு யாது?
9. தமிழ் நூல்களில் ஆளப்படும் பொருத்தமற்ற சொற்கள் யாவை?
10. சொல்லாட்சியில் கருத்து ஊன்றாமையால் விளைந்த கேடு யாது?
11. தமிழை வளர்ப்பதற்குரிய செயல் யாது?

பயிற்சி

1. சொற்றொடரில் அமைத்து எழுதுக:

   அறியாதவர், அடங்கிற்று, மேற்கோள், கற்பார், தக்கது, மேலாந்தரம், கூற்று, தோமறு, ஒவ்வாத, வந்தேறி, அலுவல், குற்றேவலர், அடுக்களை, நலிவடைந்த, எண்ணற்றோர்.

2. பொருள் வேறுபாடு அறிக:

   இரை - இறை. கல் - கள். வழி - வலி - வளி. உரு - உறு. மாரி - மாறி. உரை - உறை. அழகு - அளகு - அலகு. என் - எண்.

3. பொருளைக் காண்டற்குக் கருவி—இதில் வல்லினம் மிகுந்திருப்பதற்குக் காரணங் கூறி விளக்குக.

4. புதைபொருள் ஆராய்ச்சி

(டாக்டர் மா. இராசமாணிக்கனுர் M. A., L. T., M. O. L., Ph. D.,)

முதன்முதலில் மனிதன் வீடுகட்ட அறியாது மலைக் குகைகளில் வாழ்ந்தான். அவன் அப்பருவத்தில் இயல்பாகக் கிடைத்த கற்களையே தனக்குரிய கருவிகளாகக் கொண்டான்; பின்னர் அறிவும் ஆராய்ச்சியும் பெருகப் பெருக ஆற்றங்கரைகளிலும் சமவெளிகளிலும் கிடைத்த களிமண்ணைக் கொண்டு வீடுகளை அமைத்தான்; தனக்கு வேண்டிய பாண்டங்களைச் செய்து கொண்டான்; தன் பேச்சைப் புலப்படுத்த ஓவிய எழுத்துக்களைப் பயன்படுத்தினுன். அவ்வெழுத்துகளை மட்பாண்டங்கள் மீதும் பிறவற்றின்மீதும் பொறித்தான்; மண்ணை அறுத்துக் கற்களாக்கிச் சுட்டு அச்செங்கற்களைக் கொண்டு வீடுகளை அமைத்தான்; சுடாத கற்களையும் பயன்படுத்தினுன். மனிதர் இவ்வாறு படிப்படியாக மலைநாடு, காடு, ஆற்று வெளி, கடற்கரை என்னும் இடங்களிற் பரவி, அங்கங்குக் கிடைத்த பொருள்களைக் கொண்டு, வாழலாயினர். நாளடைவில் இப்பல இடத்து மக்கட்குள் வாணிகம் பற்றிக் கூட்டுறவு உண்டாயிற்று.

முதல் மனிதன் காலத்தில் பண்படுத்தப்படாத கற்களே கருவிகளாக அமைந்திருந்தன; அடுத்த காலத்தில் பண்படுத்தப்பட்ட கற்கருவிகள் விளக்க முற்றன. இவ்விரு காலங்களும் கற்காலம் எனப்படும். அறிவுபெற்ற மனிதர் மண்ணில் இயற்கையாகக் கிடைத்த செம்பு, வெண்கலம், பித்தளை, இரும்பு ஆகிய உலோகங்களைப் படிப்படியாகக் கண்டறிந்து பயன்படுத்தத் தொடங்கினர். அக்காலங்கள் முறையே செம்புக் காலம், வெண்கலக் காலம், பித்தளைக் காலம், இருப்புக் காலம் எனப்படும். இக்காலங்கள் மனிதனுடைய அறிவு வளர்ச்சியையும், நாகரிக வளர்ச்சியையும் உணர்த்துவனவாகும்.

முதலிற் கற்கருவிகளைப் பயன்படுத்திய மனிதன் உலோகங்களைக் கொண்டு கருவிகள் செய்ய அறிந்ததும்

கற்கருவிகளைப் புறக்கணித்தான்; பயனற்ற மட்பாண்டங்களைப் போகவிட்டான். இவை நாளடைவில் கவனிப்பார் அற்று மண்ணிற் புதையுண்டன. இறந்தவரைப் பெரிய மட்பாத்திரங்களில் (தாழிகளில்) இருத்திப் புதைத்தல் பண்டையோர் மரபு. அத்தாழிகள் எண்ணிறந்தன பண்டை மக்கள் வாழ்ந்த இடங்களில் புதைந்து கிடக்கின்றன.

பழைய மக்கள் செழிப்புள்ள இடங்களைத் தேடி அடிக்கடி அலைந்து திரிந்தனர் ஆதலின், அங்கங்கே பயனற்ற பொருள்களைப் போட்டுவிட்டுப் போயினர். அவை நாளடைவில் மண்ணில் மறைந்தன. ஆற்று ஓரங்களில் அழகிய நகரங்களை அமைத்துக் கொண்டு ஓரளவு நாகரிகத்துடன் வாழ்ந்த மக்கள், ஆற்று வெள்ளத்தால் நகரம் அழியக் கண்டு, வேறு இடம் புகுந்தனர். இங்ஙனமே கடற்கரை ஓரமாக வாழ்ந்த மக்கள் அமைத்த நகரங்களும் கடலுக்கு இரையாயின. சில நகரங்கள் எரிமலைகட்கு இலக்காகி அழிந்தன. வேற்று நாட்டு மக்கள் படையெடுப்பால் பாழான நகரங்கள் பல. இங்ஙனம் பல்வேறு காரணங்களால் பண்டைக்கால முதலே பல நகரங்களும் சிற்றூர்களும் அழிந்து, நாளடைவில் நிலத்திற் புதையுண்டன; சில மண்மேடிட்டுக் கிடக்கின்றன.

"இப்பொழுதுள்ள கன்னியாகுமரி முனைக்குத் தெற்கே 'குமரி நாடு' என்ற பெயருடன் பெருநாடு ஒன்று இருந்தது; அந்நாட்டில் குமரி மலைத்தொடர், குமரியாறு, பஃறுளியாறு, பழைய மதுரை என்பன இருந்தன; அவை அழிந்த பிறகு கிழக்குக் கடற்கரையில் அலைவாய் (கபாடபுரம்) என்பதைப் பாண்டியன் தலைநகரமாகக் கொண்டான். அதுவும் கடலுள் ஆழ்ந்தது; பழைய கொற்கை நகரமும் கடலுக்கு இரையாயது; சிறந்த துறைமுகப் பட்டினங்களாகிய காவிரிப்பூம்பட்டினம் முதலியன கடல் கொந்தளிப்பால் அழிந்தன" என்பன போன்ற செய்திகளைத் தமிழ் நூல்களில் நாம் காண்கின்றோம்.

இங்ஙனமே ஏசுநாதர் வாழ்ந்த காலத்தில் இருந்த பாலஸ்தீன நகரங்கள் பல. இன்று காணுமாறில்லை. ஹோமர் எழுதிய 'இலியட்' நூலில் குறிப்பிடப்பட்டுள்ள

'ட்ராய்' நகரம் காணப்படவில்லை. "அவை மண்ணுள் மறைப்புண்டு மண்மேடிட்டுக் கிடத்தல் வேண்டும். அவற்றைக் கண்டறிந்து அகழ்ந்து ஆராய வேண்டும்" என்னும் அவா அறிஞர் உள்ளத்தில் தோன்றுதல் இயல்பன்றோ? இங்ஙனம் வேதங்களிலும், இதிகாசங் களிலும், புராணங்களிலும்,பௌத்த சமண நூல்களிலும் சிறப்பாகப் பேசப்பட்ட நாலந்தா, தட்சசீலம், கோ சாம்பி, பாடலிபுரம் முதலிய வடநாட்டுப் பழைய நகரங்களைக் கண்டறிய இந்தியர் விரும்புதல் இயல் பன்றோ!

பண்டை மக்கள் வாழ்ந்த பலதிறப்பட்ட இடங்களை அறிந்து, அகழ்ந்து பார்த்து, அவ்விடங்களிற் காணப்படும் பொருள்களை ஆராய்ந்து, அவற்றைப் பற்றித் தோன்றும் செய்திகளையும், அவற்றைப் பயன்படுத்திய மக்களைப் பற்றிய விவரங்களையும் அறியும் முயற்சியே புதைபொருள் ஆராய்ச்சி என்பது. இவ்வாராய்ச்சிக்குத் துணையாக இருப்பவை மண்டை ஓட்டைச் சோதிக்கும் கலை, பிற உயிர்களின் எலும்புகளை ஆராயும் கலை, நில நூல் அறிவு முதலியனவாகும்.

ஒவ்வொரு கண்டத்திலும் புதை பொருள் ஆராய்ச்சி நடந்து வருகிறது. மேனாட்டாரே இவ்வாராய்ச்சியிற் சிறந்து விளங்குகின்றனர். மத்தியதரைக் கடலில் உள்ள 'மால்ட்டா' தீவு, எகிப்து, பாலஸ்தீனம், அசிரியா, பாபிலேனியா, ஏலம், பாரசீகம் என்பன குறிப்பிடத்தக்க இடங்கள் ஆகும். உலகத்துப் பண்டை நாகரிக நாடுகளில் எகிப்து தலைசிறந்தது என்பது இந்த ஆராய்ச்சியாற் புலனாயிற்று. அங்குக் கி. மு. 4000 ஆண்டுகட்கு முன்னும் பின்னும் வாழ்ந்த எகிப்திய அரசர்கள் தமக்கெனக் கட்டிய கல்லறைகளே பிரமிடுகள் என்பன. அவை ஏறக் குறைய 80 ஆகும். அவற்றுள் மிகப்பெரியது கீசே நகரில் சீயோப்ஸ் மன்னன் அமைத்த பிரமிடேயாகும். அது 229 மீட்டர் அடிப்பரப்பும், 147 மீட்டர் உயரமும் கொண் டது. அதில் உள்ள கற்களைக் கொண்டு ஒரு நகரத்தை அமைக்கலாம் என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். அறிஞர் அந்தக் கல்லறைகளை ஆராய்ந்து மதிப்பிடத்தக்க பல பொருள்களை எடுத்தனர்; அங்குக் காணப்பட்ட ஓவிய எழுத்துக்களை ஆராய்ந்தனர்; படித்துப் பொருள்

கண்டனர் ; எகிப்திய நாகரிகம் மிக்க பழமையானது என்னும் முடிவுக்கு வந்தனர்.

இங்ஙனமே மேனாட்டு அறிஞர் டைக்ரிஸ், யூப்ரடிஸ் ஆறுகட்கு இடைப்பட்ட நிலப் பகுதியையும் அவற்றை அடுத்துள்ள இடங்களையும் அகழ்ந்து ஆராய்ந்தனர். "சுமேரியர், பாபிலோனியர், அசிரியர் முதலிய பலதிறப் பட்ட இனத்தவர் அவ்விடங்களில் தனித்தனி நாகரி கத்தை வளர்த்து மறைந்தனர் ; அவர்கள் வழிபட்ட கோவில்கள் அகழ்ந்து எடுக்கப்பட்டன. அவர்கள் ஓவிய எழுத்துகளைப் பயன்படுத்தின மக்களாவர். சுமேரியர் பேசிய மொழி துருக்கி, தமிழ் போன்ற ஒட்டு மொழி யாகும்" என்று ஆராய்ச்சியாளர் அறிவித்தனர்.

இந்தியா ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக வரலாற்றுப் புகழ்பெற்றது : ஆதலின், இந்நாடு புதை பொருள் ஆராய்ச்சிக்கு ஏற்ற இடமாகும் என்பது அரசாங்கத்தார் கருத்து ; அதனால் 'இந்தியப் புதை பொருள் ஆராய்ச்சிக் கழகம்' ஒன்றை நிறுவினர். அக் கழகத்தில் சிறந்த ஆராய்ச்சியாளராக இருந்தவர் ஸர் அலெக்சாண்டர் கன்னிங்ஹாம் என்பவர். அவர் வட இந்தியாவில் பல இடங்களில் ஆராய்ச்சி நிகழ்த்தினார். அவரது பேருழைப்பின் பயனாய் நாலந்தா, தட்சசீலம், பாடலிபுரம், கோசாம்பி முதலிய பழைய நகரங்களைப் பற்றிய விவரங்கள் ஓரளவு வெளிப்பட்டன ; தென் இந்தியாவில் அமராவதி என்னும் இடத்தில் வியக்கத் தக்க சிற்பங்களும் கல்வெட்டுக்களும் கட்டடச் சிதைவு களும் கிடைத்தன.

சிந்து ஆறு பாயப்பெறும் சமவெளியில் நூற்றுக்கு மேற்பட்ட பழைய நகரங்களும் சிற்றூர்களும் புதை யுண்டு கிடக்கின்றன. அவற்றுள் சான்ஹூ-தரோ, மொகஞ்சொ-தரோ, தகஞ்ச-தரோ, அலிமுராத், பாண்டி வாஹி முதலிய இடங்கள் குறிப்பிடத்தக்கவை. அவ்விடங் களில் ஆராய்ச்சி நடைபெற்றது. அங்குப் பலவகைப் பட்ட பழைய கட்டடங்கள், மட்பாண்டங்கள், நுண்ணிய தொளையுடைய மிகச் சிறிய மணிகள், வழவழப்பான களிமண் பொம்மைகள், பலவகைக் கற்களால் செய்யப் பட்ட விளையாட்டுப் பொருள்கள், ஓவிய எழுத்துக்களைக் கொண்ட பாத்திரச் சிதைவுகள், முத்திரைகள் முதலியன

கிடைத்தன. இவை அனைத்தினும் மிக்க பயன் தரத்தக்க இடம் மொகஞ்சோ-தரோ என்பது. அது 1922 இலிருந்து அகழ்ந்து ஆராயப்பட்டு வருகின்றது. இதுவரை பத்தில் ஒரு பங்கே அகழப்பட்டுள்ளது. ஆயினும் அதுபற்றி வந்துள்ள ஆராய்ச்சி நூல்கள் பலவாகும்.

இந்நகரம் அமைந்துள்ள இடத்தில் பல மண்மேடுகள் இருக்கின்றன. அவற்றுள் பெரியது 1200 மீட்டர் நீளமும், 650 மீட்டர் அகலமும் உடையது. மற்றொன்று 400 மீட்டர் நீளமும் 300 மீட்டர் அகலமும் கொண்டது. மற்றவை சிறிய அளவின. தோண்டப்பட்ட இடத்தில் தெருக்கள் கிழக்கு மேற்காகவும், தெற்கு வடக்காகவும் அமைந்துள்ளன. பெரிய தெருக்களின் அகலம் 8 மீட்டர். பல கட்டடங்கள் மேல் மாடங்களைக் கொண்டவை. எல்லாத் தெருக்களிலும் கால்வாய்கள் நன்னிலையில் அமைந்துள்ளன. வீட்டுக் கால்வாய் தெருக் கால்வாயுடன் கலக்கிறது. தெருக்கால்வாய் பெரிய தெருக் கால்வாயுடன் பெரிய சதுரக் குழியில் கலக்கிறது. எல்லாக் கால்வாய்களும் பெரிய செங்கற்களால் செவ்வையாக மூடப்பட்டுள்ளன. வீட்டு மேல் மாடத்திலிருந்து கழிவு நீர் மண்குழை வழியே கீழே இறங்கிக் கீழ்க் கால்வாயில் கலக்கிறது. மண்குழை சுவர்க்குள் பதிக்கப்பட்டுள்ளது. அகன்ற தெருக்களின் அமைப்பையும் கழிநீர்ப் பாதைகள் அமைப்பையும் கண்டு ஆராய்ச்சியாளர், ''இந்நகர மக்கள் சிறந்த சுகாதார முறையில் வாழ்ந்த நாகரிக மக்கள்'' என்று கூறி வியக்கின்றனர்.

இக்கால மாளிகைகளைப் போன்ற பெரிய விடுதிகளும் சாதாரண மக்கள் வசிக்கத்தக்க வீடுகளும் அங்கு இருக்கின்றன. எல்லா வீடுகளும் செங்கற் கட்டடங்களே ஆகும். வீடுகளின் உட்புறம் சுடாத செங்கற்களும் வெளிப்புறம் சுட்ட செங்கற்களும் காண்கின்றன. சிறிய வீடாயினும் நான்கு அல்லது ஐந்து அறைகளைக்கொண்டதாக இருக்கிறது. சில மாளிகைகளில் மேல்மாடத்திற்குச் செல்ல இரண்டு படிக்கட்டுகள் உள்ளன. மேல் மாடத்திலேயே நீராடும் அறை இருத்தல் வியக்கத்தக்கது. சமையல் அறைகள் அவற்றிற்குரிய இலக்கணப்படி அமைக்கப்பட்டுள்ளன.

இந்நகரத்தில் கிடைத்துள்ள பொருள்கள் கணக்கில. ஓவிய எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட முத்திரைகள்

நூற்றுக்கணக்கில் கிடைத்துள்ளன. அவற்றையும் எழுத்துக்களையும் ஆராய்ந்த ஆராய்ச்சியாளர் கீழ் வருமாறு கூறுகின்றனர் :

"இப்பொருள்களைப் பயன்படுத்திய மக்கள் ஏறத்தாழக் கி. மு. 3000 ஆண்டுகட்கு முற்பட்டவர் ஆவர். இவர்கள் நிலம் கடந்தும் கடல் கடந்தும் வாணிகம் செய்து பொருளீட்டியவர்; பல தெய்வ வழிபாடு கொண்டவர்; உயர்ந்த ஆடை அணிகளைப் பயன்படுத்தினவர்; கைத்தொழில்களிற் சிறந்தவர்; இடுதலும் சுடுதலும் கையாண்டவர்; உயரிய நாகரிக வாழ்க்கை வாழ்ந்தவர்; நாகரிகக் கலைகளாகிய இசை, ஓவியம், நடனம், மருத்துவம் முதலியவற்றை நன்கறிந்தவர்; பாரசீகம் முதல் எகிப்துவரை நாகரிக நாடுகளுடன் வாணிகம் நடத்தினவர். இவர்கள் தம் காலத்து நாகரிக மக்களுள் உயர்ந்தவர் ஆவர். இவர்கள் இந்தியாவிற் குடி புகுந்த ஆரியர்க்கு முற்பட்ட மக்கள் என்பதில் ஐயமில்லை.

செங்கற்பட்டு மாவட்டத்தில் (பல்லாவரத்தில்) சவக் குழிகள் பல ஆராயப்பட்டன. அவற்றில் மண் பெட்டிகள், தாழிகள், எலும்புகள் முதலியன கிடைத்தன. இவற்றைப் போன்றே திருநெல்வேலி மாவட்டத்தில் ஆதிச்சநல்லூரில் பல ஏக்கர் பரப்புள்ள இடங்களில் ஏராளமான தாழிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டன. சேலம் மாவட்டத்தில் குடிசைகள் வடிவில் அமைந்த பிணப்பெட்டிகள் தோண்டி எடுக்கப்பட்டன.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் (பல்லடம் தாலூகா) பல மண்மேடுகள் இருக்கின்றன. செட்டிப்பாளையம் என்னும் சிற்றூருக்கு அருகில் உள்ள மண்மேடு சோதிக்கப்பட்டது. அதன் நீளம் 25 மீட்டர்; அகலம் 20 மீட்டர்; உயரம் 3 மீட்டர். அதன் அருகில் மட்பாண்டச் சிதைவுகளும் பல வகை உலோகப் பொருள்களும் எலும்புகளும் கிடக்கின்றன. அது கல்லால் ஆன பிணக்கோவிலை நடுவே கொண்டுள்ளது. அதன் உட்புறத்தில் பலவகைப் பழைய பொருள்கள் இருந்தன. மழமழப்பான கறுப்புநிற மட்பாண்டங்கள், கோப்பைகள், மான் அல்லது ஆடு மேலே நிற்பது போலச் செய்யப்பட்ட மூடிகளைக்கொண்ட கோப்பைகள் முதலியன அகப்பட்டன. இத்தகைய வேலைப்பாடு கொண்ட மூடிகள் பாரசீகத்தில் கிடைத்தனவாம்.

சென்னை-600 008.
146504
TG
031(9)
N65

புதுக்கோட்டைச் சீமை புதைபொருள் ஆராய்ச்சிக்கு ஏற்ற இடம் ஆகும். அங்குப் புதிய கற்கால மக்கள் பிணம் புதைத்த முறைகளைக் காணலாம்; இறந்தவன் உடல் உட்கார்ந்த நிலையில் தாழியில் வைக்கப்பட்டுள் ளது; அதன்மேல் பாதியளவு மணல் பரப்பப்பட்டுள்ளது; அதன்மீது அரிசி முதலிய தானிய வகைகளைக்கொண்ட தட்டொன்று வைக்கப்பட்டுள்ளது. இவை அனைத்தும் வைத்துப் புதைக்கப்பட்ட தாழியின் பக்கங்களில் இறந்த வன் பயன்படுத்திய கற் கருவிகளும் பிறவும் வைக்கப் பட்டுள்ளன. தாழி, மணல் பரப்பப்பட்டு மூடி இடப்பட் டுள்ளது. தாழியைப் புதைத்த குழி, மணல் இடப்பட்டுப் பாறையால் மூடப்பட்டிருக்கிறது. அப்பாறை மீது மணல் கொட்டிப் பாதி முட்டை வடிவம் போன்றுள்ள பாறை ஒன்றால் மூடப்பட்டிருக்கிறது. இப்பாறையைச் சுற்றி ஒரு முழம் உயரமுடைய கற்கள் புதைக்கப்பட்டுள. இவ்வாறு தாழிகள் புதைக்கப் பெற்றுள்ள இடங்கள் பல கிலோ மீட்டர் நீளமுடையனவாக இருக்கின்றன. இவ் விடங்கள், சுற்றிலும் உள்ள நிலத்தைவிடச் சிறிது உயர்ந் துள்ளன. இவ்விடங்களை மேலாகத் தட்டினால் ஓசை நன்றாகக் கேட்கும். தாழிகள் பல வடிவின : பல அளவின. இரும்புக் காலத்துப் பிணப்பெட்டிகள் இரு பகுதிகள் கொண்டவை; ஒன்றில் பிணமும் மற்றதில் அவ்விறந்தவர் பயன்படுத்தின பொருள்களும் வைக்கப்பட்டன. இவ் விடங்களை முற்றும் அகழ்ந்து பொறுமையோடு ஆராய்ச்சி செய்யின், கற்கால இரும்புக்கால மக்களைப் பற்றிய பல செய்திகளை நன்கறியலாம்.

இங்ஙனம் புதை பொருள் ஆராய்ச்சிக் குரிய இடங் கள் மிகப் பலவாகத் தமிழ்நாட்டில் இருக்கின்றன. அவற் றுள் புதுச்சேரியும் அதனைச் சூழவுள்ள நிலப்பகுதியும் சிறந்த முறையில் ஆராய்ச்சி செய்யத்தக்கவை ஆகும். புதுவையை அடுத்த அரியாங் (அரையன்?) குப்பம் என்னும் பகுதியில் செஞ்சியாற்றங்கரை ஓரமாக ஒரு மேடு இருக்கிறது. அஃது அரிக்கமேடு எனப் பெயர் பெற்றது. செஞ்சியாற்று வெள்ளத்தால் பல நூற்றாண்டு களாக அம்மேடு கரைக்கப்பட்டு வந்துள்ளது. அம்மேட் டின்மீது மாந்தோப்பும் தென்னந்தோப்பும் இருக் கின்றன. 1941 இல் தென்னம்பிள்ளை வைக்கக் குழிகள் எடுத்தபொழுது அவற்றிலிருந்து சில நாணயங்களும்

மட்பாண்டங்களும் அரிய வேலைப்பாடு கொண்ட மணிகளும் அகப்பட்டன. இதனை அறிந்த புதுவை ஆராய்ச்சி நிபுணரான பேராசிரியர் துப்ராய் துரை அவர்கள் அங்குச் சென்று ஆராய்ச்சி நடத்தினர்; அங்குச் சங்கு மணிகள் முதலிய பொருள்களைக் கொண்ட தொழிற்சாலை இருந்தது என்றும், அத்தொழிற்சாலையைத் தன் அகத்தே பெற்ற நகரம் மேட்டிற்குள் இருக்கின்றதென்றும், அத்தொன்னகரின் காலம் ஏறத்தாழ 2000 ஆண்டுகட்கு முற்பட்டதாகலாம் என்றும், அதனைத் தென்னிந்திய தட்சசீலம் என்று கூறலாம் என்றும் கட்டுரை ஒன்று வரைந்தார்.

இத்தகைய ஆராய்ச்சி மிக்க பயன் உடையது. நம் நாட்டுச் செல்வரும் அறிஞரும் இத்தகைய ஆராய்ச்சித் துறைகளில் மேலும் ஆர்வம் காட்டிப்பொருள் உதவி செய்து உழைப்பின், இயல்பாகவே பழம்பெருமை கொண்ட நம் நாடு இன்னும் பல வகையான அற்புத விவரங்களை உலகத்தார்க்கு அறிவிக்கும் என்பதில் ஐயமில்லை.

அருஞ்சொற்பொருள்

புறக்கணித்தான்- நீக்கினன். அகழ்ந்து - தோண்டி. இடுதலும் சுடுதலும் - பிணத்தைப் புதைத்தலும் எரித்தலும். தாழி - மட்பாண்டம். அகத்தே - உள்ளே. தொன்னகர் - பழைய நகரம்.

கேள்விகள்

1. மனித இனத்தின் துவக்க நிலை யாது?
2. கற்காலம், உலோக காலம் என்பவை யாவை?
3. பல நகரங்கள் நிலத்தில் புதைந்து கிடக்கக் காரணம் என்ன?
4. தமிழகத்தில் சுடல் கோளால் அழிந்த பகுதிகள் யாவை?
5. அகழ்ந்து ஆராய அறிஞர் விரும்பும் இடங்கள் யாவை?
6. புதைபொருள் ஆராய்ச்சி என்பது யாது?
7. எகிப்து நாகரிகம் பழமையானது என்பது எப்படித் தெரிந்தது?
8. சுமேரிய நாகரிகம் எப்படிக் கண்டுபிடிக்கப்பட்டது?
9. இந்தியாவில் இது பற்றிச் செய்யப்பட்ட முயற்சி யாது?

10. சிந்து சமவெளியில் புதைந்து கிடக்கக் காணப்பட்ட நகரங்கள் யாவை ?
11. மொகஞ்சொ தரோவிலிருந்து அறிந்தவை யாவை ?
12. மொகஞ்சொ தரோவில் காணப்பட்டவை எவை ?
13. தமிழ்நாட்டில் எங்கெங்கு அகழ்ந்து ஆராயப்பட்டது ?
14. அரிக்கமேடு பற்றி ஒரு சிறு குறிப்பு வரைக.

பயிற்சி

1. சொற்றொடரில் அமைக்க :

மலேக்குகை, பெருகப் பெருக, படிப்படியாக, நாளடைவில், உணர்த்துவன, பயனற்ற, அங்கங்கே, இயல்பு, கண்டறிய, ஆராய்ச்சி, துணையாக, முன்னும் பின்னும்.

2. எதிர்ச்சொற்கள் எழுதுக.

அறியும், பழையது, சிற்றூர், பலவாகும், நாகரிகம், ஐயம், செல்வர், அறிஞர்.

3. இந்தியாவில் புதைபொருள் ஆராய்ச்சி நடந்து வருகிறது—இதனைச் செயப்பாட்டு வினை வாக்கியமாக்குக.

4. அகழ்ந்து பார்த்து அறிந்தனர்—என்ன எச்சங்கள் என விளக்குக.

5. ஒருமைப்பாடு

(டாக்டர் அ. சிதம்பரநாதன், எம். ஏ., பி. எச். டி., எம்.எல்.சி.)

1823 ஆம் ஆண்டில் தோன்றி *1874* வரை தமிழகத்தில் வாழ்ந்து மறைந்த இராமலிங்க அடிகள் சாதி சமய மத வேறுபாடுகளின்றி மக்கள் ஒற்றுமையுடையவராய் வாழ வேண்டுமென்று விரும்பியவர். அவர் நிறுவிய சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கத்தின் நூற்றாண்டு விழா அண்மையில் கொண்டாடப்பட்டது. சமசர சுத்தசன்மார்க்கத்தின் முக்கியக் குறிக்கோளாக ஆன்மநேய ஒருமைப் பாட்டுரிமை அடிகளாரால் கொள்ளப்பட்டிருந்தது. சுத்த சன்மார்க்கத்தின் பெருந்தடைகளாகிய சமயங்கள், மதங்கள், வருணங்கள், ஆசிரமங்கள் ஆகியவை மனத்தில் பற்றாத வண்ணம் அருள்புரிதல் வேண்டுமென்று அவர் இறைவனிடத்தில் அடிக்கடி விண்ணப்பித்தது உண்டு. உலகிலுள்ள உயிர்களுக்கு விளையக்கூடிய இடையூறுகளெல்லாம் விலக வேண்டுமென்றும் அவற்றை விலக்குவதற்கு வேண்டிய ஆற்றலை அளிக்க வேண்டுமென்றும் அவர் இறைவன்பால் வேண்டினார்.

> "யாரே யென்னினும் இரங்குகின் றார்க்குச்
> சீரே யளிக்குஞ் சிதம்பர சிவமே"

என்று பாடிய ஆன்மநேய உணர்ச்சியுடையவர்,

> "சாதிமதஞ் சமயமெனுஞ் சங்கடம் விட்டறியேன்
> சாத்திரச் சேறாடுகின்ற சஞ்சலம்விட் டறியேன்"

என அவர்தம் பொருந்தாமையைக் கூறி முறையிட்டுக் கொள்பவர்.

"ஆண்மக்கள் பெண் மக்கள் முதலிய யாவரிடத்திலும், சாதி சமயம், மதம், ஆசிரமம், சூத்திரம், கோத்திரம், குலம், சாத்திரம், சம்பந்தம், தேசமார்க்கம், உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்னும் பேதம் நீங்கி எல்லாரும் தம்மவர்களாய்ச் சமத்திற்கொள்ளுதல் ஜீவ

ஒழுக்கம்'' என்று விளக்கந் தந்தவர் இராமலிங்கர். சுத்த சன்மார்க்க வேண்டுகோளாக அவர் பாடிய பாடல்களில்,

''அப்பநான் வேண்டுதல்கேட்
டருள்புரிதல்வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாம் நான்
அன்புசெயல் வேண்டும்!''

என்று கூறியுள்ளார் என்பது அவர் அடியவர்கள் அனை வரும் அறிந்த செய்தி, மன்னுயிரெல்லாம் தன்னுயிர் போல் எண்ணும் இவ்விந்தைப் பெரியார் கொலையும் புலையும் தவிர்த்தல் வேண்டுமென்றும், நையாதவாறு உயிர்களைக் காத்தல் வேண்டுமென்றும் விரும்பினர் என் பதும் நாம் அறிந்ததே அன்றோ! எல்லாச் சமயங்களையும் ஒரு நிகரனவாக எண்ண வேண்டுமென்ற அவருடைய மேன்மைக் கருத்து அவர் அருளிய அருட்பாக்களிலெல் லாம் ஊற்றெடுத்து ஓடுகிறது.

''எச்சார்பு மாகியுயிர்க் கிதம்புரிதல் வேண்டும்
எனையடுத்தார் தமக்கெல்லாம் இன்புதரல் வேண்டும்
இச்சாதி சமயவிகற் பங்களெலாந் தவிர்த்தே
பொதுவடைதல் வேண்டும்''

என்று அவர் கூறியவிடத்தில் எல்லோருக்கும் இன்பம் விளையுமாறு செய்தல் வேண்டுமென்பதும் சாதி சமய விகற்பங்களை நீக்கி எவ்வுலகத்தவர்களுக்கும் பொதுமை உண்டாக்க வேண்டுமென்பதும் அவரால் விரும்பப் பட்டன என்பது தெளிவு. அக்கருத்தினை நோக்கினல் பகை வராயினும் அவர்களுக்குக்கூட இன்பம் தர வேண்டு மென்று விரும்பியவர் அவர் என்பது பெறப்படும். ஆயினும் தம்மை அடுத்தவர்களுக்கு மிக்க இன்பம் விளையு மாறு செய்தல் வேண்டுமென அவர் விரும்பினர் என்பது உறுதி. உயிர்கள் அனைத்திற்கும் இதம்புரிதல் வேண்டு மென அவர் பாடினர் எனினும், 'எனை அடுத்தார் தமக் கெல்லாம் இன்புதரல் வேண்டும்' எனப் பாடினமையின், அவரது உட்கருத்து அறியப்படும். அவ்வாறே, எவ் வுயிரும் இன்பம் அடைதல் வேண்டுமென்று இன்னேர் இடத்திற் கூறிய அவ்வள்ளலார், ''எனை அடுத்தார் சுகம் வாய்ந்திடுதல்வேண்டும்'' என்றும் கூறியுள்ளார்.

இவ்வகையில் திருவருட்பிரகாச வள்ளலார் கவிஞர் இரவீந்திரநாத தாகூரோடு ஒப்பு நோக்கத்தக்கவர். 1861 முதல் 1941 வரை வங்காளத்தில் வாழ்ந்த தாகூர் இராம லிங்க அடிகளோடு நேர் தொடர்பு பெறுவதற்கு முன் னுலேயே மறைந்துவிட்டார். என்ருலும் அடிகளாருடைய கருத்தினையொத்த சில கருத்துகள் தாகூருடையனவாக உள.

உலகில் எச்சமயத்தவரும் போற்றும் கடவுள் முடி வில் ஒருவரே என்பதை இவ்விரு பெரியாரும் வற்புறுத்தி யுள்ளனர். உலகத்தில் தோன்றிய பல்வேறு சமயப் பெருங் குரவர்களுக்குக் கடவுள் அருள் கூடியிருக்கிறது என்பதை இருவரும் ஒப்புக் கொண்டுள்ளார்கள். "கடவுள் ஒருவரே எனினும் உபநிடதம் போன்ற இந்திய நாட்டின் ஆன்மீக நூல்களினுல் கடவுளை அடைவதற்கு வழி சொல்லப்பட்டு இருக்கிறவாறு மேலைநாட்டு ஆன்மீக நூல்களிற் சொல்லப்பட்டிலது" எனக் கவிஞர் இரவீந்திர நாத தாகூர் கூறியும் எழுதியும் வந்துள்ளார்.

அவ்வாறே இராமலிங்க அடிகளும் எல்லாச் சாதி யினரிடத்திலும். எல்லாச் சமயத்தினரிடத்திலும் பொதுமை நோக்குடையவராக இருந்தாரே ஆயினும், தமிழ்மொழி வழியாகத்தான் சாகாக் கல்வி சிறப்பாக அறியப்படும் என்றும், ஏனைய மொழிகளைக் காட்டிலும் தமிழ் மொழிக்குச் சிறப்பு உண்டு என்றும் கருதினுர் என்பது அவருடைய சத்தியப் பெரு விண்ணப்பத்தினுல் தெளிவாகிறது.

"இடம்பத்தையும் ஆரவாரத்தையும் பிரமாசத் தையும், பெருமறைப்பையும், பொழுதுபோக்கையும் உண்டு பண்ணுகின்ற ஆரியம் முதலிய பாஷைகளில் எனக்கு ஆசை செல்லவொட்டாது பயிலுவதற்கும் அறி தற்கும் மிகவும் இலேசுடையதாய், பாடுதற்கும், துரத் திற்கும், மிகவும் இனிமையுடையதாய் சாகாக் கல்வியை இலேசில் அறிவிப்பதாய்த் திருவருள் வலத்தாற்கிடைத்த தென்மொழி யென்றளிடத்தே மனம்பற்றச் செய்து அத் தென்மொழியினுல் பல்வகைத் தோத்திரப் பாட்டுக் களைப் பாடுதற்கருளினீர்"

என்று அவர் கூறியதிலிருந்து தமிழ் மொழியிடத்தில் அவருக்கு உள்ள மதிப்பு அறியப்படும். தமிழைப் பற்றி ஏனைய இடங்களில் அவர் கூறியிருப்பன :—

"கடவுள் அருளாணையால் கற்பிக்கப்பட்டதும், எப் பாஷைகளுக்கும் பிதுர்பாஷை என்று ஆன்றோர்களால் கொண்டாடப்பட்டதும், இனிமையென்று நித்தம் சிந்திக்கப் பெற்றுள்ளதுமான தமிழ், என்றும் இயற்கை யுண்மைச் சிறப்பியல் மொழி."

"ஆரியம் மகாராட்டிரம் ஆந்திரம் என்ற பற்பல பாஷைகளைப் போலாகாமல்—பெரும்பாலும் கற்பதற்கு எவ்வளவு சுருக்கமாயும் ஒலியிலே சாயும் கட்டென்னுஞ் சந்தி அதிசுலபமாயும் எழுதவும் கவிசெய்யவும் மிக நேர்மையாயும், அசுர ஆரவாரம், சொல்லாடம்பரம், பொழுதுபோக்கு, பெருமறைப்பு முதலிய பெண்மை அலங்காரமின்றி எப்பாஷையின் சந்தங்களையும் தன் பாஷையுள்ளடக்கி இருப்பதும் ஆகிய தமிழ்."

இக்கருத்தினையடைய வள்ளலார் ஒருமைப்பாட் டுணர்ச்சியை நூலிற் பல இடங்களில் வற்புறுத்தின ராயினும், அவ்வொருமைப்பாடு அடித்து உதைத்து வன் முறையினால் மேற்கொள்ளும்படி செய்யப்படுதலாகாது எனக் கருதியவர், அவர் அருளிய உபதேசப் பகுதியில் இந்த ஒருமை அன்பினால், தயவு என்னுங் கருணையினால் உண்டாகும்படி செய்ய வேண்டியதெனத் தெளிவாக்கி யிருக்கிறார்.

"என்னிடத்தில் ஒருவன் வசப்படாமல் முரடனாய் இருந்தால் அவனுக்கு நல்ல வார்த்தை சொல்லுவேன்; மிரட்டிச் சொல்லுவேன்; தெண்டனிட்டு சொல்லுவேன்; அல்லது பொருளைக் கொடுத்து வசப்படுத்துவேன்" என்று இராமலிங்கர் கூறியுள்ளார் என்பது நினைவிற்குக் கொண்டு வரத்தக்கது.

இதன் கருத்தினோடு கவிஞர் இரவீந்திரநாத தாகூர் கருத்து ஒத்திருக்கிறது. அவரும் ஒருமைப்பாடு வேறு என்றும் ஒருருவாக்குதல் வேறு என்றும் அடிக்கடி எடுத்து இயம்பியுள்ளார். ஒன்றையொன்று விழுங்கி விடலாம். ஒன்றுபோல மற்றொன்று உடன் இருக்கும்படி

உடன்வாழும்படி செய்வதுதான் ஒருமைப்பாடு என்று அவர் நன்கு விளக்கியுள்ளார். அடிமைப்படுத்தி ஒற்றுமை ஏற்படுத்தலும் கட்டாயப்படுத்தி ஒற்றுமை ஏற்படுத்தலும் போலியொற்றுமை என்றும், ஒட்டு ஒற்றுமை என்றும், உண்மை ஒற்றுமையன்று என்றும் அவர் எடுத்துக் கூறியுள்ளார்.

கவிஞர் இரவீந்திரர் கூறியுள்ள ஒரு கதை வேடிக்கையானது. ஆட்டுக்குட்டி ஒன்று தற்காப்புக் கொள்ளாமல் கடவுளிடத்தில் முறையிட்டதாகவும், கடவுள் அவ்வாட்டுக்குட்டியைப் பார்த்து, "நீ செயலின்றி இருப்பதைப் பார்த்தால் உன்னை நான்கூட விழுங்கக் கூடாதா? என்றுதான் தோன்றுகிறது" எனக் கூறினர் என்றும் அக்கதை சொல்லுகிறது. எனவே ஒருமைப்பாடு நேய உணர்ச்சியினல் ஆக்கத்தக்கது என்பதும், பகைச் செயல்களினுல் ஆக்கவொண்ணுதது என்பதும் அறியப்படும். தாகூர் பன்மையில் ஒருமைகாண விழைந்தார்; பன்மையை ஒருமையாக்கிவிட நினைக்கவில்லை. அவ்வாறே இராமலிங்க அடிகளாரும் உலகத்திலுள்ள ஒற்றுமை வேற்றுமைகளிடையே எவ்வாறு அன்பினுல் ஒருமைப்பாட்டினை விளக்க முடியும் என்று ஆய்ந்தாய்ந்து முயன்றவர் என்பது அறியத்தக்கது.

"ஒற்றுமை வேற்றுமை யுரிமைக ளனைத்தும்
அற்றென வகுத்த அருட்பெருஞ் சோதி"

என்று அருட்பெருஞ்சோதி அகவலில் வள்ளலார் அருளியதை நினைவுகூர்வோமாக!

அருஞ்சொற்பொருள்

அண்மையில்—சமீபத்தில். ஆன்மநேய ஒருமைப்பாடு—எல்லா ஆன்மாக்களும் ஒன்றெனும் உணர்வு. வருணங்கள்—சாதிகள். பற்ருத வண்ணம்—பிடிப்புக் கொள்ளாதபடி. சீர்—சிறப்பு. சஞ்சலம்—துன்பம். நையாதவாறு—துன்புருதபடி. இன்பு—இன்பம்.

கேள்விகள்

1. இறைவன்பால் இராமலிங்கர் வேண்டியது யாது?
2. ஜீவ ஒழுக்கம் என்பதற்கு இராமலிங்கர் தந்த விளக்கம் யாது?

3. இராமலிங்கரும் கவி தாகூரும் எங்ஙனம் ஒப்பு நோக்கத் தக்கவர் ?

4. தமிழ் மொழி பற்றி இராமலிங்கர் கொண்ட கருத்து யாது ?

5. இராமலிங்கர் கூறும் ஒருமைப்பாட்டினை விளக்குக.

6. கவி இரவீந்திரர் ஒருமைப்பாடு பற்றிக் கொண்ட கருத்து யாது ?

பயிற்சி

1. சொற்றொடரில் அமைத்து எழுதுக :

அறியத்தக்கது, ஒருமைப்பாடு, வேடிக்கையான, விழுங்கி, இயம்பி, ஒற்றுமை.

2. எதிர்ச்சொற்கள் எழுதுக :

வேற்றுமை, பன்மை, மதிப்பு, மனம் பற்றுதல், ஆரவாரம், பயிலுதல், ஆன்றோர், பெரும்பாலும், அலங்காரம்.

3. இந்தப் பாடத்திலுள்ள வேற்றுமைத் தொகைகளில் இரண்டினை எடுத்து எழுதுக.

6. கொல்லும் சொல்

(முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதன்)

"கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு."

இக்குறள் சான்ருண்மை என்ற தலைப்பின்கீழ் வந்தது. சான்ருண்மை என்பது தமிழகத்தின் சொந்தச் சொத்து. அது எந்த மொழியிலும் மொழிபெயர்க்க முடியாத ஒன்று. சான்ருண்மை என்பது பல நல்ல குணங்கள் அமையப் பெற்ற ஒருவன், அக்குணங்களில் எதுவும் தன்னைவிட்டுப் பிரிந்து போய்விடாமல் காப்பாற்றி ஆளும் ஆண்மை எனப்படும். ஆகவே சான்ருண்மை என்பது உயர்ந்த மக்களின் சிறந்த தன்மை என்ருகிறது.

மக்களின் உயர்ந்த பண்புக்குப் பல நற்குணங்கள் இருந்து தீரவேண்டும். எது இல்லாவிடினும் இருபெருங் குணங்களேனும் வேண்டும். அவற்றில் ஒன்று பிற உயிர்களைக் கொல்லாமை. மற்ருென்று பிறர் தீமைகளைச் சொல்லாமை என்று இக்குறள் கூறுகிறது.

சான்ருண்மைக்குத் திருவள்ளுவர் சொல்லில் ஒன்றும், செயலில் ஒன்றும் விரும்புகிருர் என்பதையும் இக்குறளால் அறிந்து மகிழ்ச்சியடைகிருேம்.

உயிரைக் கொல்லாமையும், தீமையைச் சொல்லாமையும் ஆகிய இவ்விரண்டும் "நலம் தரும்" என்று வள்ளுவர் இக்குறளில் குறிப்பிடுகிருர். இதனை 'நலத்தது' என்னும் சொற்களால் அறிய முடிகிறது.

கொலையுண்ட உயிர்களும் சொல்லுண்ட உயிர்களும் பெரிதும் துன்பப்படும். ஆதலின், அப்படிச் செய்யாதிருப்பதே எவ்வுயிர்கட்கும் நல்லது என்பது இக்குறளில் உள்ள 'நலத்தது' என்ற சொல்லின் கருத்து.

கொல்லுகின்றவனைத் தீய செயலாளன் என்றும், சொல்லுகின்றவனைத் தீய சொல்லாளன் என்றும் உலகத்தார் சொல்லிப் பழித்து வெறுத்து ஒதுக்குவர். ஆதலின் கொல்லாமையும் சொல்லாமையும் பிறருக் கன்றி தனக்கும் நல்லது என்ற கருத்தும் இக்குறளில் அடங்கியே இருக்கிறது.

உயிரைக் கொல்லாமை, தீமையைச் சொல்லாமை ஆகிய இரண்டையும் "நலத்தது" என்று ஒரு சொல்லால் ஒற்றுமைப்படுத்திய வள்ளுவர், அவற்றின் பண்பை வேற்றுமைப்படுத்திக் கூறி இருப்பது எண்ணி எண்ணி வியக்கக்கூடிய ஒன்று.

கொல்லா நலத்தினை 'நோன்மை' என்றும், தீமை சொல்லா நலத்தினைச் 'சால்பு' என்றும் வள்ளுவர் வகுத்துக் காட்டுகிறார். இக்குறளில் அமைந்துள்ள இச் சொற்கள் பொன்னிற் பதித்த மணிகள் என மின்னிக் கொண்டிருக்கின்றன.

நோன்பு என்பது 'விரதம்' என வடமொழியாளர் கூறுவர். அது 'குறிப்பிட்ட சில நாட்களில் இதை நான் செய்வதில்லை' என்பதும், 'நான் விரும்புவதைப் பெறும் வரையில் இவ்வாறு இருப்பேன்' என்பதும் ஆகும். புரட்டாசி சனிக்கிழமைகளில் மட்டும் புலால் உண்ப தில்லை என்பதும் திருப்பதிக்குப் போகும்வரை முடி எடுப்பதில்லை என்பதும் நோன்பு என்பதின் பாற்படும்.

ஆனல் சால்பு என்பது குறித்த நாளில் குறிப்பிட்ட ஒன்றைச் செய்யாதிருக்கும் நோன்பினைச் சுட்டாது. அது என்றும் நின்று நிலவி, இயல்பாகவே அமைந்திருக்கின்ற ஓர் உயர்ந்த பண்பையே சுட்டிக் காட்டுவதாகும்.

நோன்பின் தன்மையையும், சால்பின் தன்மையை யும் அறிந்துகொண்ட நமக்கு இக்குறள் நோன்பைவிட சால்பு உயர்ந்தது என்று வற்புறுத்துவதாகத் தெரிகிறது.

நோன்பைவிடச் சால்பு உயர்ந்தது; என்று இக்குறள் கூறுவதிலிருந்து உயிர்களைக் கொல்லாதிருப்பதைவிடத் தீமைகளைச் சொல்லாதிருப்பதுதான் உயர்வு என்பது வள்ளுவர் கருத்து என விளங்குகிறது.

சான்ருண்மைக்கு இலக்கணம் கூறவந்த வள்ளுவர் அதற்கு இருக்கவேண்டிய பல நல்ல குணங்களுடன் கொல்லாமையும் சொல்லாமையும் வேண்டும் என்று மட்டும் இக்குறளில் கூறியிருக்கவில்லே. பின்னதற்கு முன்னதை ஒப்பு நோக்கும் உவமையாகக்கூடக் கூறி இருக்கிருர் என்பதை அறியும்போது நமது உள்ளம் பெரு மகிழ்ச்சியடைகிறது.

கொல்லுதற்குரிய கருவி கிடைக்கப் பெருத ஒருவன், கொல்லாது இருந்துவிடவும் முடியும்; அது எளிது, ஆனுல் சொல்லுதற்குரிய கருவி "நா" இருந்தும் அதனை அடக்கி ஆண்டு கட்டுப்படுத்திச் சொல்லாதிருப்பதுதான் அரிது. ஆதலின் கொல்லாச் செயலேவிடத் தீமை சொல்லாச் செயலே இக்குறள் உயர்வுபடுத்திக் கூறுகிறது.

கொல்லுங் குணத்தைவிட, தீமை சொல்லுங் குணத்தைக் கொடுமையாகக் கூறி இருப்பது கொலேயுண்டவன் அப்போது மட்டும் துடிதுடித்துச் சாகிருன். ஆனுல் சொல்லுண்டவன் வாழ்நாள் முழுவதும் துடிதுடித்துச் சாகிருன் என்பதன் பொருட்டு எனத் தெரிகிறது.

கொலே வாளினும் கொடியது நாக்கு எனலாம். வாள் மனிதனேவிட்டுச் சிலபொழுதேனும் பிரிந்திருக்கும். நா எப்பொழுதும் மனிதனுடனே இருந்துவரும். வாளால் சிலரையே வதைக்க முடியும். நாவாற் பலரை வதைக்க முடியும். "வாள்" கண்டவனேயே கொல்லும். "நா" காணுதவரையும் கொன்றுவிடும். ஆகவே வாளினும் வலிமை உடையது 'நா' என்பது வள்ளுவர் கருத்து.

நாவினுற் சுட்டு வடுவை உண்டாக்குவதைவிடத் தீயினுற் சுட்டுப் புண்ணே உண்டாக்குவது நல்லது என்று முன்பு ஒரு முறை வள்ளுவர் கூறினுர். தீமையைச் சொல்லிப் பலநாள் துன்புறுத்தும் கொடுமையைவிட, கொலேயைச் செய்து ஒரு நாள் துன்புறுத்தும் கொடுமை நல்லது என்று இக்குறளில் கூறுகின்ருர். இக்கருத்து நம் உள்ளத்தைச் சுடுகின்றது.

"பெற்றவர்கள் பிள்ளேகளின் குறைகளேயும் உற்றவர்கள் நண்பர்களின் குறைகளேயும் எடுத்துக் கூருமல் இருக்கலாமா? இருந்தால் அவர்கள் திருந்துவது எப்படி?"

என்று நாம் வள்ளுவரைக் கேட்டால், அவர், "நன்றாக எடுத்துக் கூறுங்கள்; மக்களின் குறைகளை எடுத்துக் கூறித் திருத்தித் தம்மின் தம் மக்களை அறிவுடையவர்களாகச் செய்யுங்கள். அதுதான் தந்தையின் கடன். நண்பர்களின் தவற்றை அழ அழச் சொல்லி மட்டுமன்று; இடித்து இடித்துக் கூறுங்கள். அதுதான் நட்பு. நான் கூறவந்தது அவர்களையன்று; 'உற்றாரும் நண்பரும் அல்லாத பிறரை' என்று மிக நயமாகக் கூறுகிறார். இவ்வுண்மையை இக்குறளில் உள்ள "பிறர்" என்ற சொல் மிக அழகாக நமக்கு அறிவித்துக் கொண்டிருக்கிறது.

தீமை என்ற சொல் இக் குறளில் ஆட்சி புரிகிறது. அதற்குத் தவறு என்பதோ குறை என்பதோ பொருளாகாது. இது, பழி பாவங்களுக்கு அஞ்சாத கொடுஞ் செயல் என்றே பொருள் பெறும். வள்ளுவர் இதனைக் கருத்திற்கொண்டே, "பிறர் குறையை" "பிறர் தவற்றை" என்று கூறாமல், "பிறர் தீமையை" என்று அழுத்திக் கூறியிருக்கிறார் எனத் தெரிகிறது.

ஒருவருடைய தீமைகளை அவரது நலம் கருதுவோர் அவரிடமே நேரிற் சென்று எடுத்துக் கூறியும் கூடத் திருத்தலாம் என்பது வள்ளுவருடைய கருத்து. இதனைக் "கண்ணின்று கண்ணறச் சொல்லினும்" என்ற வாய்ச் சொல்லே மெய்ப்பிக்கும். இக் குறளிற் கூறியிருப்பது அதுவன்று என்றும், பிறருடைய தீமைகளைப் பிறரிடத்தே போய்க் கூறும் கொடுமையினையே என்றும் தெளிவாக அறியலாம்.

ஒருவருடைய தீமைகளைப் பிறரிடங் கூறாமல் அவரிடமே சென்று கூறுவது குளிர்ச்சி உள்ளங்கொண்டவர்கள் செயலாகுமே ஒழிய, எரிச்சல் உள்ளங்கொண்ட மக்களின் செயலாகாது என்பதை எண்ணியே வள்ளுவர் அவ்வாறு சொல்லியிருக்க வேண்டும் எனத் தெரிகிறது.

"நலத்தது" என்ற சொல்லை இங்கு எத்தனை முறை படித்தோம். அதன் பொருள் விளங்கிற்றா நமக்கு? நல்லது, நல்லது என்ற பொருளில்தானே அதை அறிந்தோம். அது தவறு. அதன் பொருள் அதுவன்று. அதன் உண்மையான பொருள் 'நல்லதைச் சார்ந்தது' என்பதேயாகும்.

உயிர் கொல்லாச் செயலையும் தீமை சொல்லாக் குணத்தையும் வள்ளுவர் 'நல்லதைச் சார்ந்தது' என்று கூறினரேயொழிய, 'நல்லது' என்று கூற அவருடைய உள்ளம் ஒப்பவேயில்லை. இக் கருத்தை இக் குறளில் உள்ள 'நலத்தது' என்ற சொல்லிற் காணும்பொழுது நம் உள்ள மெல்லாம் இனிக்கிறது.

கொல்லாமையும் சொல்லாமையும் நல்லதைச் சார்ந்தது என்று இக்குறள் கூறும்பொழுது வேறு எதையோ நல்லது என்று இக் குறள் கூறுவதுபோலத்தெரி கிறது. அது எது? என ஆராயும் பொழுது பிற உயிர்களை வளர்த்து வாழ்தலும் பிறர் நன்மைகளைச் சொல்லி வாழ் தலுமே எனப் புலப்படுகிறது.

இவ்வுயரிய பொருளை விளக்கவே இக்குறள் தோன்றி யிருக்கிறது என்பதை மலைமீது நின்றும் கூறியாக வேண் டும்.

இத்தனைப் பொருள்களும் இக் குறளின் ஒன்றே முக்கால் அடியில், ஏழு சீர்களில், எட்டே சொற்களில் இருக்கின்றன என்று அறியும்பொழுது நாம் அடைகின்ற மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. குறளை மறுபடியும் படியுங்கள்.

"கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு."

எப்படி இக் குறள்? இந்த ஒரு குறளே நமக்கு நோன்பு, சால்பு, பண்பு, நேர்மை, அறிவு, ஆண்மை, உயர்வு, வாழ்வு ஆகிய செல்வங்கள் அனைத்தையும் தருமானல், இன்னும் திருக்குறளில் உள்ள 1329 குறள் களும் என்னென்ன செல்வங்களைத் தரும் என்பதை, எண்ணிப் பாருங்கள். எண்ணிப் பார்த்ததும் குறளினை எடுத்து ஊடுருவிப்படித்து அவற்றிலுள்ள புதை பொருள் களை யெல்லாம் அறிந்து, பிறருக்கும் வாரி வழங்கிச் சிறப் பெய்தி வாழுங்கள்.

வளரட்டும் சால்பு!

அருஞ்சொற்பொருள்

நலத்தது-நன்மையைச் சார்ந்தது. ஒப்பு நோக்கும்-ஒப்பிட்டுப் பார்க்கும். வடு - அடையாளம். உற்ருர் - உரியவர்கள். ஊடுருவிப் படித்து - ஆழ்ந்து நுணுகிப் பொருளறிந்து படித்து.

கேள்விகள்

1. சான்றாண்மை என்பது யாது?
2. மக்களுக்கு இருக்க வேண்டிய இருபெருங்குணங்கள் யாவை?
3. 'நலத்தது' என்பதில் அறிய முடிவது யாது?
4. நோன்மை, சால்பு என வள்ளுவர் எவற்றைக் கூறுகிறார்?
5. சால்பு எதைச் சுட்டிக் காட்டுகிறது?
6. சால்பு நோன்மையிலும் சிறந்ததாவது எப்படி?
7. நா, வாள் — இவற்றுள் வலிமையுடையது எது?
8. நம் உள்ளத்தைச் சுடும் கருத்து யாது?
9. 'பிறர்' என்னும் சொல் அறிவிப்பது யாது?
10. தீமை என்னும் சொல்லை வள்ளுவர் இக்குறளில் எவ்வாறு பயன்படுத்தியுள்ளார்?
11. நாம் ஏன் திருக்குறளினை ஊடுருவிப் படிக்க வேண்டும்?

பயிற்சி

1. சொற்றொடரில் அமைத்து எழுதுக:

   சான்றாண்மை, கொல்லாமை, செயலாளன், சொல்லாளன், நோன்பு, துடிதுடித்து, துன்புறுத்தும், சுடுகின்றது, குளிர்ச்சி.

2. எதிர்ச்சொற்கள் எழுதுக:

   ஆண்மை, மகிழ்ச்சி, நன்மை, வாழ்தல், குளிர்ச்சி, குறை, தீமை, எளிது.

3. இதுபோன்று ஒரு குறளை எடுத்து எழுதிப் பொருள் காண முயலுக.

4. தீமை, கொலை, சால்பு, நோன்மை - இலக்கணப்படி இவை என்ன சொற்கள்?

5. அறிந்து மகிழ்ச்சியடைகிறோம் — மகிழ்ச்சி + அடைகிறோம் என்னும் இரு சொற்களும் புணர்கையில் மகிழ்ச்சியடைகிறோம் என்று ஆனதேன்? விதியுடன் கூறுக.

7. தமிழ் நாட்டில் மின்சாரம்

(தமிழ்நாடு மின்சார போர்டு தலைவர் திரு. வி. பி. அப்பாதுரை)

தமிழ்நாட்டில் மின்சார உற்பத்தி எப்போது தொடங்கியது? இந்தத்துறையில், இதுவரை ஏற்பட்டுள்ள வளர்ச்சி என்ன? மின்சாரத்தை உற்பத்தி செய்வதிலும், அதைப் பயன்படுத்துவதிலும் தமிழ்நாடு, இந்தியாவில் மூன்றாவது இடத்தை வகிக்கிறது. முதலாவது இடம் வகிப்பது பம்பாய். இரண்டாவது இடம் வகிப்பது மேற்கு வங்காளம்.

ஆனால் இந்த இரண்டு மாநிலங்களிலும் பெரிய தொழிற்சாலைகளும், நகரங்களும்தான் மின்சாரத்தைப் பயன்படுத்துகின்றன. தமிழ்நாட்டில்தான் மிகுந்த அளவு மின்சாரம் கிராமங்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது. அந்த வகையில் தமிழ்நாடுதான் முதன்மையாகிறது.

1908 ஆம் ஆண்டுவரை, சில தேயிலைத் தோட்டங்களில் மிகச் சிறிய அளவில் நீர் ஓட்டத்திலிருந்து மின்சாரம் தயாரிக்கப்பட்டு வந்தது. அரசாங்கம் முதல் முறையாக 1909 ஆம் ஆண்டில் தமிழகத்தில் மின்சாரம் தயாரித்தது. மின்சார சப்ளை கார்ப்பொரேஷன் என்ற அமைப்பு மின்சாரம் தயாரிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டது. 1925 இல் உதகமண்டலம் நகரசபை மின்சாரம் தயாரித்தது.

1925 இல் தமிழ்நாடு அரசாங்க மின்சாரத் துறைக் கவுன்சில் மெம்பராக சி. பி இராமசாமி அய்யர் பதவி ஏற்றார். அதிலிருந்து மின்சார உற்பத்தியின் வளர்ச்சி மிகவும் பெருகியது. அவரது முயற்சியால் மின்சாரத் துறை ஏற்படுத்தப்பட்டது. பைகாரா மின்விசைத் திட்டத்துக்கும் அவர்தான் காரணம்.

ஹென்றி கோவார்டு என்ற மின்சாரத்துறை தலைமை இஞ்சினியர், பைகாராவையும், மேட்டூர் மின்சார நிலையத்தையும் 1937 ஆம் ஆண்டில் கட்டி முடித்தார்.

1944 இல் பாபநாசம் மின்சார நிலையமும் 1951 இல் மதுரை "தெர்மல்" (அனல் மின்சாரம்) நிலையமும் கட்டப் பட்டன. 1952 இல் மொய்யார் மின்விசை நிலையம் ஏற்படுத்தப்பட்டது. இது தமிழ்நாட்டில் ஏற்படுத்தப் பட்ட நான்காவது மின்சார நிலையமாகும்.

பிறகு சில ஆண்டுகளில் மேற்கூறிய மின்விசை நிலை யங்கள் விரிவுபடுத்தப்பட்டன. 1958 அக்டோபர் மாதம் பெரியாறு மின்சார நிலையமும், 1960 இல் குந்தா மின்சார நிலையமும் தொடங்கப்பட்டன.

1957 இல் மின்சாரபோர்டு நிறுவப்பட்டது.

தமிழ்நாட்டில் இப்போது அணைக்கட்டுப் பகுதிகளி லிருந்து 206·9 கோடி "யூனிட்டு" மின்சாரமும், "தெர்மல்" நிலையங்களில் இருந்து 43·3 கோடி "யூனிட்டு" மின்சாரமும் உற்பத்தியாகிறது. நெய்வேலியில் இருந்து 106·0 கோடி யூனிட்டு மின்சாரம் வாங்குகிறோம்.

ஆக மொத்தம் 356·2 கோடி யூனிட்டு மின்சாரம் நமக்குக் கிடைக்கிறது.

தமிழ்நாட்டில் தயாரிக்கப்படும் மின்சாரத்தை மூன்று பிரிவினர் வினியோகம் செய்கிறார்கள்.

(1) தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் எல்லா மின்சா ரத்தையும் தமிழ்நாடு மின்சார போர்டுதான் உற்பத்தி செய்கிறது. இந்த போர்டே நேரடியாக வினியோகம் செய்கிறது.

(2) மின்சார இலாகாவிடம் இருந்து மின்சாரத்தை வாங்கும் ஐந்து நகரசபைகள், அதைத் தங்கள் எல்லைக்கு உட்பட்ட பகுதியில் வினியோகம் செய்கின்றன.

(3) மின்சார போர்டிடம் இருந்து மின்சாரம் பெறும் எட்டுத் தனியார் நிறுவனங்கள், அதை மக்களுக்கு வினியோகம் செய்கின்றன.

தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் உற்பத்தியாகும் மின்சாரத்தை ஒன்றுபடுத்தி, அதை எளிதில் குறைந்த விலைக்கு மக்களுக்குக் கிடைக்கச் செய்வதற்காக,

''சென்னை மின்சார கிரிட்'' என்ற அமைப்பை, மின்சாரத் துறை நிறுவியது.

இப்போது இந்த ''கிரிட்''டின் கீழ் ஒன்பது அணைக் கட்டுக்குப்பகுதி மின் நிலையங்களும், ''இரண்டு தெர்மல்'' மின் நிலையங்களும், நெய்வேலி தெர்மல் நிலையமும் உள்ளன. இவைகளின் விவரம் வருமாறு :—

(1) பைகாரா (70 ஆயிரம் கிலோவாட் மின்சாரம் உற்பத்தி செய்கிறது.)

(2) மேட்டூர் (40 ஆயிரம் கிலோவாட்)

(3) பாபநாசம் (28 ஆயிரம் கி. வா.)

(4) மொய்யார் (36 ஆயிரம் கி. வா.)

(5) பெரியாறு (1 லட்சத்து 5 ஆயிரம் கி. வா.)

(6) குந்தா 1 (60 ஆயிரம் கி. வா.)

(7) குந்தா 2 (175 ஆயிரம் கி. வா.)

(8) குந்தா 3 (120 ஆயிரம் கி. வா.)

(9) குந்தா 4 (20 ஆயிரம் கி. வா.)

மேற்கண்டவை தண்ணீரில் இருந்து மின்சாரம் தயாரிக்கும் ''ஹைட்ரோ'' மின் நிலையங்கள்.

கீழ்க்கண்டவை இரண்டும் தெர்மல் மின் நிலையங்கள்.

(1) சோமையா நல்லூர் (14 ஆயிரம் கி. வா.)

(2) சென்னை (87 ஆயிரம் கி. வா.)

மேற்கண்ட பதினொரு மின் நிலையங்களிலிருந்தும் 755 ஆயிரம் கிலோ வாட் மின்சாரம் கிடைக்கிறது. நெய்வேலியில் இருந்து 250 ஆயிரம் கி. வா. கிடைக்கிறது. ஆக 1055 ஆயிரம் கி. வா. கிடைக்கிறது.

தமிழ்நாட்டில் 14,124 கிராமங்களும், 339 நகரங்களும் உள்ளன.

தமிழ்நாட்டு மக்கள்தொகை 3 கோடியே 52 இலட்சமாகும். இவர்களில் 75 சதவிகிதத்தினர் கிராமங்களில் வசிக்கிறார்கள். ஆகையால் தமிழ்நாட்டில் கிராமங்களுக்கு மின்விசை அனுப்புவது முக்கியம்.

ஏன் என்றால் கிராம மக்களிடம் செல்வத்தையும் செழிப்பையும் உண்டாக்கவேண்டும். நகரத்து மக்கள் அனுபவிக்கும் வசதிகளை அவர்களும் அடையவேண்டும். நகரங்களுக்கு வேலை தேடி வருவதைத் தடுக்கவும், சொந்தக் கிராமங்களிலேயே சிறப்பாக வாழவும் கிராமங்களுக்கு மின்சார வசதி செய்வது மிகவும் இன்றியமையாததாகும்.

1935—36 இல், *30* கிராமங்கள் தான் மின்சார வசதியைப் பெற்றன. *1945—46* இல் *804* கிராமங்களும், *1955—56* இல் *3,543* கிராமங்களும் மின்வசதி பெற்றன.

1964—65 இல் *19,383* கிராமங்கள் மின்சாரத்தின் பயனை அடைந்தன.

1935—36 இல் *269* ''பம்பு''களுக்குதான் மின்சாரம் கிடைத்தது. *1950—51* இல் *14,373* பம்புகளுக்கு மின்சாரம் கிடைத்தது. *1964—65* இலோ *2,24,362* ''பம்பு'' கள் மின்சாரத்தால் இயங்குகின்றன.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மேட்டூர் டன்னல் திட்டம், குந்தா மின் உற்பத்தித் திட்டம் (3வது கட்டம்), பரம்பிக்குளம்—ஆலியாறு மின்சாரத் திட்டம் பெரியாறு மின் உற்பத்தித் திட்டம் (2வது கட்டம்) ஆகியவை துவக்கப்பட்டன.

இந்தியாவில் அவசர நிலைமை ஏற்பட்டதன் காரணமாக, மின்சார உற்பத்திக்கு மிகுந்த தேவை ஏற்பட்டது. அதன் காரணமாக மேட்டூர் திட்டம் விரிவாக்கப்பட்டது. கோடையார், சென்னை பேசின்பிரிட்ஜ், ஆலியார், சோலையார் ஆகிய இடங்களில் உள்ள திட்டங்களும் விரிவுபடுத்தப்பட்டு மின்சார உற்பத்தி கணிசமான அளவு மிகுதியாக்கப்பட்டது.

தமிழ்நாட்டைப் பொருத்தவரை, கிடைக்கும் மின்சாரத்துக்கும் மிகுந்த தேவை இருக்கிறது. ஆகையால் மின்சார உற்பத்தியை மேலும் பெருக்க வேண்டியதாக உள்ளது. அதற்காக நான்காவது ஐந்தாண்டுத்திட்ட காலத்தில் 217 கோடி ரூபாய் ஒதுக்க வேண்டும் என்று திட்டம் கொடுக்கப்பட்டுள்ளது. இதில் 123 கோடி ரூபாய் மின்சார உற்பத்திக்குச் செலவழிக்கப்படும்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கீழ்க்கண்ட திட்டங்கள் தொடங்கப்படலாம் :—

(1) தூத்துக்குடியில் ஒரு "தெர்மல்" நிலையம்.

(2) ஒகனேக்கல் அணைக்கட்டில் மின் உற்பத்தி நிலையம்.

(3) குந்தா மின்சார நிலையத்தின் 4 வது கட்டம்.

(4) பாண்டியாறு மின்சாரத் திட்டம்.

(5) மேல் தாமிரவருணி மின் உற்பத்தித் திட்டம்.

(6) மேல் மணிமுத்தாறு திட்டம்.

(7) பாரலாயாறு மின்சார உற்பத்தித் திட்டம்.

(8) சுருளியாறு மின்சார உற்பத்தித் திட்டம்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மேலும் 8,000 கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் அரசினர் மின்சாரம் கொடுக்க இருக்கிறார்கள்,

மகாபலிபுரத்தை அடுத்த கல்பாக்கத்தில் அனல் மின்சார நிலையம் ஏற்படுத்தப்படும். அதன் மூலம் 400 கி. வா. மின்சாரம் உற்பத்தியாகும்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் முடிந்தாலும் மின்சாரப் பற்றுக் குறை இருக்கத்தான் செய்யும்.

அதற்காக நெய்வேலியில் இன்னொரு மின்சார நிலையம் கட்டத் திட்டம் இருக்கிறது.

அருஞ்சொற்பொருள்

மின்சார சப்ளை கார்ப்பொரேஷன் - மின்விசை வழங்கும் நிலையம். வினியோகம்-வழங்குதல். நிறுவனங்கள் - ஸ்தாபனங்கள். மின்சார கிரிட் - மின்விசைகளை ஒருமுகப்படுத்தித் திரட்டிப் பின் பிரித்து வழங்கவுள்ள அமைப்பு. தெர்மல் - அனல் மின்சார நிலையம்.

கேள்விகள்

1. மின்சார உற்பத்தியில் தமிழகம் இந்திய நாடுகளிடை எந்நிலையில் உள்ளது ?

2. தமிழகம் மின்சாரத்தை முதன் முதலாக எப்போது தயாரித்தது ?
3. மின்சாரத் துறையில் தமிழகம் எதில் முதன்மை வகிக்கிறது ?
4. தமிழ் நாட்டில் மின்சார உற்பத்தி, மிகவும் பெருக எவர் காரணம் ?
5. தமிழ் நாட்டில் எந்த அளவு மின்சாரம் உற்பத்தி செய்யப் படுகிறது ?
6. தமிழகத்தில் மின்சார உற்பத்தி, வினியோகம் இவற்றைச் செய்வது எந்த நிறுவனம் ?
7. தமிழ் நாட்டில் ஹைட்ரோ மின் நிலையங்கள் எத்தனை உள்ளன ? எங்கெங்கு உள்ளன ?
8. அனல் மின் நிலையங்கள் தமிழகத்தில் எங்கெங்கு இருக்கின்றன ?
9. கிராமங்களில் மின்சார வசதி எந்நிலையில் இருக்கிறது ?
10. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மின்சாரத் துறையில் ஏற்படக்கூடிய முன்னேற்றங்கள் யாவை ?

பயிற்சி

1. சொற்றொடர்களில் அமைத்து எழுதுக:

   மின்சாரம், அணைக்கட்டு, உற்பத்தி, கிராமங்கள், இன்றியமையாத, செல்வம், செழிப்பு, சிறப்பாக.

2. எதிர்ச்சொற்கள் எழுதுக :

   விரிவு, கிராமம், குறைந்த, முதன்மை, வளர்ச்சி.

3. மின்சார சப்ளை கார்ப்பொரேஷன்—இச்சொற்களிடையே வல்லினம் மிகாமல் இருப்பதற்குக் காரணம் என்ன ?
4. யூனிட், கிலோவாட், கிரிட், தெர்மால் நிலையம்—இவற்றைப் பற்றிக் குறிப்பு வரைக.
5. மின்சாரம் நீரோட்டத்திலிருந்து உற்பத்தி செய்யும் முறை பற்றி ஒரு கட்டுரை வரைக.

8. குடும்பக் கலை

வித்துவான் பு. செ. மணிமேகலை (விஷாரத்)

குடும்பம் நடத்துவதென்பது உண்மையில் ஒரு கலையேயாகும். குடும்பத்தை நல்ல முறையில் நடத்தத் தெரிந்தால், எவ்வளவு எளிய வருமானமுடைய ஏழைக் குடும்பமாயினும், அதைச் சிறந்து விளங்கச் செய்யலாம். நடத்தத் தெரியாமல் தாறுமாருக மனம் போனபோக்கில் குடும்பத்தை நடத்திஞல், சிறு பூசல்கள் நிறைந்து, சீரழிந்து மனக்கவலைகள் மல்கிப் பெருகிக் குடும்பம் சீரழியும்.

ஒரு நாட்டை ஆள்வது எப்படியோ, அப்படித்தான் வீட்டை ஆள்வதுமாகும். குடும்பம் என்பது ஒரு சிறிய அரசாங்கமேயாகும். அரசாங்கத்தில் வரவு செலவுத் திட்டம் இடுவது போலவே, குடும்பத்திலும் வரவு செலவுத் திட்டம் இட்டு நடத்தவேண்டும்.

குடும்பத்திற்கு வரக்கூடிய பண வரவு எவ்வளவோ, அதற்கேற்றபடி செலவுத் திட்டம் வகுக்க வேண்டும். வரவுக்கு மீறிய வகையில் செலவுத் திட்டம் அமையுமாஞல், துண்டு விழும் தொகையைச் சரிக்கட்ட முடியாமல் கடன் வாங்க வேண்டி நேரிடும். பின்ஞல் கடனைத் தீர்க்க முடியாத நிலைமை ஏற்பட்டுப் பல வகையான தொல்லைகளுக்கு ஆளாக நேரிட்டுவிடும்.

ஔவைப் பெருமாட்டியார், "ஆனமுதலில் அதிகம் செலவாஞல் மானம் அழிந்து மதிகெட்டுப் போனதிசை எல்லார்க்கும் கள்ளஞய், ஏழ்பிறப்பும் தீயஞய் நல்லார்க்கும் பொல்லன்" ஆக நேரிட்டு விடும் என்று கூறுவதை மனத்திற்கொண்டு வரவுக்கேற்றவாறு செலவுத் திட்டத்தை வகுக்க வேண்டும்.

பண வரவினம் குறைந்து, செலவினம் மிகும் அளவில் குடும்பம் அமைந்திருந்தால்—குடும்பத்தில் பொருளீட்டும்

ஆட்கள் பலராயில்லாமல் ஒருவர்பொருளீட்டிப் பதின்மர் உண்ணும் நிலைமையில் உள்ள குடும்பமாயிருந்தால்— துணை வருமானத்திற்குரிய வழிகளை வகுத்துக் கொள்ளு தல் வேண்டும். மிக மிக இன்றியமையாத் தேவைகள் மட்டுமன்றி மற்றவற்றில் செலவிடுதல் கூடாது. இங்ஙனம் செலவினத்தைப் பெரிதும் குறைத்துக்கொள்ள வேண்டும்.

> "ஆகாறு அளவிட்டி து ஆயினும் கேடில்லை
> போகாறு அகலாக் கடை"

என்னும் திருவள்ளுவப் பெருமானாரின் அருமறை மொழியை அப்போதைக்கப்போது நினைவிற்கொண்டு செலவுக்குரிய வழியை விரிவாக்கிக் கொள்ளுவதை அடி யோடு கைவிடல் வேண்டும்.

இவ்வாறு செலவுத் திட்டத்தை வகுத்துக்கொண்ட பிறகு, நம் அன்றாடச் செலவினங்களை ஒழுங்காக அன்றா டம் கணக்கெழுதி வரவேண்டும். மாத வருவாய்க்குரிய வர்கள் சம்பளம் பெறும் நாளில், அந்த வருவாயைக் கணக்குப் புத்தகத்தில் குறித்து வைத்து, பிறகு அன்றாடச் செலவினங்களை அன்றாடம் இரவு படுக்கப் போகும்போது எழுதி விடவேண்டும். மாத இறுதி நாளன்று வரவும் செலவும் சரிப்பட்டு வந்திருக்கின்றனவா என்று பார்த்துக் கொள்ள வேண்டும். நாள் வருவாய், வார வருவாய், மாதமிருமுறை வருவாய் உடையவர்களும் தத்தமக்குப் பணம் வந்த நாளில் வரவைக் குறித்துப் பின் அன்றாடம் செய்யும் செலவுகளை யெல்லாம் ஒழுங்காக எழுதிவர வேண்டும்.

இங்ஙனம் ஒழுங்காக அன்றாடம் கணக்கெழுதி வரும் வழக்கம் பல நன்மைகளை உண்டாக்கும். மாதா மாதம் நமக்கு வரும் வருமானம் எவ்வளவு, செலவாவது எவ்வளவு என்ற கணக்குத் தெளிவாகத் தெரியும். 'ஆற்றில் கொட்டினாலும் அளந்து கொட்டு' என்னும் பழமொழிக்கிணங்க, சிறிய பொருள் ஒன்றை வாங்குவ தாயினும் அதைக் கணக்கில் எழுதி வைத்து மாத முடிவில் கணக்குப் பார்ப்பது என்னும் வழக்கத்தை மேற்கொண்டால், வரவுக்கு மேல் செலவிடக் கூடா தென்னும் எண்ணமும், கடன் ஏற்படுமே என்னும்

அச்சமும், அதன் வழிச்செலவை அடக்கும் மனப் பண்பும் அமையும்.

செலவைக் கட்டுப்படுத்துவது எனின், இன்றியமையாத் தேவைக்குரியவற்றை மட்டும் வாங்குவது என்பது தான் பொருள். ஒரு பொருளை வாங்க முற்படுகையில், "இப்பொருள் தேவையா? இப்பொருள் இன்றிக் குடும்பம் நடைபெருதா?" என்பதை எண்ணிப்பார்த்தல் வேண்டும். இன்றியமையாத் தேவையில்லாப் பொருள்களை வாங்குதல் கூடாது. இதனுல் வீண் செலவுகள் கட்டுப்படும்.

குடும்பச் செலவு கட்டுப்பட்டு வரவுக்கு மீறிப் போகாத நிலைமை இருந்தால்தான், குடும்பத்தில் அமைதி நிலவும். குடும்பத்தில் அமைதி நிலவினுல்தான் வாழ்க்கை நிம்மதியாக இருக்க முடியும்.

எனவே குடும்ப வாழ்க்கை நல்ல முறையில் நடைபெற வேண்டுமானுல், குடும்ப வாழ்க்கைப் பொறுப்பேற்று நடத்துபவர்கள் ஆணுயினும் பெண்ணுயினும் இவற்றை மனத்துட் கொண்டு நடந்தால்தான், வையத்துள் வாழ்வாங்கு வாழ முடியும்.

குடும்ப வாழ்வு நடத்தும் பொறுப்பு பெரும்பாலும் நம் நாட்டில் பெண்மக்கட்கே உரியதாயிருந்து வருகிறது. பண்டைக் காலந்தொட்டு இன்றுவரை பொருளீட்டும் துறை ஆடவனுக்குரியதாயிருக்கக் குடும்பம் நடத்தும் துறை பெண்ணிற்குரியதாயிருந்து வருகிறது.

குமண வள்ளல் காலத்தில், பெருஞ்சித்திரனுர் எனும் புலவர் வள்ளலிடம் சென்று பெருஞ் செல்வம் பெற்று வீடு திரும்பியபோது, அந்தப் பொருளைச் செலவிடும் பொறுப்பை அவர் ஏற்கவில்லை. அப்பொருட் செல்வத்தைத் தம் இல்லக்கிழத்தியாரிடம் கொடுத்து, "உன்னிடம் அன்புடன் நடந்தவர்களுக்கும், நீ அன்பு வைத்திருப்பவர்க்கும், உன் சுற்றத்தாரில் வறுமை வாய்ப்பட்டார்க்கும், இன்னவர்க்குத்தான் என்றில்லாது, தேவைக்குரிய நிலையில் இருப்பார்க்கும் கொடுத்து உதவு. என்னைக் கலந்து ஆலோசிக்க வேண்டுமென்றில்

லாது உன் விருப்பப்படி செய்'' என்று கூறியதாகப் புறநானூற்றில் செய்யுள் ஒன்று காணப்படுகிறது:

'' நின்நயந் துறைநர்க்கும் நீநயந் துறைநர்க்கும்
பன்மாண் கற்பினின் கிளைமுத லோர்க்கும்
கடும்பின் கடும்பசி தீர யாழநின்
நெடுங்குறி எதிர்ப்பை நல்கி யோர்க்கும்
இன்னோர்க் கென்னா தென்னொடு சூழாது
வல்லாங்கு வாழ்து மென்னாது நீயும்
எல்லார்க்குங் கொடுமதி மனைகிழ வோயே
பழந்தூங்கு முதிரத்துக் கிழவன்
திருந்துவேல் குமணன் நல்கிய வளனே'' —புறம், 163

நம் மூதாதையர் காலத்திருந்துள்ள இவ்வழக்கமே இன்றும் நடைமுறையில் இருக்கிறது. குடும்பம் நடத்துதற்குரிய பொருள் தேடுதல் ஆடவன் கடமையாயிருக்க, அதனை அளவறிந்து, நிலையறிந்து, காலமறிந்து செலவிட்டுக் குடும்பத்தை ஒழுங்குபட நடத்துவது பெண்களின் கடமையாயிருக்கிறது. குடும்பப் பொறுப்பேற்கும் பெண் வீட்டை ஆள்பவள் என்னும் கருத்தில் இல்லாள், தலைவி, மனைவி, இல்லக்கிழத்தி, மனைக்கிழத்தி என்னும் ஒரு பொருட் குறித்த சொற்களால் வழங்கப்படுவதொன்றே, குடும்பத் தலைமைப் பொறுப்புப் பெண்கள் மாட்டு ஒப்படைக்கப் பட்டிருந்தது என்பது தெள்ளிதிற் புலனாகின்றது.

ஒவ்வொரு குடும்பத்திலும் உணவுச் செலவு, உடைச் செலவு, வீட்டு வாடகை முதலியவை முக்கியமான செலவுகள். இவற்றையும் வருவாய்க்குத் தக்கவாறு கட்டுப்படுத்திக் கொள்ளவேண்டும். இவை தவிர, பிறவற்றுக்கான செலவுகளைச் சமயத்துக்கு ஏற்றவாறு மாற்றியமைத்துக் கொள்ளலாம்.

வருமானத்தை யெல்லாம் மாதாமாதம் செலவிட்டுக் கொண்டே இருந்தால், குடும்பத்தில் எதிர் பாராமல் ஏற்படுகின்ற செலவினங்களைச் சமாளிக்க முடியாமற் போய்விடும். எனவே சிக்கனமாகச் செலவிட்டு மாதந்தோறும் ஏதேனும் ஒரு சிறு தொகையேனும் மிச்சப்படுத்தி வைக்க முயலவேண்டும்.

இக்காலத்தில் தேவையற்ற பல ஆடம்பரப் பொருள்களை வாங்குவதில் பணத்தைச் செலவு செய்துவிட வேண்டி வருகிறது. அடிக்கடி திரைப்படம் பார்க்கச் செல்லுதல், சிற்றுண்டி விடுதிகளுக்குச் செல்லுதல், செல்வர்களைப் போல வாழவேண்டுமென்று எண்ணிக்கொண்டு ஆடம்பரப் பொருள்களை வாங்குதல் முதலியவைகளே ஆடம்பரப் செலவுகளாம். குடும்பத்தைச் சிக்கனமாக நடத்துவதென்றால், உணவைக் குறைத்துக் கொள்வது என்பதாகாது. உணவைக் குறைத்துக் கொண்டால் உடலுரம் குறையும். அதனால் பிணிகள் பலவற்றிற்கு ஆளாக நேரிடும்.

ஆடம்பர வாழ்வு வாழக்கூடாது என்பது போலவே, பொருள்களைக் கடனுக்கு வாங்குவதும், கடைகளில் பற்று வரவு வைத்துக்கொள்வதும் கூடாது. கடைகளில் கடன் கணக்கு வைத்துக் கொண்டால், நினைத்தபொழுதெல்லாம் சற்றும் கவலையில்லாமல், வேண்டிய பொருள்களையெல்லாம் அளவில்லாமல் வாங்க நேரிடும்.

மேலும் கடனுக்குப் பொருள் வாங்குகையில் விலை கூடுதலாக இருக்கலாம். பொருள்களை நல்லவைகளாகப் பார்த்து வாங்க முடியாமற் போகலாம். மேலும், மனம் போனபடி பொருள்களை வாங்கி விடுவதால், மாத முடிவில் வரவின் அளவுக்குமேல் செலவாகி, வாங்கிய கடனை முற்றிலும் கொடுக்க முடியாமல் ஓரளவு கடனை நிறுத்தி வைத்துவிட்டு, அதன் காரணமாக மேலும் அதே கடையில் வாங்க வேண்டிய நிர்ப்பந்தம் உண்டாகிவிடும். இதனால் குடும்பத்திற்குப் பெருந் தொல்லையே உண்டாகும்.

இவ்வகையில் மாதந்தோறும் கடன் தொகை பெருகி, அதனைக் கொடுக்க முடியாமல் திண்டாடும் நெருக்கடியான நிலைமை தோன்றிவிடும்.

எனவே, குடும்பத்தில் மிகமிக முக்கியமாகக் கவனிக்க வேண்டியது, வரவுக்கேற்றபடி செலவு செய்வது என்பதேயாகும். இதற்கு அன்றாடம் குடும்ப வரவு செலவுக் கணக்கு எழுதுவது என்னும் பழக்கம் ஒவ்வொரு குடும்பத்திலும் இருத்தல் வேண்டும். இவ்வாறு

வரவையும் செலவையும் கணக்கெழுதி வைத்துக் குடும்பத்தை நடத்தி வருவதால், வீண் செலவுகள் குறையும்; கடன்படாமல் இருக்கலாம். வாழ்வு அமைதி பெறும். அதனால் மனக்கவலைகள் உண்டாகா. அதன்வழி உடல் நலம் குறையாமல் நல்வாழ்வு வாழமுடியும்.

அருஞ்சொற்பொருள்

ஆகாறு - பணம் வரும் வழி. அளவிட்டிது - சிறியது, குறைவானது. போகாறு - செலவாகும் வழி. அகலாக்கடை - விரிவாகாதிருந்தால். வாழ்வாங்கு - வாழ வேண்டிய முறைப்படி. நயந்துரைநர் - விருப்பமுடையவர். பன்மாண் - பல குணங்களும். கடும்பு - சுற்றம். சூழாது - கலந்தாலோசியாமல். வல்லாங்கு - நல்ல முறையில். மனைகிழவோயே - வீட்டின் தலைவியே.

கேள்விகள்

1. குடும்பம் சீரழியும் என்பதற்குக் காரணம் யாது?
2. நாட்டை ஆள்வதும் வீட்டை ஆள்வது ஒன்றே என்பதை விளக்குக.
3. வாழ்வு சிறக்க, ஔவைப் பெருமாட்டியார், வள்ளுவப் பெருமானார் ஆகியோர் கூறும் வழி யாது?
4. குடும்பம் பெருகி அதற்கேற்ப வரவு வராவிடின் என்ன செய்தல் வேண்டும்?
5. குடும்பம் அமைதியாக நடைபெற என்ன செய்தல் வேண்டும்?
6. குடும்பம் நடத்துவது பெண்களின் உரிமை என்பது எப்படி விளங்குகிறது?
7. சிக்கனமாகக் குடும்பம் நடத்துவது எப்படி?
8. குடும்பத்தில் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது யாது?
9. கடனுக்குப் பொருள்கள் வாங்குவதால் வருந்தீமை யாது?

பயிற்சி

1. சொற்றொடர்களில் பயன்படுத்துக:

மனம் போன போக்கில், சீரழிந்து, மனக்கவலை, சரிக்கட்ட, அன்றாடம், செலவினம், வருவாய், பொறுப்பு, நிம்மதி, அளவறிந்து, வையம், வாழ்வாங்கு.

2. மிகமிக—என்பது அடுக்குத் தொடர். இது போன்று இன்னும் நான்கு அடுக்குத் தொடர்களை எடுத்து எழுதுக.

3. வேறுபாடு அறிக :

குரை - குறை. அரிய - அறிய. கல்—கள். ஆள்—ஆழ்—ஆல். கிழத்தி—கிளத்தி. வழி—வலி—வளி. வால்—வாழ்—வாள்.

4. தொழிற்பெயர், பண்புத்தொகை, பெயரெச்சம், வினையெச்சம்—இவற்றிற்கு இப்பாடத்திலிருந்து எடுத்துக்காட்டுகள் தருக.

---

9. தொல்காப்பியரின் ஒல்காப்புகழ்

(புலவர் செந்துறை முத்து)

தரணியில் தமிழகம் பண்டுதொட்டுத் தனிப்புகழ் கொண்டு விளங்குகின்றது. அங்ஙனம் புகழ்கொண்டு விளங்குதலுக்குக் காரணங்கள் பலவகையில் அமைந் துள்ளன. பல்லாற்றானும் பாங்கு பெற்ற தொன்று தானே பாரில் பெருமை கொண்டு பொலியவியலும்? பொதுவாக ஒருநாடு உலகால் போற்றப்பெறுதல் என் பதே மிகவும் அரிதெனலாம். அங்ஙனம் போற்றப் பெறு தலிலும், தனிமாண் பெறுமுறையில் பண்டுதொட்டு ஒரே நிலையில் உலகம் புகழ்வதெனில், எளிமையில் இயலக் கூடுவதன்றே? இப்பெருநிலையைத் தமிழகம் அடைந் துள்ளதெனில் நம்மனோர் கொள்ளும் மகிழ்வினுக்கும், புத்துணர்வினுக்கும் எல்லையிருக்குமோ? தமிழர் இன்பம் மிகக்கொண்டு வாழ்ந்ததுடன் நில்லாது இறுமாந்து நடத்தல், பீடு நடை போடுதல் இயல்புதானே ?

தரணி முழுதும் போற்றிப் புகழும் நிலையினைத் தமிழகம் அடைதற்கான அருஞ் சிறப்புக்களாவன : தமிழகத்தின் பழமை, தமிழர் நாகரிகம், தமிழகத்தின் மொழி வளம், தமிழக அரசுமுறை, தமிழக வாழ்வியல் முறை ஆகியவையாகும். இவையனைத்தும் பெருஞ் சிறப்புக்கொண்டு, பாரினில் தனிமை கொண்டு இலங்கு கின்றன.

தமிழகம் உலகில் மிகவும் பழமை கொண்ட நிலப் பகுதியாகும். ஏன்! தமிழகமே உலகின் முதல் நிலப்பகுதி யாகும். முதன் முதலாகத் தோன்றிய நிலப்பகுதி இன்றைய தமிழகத்தினுக்குத் தென்பால் பல ஆயிரம் கிலோ மீட்டர் தொலைவில் அமைந்திருந்தது. 'பண்டைத் தமிழகம்' என்று உரைக்கப் பெறுவதே அத்தென்றிசை நிலப்பகுதி. அந்நிலப்பகுதி கடலால் அழிக்கப் பெற் றுள்ளது.

கடல் கொண்ட அத்தொன்னிலம் தென் வடல் 2400 கிலோ மீட்டருக்கு மேற்பட்ட பரப்புடையது. அப்பெரு நிலப்பரப்பில் குமரிமலை, பன்மலைத் தொடர், மணிமலை முதலிய பல மலைகளும், குமரியாறு, 'பஃறுளியாறு முதலிய வற்றாத பல ஆறுகளும் இருந்துள்ளன. அந்நிலப்பகுதி யினைத்தான் மேனாட்டார் 'இலெமூரியா' என்றனர். அந் நிலப்பகுதியினைத் தமிழகத்தார் 'குமரிக் கண்டம்' என் றனர்.

அத்தென்னிலத்தில் வாழ்ந்த மக்கள் தமிழ் மக்களே. அத்தமிழ் மக்களே உலக முதன் மக்களாவர். அந்நிலத் திற்றான் பாண்டிநாடு என்னும் திருநாடு விளங்கி யிருந்தது. பஃறுளியாற்றின் தென்கரையில் இருந்த மதுரையே தென்மதுரை எனப்பட்டது. அம்மதுரையே அப்பாண்டிய நாட்டின் தலைநகராக அமைந்துள்ளது. அத்தலைநகரின்கண் தலைக்கழகம் இருந்து தமிழ் ஆராய்ந் துள்ளது.

> "எங்கோ வாழிய குடுமி தங்கோ
> முந்நீர் விழவின் நெடியோன்
> நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே"—புறம்.

இது நெட்டிமையார் என்னும் சான்றோரின் மொழி யாகும். இது தென்றமிழகம் கடல்கொள்ளப்படுமுன் இருந்த நிலையை யுணர்த்துவதாகும்.

> "பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
> குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள."

இஃது இளங்கோவடிகளாரின் மொழியாகும். இது தென்புலம் கடல்கொண்ட செய்தியை விளக்குவதாகும்.

கடலுள் மாய்ந்த அத் தென் நிலப்பகுதியின் தமிழ் நாகரிகம் கி. மு. 20,000 ஆண்டுகட்கு முற்பட்டது என்று திரு. கா. அப்பாத்துரையார் 'குமரிக்கண்டம்' என்னும் நூலில் குறித்துச் சென்றுள்ளார். அங்ஙனம் விளங்கிய தமிழகம் மிகவும் பழமைச் சிறப்புடையது என்பதை இயம்பவும் வேண்டுமோ? "கற்றோன்றி மண்டோன்றாக் காலத்தின் முற்றோன்றி மூத்தகுடி" என்னும் கல்லாடர் மொழி தமிழகத்தின் பழமைச் சிறப்பினைத் தெளிய வைக்கின்றதன்றோ?

அத்தமிழகத்தில் வாழ்ந்த மக்கள் தமிழரே. அத் தமிழர்தாம் உலகின் முதல் மாந்தர் இனமாவர். அத் தமிழரே நாகரிகத்தை முதன் முதலில் கண்டுணர்ந்தவர்; தரணிக்குப் பரப்பியவர். தமிழர் தோன்றிய ஞான்று விலங்கொடு இணைந்து வாழ்ந்து காலப்போக்கில் அறிவு வளர்ச்சியுற்று, மொழி தோற்றுவித்து, வளம் மிகக் கொண்டு, நாகரிக நிலையில் வாழ்ந்துள்ளனர். தமிழர் இங்ஙனம் வாழுங்கால், தரணியில் வேறெவரும் வாழ்ந்த வரிலர் என்று பல அறிஞர்கள் மொழிந்து சென்றுள் ளனர். எனவே, தமிழரின் நாகரிகமும் பழமைகொண்டு விளங்குவதோடு, பெருமையும் கொண்டுள்ளது என்பது தெளிவாகின்றது.

தமிழகம் மொழி வளத்தினாலும் பெருஞ் சிறப்புற் றுள்ளது. தமிழ்மொழி உலகின் முதன் மொழி என்பது சொல்லி விளங்கவேண்டிய தொன்றன்று. யாங்ஙனமெனில், தமிழகம் உலகின் முதல் நிலம், தமிழர் உலகின் முதல் மனிதர் என்று கூறவே தமிழும் உலக முதல் மொழி என்பது தெளிவாகி விடுகின்றது.

மற்றும் தமிழ் போன்று இன்றும் உலகில் வேறு மொழி இல்லை எனலாம். தமிழ் பண்டுதொட்டு முப் பிரிவுகளாகப் பிரிக்கப்பெற்று, மூன்றிலும் வளமான இலக்கிய இலக்கண நூல்களை மிகக்கொண்டுள்ளது. இங்ங னம் மொழி பிரிவுற்று வளம் பெற்றுள்ள மொழி எஞ் ஞான்றும் இருந்ததில்லை என்பது தெளிவு. எனவே, இவ் வகையினாலும் தமிழகம் பெருமை கொண்டுள்ளதன்றோ?

தமிழக மாந்தர் தம்வாழ்க்கைக்கென்று வகுத்துக் கொண்ட வாழ்வியல், அரசியல் முறைகளும் பழமையும் உடையனவாம். இன்றும் தமிழர் வாழ்க்கை முறைக்கும், பிறர் வாழ்க்கை முறைக்கும் நிரம்ப வேறுபாடிருத்தலைக் காணலாம். மனிதன் மனிதப் பண்புடன், அறிவு வளத் துடன், ஆக்கம் மிகும் வகையில், விலங்கினின்று பிரிந்து அருள் நெறி பூண்டு ஒழுகும் வாழ்வியல் முறையினை வையகத்தில் முதன் முதல் வகுத்தவரே தமிழர்தாம். இம்முறையினைப் பின்னர்ப் பலரும் மேற்கொள்ள வேண் டிய சூழ்நிலை அமையலாயிற்று. இன்றும் சில நாட்டவர் மனித வாழ்வியலை எய்தாது, விலங்கு வாழ்வியலையே

கொண்டிருத்தலையும் காணலாம். தமிழர் தம் வாழ்வியலைத் தரணி முழுதும் பரப்பியும் பெருமை கொண்டுள்ளனர்.

இங்ஙனம் பல்லாற்ருனும் தமிழகம் தனிப்புகழ் பெறும் நிலையினைப் பெற்றுள்ளது. புகழுக்கான இக் காரணங்களின் அழகு விளக்கங்கள் பின்வரும் உரைகளான் தெளிவாகும்.

தமிழகம் பெரும்புகழ் எய்தக் காரணமாக அமைந்தவற்றுள் தலையாய காரணம் மொழி வளம் என்று கூறலாம். எங்ஙனமெனில், மொழி வளமுற்றிருப்பின், அந்நாட்டின் நாகரிகம், வாழ்வியல் முறை, அரசியல் முறை முதலிய பலவும் வளமுற்றிருத்தல் இயல்பே. மொழி மனிதரின் எழில் நிலையைத் தெளியச் செய்யும் நிலைப்பெரு ஆடியாகும். மொழி வளமுற்றிருப்பின், அம்மொழியினர் பிறவற்றிலும் வளமுற்றிருப்பர்; மொழிவளம் குன்றியிருப்பின், அம்மொழியினர் பிறவற்றிலும் வளம் காணுது இழிநிலையில் உள்ளனர் என்பதே கருத்து. எனவே, ஒரு நாட்டின் பெருமைக்கு, அந்நாட்டின் மொழியே முதற்காரணமாகத் திகழ்கின்றது.

ஒருமொழி வளம் அடைந்திருக்கின்றது என்பதை எங்ஙனம் உணர்வது? அம்மொழியின் கண் உள்ள திருந்திய பெரு நூல்களைக்கொண்டே உணர்வதாகும். இம்முறையில் நம் தமிழ் மொழியின் வளத்தைக் காண வேண்டுமெனில், காணவேண்டிய நூல்கள் யாவை? பழமையும் பெருமையும் மிகக்கொண்ட திறக்குறள், தொல்காப்பியம் ஆகிய நூல்களையும், சங்க நூல்களையும், முறையே கண்டுணர்தல் வேண்டும். இந்நூல்களின் வளங்களைக்கொண்டு நோக்குங்கால், அப்பெருநூல்களை யாத்த சான்ருேர்கள் நம் மனக்கண்முன் உருவெடுத்து, நம் போற்றுதலையும், வாழ்த்தினையும் பெற்று அழியாது நின்று வருகின்றனர்.

அழியாப் புகழினை நிலைநிறுத்திச் சென்ற சான்ருேர்களுள் இருபெரும் புலவர்களே முதன்மைபெற்று விளங்குகின்றனர். அவர்கள் திருவள்ளுவரும். தொல்காப்பியருமாவர். இவ்விரு பெரு சான்ருேர்களும் தமிழ் மொழியின் இரு கண்கள் எனக் கொண்டால், மிகவும் அமைவுடைத்

தேயாம். திருவள்ளுவரின் திருநூல் தமிழரின் சிறப்பு மறை நூலாகவும், உலகின் பொது மறை நூலாகவும், தெய்வ நூலாகவும், இணையில்லாப்பெருமறை நூலாகவும் விளங்குதலை அனைவரும் அறிவர்; இஃது உலகறிந்த உண்மை. இச்சான்றோரினும் விழுமிய சான்றோர் எவரும், உலகம் தோன்றிய இது நாள்வரை யாண்டும் தோன்ற வில்லை. தமிழகம் இதனால் தணியாப்புகழ் பெற்று இலங்கு கின்றதன்றோ?

வான்மறைப் புலவர் வள்ளுவரை யடுத்து, வையத்துச் சான்றோர்களுள் விழுமிய சான்றோராக உள்ளவர், ஒல்காப்புகழுடைய தொல்காப்பியர் என்பவர். இவர் 'தொல்காப்பியம்' என்னும் பல்காப்பியம் பேணும் வளம் மிகு நூலை யாத்து இன்பம் கண்டுள்ளார்; இணையிலாப் புகழ் கொண்டுள்ளார். இப்பெருமகனாரின் பெரு நூலினுள் உள்ள செய்திகளனைத்தும் ஒருங்குறுங்கால், உன்னதத் தமிழ் மொழியின் உருவாக அமைந்துள்ள தாம். தொல்காப்பியம் என்னும் பெரு நூலினைத் தமிழ் மொழி என்று கொள்வது மிகவும் சிறப்புடைத்தாம். இங்ஙனம் ஒரு மொழியினையே உன்னத நூலாக்கிப் புகழ் கொண்ட பெருமகனாரே தொல்காப்பியர்.

இத் தொல்காப்பியர் என்னும் பெருமகனார், இற்றைக்கு 6000 ஆண்டுகட்கு முன்னர் வாழ்ந்து சென் றுள்ளார். இப்புலவருடைய ஊர், பெற்றோர், வாழ்க்கை முறை ஆகியவற்றை அறியக்கூட வில்லை. தொல்காப் பியர் என்னும் பெயர் இருவகைக் காரணத்தால் வழங்கப் பெற்றதாக உணர முடிகின்றது. அவை, தொல்காப் பியம் என்னும் நூலினை யாத்த காரணத்தால் தொல் காப்பியர் என வழங்கப் பெற்றுள்ளது; காப்பியக்குடி என்னும் பழமையான குடியில் பிறந்த காரணம் பற்றியும் தொல்காப்பியர் என வழங்கப் பெற்றுள்ளது என்பவை யாகும்.

இப்பெருமகனாருடைய நூல் 'தொல்காப்பியம்' என்னும் பெயரினைக் கொண்டுள்ளது. இந்நூல் இப் பெயரினைப் பெறுதற்கு இரு காரணம் இருக்கலாம் என்று ஊகிக்க இயலுகின்றது. அவை, தொல்காப்பியர் என்னும் புலவரால் இயற்றப் பெற்றதால் இப்பெயரினைப் பெற்றுள்ளது என்றும் கூறலாம்; தொல் + காப்பு +

இயம் = தொல்காப்பியம்; தொல் என்பது பழமையான நூல்கள் என்னும் பொருளேயும், காப்பு என்பது பேணும் என்னும் பொருளேயும், இயம் என்பது இலக்கணம் என்னும் பொருளேயும் கொண்டுள்ளன. அஃதாவது, பழமையான நூல்களைப் பேணும் இலக்கண நூல் என்பது கருத்து. இக்கருத்தின் படியும் இப் பெயரினைக் கொண்டிருக்கலாம்.

தொல்காப்பியர் தம் நூலினுள் தமிழகப் பல்வளத் தினுடன், முந்து நூல்களையும் முறைப்படி பேணிச் சென்றுள்ளார். இதனை,

"செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு
முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணிப்
புலந்தொகுத் தோனே"

என்னும் பாயிர அடிகள் தெளியவைக்கும். இதினின்று அப்புலவனாரின் புலமை வளத்தையும் ஊகித்துணரலா மன்றோ?

இப்பாயிர அடிகளின் தெளிபொருள் யாதெனில், செந்தமிழ் வழங்கும் நிலம், அந்நிலத்தில் வாழும் மக்களின் வாழ்க்கை முறை ஆகியவற்றுடன், பழைய இலக்கிய நூல்களையும் இலக்கண நூல்களையும் கற்றுணர்ந்து, முறைப்படி ஆராய்ந்து நூல் செய்தோன் என்பதாகும்.

பழந்தமிழ் நூல்களின் களஞ்சியம் ஒன்றுண்டெனில், அது தொல்காப்பியமே யாகும். இக்களஞ்சியத்தை இனிது நல்கித் தமிழினம் தனிப் பெருமையை அடையச் செய்து ஏற்றம் பெற்றுள்ளார் தொல்காப்பியர்,

பாங்குமிகு புகழ் கொண்ட புலவர் தொல்காப் பியனாரின் நிலையில் சில பொருந்தாக் கருத்துக்களைச் சிலர் சாற்றியுள்ளனர். தொல்காப்பியர் தனித் தமிழினத் தைச் சார்ந்தவராக இருந்தும், அவரை ஆரியர் என மொழிந்துள்ளனர். சமதக்கினி என்னும் ஆரிய முனிவரின் புதல்வர் என்றும், பரசுராமனின் உடன்பிறந்தவர் என்றும், திரண தூமாக்கினி என்னும் இயற்பெயரினை உடையவர் என்றும், அகத்தியரின் மாணாக்கர் என்றும்

கதை கட்டி விட்டனர். இவையனைத்தும் பொருந்தாக் கற்பனைகளேயாம். வள்ளுவருக்குக் கட்டிவிட்ட கதையைப் போன்றே இப்புலவர்க்கும் கதை கட்டிவிட்டனர். இச்செய்திகட்கெல்லாம் சான்று யாதுள்ளது? தொல்காப்பியத்தைத் தெளிவாக உணர்ந்தோர் இச்செய்திகளுள் ஒன்றினைக் கூட நம்பார் என்பது தெளிவு.

ஆராய்ச்சி அறிஞர் கா. நமச்சிவாய முதலியார் 'அகத்தியர் ஆராய்ச்சி' என்னும் நூலில், தொல்காப்பியர் அகத்தியரின் மாணுக்கர் அல்லர் என்பதைத் தெளிவாக்கியுள்ளார்.

பண்டைத் தமிழ் நூல்களினின்று 'காப்பியக்குடி' என்னும் தமிழ்க்குடி மரபு ஒன்று இருந்துள்ளமை தெளிவாகின்றது. தொல்காப்பியர் அக்குடி மரபினைச் சார்ந்தவர் என்பதே மிகவும் அமைவுடைத்தாம். அல்லது தனித் தமிழ்க் குடியில் பிறந்து, நூல் செய்த காரணத்தான் பூண்டார் என்பதும் எழிலுடைத்தேயாம். தனித்தமிழ்க்குடிச் சான்றேரே தொல்காப்பியர் என்பது தமிழறிஞரின் ஒருமித்த முடிவு.

தொல்காப்பியர் அகத்தியரின் மாணுக்கராக இருந்திருப்பின், தம் நூலை அகத்தியத்தை ஒட்டியே இயற்றியிருப்பார்; தம் ஆசானை ஓரிடத்திலாவது உரைக்காமல் செல்ல மாட்டார். தொல்காப்பியர் 'ஐந்திரம்' என்னும் இலக்கண நூலில் தேர்ந்த புலமை பெற்று விளங்கியுள்ளார்.

ஐந்திரம் என்னும் நூலும், அதனை யாத்த இந்திரன் என்பவனும் ஆரிய இனத்தின்பாற் பட்டவர் என்று சிலர் மொழிந்து வருகின்றனர். இதுவும் பொருந்தா உரையேயாகும். தொல்காப்பியருக்கு முன்பு 'இந்திரன்' என்னும் புலவர் பெருமான் தமிழினத்தில் இருந்துள்ளார்; அப்பெருமகனுரால் யாக்கப் பெற்றது 'ஐந்திரம்' என்னும் விழுமிய இலக்கண நூல்; இந்நூல் தனித்தமிழ் இலக்கண நூல் என்பதை எவரும் மறுக்கவியலாது. இதற்குக் காரணம், ஆரிய மொழியில் மிகவும் பழமையான இலக்கண நூல் 'பாணினி' என்பதாகும். இப்பாணினிக்கு முன்னர் இலக்கண நூல் அம்மொழியில் இல்லை என்பது துணிபு; இப்பாணினி என்னும் நூல்

தொல்காப்பியத்துக்குப் பின்னர்த் தோன்றியதாகும். தொல்காப்பியம் வடமொழியில் இலக்கண நூல் எழுவதற்கு முன்னர்த் தோன்றிய முழு நூலாகும். தொல்காப்பியர் நூலுக்கு எட்டுணையும் வடமொழி நூல் மூலமாகா. தமிழின்கண் இருந்து சொற்களையும், பொருள்களையும் வடமொழி கொள்ளுங்கால், 'ஐந்திரம்' என்னும் நூற்பெயரினையும், இந்திரன் என்னும் பெயரினையும் கடன் கொண்டிருக்கலாம்.

ஐந்திரம் என்னும் தமிழ் இலக்கண நூலைத் தொல்காப்பியர் முற்றக் கற்றுணர்ந்தவர் என்பதை,

> "மல்குநீர் வரைப்பின் ஐந்திரம் நிறைந்த
> தொல்காப் பியனெனத் தன்பெயர் தோற்றிப்
> பல்புகழ் நிறுத்த படிமை யோனே"

என்னும் பனம்பாரனாரின் அடிகள் உணர்த்துகின்றன.

இதினின்று தொல்காப்பியர் நிறை புகழ் உடையவர் என்பதும், தவநிலையுடையவர் என்பதும் தெளிவாகின்றன. இதுகாறும் கூறியவற்றினின்று, தொல்காப்பியர் பல்வகையில் ஒல்காப்புகழ் கொண்டுள்ளமை இனிது புலனாகா நிற்கும்.

அருஞ்சொற்பொருள்

ஒல்கா - குறையா. தரணி - உலகம். பண்டு - பழங்காலம். பல்லாற்றுலும் - பல வழியிலும். பொலிய- விளங்கிய. தனிமாண்- தனிச்சிறப்பு. பீடு - பெருமை. எங்கோ—எம்+கோ - எம் அரசன். முந்நீர் - கடல். ஆடி - கண்ணாடி. யாத்த - இயற்றிய. விழுமிய - சிறந்த.

கேள்விகள்

1. தமிழர் பீடுநடை போடுதல் ஏன்?
2. 'பண்டைத் தமிழகம்' என உரைக்கப் பெறுவது எது?
3. நெட்டிமையார், இளங்கோவடிகள் கூறும் செய்திகளிலிருந்து நாம் அறிவன யாவை?
4. ஒரு நாட்டின் பெருமைக்கு எது காரணம்? எப்படி?
5. ஒரு மொழி வளம் அடைந்திருக்கின்றது என்பதை எங்ஙனம் உணர்வது?

6. அழியாப் புகழினை நிலை நிறுத்திச் சென்ற சான்றோருள் முதன்மை பெறுபவர் யார்?

7. தொல்காப்பியரின் சிறப்பு யாது?

8. தொல்காப்பியரைப் பற்றிய குறிப்பு வரைக.

9. தொல்காப்பியம்—பெயர்க்காரணம் கூறுக.

10. தொல்காப்பியர் அகத்தியரின் மாணுக்கரா? அல்லரா? ஆராய்க.

11. 'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்'—விளக்கம் தருக.

பயிற்சி

1. பிரித்து எழுதுக :

பல்லாற்ருனும், அரிதெனலாம், புகழ்வதெனில், புத்துணர்வு, இவையனைத்தும், கூடுவதன்ரே, தென்றிசை, தொன்னிலம், பஃறுளியாறு, மண்டோன்ரு, முற்ரேன்றி.

2. சொற்ருெடரில் அமைத்து எழுதுக :

விளங்கிய, பழமை, தமிழகம், தரணி, பண்டுதொட்டு, எஞ்ஞான்றும், தெளிவாகின்றது.

3. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம், உடன்பாட்டுப் பெயரெச்சம், பண்புத்தொகை, வினைத்தொகை-இவற்றுக்கு இப்பாடத்திலிருந்து ஒவ்வோர் எடுத்துக் காட்டுத் தருக.

10. செயற்கரிய செய்த டீசல்

(திரு. ஜி. ஆர். தாமோதரன் அவர்கள், பி.எஸ்,சி., எம்.எல்.சி.)

இன்றைய உலகம் மிகவும் முன்னேறியுள்ளது. என்றால், அது விஞ்ஞானத்தின் துணையினால்தான் என்று எல்லோரும் அறிவோம். எந்தெந்த நாடு விஞ்ஞானத் துறையில் முன்னணியில் நிற்கிறதோ, அந்தந்த நாடு மிகவும் முன்னேற்றமடைந்த நாடாகக் கருதப்படு கிறது. அத்தகைய முன்னேற்றத்திற்கு அரும்பாடு பட்டவர்கள் எத்தனையோ பேர், அவர்கள் தன்னலம் பாராமல் உழைப்பின் பெருமையை உணர்ந்து அரிய பெரிய உண்மைகளை வெளியிட்டிருக்கின்றனர். அவர்கள் செய்த செயல்களால், கண்டுபிடித்த உண்மைகளால் பல பயன்களைப் பெற்றும், உலகம் அவைகளைச் செய்தவர்களை மறந்து விடுகிறது. இது இயற்கையே. சிலர் இப்பொது விதிக்கு விலக்காக மக்கள் உள்ளத்தில் மாறாத இடம் பெற்றுள்ளனர்.

சிறு தொழில் முதல் பெருந்தொழில் ஈறாகச் செய்து முடிப்பதற்குப் பயன்படுகின்ற பொறிகள் பல. சில மின் சாரத்தாலும், சில பெட்ரோலியம் என்ற எண்ணெயினா லும், இன்னும் சில அணுவின் ஆற்றலாலும் பல டீசல் எண்ணெயினாலும், மற்றும் பல வேறுவேறு முறைகளா லும் இயங்குகின்றன. இங்கு டீசல் என்று குறித்தது, எண்ணெயினால் இயங்குகின்ற ஒருவகைப் பொறியின் பெயராகும். அந்தப் பொறியின் மூலம் அந்த எண் ணெய்க்குஅப்பெயர் வந்தது.

அப்பொறியினைக் கண்டு பிடித்தவர் பெயராலேயே அப்பொறி வழங்கப்படுகின்றது. டீசல் என்ற இந்தப் பெருமகனார் கண்டு பிடித்த இப்பொறியைப் பயன்படுத் தாத நாடு இப்பூவுலகில் இல்லை. ஆயினும் இவ்வரிய பொறியினைக் கண்டுபிடித்த ரொடால்ஃப் டீசல் (Rudolf Diesel) என்பவரைப் பற்றி அனைவரும் அறிந்திருப்பர் எனக் கூறவியலாது.

1858 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் *18* ஆம் நாள், மனித ஆற்றலே மிகுந்த அளவு விரயம் செய்து சிறிய தொரு செயலேச் செய்து முடிக்கும் தொல்லேயை விடுத் துப் பொறியால் எளிமையாக்கிய பெருமகனர் ரொடால் ஃப் டீசல் பாரிசு மாநகரத்தில் தோன்றினர். இவர் ஜெர்மானிய நாட்டாராவார். இவருடைய தந்தை யாகிய தியோடர் டீசல் ஜெர்மானிய நாட்டைவிட்டுப் பாரிசிலே குடி புகுந்தார். அங்குச் சென்று ஒரு தொழி லதிபராய் வாழலாம் என்ற எண்ணத்துடன் அவர் பாரி சுக்குச் சென்ருர். ஆனல் அவ்வெண்ணம் கைகூடவில்லே. எளிய தொழில் செய்தே அவர் தம் வாழ்வினே நடத்த வேண்டியிருந்தது.

1870 வரை டீசல், பாரிசிலுள்ள பள்ளிக்குச் சென் ருர். தமது பன்னிரண்டாம் வயதில் பள்ளிப் பதக்கம் பெற்றுப் பாராட்டப்பட்டார்; ஆனல் பரிசு பெற்ற அடுத்த ஆண்டில் அதாவது *1870-71* இல் பிரஞ்சுக்காரர் களுக்கும் ஜெர்மானியர்களுக்கும் போர் மூண்டதால் ஜெர்மானியர் என்ற காரணத்தால் டீசலும் அவர்தம் பெற்ருேரும் பாரிசைவிட்டு வெளியேற்றப்பட்டனர். அவர்கள் தம் உறவினரோடு தங்கள் பொருள்களேக் கட் டிக் கொண்டு தொழிலிற் சிறந்த பெரு நகரமாகிய இலண்டன் மாநகரையடைந்தார்கள். அங்கு ரொடால்ஃப் ஆங்கிலமும் பயின்ருர். புதுக் கருத்துக்களே அறியும் வாய்ப்பினேயும் பெற்ருர்.

அடிக்கடி இடம் மாறிய காரணத்தால் ரொடால்ஃப் பின் குடும்பம் மிகவும் சீர்கேடடைந்தது. அந்நிலேயில் அவர்கள் தங்கள் பிள்ளேயான ரொடால்ஃபை மேலும் கற்க வைக்க இயலாதவர்களானர்கள். வருந்திய அப்பெற் ருேர்கள் நினேவிலே அவர்தம் உற்ற நண்பராகிய பார் னிகல் எனும் ஆசிரியருடைய நினேவு வந்தது. அவருடைய உதவியினேப் பயன்படுத்த எண்ணிய தியோடர் தம் மகன் டீசலேத் தம் தாய் நாடான ஜெர்மனி நாட்டிலுள்ள தம் நண்பரின் ஊராகிய ஆக்சுபர்குக்கு (Augsburg) அனுப் பினர். அங்கு ரொடால்ஃப் டீசல் பார்னிகலின் மேற் பார்வையில் வாழ்ந்தார்.

ஆக்சுபர்க் வந்து சேர்ந்த டீசல் *1870* முதல் *1873* வரை அங்குள்ள மாவட்டத் தொழிற்பள்ளியில் (District Trade School) சேர்ந்து பயின்ருர். தாய்நாடு ஜெர்மனி

யாயினும் ஜெர்மனியில் இல்லாத காரணத்தினுல் ஜெர்மன் மொழியில் கல்வி கற்பதில் தொடக்கத்தில் ஏற்பட்ட சிக்கலைத் தம் குன்ருத உறுதியாலும், பேரார்வத்தாலும் உடைத்தெறிந்து, அம்மொழியிலும் சிறந்த வல்லுநரானுர்.

இதற்கிடையில் அவரது பெற்ருேர்கள் பாரிசுக்கு மீண்டும் திரும்பி, வறிய வாழ்க்கையை மேற்கொண்டார்கள். அவர் தம் வாழ்வினைக் கண்ட டீசல் வருந்தினுர். ஆனுல் அவர் வருத்தம் அவர் தம் ஊக்கத்தை வளர்த்தது. கற்றுத் தெளிந்து தேர்ந்து முன்னேறவேண்டுமென்ற ஆர்வம் அவருக்கு மிகுந்தது.

1873 முதல் *1875* வரை அப்பள்ளியிலே அவர் கல்வி கற்ருர். அப்பள்ளியிலிருந்த பல பொருள்களுள் காற்று அமுக்கத்தால் தீப்பற்றவைக்கும் கருவி அவரைக் கவர்ந்தது. அக்கருவியானது ஒரு சைக்கிளின் காற்றடிக்கும் கருவி போன்றது. அதிலுள்ள காற்று அமுக்கப்படும் போது ஏற்படும்வெப்பத்தால், உள்ளே வைக்கப்பட்டுள்ள தீப்பிடிக்கும் பொருள் ஒன்று ஒளிவிட்டு மின்னியது. இப்பொருள்கள்தாம் அவர்தம் அரிய கண்டுபிடிப்புக்கு அடிப்படையாய் இருந்தன.

தொழிற்பள்ளியில் கற்றுத்தேர்ந்த டீசல், *1875*இல் மியூனிக்கிலுள்ள பலதொழிற் கல்லூரியில் சேர்ந்து பயிலத் தொடங்கினுர். இங்கு இவர் வாழ்வில் செழுமை ஏற்பட்டது. உறவினர், நண்பர்கள் உதவியும் ஆதரவும் கிட்டின. இவர் அங்குப் பொறியியற் பகுதியில் (Mechanical Engineering) சேர்ந்து கற்ருர்.

அக்காலத்திலெல்லாம் பொறியியற் கல்வி யென்ருல் ஆவியால் இயங்கக் கூடிய பொறிகளைப் பற்றி அறிந்து கொள்வதாகும். இப்பொழுது எல்லாரும் அறிந்திருக்கக் கூடிய உள் எரிபொருள்களைப் (Internal Combustion Engines) பற்றி அக்காலத்தில் மிகச் சிலருக்கே தெரியும். இந்தப் பொருள் டீசலின் உள்ளத்தைக் கவர்ந்தது. அது பற்றிய செய்திகளை இவராகவே சிந்தித்து வந்தார். இவருடைய சிந்தனைத் திறனையும் அறிவின் ஆற்றலையும் கண்ட இவர்தம் ஆசிரியர்கள் இவர் பட்டம் பெறுவதற்கு முன் ஒரு குறிப்பிட்ட காலம் பயிற்சி பெற்று வருவது நன்மையாகும் என எண்ணி இவரை வின்டர்தர் (Winterthur) என்ற ஊரிலுள்ள தொழிற்சாலைக்கு அனுப்பினர்.

இலண்டன், ஆக்சுபர்க், மியூனிக் போன்ற பெரிய நகரங்களைக் கண்ட டீசலுக்குச் சிற்றூராகிய விண்டர்தர், உள்ளத்திற்கு உவகையளிக்கவில்லையாயினும், சல்சர் கம்பெனியாரின் தொழிற் கூடமும் அவர்கள் உலக முழுவதிலும் பொறியியல் துறையில் கொண்டிருந்த தொடர்பும், தொழில் நுணுக்கத்தை நன்கு அறிதல் வேண்டுமென்ற இவரது ஆர்வமும் ஒருவாறு ஆறுதல் அளித்தன.

1880 இல் இவர் அத்தொழில் கல்லூரியில் தேர்ந்து பாரிசிலுள்ள குளிர் சாதனங்கள் தயாரிக்கும் ஒரு தொழிலகத்தின் பொறுப்பாளராக ஆக்கப்பட்டார். அங்குத்தான் இவர் டீசல் பொறிக்குரிய அடிப்படையைத் தொடங்கினர். இவர்க்குச் சில காலமாகவே இந்த நீராவிப் பொறியை மாற்றி அமைக்கவேண்டும் என்ற எண்ணமிருந்தது என்பது இவர் ஆவியினுல் இயங்கும் பொறியைப் பற்றி 1878 ஆம் ஆண்டில், குறிப்பிட்டுள்ள ஒரு குறிப்பிலிருந்து தெரிய வருகிறது. அதாவது, 1 கிலோ கிராம் (1000 கிராம்) நிலக்கரியைக்கொண்டு நீராவியாக்க 7,500 கலோரி வெப்பத்தைச் செலுத்தினுல் அதில் சிறிது பாகமே பயன்படுகிறது. ஆனுல், அந்த 7,500 கலோரி வெப்பமும் அப்படியே செயல்படவேண்டும். இதை எப்படி ஆக்க முறையில் செயல்படுத்துவது? இது தீர்வு காண வேண்டிய ஒரு சிக்கலாகும் என்று அந்தக் குறிப்பேட்டில் காணப்படுகிறது.

அங்கு இவர் தமக்கென ஒதுக்கப்பட்ட பணியேயன்றி, வேறு தொழில்கள் நடக்கின்ற பகுதிக்கெல்லாம் சென்று அங்கு நடைபெறும் தொழில்களின் நுணுக்கங்களைக் கவனித்து வந்தார். அங்குத் தங்கிய ஆறு திங்களில் பலவற்றைக் கற்றுத் தம் மேலான அறிவை மேலும் வளர்த்துக் கொண்டார்.

1890 இல் முன்பு இவர்க்கு ஆசிரியராக இருந்தவரும் லிண்டே தொழிலகத்தின் நெறியாளருமான லிண்டே என்பவரால் பெர்லினுக்கு இவர் அனுப்பப்பட்டார்.

பிறகு 1892 இல் இவர் டீசல் பொறியின் அமைப்பைப் பற்றியும், அதனை இயக்கும் முறையைப் பற்றியும் தெரிவித்து, அதனுடைய முழு உரிமையையும் பெற்றுர். ஆதலால், அதனை வேறு ஒருவராலும் அமைக்க முடியவில்லை. இவர் தாம் கண்டுபிடித்த உண்மைகளைச்

செயலாக்க விரும்பிச் சல்சர் கம்பெனியாரின் உதவியை நாடினர். அதுபற்றி விரிவானதொரு கட்டுரையையும் அவர்க்கு எழுதியனுப்பினர். இதுபற்றிக் கம்பெனி உரிமையாளர்களுக்கிடையே கருத்து வேறுபாடு இருந்தாலும் ஜாகப் சல்சர் இமூஃப் (Jacob Sulzer Imhoof) போன்றோர் ஆதரவால் 1893 ஆம் ஆண்டு மேத்திங்கள் 16 ஆம் நாள் டீசலுக்கும் சல்சர் கம்பெனிக்குமிடையே ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன்படி டீசல் பொறியினைச் செய்யும் உரிமையினைச் சல்சர் கம்பெனி பெற்றது.

1793 ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 10 ஆம் நாள், முதல் டீசல் பொறி செய்யப்பட்டது. ஆனால் அதைப் பல பரிசோதனைகட்குள்ளாக்கியபோது வெடித்து விட்டது. இதனால் அந்த நிலையத்தில் பங்கு போட்டிருந்தவர்கள் தங்கள் தங்கள் பங்குகளைத் திரும்பிப் பெற விரும்பினர். தோல்வியால் மனமுடைந்த பங்குதாரர்கள் டீசல் அவர்கட்கு எதிராக வெகுண்டெழுந்தனர். உள்ளூர்ச் செய்தித்தாள்கள் இவரைப் பற்றி இழிவாக எழுதின. ஆயினும் மனந்தளரா டீசல், டீசல் பொறியை ஆக்குவதில் மிக்க ஊக்கத்துடன் விழிப்புடனும் ஆராய்ச்சி செய்து இறுதியில் வெற்றி பெற்றார். இவரது மனந்தளரா முயற்சிக்குச் சல்சர் உடன் பிறப்பாளர்கள் உறுதுணையாயிருந்தனர். 'நன்றி மறப்பது நன்றன்று' என்றபடி அதனை இவர் மறவாது தாம் எழுதிய டீசல் பொறியின் வரலாற்றினை, சாந்தக் கம்பெனியின் உரிமையாளர் ஜாகப் சல்சர் இமூஃப் அவர்களுக்குப் படையல் செய்துள்ளார்.

1897 ஆம் ஆண்டு பல பரிசோதனைகளுக்குப் பிறகு இருபது குதிரை ஆற்றலுள்ள டீசல் பொறி உருவாக்கப்பட்டது. வெற்றி ஏற்பட்டவுடனே, மேலும் ஊக்கமடைந்த கம்பெனியார்கள் டீசல் அவர்களுடன் ஒரு புதிய ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டனர். இதன்படி சுவிட்சர்லாந்து முழுமைக்கும் சல்சர் கம்பெனியார், டீசல் பொறி விற்பனை உரிமை பெற்றதால் அவர்கள் முழுக் கவனத்தையும் டீசல் பொறி செய்வதிலே செலுத்தினர்கள். டீசல் அவர்களின் இடையரு உழைப்பாலும், சல்சர் கம்பெனியாரின் ஆதரவாலும் டீசல் பொறி நல்ல முறையில் மக்களிடையே பெருகத் தொடங்கியது.

டீசல் அவர்கள் தாம் கண்ட பொறியின் அமைப்பினையும் ஆற்றலையும் முன்னேற்றும் பணியிலீடுபட்டிருந்த

காலத்தில் ஜாகப் சல்சர், டீசல் பொறியினைக் கப்பல் களுக்குப் பொருத்தி ஓட்டவேண்டும் என எண்ணினார். மாற்றங்களுக்கும் வளர்ச்சிகளுக்கும் பிறகு 1905 ஆம் ஆண்டில் கப்பலில் பொருத்தப்படும் டீசல் பொறியினைச் சல்சர் கம்பெனியார் உருவாக்கினார்கள். அது 90 குதிரை ஆற்றல் பெற்றது. அப்பொறி 1906 ஆம் ஆண்டு மிலானில் நடைபெற்ற பொருட்காட்சி நிலையத்தில் வைக்கப்பட்டது. டீசல் இந்தப் பொறியை உண்டாக்கு வதில் முன்னோடியாக இருந்தாலும், கப்பலில் பொருத்தி ஓட்டும் இப்பொறியினை ஜாகப் சல்சரே செய்தார் என் பதை டீசல் ஜாகப்புக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட் டுள்ளார். அதாவது "மிலானில் நடக்கும் பொருட் காட்சியில் வைக்கப்பட்டுள்ள ஈரிடிப் பொறியானது உங்களுடைய முயற்சியாலும் பணியாலும் உருவான தென்பதை மகிழ்வோடு நான் ஒத்துக்கொள்கிறேன்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

நிலத்தையும் நீரையும் வெற்றி கொண்ட டீசல் பொறி தண்டவாளங்களையும் வெற்றிகொள்ள எண்ணி யது. தண்டவாளங்களின் வழி செல்லும் வண்டிகளுக்கு டீசல் பொறியை எவ்வாறு அமைப்பது என்பது பற்றி 1906 ஆம் ஆண்டில் கலந்து ஆராய்ந்தனர். இதைப் பற்றிய திட்டங்களைத் தீட்டவும் இதை உருவாக்கவும் ஒரு நிலையத்தை 1906 ஆம் ஆண்டில் நிறுவினர். அதற்கு டீசல்—குளோசு—சல்சர் வெப்ப இருப்புப்பாதை பொறிக் கம்பெனி என்பது பெயர். அதாவது இந்தப் பொறியை உண்டாக்குவதில் பங்குகொண்டோர், டீசல், அடால்ஃப் குளோசு (Adolf Klose), சல்சர் சகோதரர் ஆவார்கள். 1906 இல் துவங்கிய இந்தக் கம்பெனி சுமார் ஆறு ஆண்டுகளில் அரிய உழைப்பின் பயனால் 1912 இன் இறுதி யில் முதல் டீசல் இரயில் வண்டியை உருவாக்கி 1913 இல் முதன் முதலில் தண்டவாளத்தில் ஓட்டினர். 1906 இல் இருநது 1912 வரை இந்தக் கம்பெனியில் நடந்த கூட்டங் களைப் பற்றியும், அவர்கள் நடத்திய ஆய்வுகளைப் பற்றி யும் சல்சர் அப்பதிவேடுகளில் பொறித்து வைத்திருப்பதை நாம் இன்றும் காணலாம். முதன் முதலில் ஓடிய இந்த டீசல் இரயில் வண்டி மணிக்கு 100 கிலோ மீட்டர் வேகத் தில் சென்றது.

இன்று டீசலைப்பற்றித் தெரியாதார் இல்லை என்றே சொல்லலாம். டீசல் என்றால் என்ன? என்பது கூடத்

தெரியாத பட்டி தொட்டிகளிலும், தெரிந்ததாகப் பொய்யுருக் கொண்டிருக்கும் நகரங்களிலும் செல்லும் இடங்களிலெல்லாம் டீசலின் உருவத்தை அவரால் செய்யப்பட்ட பொறியின் உருவமாகக் காண்கிறோம். இவ்வாறு இயற்கைத் திறனும், இடையறாது உழைக்கும் ஆற்றலும் படைத்த டீசல் அவரது வாழ்வில் கண்ட கனவை நனவாக்கிச் சென்றார்.

எனினும், அவர் இறுதிக் காலம் எவ்வாறு இருந்தது என்பது பற்றிப் பலர் பலவாறாகக் கூறுகின்றனர். அவர், வாழ்விக்க வந்த வள்ளல் பரம்பரையைச் சார்ந்தவர். அவர் தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர். வஞ்சனையில்லாத அவரைப் பலர் வஞ்சித்து வாழ்ந்தனர். அதனால், அவரது வாழ்வு மலரவேண்டிய வாய்ப்பின்றி உலர்ந்தது. இவ்வுலகம் அழிந்தாலும் அவர் கண்டுபிடித்த அவரது 'இதயபொறி' அவரது கதையைச் சொல்லிக்கொண்டேயிருக்கும், அவரே அவரது பொறிக்குச் சொந்தமானவர். அவரை விட்டு அவர் கண்டுபிடித்த பொறியையோ அல்லது பொறியை விட்டு அவரையோ, பிரித்து அறிய முடியாது. அந்த அளவுக்கு அவர் தாம் கண்டுபிடித்ததோடு ஒன்றிய தொடர்பைப் பெற்று விட்டார்.

இறந்தும் இறவாப் பேறுபெற்ற டீசலை, மனித குலத்துக்கு மாபெரும் உதவியைச் செய்துள்ள டீசலை, மனித சமுதாய வளர்ச்சிக்குதவிய மாபெருந் தொண்டர் எனக் கூறுவதில் தவறில்லை.

அருஞ்சொற்பொருள்

ஆற்றல் - சக்தி. பொறி - இயந்திரம். இயலாது - முடியாது. விரயம் - மிகு செலவு. வாய்ப்பு - அனுகூலம், பேறு. சிக்கல் - முட்டுப்பாடு. இறவாப் பேறு - புகழால் என்றும் சாகாது வாழும் பெருமை. தீட்டுதல் - வரைதல்.

கேள்விகள்

1. எது முன்னேற்றமடைந்த நாடு ? ஏன் ?
2. தொழில்கள் செய்து முடிக்கப் பயன்படும் பொறிகள் யாவை ?
3. ரொடால்ஃப் டீசலின் தந்தையின் நிலை யாது ?
4. டீசல் எங்கெங்குக் கல்வி கற்றார் ?

5. டீசல் கண்டுபிடித்த பொறிக்கு அடிப்படையாயிருந்தவை யாவை?
6. டீசல் படித்த பொறியியற் கல்வி எத்தகையது?
7. டீசல் பொறிக்குரிய அடிப்படையை அவர் எங்கே துவக்கினர்?
8. அவர் குறிப்பேட்டில் காணப்படுவது யாது?
9. சல்சர் கம்பெனிக்கும் டீசலுக்குமிடை நடந்த ஒப்பந்தம் யாது?
10. டீசல் ஜாகப்புக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டது யாது?
11. டீசல் பொறி எவ்வெவ்வாறு பயன்படுத்தப்பட்டது?
12. டீசல் எல்லாருமறிந்த சொல்லாக ஆனது எப்படி?
13. டீசலின் இறுதிக்காலம் பற்றி எழுதுக.
14. இறந்தும் இறவாப் புகழ் பெற்றவர் எவர்? ஏன்?

பயிற்சி

1. சொந்தச் சொற்றெடரில் அமைத்து எழுதுக:

   இறுதிக்காலம், மாபெரும், பேறு பெற்ற, வாழ்விக்க, பரம்பரை, இடையருது, வெற்றி கொள்ள, ஆற்றல், கப்பல், மேற்பார்வை.

2. எதிர்ச் சொற்களை எழுதுக:

   முன்னேற்றம், பெருமை, உண்மை, ஈருக, இயற்கை வெப்பம், சிறிது, நன்று, புரிய.

3. வேறுவேறு—அடுக்குத் தொடர். வேறு இரண்டு அடுக்குத் தொடர்களை எழுதுக.

11. சிறு சேமிப்பின் சிறப்பு

(பிரதேச இயக்குநர், தேசிய சேமிப்புத் துறை, சென்னை-2.)

பணம் ஒருவரிடமிருந்து மற்றவரிடம் மாறிக் கொண்டே இருக்கிறது. பணம் எப்போதும் புழக்கத்தில் இருப்பதுதான் நல்லது. பணத்தை நமது தேவைகளை நிறைவேற்றவே ஈட்டுகிறோம். பணம் நமக்கு மிகவும் முக்கியமாக இருக்கிறது. ஆகையால் அதை அளந்து இன்றியமையாச் செலவுகளையே செய்ய வேண்டும்.

குறைந்த வருமானமுள்ள ஒருவன் நன்றாக வாழ முடியாமல் போகலாம். பழைய சட்டை கிழிந்து பயனில்லாமல் போனவுடன் தேவைக்குப் புதிய சட்டை யொன்றை உடனடியாக வாங்க இயலாமல் போகலாம். வாழ வசதியான வீடு இல்லாமல் வாடலாம். எனினும், அவனுக்கும், அவனை நம்பி இருப்பவர்கட்கும் வயிற்றுக்கு உணவும் உடலை மறைக்கத் துணியும் வாங்கியே ஆகவேண்டியிருக்கிறது. ஆகையால் அவன் பணத்தை மிகவும் கவனத்துடன் செலவு செய்ய வேண்டும்.

அதிக வருமானமுள்ள ஒருவன் வசதியாக வாழலாம். விலையுயர்ந்த ஆடைகளை அணியலாம். தனக்கென ஒரு 'கார்' கூட வைத்திருக்கலாம். ஆனால் அவனும் அளவுடன் செலவு செய்ய வேண்டும். வரவுக்கு மிஞ்சிச் செலவு செய்பவன் துன்பத்திற்குள்ளாவான். பெருகும் தேவையை நிறைவேற்றப் பிறரிடம் கடன் வாங்க முயல்வான். கடன் வாங்கிப் பழக்கப்பட்டு விட்டால் அப்பழக்கத்தை எளிதில் விடமுடியாது. அப்பழக்கத்தால் நாளடைவில் தன்மதிப்பு, தோழமை இவைகளை இழக்க நேரிடும். மேலும் தன்னைத்தானே துயரத்திற்குள்ளாக்கிக் கொள்ள நேரும்.

செலவில் இன்னொரு வகையுண்டு. அவ்வகைச் செலவு தனிப்பட்ட ஒருவரோடு முடியாமற் சமூகத்துடன் தொடர்பு கொள்கிறது. ஒருவர் ஒரு பயிற்சிப் புத்தகம் வாங்குகிறார். அப்புத்தகத்தை எல்லாரும் வாங்கு

கிறார்கள். அப்படி வாங்குவதால் பல புத்தகங்கள் தேவைப்படுகின்றன. மிகுதியான புத்தகங்களை அச்சிட மிகுதியான காகிதமும் ஆட்களும் தேவைப்படுகின்றன. மிகுந்த முதலும் தேவைப்படுகிறது. தீபாவளி நாளில் பட்டாசு மிகுதியாகத் தேவைப்படுகிறது. ஆகையால் பயிற்சிப் புத்தகத்துக்குத் தேவைப் பட்டதைப்போல மிகுதியான பொருளும் ஆட்களும் பட்டாசு உற்பத்திக்கும் தேவைப்படுவதால் ஒரு செலவானது செலவு செய்பவருடன் மட்டும் நின்று விடுவதில்லை. அது நல்ல செலவோ கெட்ட செலவோ சமூகத்தில் எங்கும் பரவிப் பலருக்கும் பயன்படுகிறது.

மூன்றுவகைத் தேவைகள்

ஒரு குடும்பம் மூன்று வகைத் தேவைகளைக் கவனிக்க வேண்டியிருக்கிறது. அவை (1) உடனடித் தேவை, (2) பிற்காலத் தேவை, (3) எதிர்பாராத் தேவை என்பனவாம்.

உடனடித் தேவை - என்பது குடும்பத்தை நடத்துவதற்கு வேண்டிய பொருள்களை வாங்கச் செலவிட வேண்டிய தேவை.

பிற்காலத் தேவை என்பது பள்ளிக்கூடம் கோடை விடுமுறைக்குப் பின் திறந்தவுடன் பிள்ளைகளுக்குப் புத்தகங்கள் வாங்குதல், விடுமுறை நாட்களைக் கழிக்க எங்கேனும் ஓரிடத்திற்குச் செல்லுதல், வீட்டில் நடைபெறும் முக்கிய நிகழ்ச்சிகளைக் கொண்டாடுதல், தையல் எந்திரம் வாங்குதல், வீடு கட்டுதல் போன்றவற்றிற்குச் செலவிட வேண்டிய தேவை.

எதிர்பாராத் தேவை என்பது, ஒருவன் பள்ளிக்கூடத்திலோ வேறு இடத்திலோ தான் கொண்டு சென்ற குடையைத் தொலைத்துவிட்டோ மறந்துவிட்டோ வந்துவிடலாம். மழைக் காலமாக இருந்தால் குடையில்லாமல் வெளியே செல்ல முடியாது. ஆகையால் வேறு குடை ஒன்று உடனே வாங்கியாக வேண்டும். இது எதிர்பாராத் தேவையாகும். திடீரென்று வீட்டில் யாருக்காவது உடல் நலம் குறையலாம். அதற்கு மருந்துகள் வாங்க வேண்டிய

இன்றியமையாமை நேரிடலாம். இது போன்ற செலவும் எதிர்பாராத் தேவையாகும்.

இச் செலவுகளுக்கெல்லாம் பணம் இன்றியமையாத தாகும். சில செலவுகள் அண்மையில் இருக்கும். சில எதிர்பாராச் செலவுகளாக வந்து சேரும். ஆகையால் இத்தகைய சந்தர்ப்பங்களுக்குக் கூடிய வரையில் தயாராக இருக்க வேண்டுவது நம் கடமையாகும். இப்படியில்லாமல் எதிர்பாராச் செலவு ஏற்படும்போது அதிர்ச்சியடைவதோ ஆதரவற்ற நிலையில் கவலைப்பட்டுக் கொண்டிருப்பதோ கூடாது. "துணிக்குத் தகுந்த சட்டையைத் தைக்க வேண்டும். வரவுக்கு மிஞ்சிய செலவு இருக்கக் கூடாது. செலவுக்கு மிஞ்சிய வரவு இருக்கவேண்டும்" என்னும் கருத்தை மனத்தில் கொண்டோமெனின், கடன்பட்டுக் கலங்க வேண்டிய நிலையோ எதிர்பாராச் செலவுகள் ஏற்படும்போது இன்னலுற வேண்டிய நிலையோ ஏற்படா.

செலவுக்குக் காரணம் வேண்டும்

"என்னுடைய வருமானம் எவ்வளவு? நான் இதில் எவ்வளவு செலவு செய்யவேண்டும்? வீட்டு வாடகை, உணவு, உடை, பள்ளிச் சம்பளம், மண்ணெண்ணெய் இவைகளுக்கு எவ்வளவு செலவு செய்யவேண்டும்? இச் செலவுகள் போக எதிர்காலத்திற்காக எஞ்சி இருப்பது எவ்வளவு?" என ஒவ்வொருவனும் ஆய்ந்து அளந்து சிக்கனமாகச் செலவு செய்யவேண்டும். நம்முடைய நலனுக்கு இன்றியமையாது தேவைப்படும் பொருள்களுக்காகத் தான் செலவு செய்யவேண்டும். ஒருவனுடைய தனிப்பட்ட நலன் சமூகத்தின் நலனாக மாறுகிறது. வீண் செலவுகளில் இன்றியமையாத் தேவைக் குரியவை அல்லாத பொருள்களில் பணத்தை வீணாக்கக் கூடாது. ஒவ்வொரு செலவுக்கும் அவசியமும் காரணமும் இருக்க வேண்டும்.

பணத்தைச் சேமிப்பது ஓர் உயர்ந்த பண்பாகும். சேமிக்கும் நோக்கம் நமது மனத்தை ஒழுங்குபடுத்துகிறது. சிக்கனம் மனிதனின் உணர்ச்சிகளை அடக்குகிறது. சேமிப்பு நமது எதிர்காலத்தை நினைவூட்டுகிறது. எதிர்காலத்தை இன்பமாக்குகிறது. சேமிப்பவன் தனக்

கும் நன்மை தேடிக்கொண்டு தன் நாட்டின் முன்னேற்றத்திற்கும் உதவுகிறான்.

தனிப்பட்ட மனிதனின் தேவைகளை நிறைவேற்றப் பணம் வேண்டியிருப்பதைப் போலச் சமூகத்தின் தேவைகளை நிறைவேற்றவும் பணம் தேவையா யிருக்கிறது. பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவ மனைகள் கட்டவும், பூங்காக்கள், நெடுஞ்சாலைகள் அமைக்கவும், மக்களின் சுகாதார வசதிகளைக் கவனிக்கவும், மின்சாரம், குடிநீர், இரயில்வே, பஸ் முதலிய வசதிகளைச் செய்து தரவும் பணம் தேவைப்படுகிறது. இவைகளெல்லாம் ஒரு தனி மனிதனுக்காக மட்டும் அன்றிப் பொது மக்களாகிய நம்மனைவருக்கும் செய்யப்படுகின்றன. தனிப்பட்ட மனிதனிடம் இப்படிப்பட்ட பெருந் திட்டங்களை நிறைவேற்றப் போதிய பணம் இராது.

அப்படி ஓரிருவரிடம் இருந்தாலும், இத்திட்டத்தால் அத் தனிப்பட்டவருக்கு மட்டும் தனி நன்மை ஏற்படப் போவதில்லை யாதலால் அத்தனிப்பட்டவர் தம் பெருஞ் செல்வத்தை இரயில் பாதை அமைப்பதிலோ, கிலோ மீட்டர் கணக்கில் சாலைகள் அமைப்பதிலோ, செலவிட முன்வர மாட்டார். ஆகவே இப்படிப்பட்ட திட்டங்களை நகராண்மைக் கழகங்கள் தங்கள் எல்லைக்குள் நிறைவேற்றுகின்றன. இவைகளினும் பெரிய அமைப்பான அரசாங்கம் இன்னும் பெரிய திட்டங்களான நெடுஞ்சாலை அமைத்தல், இரயில்வேத் துறையை நடத்துதல், பெரிய மருத்துவ மனைகள் கட்டுதல், ஆற்றின் குறுக்கே அணைகள் கட்டுதல், மின்சாரம் எடுத்தல், சுரங்கங்கள் தோண்டுதல் போன்றவைகளை நிறைவேற்றுகிறது. இத் திட்டங்களை நாட்டு மக்களின் நன்மைக்காக நிறைவேற்ற வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும்.

அரசாங்கத்தின் கடமை

பிற நாட்டுப் படையெடுப்பிலிருந்து நாட்டையும் மக்களையும் காக்கவேண்டியது அரசாங்கத்தின் தலையாய கடமையும் பொறுப்புமாகும். நாட்டையும் மக்களையும் காக்கத் தரைப்படை, கப்பற் படை, விமானப் படை இவைகளை அமைத்து நிர்வகித்து வரவேண்டும். துப்பாக்

கிகள், வெடி மருந்துகள், பீரங்கிகள், விமானங்கள், போர்க் கப்பல்கள், டாங்கிகள் இவைகளைச் செய்யத் தொழிற்சாலைகளை நடத்தவேண்டும். தனிப்பட்டவன் தன் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளப் பணம் செலவழிப்பதைப் போல நகரசபைகளும், அரசாங்கமும் மக்களின் மொத்தத் தேவைகளை நிறைவேற்றப் பணம் செலவழிக்க வேண்டியிருக்கின்றது. இப்பணமெல்லாம் மக்களிடமிருந்தே வரியாகவும், கடனாகவும் பெறப்படுகின்றது. அரசாங்கம் செய்யும் பணிகளுக்குப் பதிலாக மக்கள் வரியாகப் பணத்தைத் தருகிறார்கள்.

இப்போது தனிப்பட்டவர் பணத்திற்கும் பொதுப் பணத்திற்குமுள்ள வேறுபாட்டை அறிந்துகொள்ளலாம். தனிப்பட்ட பணம் தனிப்பட்ட மனிதனுக்கும் அவனது குடும்பத்துக்கும் சொந்தமாயிருக்கிறது. பொதுப்பணம் அரசாங்கத்துக்குச் சொந்தமாயிருக்கிறது. ஆனால் இப் பணமும் உழைக்கும் மக்களிடமிருந்துதான் கிடைக்கிறது. தனிப்பட்டவன் ஈட்டும் பணத்தின் பெரும் பகுதியைத் தனக்கும் தன் குடும்பத்திற்கும் செலவு செய்கிறான். ஒரு சிறு பகுதியை அரசாங்கத்துக்கு வரியாகவோ கடனாகவோ அல்லது ஆயுள் பாதுகாப்புக் கழக மூலமாகவோ, சேமிப்பு மூலமாகவோ, வங்கிகள் மூலமாகவோ கொடுக்கிறான்.

ஐந்தாண்டுத் திட்டம்

நம் நாட்டின் அரசியலமைப்பு நம் குடி மக்களுக்குச் சில உரிமைகளை அளித்திருக்கிறது. போதுமான வாழ்க்கை வசதிகளை ஒவ்வொருவருக்கும் அளிக்க விரும்புகிறது. மனிதனின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தப் பாடுபடுகிறது. முதல் ஐந்தாண்டுத் திட்டம் இப்படிப்பட்ட அரும்பெருஞ் செயல்களை ஆயிரத்துத் தொள்ளாயிரத்து அறுபத்தொன்றாம் ஆண்டுவரை நிறைவேற்றியது. வெற்றிகரமான இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களை முடித்துவிட்டு இப்போது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தையும் முடித்துவிட்டோம்.

ஐந்தாண்டுத் திட்டங்கள் ஏன் அவசியம்?

தனிப்பட்ட ஒரு மனிதனோ, குடும்பமோ தனது வரவு செலவுபற்றித் திட்டமிடும்போது பெரிய அமைப்பான அரசாங்கமும் தனது திட்டத்தை முடிவு செய்திருக்கும். எதை முதலில் நிறைவேற்றுவது? எதற்கு முக்கியத்துவம் கொடுப்பது? என்பவைகளைத் திட்டமிட்டு வைத்திருக்கும். ஒரு நாடு தன் திட்டங்களை நிறைவேற்றுகிறதென்றால் தன் இலட்சியங்களை நிறைவேற்றுவதென்பதாகும். இந்திய நாட்டுக்கு உயிர்நாடி உழவுத் தொழிலாகும். ஆகையால் உழவர்களும் உழவுத்தொழிலும் வளர முதலிடம் எல்லாத் திட்டங்களிலும் அளிக்கப்பட்டுள்ளது. அடுத்துத் தொழிற்சாலைகள், கல்வி, சுகாதாரம் இவைகளுக்குச் சிறப்பிடம் அளிக்கப்பட்டுள்ளது.

உழவர்களை வாழவைக்கும் பொருட்டுக் கிராமங்கள் அனைத்திற்கும் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. வேளாண்மையை வளர்க்கும் பொருட்டு ஆறுகளின் குறுக்கே பல அணைக்கட்டுகள் கட்டப்பட்டுள்ளன. நமது நாடு தன் சுயதேவையை நிறைவேற்றிக் கொள்வதற்காகத் தொழிற்சாலைகள் பல தொடங்கப்பட்டுள்ளன. வேண்டிய இரும்பு கிடைக்கப் பெறுவதால் தேவையான எந்திரங்கள் அனைத்தையும் நம்மால் செய்துகொள்ள முடிகிறது. ஆகையால் இந்தியா இப்போது தனக்குத் தேவையான இரயில் இஞ்சின், இரயில் பெட்டி, எந்திரங்கள், போர்க் கருவிகள் அனைத்தையும் தனது தொழிற்சாலைகளிலிருந்து பெற்றுக் கொள்ளமுடிகிறது. கிராமத்தில் கட்டப்படும் பள்ளிகளும் மருத்துவ மனைகளும் மக்களின் அறியாமையையும் நோயையும் போக்குகின்றன. இம் முன்னேற்றத்திற்குக் காரணம் நமது விடுதலையே ஆகும். விடுதலைக்குப் பின் வகுத்த ஐந்தாண்டுத் திட்டங்களே ஆகும்.

ஏராளமான பொருட் செலவில் இத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்ற 3360 கோடி ரூபாயும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்ற 6750 கோடி ரூபாயும் செலவாகியுள்ளது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்ற 11,600 கோடி ரூபாய் செலவு செய்யத் திட்டமிடப்பட்டது.

இப்பெரிய திட்டங்களை நிறைவேற்ற அரசாங்கத் திற்கு எங்கிருந்து பணம் கிடைக்கும்? மக்களிடமிருந்து வாங்கும் வரிப்பணமும் அயல் நாடுகளிலிருந்து வாங்கும் கடனும், சிறிய பெரிய சேமிப்புத் தொகையும் அர சாங்கம் தன் திட்டங்களை நிறைவேற்றப் பயன்படுகின் றன. இருபத்தைந்து காசுகள் கூட அரசாங்கத்தின் திட்டத்துக்குப் பேருதவியாக இருக்கும். முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தை வெற்றிகரமாக முடிக்கச் செலவு செய்த மொத்தத் தொகையில் பதினொரு சத வீதம் சிறிய சேமிப்புத் தொகை மூலம் கிடைத்த பண மாகும். சிறிய சேமிப்புக் கூட நாட்டின் வளமான பெரிய திட்டத்திற்கும் எதிர்கால வாழ்விற்கும் துணையாக இருக்கிறது என்பது தெள்ளெனப் புரிகிறது.

பணத்தைச் சிக்கனமாகச் செலவு செய்வதால் எதிர் காலத்தில் எப்படி நன்மை விளைகிறது என்பதை இது வரையில் பார்த்தோம். மேலும் இந்தியாவின் செல்வ நிலையையும் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்த, பணம் மிகவும் அவசியமென்பதையும் அறிந்தோம்.

சேமித்து வைத்த பணம் நம்மிடமே இருந்தால் அதற்கு எவ்வித மதிப்பும் இல்லை. மேலும் பணம் நம் மிடம் இருந்தால் அவசியமில்லாத தேவைகளுக்காகச் செலவு செய்ய மனம் தூண்டப்படும். ஆகையால் நம்மிட முள்ள பணத்தை அஞ்சல் நிலையத்திலுள்ள சேமிப்பு நிதியில் சேமித்து வைக்கலாம். அல்லது அப்பணத்திற்குச் சேமிப்புப் பத்திரங்கள், சேமிப்பு அஞ்சல் தலைகள் வாங் கலாம். பணம் அரசாங்கத்திடமிருக்கும்போது பாதுகாப் பாக இருக்கிறது. அரசாங்கம் நாம் போட்ட பணத் திற்கும் ஓரளவு வட்டி கொடுப்பதால் ஆண்டுக்காண்டு பணம் வளர்ந்து வருகிறது. மேலும் இப்பணத்தைக் கொண்டு நாட்டின் வளர்ச்சிக்கான செயல்கள் நடை பெறுகின்றன. இப்பணம் நாட்டின் பாதுகாப்பை வலுப் படுத்துகிறது.

மக்களின் பணத்தைப் பாதுகாக்கவும் அதனை வளர்ச்சியடையச் செய்யவும் அரசாங்கம் பின்வரும் சேமிப்புத் திட்டங்களை வகுத்துள்ளது.

(1) பன்னிரண்டு ஆண்டுத் தேசிய சேமிப்புப் பத்திரங்கள் :

இந்தப் பத்திரங்கள் எல்லா அஞ்சல் நிலையங்களிலும் விற்கப்படுகின்றன. இந்தப் பத்திரங்கள் ஐந்து ரூபாயில் துவங்குகின்றன. இதில் முதலீடு செய்யும் பணத்திற்கு நூற்றுக்கு ஆறேகால் ரூபாய் தனிவட்டியும் நூற்றுக்கு நாலே முக்கால் ரூபாய் கூட்டு வட்டியும் கிடைக்கும். பத்து ரூபாய் இதில் முதலீடு செய்தல் பன்னிரண்டு ஆண்டுகள் கழித்துப் பதினேழரை ரூபாய் பெறலாம். பதினெட்டு வயதிற்குக் குறைவாக உள்ள சிறுவர்கள் இத்திட்டத்தில் முதலீடு செய்தால் எதிர்காலத்தில் நன்மையுண்டு.

(2) சேமிப்பு அஞ்சல் தலைகள் :

இது சிறுவர்க்கான ஒரு திட்டம். இதில் சிறுவர் தங்களுக்குக் கிடைக்கும் செலவுப் பணத்தைச் சேமித்து வைக்கலாம். இருபத்தைந்து காசு, ஐம்பது காசு, ஒரு ரூபாய் மதிப்புள்ள அஞ்சல் தலைகள் எல்லா அஞ்சல் நிலையங்களிலும் விற்கப்படுகின்றன. இந்தத் தலைகளைக் கவர்ச்சியான சேமிப்பு அட்டைகளில் ஒட்டிக் கொள்ளலாம். இந்த அழகிய சேமிப்பு அட்டைகளை இலவசமாக அஞ்சல் நிலையங்களிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். இப்படி வாங்கக்கூடிய அஞ்சல் தலைகளின் மதிப்பு ஐந்து அல்லது பத்து ரூபாய்க்கு வந்துவிட்டால் 'தேசியப் பாதுகாப்புப் பத்திரம்' அல்லது 'பிரிமியம் பரிசுப் பத்திரம்' இவைகளுக்கு மாற்றிக் கொள்ளலாம். அல்லது அஞ்சல் நிலையத்திலுள்ள சேமிப்பு நிதியில் கணக்கு வைத்துக் கொள்ளலாம்.

(3) அன்பளிப்புப் பத்திரங்கள் : (Gift Coupon)

திருமணம், பிறந்த நாள் போன்ற திருநாட்களில் பரிசாக இந்த அன்பளிப்புப் பத்திரங்களை வழங்கலாம். ஐந்து ரூபாய் பத்து ரூபாய் மதிப்புள்ள 'அன்பளிப்புப் பத்திரங்கள்' அஞ்சல் நிலையங்களில் விற்கப்படுகின்றன. பரிசளிக்கத் தகுதியான அழகான உறைகளுடன் இப்பத்திரங்கள் விற்கப்படுகின்றன. இதிலுள்ள முதலீட்டுத் தொகையைப் பன்னிரண்டாண்டு தேசியப் பாதுகாப்புப் பத்திரங்களுக்கும் மாற்றிக் கொள்ளலாம்.

(4) நீண்டகாலச் சேமிப்புத் திட்டம் :

இது ஒவ்வொரு மாதமும் ஐந்து ரூபாய் அல்லது பத்து ரூபாய் அல்லது பதினைந்து ரூபாய் வீதம் சேமித்து வைக்க உதவும் திட்டம். மாதம் ஐந்து ரூபாய் வீதம் ஐந்து ஆண்டிற்குச் சேமித்தால் முந்நூற்று இருபத்தைத்து ரூபாய் கிடைக்கும். இதில் இருபத்தைந்து ரூபாய் நமக்குக் கிடைக்கும் வட்டியாகும். இப்பணத்தைக் கொண்டு ஒரு நல்ல சைக்கிளையோ அல்லது நமக்கு வேண்டிய பொருளையோ வாங்கிக் கொள்ளலாம். சேமிப்பு நிதி உள்ள அஞ்சல் நிலையங்களில் பருவ வயது வராத சிறுவர்கள்கூட இப்பணத்தைச் சேமித்து வைக்கலாம். தவணை முடிவதற்கு முன்பு கூடத் தேவைப் பட்டால் பாதித் தொகையைக் கடனாகப் பெற்றுக் கொள்ளலாம். வாங்கிய கடனைப் பின்பு கட்டிக்கொள்ளலாம்.

(5) அஞ்சல் அலுவலகச் சேமிப்பு வங்கி :

இளம் பெண்களும் பையன்களும் 'அஞ்சல் அலுவலகச் சேமிப்பு வங்கி'யில் கணக்கு வைத்துக் கொள்ளுதல் சிறந்ததாகும். இரண்டு ரூபாயில் கணக்கைத் தொடங்கலாம். குறைந்த அளவாக ஒரு ரூபாய் கூடக் கிடைத்த போதெல்லாம் நம் கணக்கில் கட்டிச் சேமிக்கலாம். ஓர் ஆண்டில் ஐந்து ரூபாய்க்குக் குறையாமல் நம் கணக்கில் சேமிப்புத் தொகை இருக்க வேண்டும். ஒரு ரூபாய்க்கும் குறைவாகப் பணம் கிடைத்தால் சேமிப்புத் தலைகள் வாங்கி ஒரு ரூபாய் மதிப்புத் தலைகள் சேர்ந்தவுடன் அஞ்சல் நிலையத்தில் கொடுத்துக் கணக்கில் சேர்த்துக் கொள்ளலாம். போடும் பணத்தையும் எடுக்கும் பணத்தையும் கணக்கு வைத்துக் கொள்ள ஓர் அழகான 'பாஸ்' புத்தகத்தை இலவசமாக அஞ்சல் நிலையத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

மேற் கூறியவைகளில் ஒன்றிலோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட திட்டங்களிலோ கணக்குகள் வைத்துப் பணத்தைச் சேமிக்கலாம். கைச்செலவுக்காகப் பெறும் பணத்தைச் சேமிப்புத் தலைகள் வாங்கிச் சேமிக்கலாம். எவ்வளவு சேமித்தோம் என்பது பெருமைக்குரியதன்று. சிக்கனமான பழக்கத்தை மேற்கொள்ள வேண்டுமென்பதே சிறப்பாகும். முறையான சிக்கன வாழ்க்கை நமது எதிர்

காலத்தை வளமாக்குகிறது; நம் நாட்டின் முன்னேற்றத்திற்குப் பெரிதும் உறுதுணையாயிருக்கிறது.

அருஞ்சொற்பொருள்

இன்னல் உற - துன்பமடைய. ஈட்டுகிறோம் - சம்பாதிக்கிறோம். நெடுஞ்சாலை - அகன்ற நீண்ட தெரு. வேளாண்மை - பயிர்த்தொழில். அஞ்சல் - தபால். உறுதுணை - பொருந்திய உதவி.

கேள்விகள்

1. ஏழையும் பணம் சேமிக்க வேண்டும் எனப்படுவதேன்?
2. ஒரு குடும்பத்தின் மூன்று வகைத் தேவைகள் யாவை?
3. பொதுச் செலவினம் என்பது யாது?
4. உங்களூர்ப் பஞ்சாயத்து, அல்லது நகரசபையின் ஆண்டு வருமானம் என்ன?
5. அப்பணம் எவ்வாறு செலவிடப் படுகிறது? நகரசபையின் முக்கியத் தொண்டுகள் யாவை?
6. ஐந்தாண்டுத் திட்டங்களுக்கு செலவிடப்பட்ட பணம் எவ்வளவு?
7. ஐந்தாண்டுத் திட்டங்களின் கீழ் உங்கள் மாவட்டத்தில் ஏதாவது முன்னேற்ற வேலை நடந்ததா?
8. சேமிப்புத் திட்டங்களில் பணத்தைச் செலுத்துவது நாட்டு நன்மைக்கு உதவி செய்வதாகும் என்பதை விளக்குக.
9. சிறுவர்களுக்கான சேமிப்புத் திட்டங்கள் எவை?

பயிற்சி

1. சொற்றொடர்களில் அமைத்து எழுதுக:

   தேவை, நிறைவேற்ற, இயலாமல், வசதியாக, வரவுக்கு மிஞ்சி, நாளடைவில், இன்னொரு, முடியாமல், பெருகும், கவனத்துடன், அல்லாத.

2. எதிர்ச்சொற்கள் எழுதுக:

   குறைந்த, செலவு, அண்மை, சிக்கனம், சிறுவர்கள், இராது.

3. சேமிப்புத் திட்டங்கள் — இச்சொற்களின் புணர்ச்சியில் வல்லினம் மிகுந்திருப்பதற்குக் காரணம் யாது?

12. தங்கைக்கு ஒரு கடிதம்

(ப. செல்லமுத்து, B.Sc.)

தென்னவன் | காஷ்மீரம்
15—11—65

என்னரும் பொன்னி,

நின்னரும் மடல் பெற்றேன்; மகிழ்வுற்றேன். குறுநகை புரிந்து, 'செறுபகை முடிக்கச் சென்றுவா! வென்றுவா!!' என நெற்றித் திலகமிட்டு வெற்றி முழக்க மிட்டு நற்றமிழ் பாடிய நின் பொற்றிரு உருவம் என் நெஞ்சத்து நீங்காது நின்றுடுகின்றது. தீட்டிய வாளும் தினவெடுத்த தோளும் தமிழ்த்தாய் ஊட்டிய பாலும் உடனிருக்கும்போது நாட்டிய பகை முடிக்க நாட்களா ஆகும்? பொன்னி! நின் அண்ணன் மாற்றார் அஞ்சும் மறவனாக, பொன்னாடு காக்கப் புறப்பட்ட பெரும்படை யில் தன்னாவி முதலாவி என்றுரைத்து முன்னணிப் படையின் முதல்வனாக வெற்றி கொண்டு வருவான். கலங்காதே!

பொன்னி, வெற்றி நமதே! 'என்னண்ணா? கையிலே வாளும் மெய்யிலே தழும்புமாகக் களத்திலே போரிட்டுக் கொண்டிருக்கிறாய். வெற்றி நமதே என்று முடிவு செய்து விட்டாயே!' என வினவுகிறாயா? போர்வாளும் சீர் தோளும் மட்டும் நம் வெற்றிக்கு உறுதி சொல்லவில்லை. வாய்மையின் வாசலிலே வாளெடுக்கின்றோம்; தூய குறள்நெறி நின்று தீய பகை முறிக்கின்றோம்; வாய்மை நம் வாளுக்கு வலுவூட்டுகிறது; தூய்மை நம் தோளுக்குத் துணைவருகின்றது; அன்பு நமக்கு அரணமைக்கின்றது; பண்பு நமக்குப் பாதை யமைக்கின்றது. ஆகவே நமது வெற்றி மனித வெற்றி அல்ல; ஆசையின் வெற்றி அல்ல;

வாய்மையின் வெற்றி; வளமார் வண்டமிழ்க் கொள்கையின் வெற்றி ; வல்லவர் வெற்றி ; நல்லவர் வெற்றி ; ஆகவேதான், வெற்றி நமதே என்று உறுதியுடன் உரைக்கின்றேன்.

பொன்னி ! போர்க்களம் சோலையோ ? பாலையோ ? எனக் கேட்டிருந்தாய். நாம் தாங்கியிருக்கும் கொள்கை தான் சோலையாகவோ பாலையாகவோ நெஞ்சத்தில் கோலமுறுகிறது. கொண்ட கொள்கையும் நின்ற களமும் நமக்குத் துணைநின்று வாழ்த்துகின்றன. எழில்மிகு களத்தை அமிழ்தினுமினிய தமிழ்மொழியின் சொற்களால் வடித்தெடுக்கிறேன் தெரிந்து கொள்.

பொன்னழகு எழிற்காடு ! பூமணக்கும் மலர்க்காடு ! விண்ணழகு விழிமேடை ; மண்ணழகு பொன்மேடை ; மலையழகு கலைமேடை ; மதியழகு முகமேடை ; சிற்ருறு நடை பயிலும்; செவ்வாழை கொடை கொடுக்கும்; காற்ருடிக் கொடியணைக்கும்; வண்டாடிப் பண்ணிசைக்கும்; மலராடிக் கூத்தடிக்கும்; தென்றல் நடமாடும்; தேனருவி பதம் பாடும் ; புன்னை நிழல் விரிக்கும்; புதுப் புல் பாய் விரிக்கும்; தென்னை சிவந்திருக்கும்; மென்காந்தள் சிவந்திருக்கும்; கன்னல் விருந்தளிக்கும், காட்டிடைத் தேன் மருந்தளிக்கும் ; செந்நெல் தலை சாய்க்கும் ; செந்தமிழ் போல் செழித்திருக்கும்; அன்னம் நெளிந்தோடும் ; அந்தி வண்ணம் கலைந்தோடும்; சிட்டுகள் பதறியோடும்; சிற்ருேடை சிதறியோடும் ; மொட்டுக்கள் வாழ்த்துரைக்கும் ; முல்லை நகை காட்டும் ; கிள்ளை மொழியூட்டும் ; உள்ளம் மகிழ்வூட்ட அள்ளி மணமூட்டும். இன்னும் எண்ணம் கவரும் வண்ணக் காட்சிகள் எண்ணிலடங்கா!

என்னடா! போர்க்களம் எப்படியென்ருல் புலவனுகிப் புலம்புகிருனே! என எண்ணுகிருயா! பொன்னி! தமிழன் இயற்கையுடன் இணைந்து வாழ்பவன்; இயற்கையை இறைவனுகக் கொண்டவன்; ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்; திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும் என இயற்கையைத்தானே பாடியுள்ளோம். ஆகவே தமிழன் இயற்கையின் எழிலில் தன்னை மறந்து கவிஞனுவது விந்தையல்லவே!

பொன்னி, போர் நிகழ்ச்சிகள் பற்றி எழுதும்படி கூறியிருந்தாய். என்னெஞ்சத்தில் நின்றாடும் நிகழ்ச்சி யொன்றைக் கூறுகிறேன். முன்னைய மடலில் முதுகுளத் தூர் முத்துமாணிக்கம் பற்றி எழுதியிருந்தேன். அத் தேவர் மகனின் தமிழ்மொழி எங்கள் நெஞ்சத்திலே நெருப்பேற்றி நினைவிலே உரமூட்டுமென்றும், உயிர் அவனைப் பிரிந்தாலும் பரணி அவனைப் பிரியாது என்றும் எழுதியிருந்தது நின் நினைவினின்றும் நீங்கியிராதென எண்ணுகிறேன்.

அந்தக் கட்டிளங்காளை கோத்ரா—கசூர்ப் போர் முனையில் பன்னிருவரைத் தன் துப்பாக்கிக் குண்டுக்குப் பலியாக்கிவிட்டு மையிருளில் விடுதி நோக்கித் திரும்பிக் கொண்டிருந்தான். அப்போது நெஞ்சிலே வலுவற்ற ஒருவன் மறைந்து முத்துமாணிக்கத்தின் நெற்றியிலே சுட்டு விட்டான். காளை கலங்கவில்லை. கொட்டும் குருதி யைத் துடைத்து விட்டு மறைந்திருந்து தாக்கியவனின் உடலைத் தன் துப்பாக்கியால் சல்லடைக் கண்களாகத் துளைத்து விட்டுக் களைப்பால் சாய்ந்து விட்டான். மூன்று நாட்கள் தொடர்ந்து போர்க்களத்திலே விளையாடியதால் சரியான உணவும் முறையான தூக்கமுமின்றி களைத் திருந்தான். மேலும் பகைவன் தாக்கியதால் நெற்றியி லிருந்து குருதி கொட்டியபடி இருந்தது. அப்படியே களைத்துப் படுத்து விட்டான். பையிலிருந்த ரொட்டி யையும் வெண்ணெயையும்கூட எடுத்து உண்ண இயலாத நிலையிலிருந்தான்.

அந்நிலையில் நம் வீரனொருவன் காலிலே குண்டடி பட்டு அவனருகில் வீழ்ந்து கிடந்தான். முத்துமாணிக் கத்தைக் கண்ட அவ்வீரன் நடக்க இயலாது நகர்ந்து அவனருகில் வந்தான். மயங்கிய நிலையிலிருந்த முத்து மாணிக்கத்தின்மீது தலைவைத்துப் படுத்துக் கொண்டு காயத்திற்கு மருந்திட்டான். தனக்கு இனி வாழ்வு இல்லை என்பதையறிந்த முத்துமாணிக்கம் இறக்கும் நிலையில் தன் நண்பனுக்காவது துணையாக இருக்கிறோமே என்ற நினைப்பில் மகிழ்ந்தான். காலில் அடிபட்ட அவ்வீரன், "களைப்பாக இருக்கிறது உண்ண ஏதாவது வைத்திருக் கிறாயா?" என முத்துமாணிக்கத்தைக் கேட்டான். "இன்னும் சிறிது நேரத்தில் இறக்கப் போகும் எனக்கெ

தற்கு உணவு. என் நண்பன் உண்டு களைப்பாறினுல் பகைவர் பலரை அழிப்பான்'' என எண்ணித் தன் பையைச் சுட்டிக் காண்பித்தான். அடிபட்ட வீரனும் உண்டு களைப்பாறினுன். அப்படியே முத்துமாணிக்கத்தின் மீது தலை வைக்க, உறக்கம் என்னும் காவலன் இமைக் கதவுகளை மூட, அவ்வீரனும் கண்ணயர்ந்தான்.

கதிரவன் எழுப்பிட குவலயமே கண் விழித்தது. ஆனுல் முத்துமாணிக்கம் மீளாத உறக்கத்தில் ஆழ்ந்திருந் தான். பின்பு என்ன? அவ்வீரன் உடலினை வரப்போகும் வெற்றிக்குப் படியாக அமைத்து முன்னேறினேும். பொன்னி! அவன் இறந்தும் அவனுடலைப் பரணி பிரியவில்லை. வீரம் விளையும் அந்தத் தீரர் திருநாட்டின் மறவர் பெரும்படையின் மாண்புக்கு இணை இம் மண்ணுலகில் உண்டோ? இன்னும் கூறுகிறேன் களச் சேதி.

மற்றொரு வீரன் ஆறு 'பாட்டன் டாங்கு'களை உடைத்து அரும்பணியாற்றி அமரனுனன். பிறிதொரு வன், பகைவரிடமிருந்த 'ராடாரைத்' தன்னுயிரைத் தந்து தகர்த்தெறிந்து நம் 'செட் விமானங்களுக்கு' விண்ணில் வழியமைத்துக் கொடுத்தான். இதுபோல் எத்துணையோ செய்திகள். அனைத்தையும் எழுதுவது இப்போதுஇயலாது.

வெற்றி என்பது விலை கொடுத்து வாங்குவது அல்ல; தலை கொடுத்துப் பெறுவது. தன்னலமற்றவரின் தியா கமே வெற்றியை அணைக்க இயலும். தியாகம் என்பதும் குளிர்ப் புனல் அல்ல; கொழுந்துவிட்டெரியும் நெருப்பு. ஆகவே பல உயிர்களைப் பலியிட்டுத்தான் வெற்றியை அடைய முடியும், இது அற உலகில் அல்ல பொன்னி. மற உலகில். ஆசை நெஞ்சம் கொண்டவர் வாழும் தீய உலகில்தான் இம் முறையில் வெற்றியைப் பெறவேண்டி யிருக்கும். வள்ளுவரும் வள்ளலாரும், காந்தியும் இயேசு வும் காட்டிய அன்புலகில் மறத்தின் சுவடே தெரியாது. ஆனுல் பேராசை கொண்டவர் பின்பற்றும் வழி மற வழியாயிருக்கிறது. ஆக, இங்கு வாளுக்குத்தான் வேலையே தவிர அன்புக்கோ அறவழிக்கோ இடமில்லை. ஆசை என்பது அழிவின் பள்ளத்தில் பிறப்பதாகும்,

அந்த அழிவுப் பள்ளத்திலிருந்து அடாது செய்பவர் படாது பட்டு அழிவது உறுதி. அவர்களின் முடிவு நெடுந் தொலைவில் இல்லை. 'யாதும் ஊரே! யாவரும் கேளிர்' என்ற பழந்தமிழன் கொள்கை உலகில் பரவும் வரை அன்புக்கு இடமில்லை. அறத்திற்கு வாழ்வில்லை.

பொன்னி, புகழையும் பொருளையும் மனிதன் விரும்பக்கூடாது; மதிக்கவும் கூடாது. அப்போது இவ்விரண்டும் மனிதனிடம் மண்டியிட்டுக் கிடக்கும். அவைகளைத் தேடிச் சென்றால் நம்மை விட்டு விலகிக்கொண்டே செல்லும். புகழுடம்பைப் பெற மனிதன் உயிரைப் பெரிதாய் எண்ணக் கூடாது. வாழ்க்கை என்பது பிறப்பு இறப்பு இவைகள் இட்டு வைத்த பாலமாகும். ஆகையினால், பிறந்த அன்றே இறப்பும் உறுதி. ஆனால், சாவு இயற்கையில் நிகழவேண்டும். மாறாக இடையிலே நேர்ந்தால் கொண்ட கொள்கைக்காகவும், தாயகத்து விடுதலைக்காகவும், தாய்மொழி வளர்ச்சிக்காகவும் பயன் படவேண்டும். 'ஆறிலும் சாவு; நூறிலும் சாவு' என்பது பழமொழி. போகின்ற உயிரென்றும் புகழ் மணக்கப் போகட்டும்; வேகின்ற உடலென்றும் வீரத்தில் வேகட்டும் என்பதே நமது கொள்கை. அக்கொள்கைக்கு நமது உடல் பொருள் ஆவி மூன்றினையும் பிறந்த அன்றே தாயகத்துக்குக் காணிக்கையாகத் தந்துவிட்டோம்.

பொன்னி! என் பிரிவு அன்னையின் உள்ளத்தை வருத்தும் என்பது தெரியும். அந்தப் புறநானூற்றுத் தாயினுள்ளத்தை ஆற்றித் தேற்றி அமைதிப்படுத்து. வெற்றி வீரனாக ஊர் வருவேன். இன்றேல் இறந்த சேதி வரும். அது கேட்டு வீரனின் தங்கையாகிய நீ வருந்த மாட்டாய் என்பது தெரியும். பொன்னியின் அண்ணன் பொன்னாடு காக்கப் பூதவுடம்பைக் கொடுத்துப் புகழுடம்பைப் பெற்றான் எனப் பாருன்னைப் போற்றும். வரலாறு உன்னை வாழ்த்தும். எனக்கு இந்நாட்டில் வாழ்வில்லையெனினும் பொன்னேட்டில் அழியாத வாழ்வுண்டு. பொன்னி!

தானைத் தலைவன் ஆணை யெழுப்பிவிட்டான். முரசொலிக் கிறது. படைகள் வரிசை வருகின்றன. விரைகிறேன் களம் நோக்கி. வரைகிறேன் பிறிதொரு மடல்.

வெற்றி நமதே!

ப. செ. பொன்னி, அன்புள்ள
4, சோலையப்ப முதலி தெரு, அண்ணன்
மயிலை, சென்னை—4. **தென்னவன்**

அருஞ்சொற்பொருள்

செறு பகை - மிகுந்த பகை. மடல் - கடிதம். தினவு - அரிப்பு. எழில் - அழகு. தானைத் தலைவன் - படைத் தலைவன். பிறிதொரு - மற்றொரு. பார் - உலகம் ஆணை - கட்டளை. கேளிர் - உறவினர்.

கேள்விகள்

1. தென்னவன் 'வெற்றி நமதே' என்று முடிவு செய்ததற்குக் கூறும் காரணம் யாது ?
2. தென்னவன் போர்க்களம் சூழவுள்ள இயற்கைக் காட்சியை எவ்வாறு வருணித்துள்ளான் ?
3. கோத்ரா—சுசூர் போர் முனையில் நடந்த நிகழ்ச்சி யாது ?
4. களத்தில் வீரர்கள் ஆற்றிய வீரச்செயல்கள் யாவை ?
5. வெற்றியை எப்படி அடையமுடியும் ?
6. எதுவரை அன்புக்கு இடமில்லை ? அறத்திற்கு வாழ்வில்லை ?

பயிற்சி

1. சொற்றொடரில் அமைக்க :
மடல், குறுநகை, தூய்மை, சிற்றோடை, எண்ணிலடங்கா, கட்டிளங்காளை, குருதி, வாழ்வு.
2. எதிர்ச்சொற்கள் எழுதுக:
அழியாத, புகழ், பெரிதாய், அறிவுலகம், வெற்றி, உறக்கம்.
3. உன் ஊர் இயற்கைக் காட்சியை விளக்கி உன் நண்பனுக்கு ஒரு கடிதம் எழுது.
4. ஈறுகெட்டு ஈற்றயல் நீண்ட விளிவேற்றுமைக்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.

13. பழைமையும் புதுமையும்

(புலவர் C. T. சிவகாமி அவர்கள்)

[பேராசிரியர் வெற்றிவேலர் தலைமையில் குமரகுருபர உயர்நிலைப் பள்ளி மாணவர் கழகச் சார்பில், சொற்போர் கூட்டம் ஒன்று நடைபெறுகிறது. மாணவன் பொன்னிவளவன் புதுமையே சிறந்தது எனப் பேசுகிறான். மாணவன் அறிவுடை நம்பி பழைமையே போற்றத் தக்கது என்கிறான்.]

பொன்னிவளவன்

பேரன்பு மிக்க பேராசிரியர் அவர்களே! ஆசிரியப் பெரியோர்களே! அருமை நண்பர்களே! உங்கள் அனைவருக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

நாமும் நம் நாடும் முன்னேற வேண்டுமானால், புதுமைப் பாதையில் நாம் நடக்க வேண்டும். இன்றைய உலகை, விஞ்ஞானக் கருவிகளும் அவற்றைப் பயன்படுத்தும் முறைகளும் பழைமையிலிருந்து மாறுபடுத்தியுள்ளன. உலகத் தொடர்பு கொள்ளற்குப் பேருதவி புரிந்துள்ளன. இந்த நிலையில் நாம் உலகத்தோடு ஒட்ட ஒழுகலே முறை. இதனைச் செய்யாமல் பழமையைப் பின்பற்றினால் பனைத்துணை பேரறிவு படைத்திருந்தாலும் நாம் தினைத்துணை அறிவுமற்றவராகவே கருதப்படுவோம். "உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும் கல்லார் அறிவிலாதார்'' என்று விளக்குகிறார் வள்ளுவர்.

பழைமையே பண்புடையது என்று எண்ணிக் கொண்டிருப்போர், கல்வி நிலையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை உணரவேண்டும். அக்கால மாணவன் சீடனாகக் கருதப்பட்டான்; ஆசிரியர் குருவாகக் கருதப்பட்டார். அக்கால மாணவன் மரத்தடியில் அமர்ந்து மண்ணின்மேல் எழுதப் பழகினான்; சில காலம் சென்ற

தும், எழுத்தாணியைக் கொண்டு, கை நோவும்படியாக ஓலைகளில் தான் கற்ற கலையை வரைந்தான்; போதாக் குறைக்குத் தான் கற்றதை மறக்காமல் இருக்க மனப் பாடமும் செய்தான். குருவுக்கு வேலைக்காரனைப் போல இருந்து பணியாற்றினன். அவனுடைய தலைவிதி இப்படி யெல்லாம் தொல்லைப்பட வேண்டுமென்று இருந்தது.

இந்நாளில் விஞ்ஞானம் வளர்ச்சி பெற்று, கலைகளைப் பயிலுவோனின் தலைவிதியை மாற்றி அமைக்க வழிகள் ஏற்பட்டன. அச்சுப் பொறி வந்தது. காகிதம் செய்யும் முறை கண்டுபிடிக்கப் பட்டது. எழுத்தாணியை ஒழிக்க, புதிய எழுதுகோல்கள் கண்டுபிடிக்கப்பட்டன. மண் தரையில் கலை பல கற்ற வாழ்வு, மாளிகை போன்ற இடங் களுக்கு மாற்றப்பட்டது. மனப்பாடம் செய்யும் மதி கெட்ட வேலை ஒழிந்தது. குருவுக்கு வேலைக்காரனாய் இருந்த சீடன் ஆசிரியருக்கு அருந்துணை நண்பனானன். பிற மொழி கற்கும் பெருவாய்ப்பும் ஏற்பட்டது.

விரையும் வாகனங்கள் நிலத்திலும் நீரிலும் நீல வானத்திலும் ஏற்பட்டன. கருவிகளும் அவற்றைப் பயன்படுத்தும் முறைகளும் மாறிவிட்டன. இவ்வளவும் இன்று நாம் பெற்றுள்ள பெரும் பயன்கள். இந்தப் பயன் களையெல்லாம் அனுபவிப்பவன் பழைமையைக் கனவிலும் நினையான்.

அரசியல் முறைகளிலும் நிறைய மாறுபாடுகள் ஏற்பட்டுள்ளன. அரசன் ஒரு மனிதன். அவனல் ஆளப் படும் மக்களும் மனிதர்களே. மனிதனை மனிதன் ஆளுவதா? இது மனிதனுக்கு மனிதன் அடிமைப்படு வதைக் காட்டுகிறதல்லவா? மனிதராய்ப் பிறந்த ஒவ் வொருவரும் பகுத்தறிவுடையவராவர். அவ்வாறு இருக்கையில் அரசனது ஆட்சிக்கு மக்கள் அடங்கியிருப்பது மனிதனது பகுத்தறிவைச் சிற்றறிவு உள்ள ஒரு செயலுக்கு அடிமைப்படுத்தியதற்கு ஒப்பாகும்.

இந்த அடிமை முறை அகல—பகுத்தறிவே தன்னை ஆண்டுகொள்ள—மக்களே மன்னவர்கள் என்ற நிலை ஏற்படவேண்டும். அந்த நிலையைப் பெற்றிருக்கிறோம் நாம். ஆம்! நாம் பெற்றுள்ள இந்த நிலைக்குக் குடியாட்சி என்பது பெயர், "தன் கையே தனக்கு உதவி," என்ற முறை குடியாட்சியில் உண்டு. ஆனல், முடியாட்சியில்

"மன்னன் சுகமே மக்கள் சுகம்" என்ற முறை இருந்தது. இந்த நிலையைக் கொண்டுள்ள பழைமை தேவையா?

இன்றுள்ள ஓர் இளைஞனின் உருவத்தைப் பாருங்கள். அவனுடைய தலையிலே பேன் பிடிக்கும் நீள் சடையில்லை; குடுமியில்லை; எழிலாக வெட்டி எடுக்கப்பட்ட குழல் உண்டு. அரையிலே பாவாடை உடுத்துவது போன்ற துணி இல்லை; மனித உருவத்தின் அழகை எடுத்துக் காட்டும் காற்சட்டைகள் உண்டு. பழைமை என்ற பெயரால் அப்பழங்கால முறைகளை ஏற்க முடியுமா? முடியாது! முடியாது!! முன்னேற்றத்தைக் கெடுக்கும் பழைமையால் பலன் பெறவே முடியாது. ஆகவே, சற்றுச் சிந்தித்துப் பார்த்தால் இன்றைய புதுமையே மேலாகப் படுகிறது. இதுவே சிறந்தது. எல்லாரும் இதனையே கடைப்பிடிக்க வேண்டுமாறு வேண்டிக்கொண்டு என்னுடைய சொற்பொழிவை முடித்துக் கொள்ளுகிறேன்.

அறிவுடை நம்பி

அன்பு கெழுமிய பேராசிரியர் அவர்களே! ஆசிரியப் பெருமக்களே, பண்பில் சிறந்த பைந்தமிழ் நண்பர்களே! எல்லாருக்கும் எனது வணக்கம் உரித்தாகுக.

விஞ்ஞானம் வளர்ச்சி பெற்றது உண்மைதான். அந்த வளர்ச்சியிலே நாம் புதுமை என்று சொல்லிக்கொண்டு இன்றைய நாகரிகத்தைப் பின்பற்றினல், அது நம்மைக் குழியில் தள்ளும். இன்றைய புதுமையே சிறந்தது என்று சொல்லுவது பெருந்தவறு. பழமை மோசமானது என்று சொல்வது அதனினும் தவறு. பழமையும்,பழைய நாகரிகமும் தேவையற்றவை என்று எதையும் ஆராயாமல் பேசுவது எல்லாவற்றிலும் பெருந்தவறு.

தமிழ் மொழி எந்தக் காலத்தில் தோன்றிற்று என்று சொல்ல இயலாது; அவ்வளவு பழமை வாய்ந்தது. அத்தகைய தமிழ் மொழி பழமையானது என்பதற்காக நாம் பேசாமல் விட்டுவிடுவோமா? விடோம். அவ்வாறே ஒவ்வொரு பழைய செயலையும் விட இயலாது.

எழுத்தாணியும் ஓலையும் கொண்டு எழிலறிவு வளரப் பழந்தமிழ் கற்ற கல்வி முறை போற்றற்குரியது. அந்த எழுத்தாணியும் ஓலைகளுமே நமக்குத் திருக்குறளைத் தந்

துள்ளன; சிலம்பையும், மணிமேகலையையும் தந்துள்ளன; இன்னும் சொல்ல இயலாச் செந்தமிழ் நூல்களை—சங்க இலக்கியங்களை—நமக்கு நல்கியுள்ளன. எழுத்தாணியும் ஓலையும் செய்த சாதனைகளைப் பேனாவும் காகிதமும் சாதித்திருக்கின்றனவா?

குருவுக்குப் பணி புரிதல் வேலைக்காரத் தொழில் என்பது முறையான கருத்தன்று. "எண்ணெழுத் திகழேல்" என்று அறிவுரை இருக்கும்போது அவற்றைக் கற்றுக்கொடுத்தவரை மட்டும் இகழ்தல் நன்றன்று. "எழுத்தறிவித்தவன் இறைவனாகும்" என்று கூறப்பட்டிருப்பதை நாம் என்றும் மறந்துவிட முடியாது; மறக்கக் கூடாது; இக்காலத்தில் ஆசிரியரிடம் மாணவர் ஒழுங்காக நடந்து கொள்வதில்லை. குருவிடம் சீடன் காட்டும் பத்தி அற்றுவிட்டது. ஆசிரியர் என்ற அச்சம் சற்றும் உள்ளத்தில் கொள்வதில்லை. இந்த நிலை ஒழிய வேண்டும். புதுமை என்ற பெயரால் பெருமை மிக்க பழமையினை ஒழித்து விடுதல் நன்றோ?

உலக அரசியலில் பெரும் புரட்சிக்குக் காரணமாயிருந்தவர்கள் சர்வாதிகாரிகளே! ஆனால், நம் தமிழகத்து மக்கள் முடிசூடிய தமிழ் மன்னரை எதிர்த்துப் பெரும் புரட்சி செய்திலர். நண்பர் கூறுவதைப்போன்று 'மன்னன் சுகமே மக்கள் சுகம்' என்று நம் நாட்டு மன்னன் எண்ணி எந்த நாளும் இறுமாப்புக் கொண்டதில்லை; தன்னாலும், தன் படைகளாலும், கள்ளராலும், கொடிய விலங்குகளாலும், பகைவர்களாலும் ஏற்படும் ஐவகை அச்சங்களையும் அகற்றி மக்களைக் காப்பாற்றினான் தமிழ் அரசன். இந்தக் காக்கும் பொறுப்பு மன்னனுக்கு ஏற்பட்டதால் மன்னன் 'காவலன்' எனப்பட்டான். மக்களைக் காக்கும் மன்னனது கடமையில் மாசுபடாமல் இருக்க, மன்னனை அணுகி அவனுக்கு அடிக்கடி அறிவுரை வழங்கினார்கள் அருந்தமிழ்ப் புலவர்கள். இந்த நிலையில் மன்னனுக்கு மக்கள் அடிமை என்பது எப்படி ஆக முடியும்? அதனால் பண்டைத் தமிழரசே சிறந்தது. அந்த அரசு நம்மிடையே இல்லையே என்று நான் மிகவும் வருந்துகிறேன். இருந்திருந்தால் அன்று தமிழைக் காத்து வளர்த்தது போலவே இன்றும் காத்திருப்பார்கள்; வளர்த்திருப்பார்கள்; இன்று தமிழர் வாழ்வில் காணப்படும் குறைகளை உடனுக்குடன் நீக்க முயன்றிருப்பார்கள்.

புதுமை என்ற பெயரால் முழுக்க முழுக்க மேல் நாட்டின் பழக்க வழக்கங்களையே தழுவிப் பேசியிருக்கிறார் நண்பர். விஞ்ஞானத்தால் உலகத் தொடர்பு ஏற்பட்டுள்ளது என்று கூறுவது பெருந்தவறு. பழங்காலத்தில் மூவேந்தரும் நடத்திய கடல் வாணிகத்தால் தொடர்பு ஏற்படவில்லையா?

மேல் நாட்டில் அணியும் காற்சட்டையும், மேற் சட்டையும் நமக்குத் தேவையற்றவை. மேல் நாட்டினர் குளிர் தாங்க இயலாமல் இவற்றை உடுத்துகின்றனர். அந் நாட்டைவிட நம் நாட்டில் வெப்பம் மிகுதி; எனவே, உடையில் இந்நாகரிகம் தேவையில்லை என்பதை உணர வேண்டும்.

பண்டைத் தமிழர், போர் தொடங்குமுன் பெண்களுக்கும், வலிமையற்றவர்க்கும், பிணியுள்ளவர்க்கும் முன்னறிவிப்புத் தந்து அவர்களை வேறிடம் செல்லச் செய்வர். ஆனால் இன்று அப்படியன்று. முதல் இரண்டு உலகப் போரில், போரின் கொடுமைக்கு உட்பட்ட நாடுகளில் எத்தனை பெண்கள் கொல்லப்பட்டிருப்பர்! எத்தனை அறிஞர்கள் அழிக்கப்பட்டிருப்பர்! ஏதுமறியாக் குழந்தைகள் எத்தனை கொல்லப்பட்டிருக்கும்! நீர் வாயுக் குண்டும், அணுகுண்டும், விஞ்ஞான வளர்ச்சியின் பயனே. அழிவுக்குப் பயன்படும் அவற்றை வைத்துக்கொண்டு வல்லரசுகள் மக்களை அழிக்க எண்ணியுள்ளன. அதற்குக் காரணமான விஞ்ஞானத்தின் வளர்ச்சி நாகரிகமா? விஞ்ஞானம் தந்த இன்றைய நாகரிகம் இந்த நாட்டில் இருக்கவும் வேண்டுமா? வேண்டா! வேண்டா! நாம் பழமையையே பின்பற்றுவோம்! திருக்குறளையும், சிலம்பையும், மணிமேகலையையும், எவர்க்கும் அடிமைப்படா வீரப் பெருவாழ்வையும், அடுத்தவன் பசித்திருக்கத் தான் மட்டும் உண்டு கொழுக்க எண்ணுதிருந்த எழில் வாழ்வையும் தந்த பழைய நாகரிகத்தையே பின்பற்றுவோம் என்று கூறிக் கொண்டு எனது சொற்பொழிவை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்

தலைவர்

அருமை மாணவ மணிகளே, நீங்கள் இதுவரை சொல்விருந்து கேட்டுச் சிந்தை மகிழ்ந்தீர்கள். காவலரும்

பாவலரும் சிறந்த நாவலராய் இருந்தனர் அன்றைய தமிழகத்தில். அந்த நாவன்மையை இன்றும் கொண்டுள்ளனர் நம் தமிழர் என்பதற்கு இந்தச் சொற்பொழிவு ஒரு நல்ல எடுத்துக்காட்டாகும்.

மாணவர்கள் நன்றாகவே பேசினார்கள். புதுமை பற்றிப் பேசிய மாணவர், தம் கருத்தை நிலைநிறுத்த இன்றைய நாகரிகத்தின் எல்லையையே கடந்து விட்டார். அதைப் போன்றே பழமைபற்றிப் பேசியவர், ஒரேயடியாகப் பழமையிலேயே மூழ்க வேண்டுமென மொழிந்துள்ளார். இவ்விரண்டு நிலையும் விரும்பத்தக்கனவன்று.

சமூக வளர்ச்சியில் பல மாறுபாடுகள் தோன்றத்தான் செய்யும். சமூக வளர்ச்சியோடு நாமும் அறிவு வளர்ச்சி பெறுவதே முறை அப்போதுதான் உலகத்தோடு ஒட்ட ஒழுக இயலும். இந்த நூற்றாண்டில் உள்ளவன் 2 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழர்களைப் பற்றிப் பெருமைப்படலாம்; பேசிப் புகழலாம்; அதில் தவறு இல்லை. அவர்களது நல்ல பண்புகளையும், சில பழக்க வழக்கங்களையும் பின்பற்றலாம்; அதிலும் தவறு இல்லை. கொடைத்தன்மையைப் பின்பற்றலாம். அதனை உலகம் ஒப்புக்கொள்ளும்.

இந்த நூற்றாண்டில் விஞ்ஞானம் வளர்ச்சி பெற்றுள்ளது. இது இன்றுள்ள நாகரிகச் சின்னம். விஞ்ஞானத்தை நாம் விரும்பலாம்; அது வளர்ச்சி பெறுவதை விரும்பலாம். அழிவு வழியில் வளர்ச்சி பெற்றால் அதனை யார் தான் விரும்புவர்? நாம் துன்பப்படும் இந்த நேரத்தில் உயிர் இனத்தையே அழிக்கும் விஞ்ஞான வளர்ச்சியைக் குறித்து ஒருபுறம் சிரிப்பும் ஒருபுறம் வருத்தமும் ஏற்படுகின்றன.

மக்கள் தொகை பெருகி வரும் இந்நாளில் எல்லாரும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும். நமக்குப் பழைமையும் வேண்டும்; இன்றைய புதுமையும் வேண்டும். இரண்டிலும் குறைநிறைகள் விரவியே இருக்கும். அவற்றில் நிறையுடைமையை மட்டும் ஏற்று வாழ்க்கையை அறிவுடைமையில் நடத்துவதே சிறந்த செயல்.

அருஞ்சொற்பொருள்

ஒட்ட ஒழுகல் - சேர்ந்து வாழ்தல். பனைத்துணை - பனையளவு. பயிலுவோன் - கற்போன். அகல - நீங்க. கொடைத் தன்மை

வறியவர்க்குக் கொடுக்கும் தன்மை. பொறி - இயந்திரம். கூற்று - சொல். பகரும் - கூறும். துரித - விரைந்து செல்லும். நிறையுடைமை - பண்புடைமை.

கேள்விகள்

1. பனைத் துணை—தினைத் துணை—இவை ஏன் பயன்படுத்தப் பட்டன ?
2. புதுமை விரும்பி பழமையை எவ்வாறு தாக்குகிறான் ?
3. எவற்றினைப் புதுமைச் சிறப்பாக அவன் எடுத்துரைக்கிறான் ?
4. பழமை விரும்பி, பழைய நாகரிகத்தில் எவற்றினைச் சிறப்பித்து எடுத்துக் காட்டுகிறான் ?
5. அரசனைப் பற்றிப் பழமை விரும்பி எடுத்துக் கூறியவை யாவை ?
6. பழமை விரும்பி புதுமையை எப்படித் தாக்குகிறான் ?
7. தலைவர் கூறிய நடுநிலைக் கருத்து யாது ?

பயிற்சி

1. சொற்றொடரில் அமைத்து எழுதுக :

   குறைநிறைகள், அறிவுடைமை, ஒன்றுபட்டு, பண்பு ஒரேயடியாக, நாவன்மை, ஏதுமறியா, பின்பற்றுவோம்.

2. எதிர்ச்சொற்கள் எழுதுக :

   பழமை, பனைத்துணை, அறிவிலாதார், சிற்றறிவு, முடியாட்சி.

3. வினையெச்சம், பெயரெச்சம், பண்புத் தொகை—இவற்றிற்கு இப்பாடத்திலிருந்து எடுத்துக் காட்டுகள் தருக.

14. உழைப்பின் உயர்வு

(வி. சேஷகிரி, M.A.,: B.T.,)

காந்தி எப்பொழுதும் எளிய வாழ்க்கையையே விரும்பினர். தென் ஆப்ரிக்காவில் டர்பன் நகரில் வாழ்ந்த பொழுது காந்தி ஆடம்பரமாகவே வாழ்ந்து வந்தார். இவரிடம் முப்பது சட்டைகளுக்கு மேல் இருந்தும் அவை இவர்க்குப் போதுமானதாகத் தென்படவில்லை. ஏனெனில் இவர் இரண்டு நாட்களுக்கு ஒரு முறை தம் உடைகளை மாற்ற வேண்டுவது அவசியமாக இருந்தது. மேலும் அவற்றை வெளுப்பதற்கெனச் செய்யப்பட்ட செலவும் மிகுதியாகக் காணப்பட்டது. யாது செய்யலாம் என்று சிந்தித்த காந்தி, தம்முடைய துணிகளைத் தாமே சலவை செய்து கொள்வது என்று தீர்மானித்தார். இதனால் வெளுக்கும் செலவும் குறைந்தது. அதிகமான சட்டைகளுக்கும் அவசியமில்லாமற் போயிற்று.

ஆயினும், அம்முயற்சியில் முதலிற் சில தொல்லைகள் இவருக்கு ஏற்பட்டன. முதன் முதலில் இவர் தாமே வெளுத்த கழுத்துப் பட்டையை அணிந்து சென்றபோது, மற்ற வழக்கறிஞர்களின் நையாண்டிக்கு ஆளானார். ஆனால் மனஉறுதி மிக்க காந்தி அதனைப் பொருட்படுத்தவில்லை. யார் என்ன நையாண்டி செய்தாலும், அதை ஒரு சிறிதும் பொருட்படுத்தாமல் தம் துணிகளைத் தாமே வெளுத்துப் பயன்படுத்தி வந்தார். மிக விரைவில் காந்தி அத்தொழிலில் ஆற்றல் மிக்கவராக விளங்கினர். இது இவர்க்குப் பணச்செலவைக் குறைத்ததோடன்றி, உற்சாகத்தையும் அளித்தது. மற்றைய வழக்கறிஞர்கள் அவ்வாறு செய்தல் தம் பெருமைக்கு இழுக்கென்று கருதியபோது, காந்தி அதனைத் தமது கடமையாகக் கொண்டார்; அதில் வெற்றியும் பெற்றார்.

இங்கு மற்றுமொரு நிகழ்ச்சியினை நோக்குவோம்; காந்தி தம்முடைய ஆடைகளைத் தாமே வெளுத்து வந்தது போலவே, தமது தலைமயிரையும் தாமே

கத்தரித்துக் கொண்டார். அதற்குக் காரணம் தென் ஆப்ரிக்காவில் பிரிட்டோரியா என்னும் நகரத்திலே இவர் வாழ்ந்து வந்த போது நிகழ்ந்த ஒருசிறு நிகழ்ச்சியே யாகும்.

ஒருநாள் காந்தி ஓர் ஆங்கில நாவிதரிடம் சென்ருர். அவர் கருப்பராகிய காந்திக்குத் தலைமயிர் கத்தரிக்க மறுத்தார். அதைக் கேட்ட காந்தி மிக்க மனவருத்த முற்ருர். எனினும் தவறு அந்நாவிதருடையது அன்று என எண்ணிய இவர் அன்று முதல் தம் தலைமயிரைத் தாமே கத்தரித்துக் கொள்வதென முடிவு செய்தார்; உடனே கடைக்குச் சென்று அதற்குத் தேவையான கருவிகளை வாங்கினர்; தாமே தமது தலைமயிரை வெட்டிக் கொண்டார். ஆனல் அது விகாரமாக இருந்தது. அக்கோலத்துடன் நீதிமன்றத்துக்குச் சென்ற போது மற்ற வழக்கறிஞர்கள் காந்தியைக் கண்டு நகைத் தனர். எனினும் இவர் தளரா உறுதியுடன் தம் தொழில் களைத் தாமே செய்து கொண்டார்.

நமது நாட்டுத் தலைசிறந்த தேசத் தொண்டர்களுள் கோபாலகிருஷ்ண கோகலே என்பவர் ஒருவர். அவர் காந்தியின் நெருங்கிய நண்பர். அவர் ஒருசமயம் தென் ஆப்ரிக்கா சென்றிருந்தார். ஜோஹன்னஸ்பர்க் என்னும் நகரில் வாழ்ந்த இந்தியர் அப்பெரியார்க்கு ஒரு சிறந்த விருந்து ஏற்பாடு செய்தனர். கோகலேக்கு மகாதேவ கோவிந்த ரானடே என்ற மற்ருெரு பெருந்தலைவர் ஒரு சிறந்த கழுத்துச் சுற்று (Scarf) அளித்திருந்தார். அவ்விருந்தின் போது அதை அணிய விரும்பினர் கோகலே. ஆனல் அது அழுக்காக இருந்தது. அதைச் சலவைச் சாலைக்கு அனுப்பி அழுக்கு நீக்கி அணிந்து கொள்ள நேரமில்லை. எனவே அவர் யாது செய்வதென்று அறியாது திகைத்தார். அதைக் கண்ட காந்தி, தாம் அத்துணியைத் துவைத்துப் பெட்டியிட்டுத் தருவதாகக் கூறினர். அது மிகவும் விலையுர்ந்ததாகையால் அதை அளிக்க கோகலே சிறிது தயங்கினர். பெரிய வழக்கறிஞ ராகிய காந்திக்குத் துணிகளை நன்கு வெளுக்கவும் பெட்டியிடவும் தெரியுமென்று அவர் நினைக்கவில்லை. ஆனல் காந்தி பன்முறை வலியுறுத்தவே கோகலே ஒருவாறு இணங்கினர். காந்தி அத்துணியை வெளுத்து

பெட்டி தேய்த்துக் கோகலேயிடம் அளித்தபோது, கோகலே மிகவும் வியப்புற்ருர்; காந்தியின் சலவைத் தொழில் திறத்தைப் பெரிதும் பாராட்டினுர்.

காந்தி தென் ஆப்பிரிக்காவில் இருபத்தொரு ஆண்டுகள் பணியாற்றியபின், தாய்நாடு திரும்பினுர். தென் ஆப்பிரிக்காவில் வெற்றி பெற்ற காந்தி அதைவிட மகத்தான பணியை மேற்கொள்ளும் பொறுப்பை ஏற்க இந்தியா வந்தடைந்தார். இங்கும் இவருடைய வாழ்க்கையில் பற்பல நிகழ்ச்சிகள் நிகழ்ந்தன. அவை அனைத்தும் நமக்குச் சிறந்த நீதிகளைப் புகட்டக் கூடியவை.

ஒவ்வொரு மனிதனும் ஒரு தொழிலைச் செய்தே தீர வேண்டும். உழுத்தொழிலைப் புரிந்து உணவுப்பொருளை உற்பத்தி செய்யும் உழவனுக்கு ஏர் செய்து தரக் கருமான் வேண்டும். கலப்பை செய்துதரத் தச்சன் வேண்டும். இல்லையேல் உழுதொழில் எங்ஙனம் நடக்கும்? எனவே யார் எத்தொழில் செய்தாலும் அத்தொழில் ஏற்ற முடையதே என்பதைப் பிறதொழில்கள் செய்பவர் உணர வேண்டும். இந்த எண்ணம் ஓங்கி வளர்ந்து விட்டால் நாம் அனைவரும் ஒப்புயர்வற்ற சமூகத்தை நிறுவமுடியும். அதை இழுக்கு என்று கருதக்கூடாது. அரசாளும் பணியாயினும் சரி. குப்பை கூட்டும் பணியாயினும் சரி யாவற்றையும் ஒன்றே போலக் கருத வேண்டும். எப்பணி செய்யினும் அப்பணி பெருமை உடையதே என்ற நோக்கம் கொள்ளவேண்டும் என்னும் கொள்கையை உடையவர் காந்தி. இவ்வாறு இவர் நினைத்ததோடல்லாமல் அதைச் செயலிலும் காட்டினுர்.

ஒரு சமயம் காந்தி கல்கத்தா நகரில் நடைபெற்ற காங்கிரஸ் பேரவையின் கூட்டத்திற்குச் சென்றிருந்தார். அக் கூட்டத்திற்குச் சென்றவர்கள் தங்குவதற்கான மாடி வீடுகள் பல அமைக்கப்பட்டிருந்தன. அங்குச் சென்று தங்கியவர்கள், அம்மாடி வீடுகளை ஒழுங்காகச் சுகாதார முறையில் வைத்துக்கொள்ளச் சிறிதும் எண்ணவில்லை. செல்லும் வழிகளெல்லாம் சேறும் சகதியுமாக இருந்தன. அங்கு மலம் கழிக்கும் இடங்கள் சிலவே இருந்தன. அவையும் ஒழுங்காக அமைக்கப்படவில்லை. இவற்றையெல்லாம் கண்ட காந்தி பெரிதும் வருத்தமுற்ருர். தொண்டர்கள் சரியான முறையில் பயிற்சி அளிக்கப்படவில்லை என்

பதை இவர் கண்டார். தொண்டர்களை அழைத்து வீடுகள் ஒழுங்காக அமைக்கப்படாமல் இருக்கின்றனவே என்று அவர் வினவியபோது அவற்றையெல்லாம் சுத்தம் செய்து ஒழுங்காக்குதல் பெருக்குவோர் கடமை என அத்தொண்டர்கள் விடையளித்தார்கள். அதைக் கேட்ட காந்தி, அவ்விளைஞர்களுக்கு உழைப்பின் உயர்வை விளக்கவும், தாழ்ந்தவை எனக் கருதப்படும் தொழில்களைச் செய்பவரும் நம் போன்ற மனிதரே யாதலால் அவர்களை இழிவாக மதிக்கக்கூடாது என்னும் உண்மையை விளக்கவும் விரும்பினார். உடனே தாம் சென்று மலங்கழிக்கும் இடங்களை எல்லாம் சுத்தம் செய்ய முயன்றார். ஆனால் காந்தி ஒருவராலேயே அவ்வேலை முழுவதும் செய்ய முடியாதல்லவா? கூடிய வரையில் செய்துவிட்டுத் திருப்தி அடைதார் காந்தி. மற்றவர்கள் அதைப்பற்றிக் கவலைப்படாது தம் வேலைகளைக் கவனித்து வந்தனர்.

காந்தி இரு நாட்கள் முன்னதாகவே காங்கிரஸ் பேரவை நடக்கும் இடத்தை அடைந்தார்; இரு நாட்களை எவ்வாறு கழிப்பது என்று எண்ணிய காந்தி நேரே அப்பேரவையின் செயலாளரிடம் சென்று அவரை அணுகித் தமக்கு ஏதேனும் வேலை அளிக்கும்படி கேட்டார். அவ்விடத்தைக் கூட்டும் வேலையை அவர் கொடுத்தார். காந்தியார் மிக்க மகிழ்ச்சியுடன் அப்பணியை ஏற்றுச் செய்தார். பின்னர்க் காந்தியை இன்னார் என்று அறிந்த அவர் எத்தொழிலையும் ஏற்றுச் செய்யும் காந்தியின் பண்பைப் பெரிதும் பாராட்டி, இளைஞர் எல்லாரும் காந்தியைப் போல் எத்தொழிலையும் செய்ய முன்வர வேண்டும் எனக் கூறினார்.

ஒரு சமயம் காந்தியும் இவர் சீடர் பலரும் சேர்ந்து, ஹரித்துவார் என்னும் புண்ணியத்தலத்திற்கு வரும் யாத்திரிகர்களுக்குப் பணியாற்றும் நோக்கத்துடன் சென்றனர். ஆனால் சென்ற இடத்தில் குப்பை கூட்டுதல் போன்ற பல தொழில்கள் காந்தி செய்ய நேரிட்டது. அவற்றையெல்லாம் இவர் மிக்க மனமகிழ்ச்சியுடன் செய்தார். இவருடைய சீடர்களும் இவரைப் பின்பற்றி அவ்வேலைகளைச் செய்தார்கள்.

இவ்வாறு தம்மைச் சுற்றிலுமுள்ளோர், எத்தொழிலையும் இழி தொழில் எனக் கருதாது எல்லாத் தொழில்

களும் சிறந்தவையே என எண்ணவேண்டும் என்று காந்தி கருதினர்.

எனவே, இளேஞர்கள் எத்தொழிலேயும் இழிவான தெனக் கருதக் கூடாது. எத்தொழிலாயினும் அதை மனமகிழ்வோடு செய்ய வேண்டும் என்பதே காந்தியின் கருத்தாகும்.

இவ்வாறு பிறர் கையை எதிர்பாராமல் தாமே தம் பணிகளேச் செய்து கொண்டதால், நேரத்தையும் பணத்தையும் மிகுதிப்படுத்த காந்தியால் முடிந்தது. இவர் பிறர்க்கும் ஓர் எடுத்துக் காட்டாக விளங்கினர். நாமும் காந்தியைப் போல் நம் கையை நம்பி வாழத் தெரிந்து கொள்ள வேண்டும்.

அருஞ்சொற்பொருள்

நையாண்டி - பரிகாசம். ஆற்றல் - திறமை. இழுக்கு - இழிவு.

கேள்விகள்

1. காந்தி கழுத்துப் பட்டையைப் பார்த்து வழக்கறிஞர்கள் நையாண்டி செய்ததேன் ?
2. காந்தி தாமே தலேமயிரைக் கத்தரித்துக் கொண்டதேன் ?
3. துணி வெளுக்கும் வேலேயில் காந்தியின் திறமை பற்றி விளக்குக.
4. தொழில் பற்றி காந்தியின் கொள்கை யாது ?
5. காங்கிரஸ் பேரவையில் நடந்தது யாது ?
6. ஹரித்துவாரில் காந்தி என்ன செய்தார் ?

பயிற்சி

1. சொற்றெடர்களில் அமைத்து எழுதுக:
   ஒப்புயர்வற்ற, ஒன்றுபோல, இழுக்கு, பன்முறை, விலே உயர்ந்தது, பாராட்டினர், தயங்கினர்.
2. எதிர்ச்சொற்கள் எழுதுக :
   அழுக்கு, மிகுந்த, வெற்றி, பெருமை, செலவு, விவரமாக
3. வினேமுற்று, வினேயெச்சம், பெயரெச்சம்—இவற்றுக்கு இரண்டிரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.

15. மங்கோ பார்க்

(ஒரு நாடகம்)

(வித்துவான் பு. செல்வராசன்)

அங்கம் 1.

இடம் : ஆப்பிக்காவில் மூர்நாடு—எல்லைப்புறம்

காலம் : விடியற்காலை

உறுப்பினர் : மங்கோ பார்க், காவலர், பொதுமக்கள்.

களம் 1.

[மங்கோ பார்க், மூர் நாட்டு எல்லைப்புறத்திலே முகாமடித்துத் தங்கி, அந்நாட்டினூடே சென்று நைஜர் ஆற்றை அணுக, அந்நாட்டு மன்னனின் இணக்கம் வேண்டியிருந்தார். மூர் மன்னனிடமிருந்து ஆட்கள் தம் முகாமை நோக்கி வருவதைக் கண்டு பார்க் மகிழ்ந்து, அவர்கள் மன்னனிடமிருந்து தம் பயணத்துக்குரிய இசைவுடன் வருகின்றனர் என்றெண்ணி அவர்களை வரவேற்கிறார்.]

மங்கோ பார்க் :—வாருங்கள் தூதர்களே, உங்களுக்கு நல்வரவும், வணக்கமும் கூறுகின்றேன்.

காவலர் :—வணக்கம், உங்களுக்கு எங்கள் வாழ்த்து உரியதாகுக.

மங் :—என்னுடைய வேண்டுகோளுக்குத் தங்கள் மன்னர் இணங்கினாரா?

கா :—அச்சமேன் தோழரே! தங்கள் வேண்டுகோளை எங்கள் மன்னர் கண்டார்; மகிழ்ந்தார்; தங்களை நேரிற் காண விரும்பி அழைத்துவரச் சொன்னார்.

மங் :—மகிழ்ச்சி; அப்படியே செய்கிறேன். இதோ புறப்படுகின்றேன்.

[மங்கோ பார்க் இரு கழுதைகளின்மீது தம் உடைமைகளை ஏற்றிக் கொண்டு, தம்மை யழைக்க வந்த காவலர்களுடன் மூர் அரசனை நேரிற் காண்பதற்காகப் புறப்பட்டுச் செல்கிறார்.]

களம் 2.

[மூர் நாட்டின் தலைநகரத் தெரு வழியே மங்கோ பார்க் காவலருடன் செல்கிறார். அந்நகரிலுள்ள நீக்ரோவ மக்கள் பங்கோ பார்க்கைக் கண்டு மிரளுகின்றனர்.]

ஒரு நீக்ரோ :—(துணிவுடன் நெருங்கி வந்து) ஐயா நீ யார்? எந்த ஊரைச் சேர்ந்தவர்?

மங் :—ஐயா நான் ஆங்கிலேயன்; என்னுடைய ஊர் ஆயிரம் கிலோ மீட்டர்களுக்கு அப்பால் இருக்கிறது. உங்கள் நாட்டிலுள்ள நைஜர் ஆற்றைப் பார்ப்பதற்காக நான் இங்கு வந்துள்ளேன்.

மற்றொருவன் :—நைஜர் ஆற்றைப் பார்க்கவா இவ்வளவு தொலை வந்தீர்? உங்கள் ஊரில் ஆறுகளே இல்லையோ?

மங் :—எங்கள் ஊரிலும் ஆறுகள் உண்டு ஐயா. ஆனால், நைஜரைப் போலப் பெரிய ஆறுகள் இல்லை.

மீண்டும் ஒருவன் :—நல்ல ஆளையா நீர். ஆற்றைப் பார்க்க இத்துணைத் தொலை வந்தேன் என்கிறீரே, புளுகினாலும் பொருந்தப் புளுகக் கூடாதா?

முதல் நீக்ரோ :—அட! சிங்கம் பார்க்க வந்தேன் யானை பார்க்க வந்தேன் என்றெல்லாம் சொல்லக்கூடாதா?

மற்றொருவன் :—ஆளைப் பார்த்தால் அடிமை வணிகனைப் போன்றில்லையா அண்ணே?

வேறொருவன் :—ஒருவேளை தந்தங்களையும் தங்கக்கட்டிகளையும் நம் நாட்டிலிருந்து வாரிக்கொண்டு போக வந்தவனோ?

மங் :—அப்படியெல்லாம் ஒன்றுமில்லையப்பா! நான் ஒரு பாதிரி. தங்கமும் தந்தமும் எனக்கேன்? அடிமை வாணிகம் என் கொள்கைக்கே முரணானதப்பா!

ஒரு நீக்ரோப் பெண் :—(மற்றொருத்தியை நோக்கி) அடியே இவன் என்ன 'மைதா' மாவினாற் செய்த பதுமையோ?

மற்றொருத்தி :—இல்லையடி, சுண்ணாம்புக் கட்டியால் செய்த சுந்தரப் பதுமையடி இது.

ஒரு சிறுமி :—இல்லையக்கா, இந்த மனிதன் சுண்ணும்பு அடித்துக் கொண்டு வந்திருக்கின்ருன். நம் வீட்டுக்கு சுண்ணும்பு அடிக்கிருேமே அதுபோல இவன் தலைமுடி உள்பட உடம்பெல்லாம் சுண்ணும்படித்துக் கொண்டான்.

மங் :—தாய்மார்களே, தங்கைகளே, நான் மாவினுல் செய்த பதுமையும் அல்ல. சுண்ணும்பு அடித்துக் கொண்டு வந்திருக்கும் மனிதனும் அல்லன். உங்களைப் போலவே நானும் மனிதன்தான். எங்கள் நாட்டு மனிதர்கள் அனைவரும் வெண்மையாகத்தான் இருப்பார்கள். என்னைக் கண்டு நீங்கள் அஞ்சவேண்டா.

அங்கம் 2.

இடம் : மூர் மன்னர் அலியின் அரண்மனை

காலம் : மாலை

உறுப்பினர் :—மங்கோ பார்க், மன்னர் அலி, காவலர்.

களம் 1.

[மன்னர் அலியின் அவைக்கு மங்கோ பார்க் அழைத்து வரப் படுகிருர். மங்கோ பார்க் மன்னரைத் தகுந்த முறையில் வணங்கி நிற்கிருர்.]

அலி :—(மங்கோ பர்க்கைப் பார்த்து) ஐயா, நீர் ஏன் இந்த நாட்டில் சுற்றிக் கொண்டிருக்கிறீர்?

மங் :—நைஜர் ஆற்றைப் பார்க்க வேண்டும் என்னும் அவாவினுல் நான் இங்கே வந்தேன்.

அலி :—என்ன! ஓர் ஆற்றைப் பார்ப்பதற்காகவா இவ்வளவு தொலை ஒருவன் வருவான்? நீர் எம்மதத்தினர்?

மங் :—நான் கிறித்தவ சமயத்தைச் சேர்ந்தவன்; அச்சமய வேதாகமங்களைப் படித்துச் சமய போதகனுக உள்ளவன்.

அலி :—சரிதான். இது முஸ்லிம் நாடு. இங்கு உளவறிந்து போகவே நீர் வந்திருக்கிறீர். அதனுல்தான் தகுந்த காரணம் கூற முடியாமல் ஆற்றைப் பார்த்து விட்டுப் போக வந்ததாகக் கூறுகிறீர்.

மங் :—இல்லை மன்னரே, தாங்கள் கூறுவது சரியன்று. நான் உளவாளியல்லன்; உண்மையில் ஆற்றைப் பார்க்கவே வந்துள்ளேன்.

அலி :—காவலர்களே, இவனைப் பிடித்துக் கட்டிச் சிறையில் தள்ளுங்கள்! இவன் உண்மையில் உளவாளியே! இவனுடைய உடைமைகளைப் பறிமுதல் செய்யுங்கள்!

[காவலர் மங்கோ பார்க்கைச் சிறைக்கு இழுத்துச் செல்கின்றனர்.]

களம் 2.

[அலியின் அந்தப்புரம்—அரசியுடன் உரையாடல்.]

அலி :—பாத்திமா, செய்தி தெரியுமா? ஒரு பேரிடையூற்றிலிருந்து இன்று நம் நாட்டை மீட்டுவிட்டேன்.

பாத் :—அரசே, என்ன அத்தகைய பேரிடையூறு! வீராதி வீரரான தாங்கள் ஆளும் நாட்டிற்குமா இடையூறு? இது என்ன பித்துப் பிடித்த பேச்சு! என்ன நடந்தது ? விவரமாகச் சொல்லுங்கள்.

அலி : கேள் பாத்திமா. ஒரு கிறித்துவ சமய குரு இங்கு வந்து நம்மிடம் சிக்கிக்கொண்டான். சமயப் பிரசாரம் செய்யும் வேடத்தில் அவன் நம் நாட்டைப் பற்றி உளவறிந்து போக வந்தவன் என்பது தெரிகிறது. அவனை நேரிற் கேட்டால் நைஜர் ஆற்றைப் பார்க்க வந்ததாகக் கூறுகிறுன்.

பாத் :—உளவாளியாகத்தான் இருக்கட்டுமே! இங்கு உளவறிந்து சென்று நம்மை என்ன செய்துவிட முடியும் ?

அலி :—அங்ஙனமன்று பாத்திமா ! அவன் உளவறிந்து சென்று, பின் தன் நாட்டிலிருந்து பெரிய படையைத் திரட்டி வந்து நம்முடன் போருக்கு நின்ருல் நாம் என்ன செய்வது! இடையூறு வளர ஒட்டாமல் முளையிலேயே கிள்ளிவிட வேண்டாவா ? ஒன்று அவன் தலையை வெட்டிவிட வேண்டும்; அல்லது கைகளையும் கால்களையும் வெட்டி முடவனுக்கிவிட வேண்டும். அல்லது கண்களைப் பிடுங்கிக் குருடனுக்கித் துரத்திவிட வேண்டும். அல்லது இங்கு அடிமையாக்கி நம்மிடம் கடினமான தொழில்களைச் செய்யப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். நீ என்ன சொல்கிருய் ?

பாத் :—இருக்கட்டும்; அவன் உளவாளிதான் என்பதை மெய்ப்பிக்கத்தக்க சான்றுகள் கிடைத்தனவா? தான் உளவாளிதான் என்று அவன் ஒப்புக்கொண்டானு? ஒருவேளை உண்மையிலேயே உளவாளியாயிராமல், ஆற்றைப் பார்க்க வந்த வீணனுயிருந்தால்! அத்தகையவனை நாம் கடுமையாகத் தண்டித்து விட்டால் அரச நெறி பிழைபட்டு விடுமல்லவா! ஆய்ந்தோய்ந்து பாராமல் எதையும் துணிந்து செய்யலாமா?

அலி :—அப்படியானுல் அவன் குற்றமற்றவன் என்கிருயா நீ?

பாத் :—கடுப்புக்கொள்ள வேண்டா; நேரிற் சென்று வினவுவோம்; பிறகு செய்ய வேண்டுவதைச் செய்வோம்.

அலி :—வா, சிறைக்குச் செல்வோம் நீயே. வினவிப்பார்.

[அலி, பாத்திமா இருவரும் அரசாங்க மொழி பெயர்ப்பாளனை அழைத்துக்கொண்டு சிறைக்குச் செல்கின்றனர்.]

அங்கம் 3.

இடம் :—சிறைச்சாலை.

காலம் :—இரவு.

உறுப்பினர் :—மங்கோ பார்க், மன்னன் அலி, அரசி பாத்திமா சிறைக் காவலர் இருவர், அரசாங்க மொழி பெயர்ப்பாளர்.

களம் 1.

[மங்கோ பார்க் வருத்தத்துடன் சிறையில் சிந்தித்தவாறு உலவிக் கொண்டிருக்கிருர். அரசனும் அரசியும் தம்மை நோக்கி வருவது கண்டு இருவருக்கும் வணக்கம் செலுத்துகிருர்.]

அலி :—கைதியே, அரசியார் கேட்கும் கேள்விகட்கு உண்மையை ஒளியாமல் விடை கூறுதல் வேண்டும். இல்லையெனில் உன் தலை தரையினில் உருளும்.

[மங்கோ பார்க் இருவரையும் பார்த்த வண்ணம் பேசாமல் நிற்கிருர்.]

பாத் :—ஐயா, நீ எந்த நாட்டினர்? அனுமதியின்றி இந் நாட்டிற்குள் எப்படி வந்தீர்? இது அரசாங்க நெறிக்கு மாறுபாடானது என்பதும் பண்பாடற்ற செயல் என்பதும் உமக்குத் தெரியாதா?

மங் :—அரசியே எனக்கு நன்ருகத் தெரியும். இங்கிலாந்தைச் சேர்ந்த செல்கர்க்கில் பிறந்த நான் இந்நாட்டிற்குள் மன்னர் இணக்கமின்றிப் புகவில்லை. 1795 ஆம் ஆண்டு மே திங்களில் என் நாட்டை விட்டுப் புறப்பட்டுக் காம்பியா துறைமுகம் வந்து சேர்ந்தேன். அங்குச் சில நாட்கள் தங்கியிருந்த பின் காம்பியா ஆற்றுக்கும் செனகல் ஆற்றுக்கும் இடையில் உள்ள அடர்ந்த காடுகள் வழியே கார்ட்டாலி நாடு வந்தேன். அந்த நாட்டு எல்லையிலிருந்த வண்ணம் இந்நாட்டிற்குள் வர, இணக்கம் கொடுக்குமாறு மன்னருக்கு வேண்டுகோள் அனுப்பியிருந்தேன்.

அலி :—(இடை மறித்து) ஆம்; இவன் வேண்டுகோளைப் பார்த்த நான் ஐயங்கொண்டேன். இணக்கம் தருவதாக இவனை அழைத்து வருமாறு நம் ஆட்களை ஏவினேன். நம் ஆட்கள் நான் இணக்கம் தர அழைப்பதாகக் கூறி இவனை இங்கு அழைத்து வந்தனர்.

பாத் :—நீர் உண்மையில் ஆற்றைப் பார்க்க வந்தீரா? உளவு பார்க்க வந்தீரா? எதற்காக வந்தீர் என்பதை உம் இறைவன்மீது ஆணையிட்டுக் கூறும்.

மங் :—பெருமை மிக்க அரசியாரே, நான் வணங்கும் ஆண்டவன்மீது ஆணையாகக் கூறுகின்றேன். தாங்கள் கூறிய எதனை முன்னிட்டும் நான் வரவில்லை. நைஜர் ஆறு மிகப் பெரிய ஆறென்றும்,அது பேரிரைச்சலிட்டு ஓடும் காட்சி, சிங்கம் தன் இரைமீது பாய்வதைப் போன்றிருக்குமென்றும் கேள்விப்பட்டேன்; அதனைக் காண அவாக் கொண்டேன்; உடனே புறப்பட்டு வந்தேன். சுற்றுப்புறங்களில் உள்ள வேறு அரசர்கள் என்னை விருந்தினஞக ஏற்று அன்பு காட்டி நடத்தி, வழி கூட்டியனுப்பி வைத்தார்கள். இந்த நாட்டு மன்னர் மட்டுமே என்மீது ஐயங் கொண்டார்.

பாத் :—சரி, இருக்கட்டும் உம்மையும் உம் உடைமைகளையும் சோதித்துப் பார்க்கவேண்டும். உம்மிடமுள்ள கடிதங்களை நான் பார்வையிடல் வேண்டும்.

மங் :—அருள் மிக்க பெருமாட்டியே, அங்ஙனமே செய்யுங்கள்.

[காவலர்கள் மங்கோ பார்க்கின் உடைகளைச் சோதித்து அவரிடமிருந்த கடிதங்களையெல்லாம் எடுத்துக் கொடுக்கின்றனர்.

அலியும் பாத்திமாவும் அவற்றைப் பெற்றுக்கொண்டு அந்தப்புரம் திரும்புகின்றனர்.]

களம் 2.

[அந்தப்புரத்தில் அரசியும் அரசனும் அரசாங்க மொழி பெயர்ப்பாளருடன் அமர்ந்து மங்கோ பார்க்கிடமிருந்து எடுத்து வந்த கடிதங்களை யெல்லாம் பிரித்துப் படித்து ஆராய்கின்றனர்.]

பாத் :—அரசே, இதோ பாருங்கள்! இது நாட்டின் குறிப்புப் படம். இதில் அந்த ஆளின் நோக்கம் நன்கு விளங்குகின்றது. அவன் நம் நாட்டில் காம்பியா துறைமுகத்தில் இறங்கி நைஜர் ஆற்றுக்குப்போகும் வழியைக் குறித்திருக்கின்றான். அவன் செல்லவேண்டிய இறுதி இடம் நைஜர் ஆறு என்பது இப்படத்திலிருந்து தெளிவாகத் தெரிகிறது.

அலி :—எங்கே பார்ப்போம்.

[பாத்திமா, படத்தைக் காட்டி அதில் மங்கோ பார்க் குறிப்பிட்டு வைத்திருந்த வழிகளைக் காட்டுகிறாள்.]

அலி :—சரி, மொழி பெயர்ப்பாளரே, அக்கடிதங்களில் ஏதாவது துப்புக் கிடைத்ததா ?

மொழி :—ஆம் பெருமானே, நம்மிடம் சிக்கியுள்ளவன், புதிய புதிய நாடுகளைக் கண்டு, அந்நாடுகளின் இயற்கைச் செல்வங்களைப் பார்த்து மகிழும் பித்தன். ஆறுகள், மலைகள், காடுகள் முதலியவற்றினைக் கண்டு களிப்பதில் இவனுக்கு அவா மிகுதி என்று இக்கடிதங்களிலிருந்து தெரிகிறது. நைஜர் ஆற்றைக் கண்டு பிடித்து அது எங்கிருந்து உற்பத்தியாகிறதோ அங்குச் சென்று, அது எவ்வளவு அகலமாகப் புறப்படுகிறது என்பதைப் பார்த்து, பிறகு அது எங்கெல்லாம் பாய்ந்து செல்கிறதோ, அங்கெல்லாம் சென்று, அது கடலில் கலக்குமிடத்தைக் கண்டு மகிழ வேண்டும் என இவன் அவாக் கொண்டவன் என்பது இக்கடிதங்களிலிருந்து தெளிவாக அறியக் கிடக்கிறது.

பாத் :—சரிதான்; இது ஒருவகை மதப் பித்தம். மக்களுட் சிலர் ஆற்றைக் கடவுளாக வணங்குகிறார்கள் என்பதை நாம் கேட்டதில்லையா ? அதுபோல இது ஒரு வகைப் பித்தம்.

அலி :—அங்ஙனமாயின் இவன் குற்றவாளி அல்லன் என்பது உன் கருத்தா, பாத்திமா ?

பாத் :—ஆம் கணவரே, குற்றமற்றவனைத் தண்டித்தல் அறநெறிக்கு இழுக்கு. எனவே இந்தப் பித்தனை இவனுடைய கழுதைகளுடனும் உடைமைகளுடனும் இந்த இருட்டிலேயே விரட்டிவிடுங்கள்! இயற்கையழகைக் கண்டாவது களிக்கட்டும்; இல்லாவிட்டால் இந்நாட்டு விலங்குகளுக்காவது இரையாகட்டும். உயிருடனிருந்தால் ஆற்றையாவது காணட்டும். அல்லது ஆற்றோடாவது போகட்டும். நமக்கென்ன வந்தது! குற்றமற்றவனைத் தண்டித்த பழி நமக்கேன்?

அலி :—சரி பாத்திமா. உன் விருப்பம் நிறைவேறட்டும். மொழிபெயர்ப்பாளரே, காவலரிடம் நம் ஆணையென்று கூறி, இப்போதே அந்தப் பித்தனை விடுதலை செய்து, அவன் உடைமைகளுடன் அவனை நம் நாட்டு எல்லைக்கப்பால் கொண்டுபோய் விட்டுவரச் சொல்வீராக. பொழுது விடிவதற்குள் அவனை நம் நாட்டு எல்லைக்கப்பால் கொண்டு போய் விட வேண்டும். போம்!

அங்கம் 4.

இடம் : மூர் நாட்டு எல்லைக்கு வெளிப்புறம்.

காலம் : விடியற்காலை.

உறுப்பினர் : மங்கோ பார்க், காவலன்.

களம் 1.

காவலன் :—ஐயா, இது எங்கள் நாட்டு எல்லைக்குப் புறம்பான இடம். இனி நீர் எங்கு வேண்டுமாயினும் போகலாம். உமக்கு இனி விடுதலைதான். ஆனால், மீண்டும் எம் நாட்டிற்குள் காலடி எடுத்து வைத்தால் தொலைந்தீர் தெரிகிறதா ?

மங் :—அன்புமிக்கவரே, நான் மீண்டும் உம் நாட்டில் காலடி வைத்துத் துன்பத்திற்கு ஆளாகமாட்டேன். ஆனால், உம்மிடம் ஓர் உதவி கேட்க விரும்புகிறேன். செய்வீரா ? ஆண்டவன் உமக்கு நல்லுதவி செய்வான்.

காவல :—என்ன ஐயா வேண்டும்?

மங் :—நைஜர் ஆற்றுக்குப் போகும் வழியை மட்டும் கூறினுல் போதும்.

காவ :—இங்கிருந்து நேர்கிழக்கே செல்லும் ஐயா! பம்பாரா என்னும் இடத்தை அடைவீர். அங்கிருந்து செஜோ எனும் ஊருக்கு வழிகேட்டுச் செல்லும். செஜோவுக்கு எட்டுக் கி. மீட்டர் தொலேவில் ஒரு பெரிய ஆறு பேரிரைச்சலுடன் பாய்வதைக் காண்பீர். அதுதான் நைஜர் ஆறு. நான் போகிறேன். மீண்டும் மூர் நாட்டுக்குள் வந்து விடாதீர். இனி மூர் நாட்டிற்குள் காலடி வைத்தால் உம் உடல் சிங்கத்துக்கு விருந்தாகும். தெரிகிறதா!

[என்று கூறியவன் தன்னுள்ளாக]

பித்தன்; ஆற்றைப் பார்க்கும் ஒரே எண்ணம் தவிர, வேருென்றையும் விரும்பாத பைத்தியம். இந்த நாட்டில் எவ்வளவு தங்கம் இருக்கிறது! எவ்வளவு இரத்தினங்கள் இருக்கின்றன! ஒன்றையும் இவன் மதிக்கவில்லேயே! ஆற்றைப் பார்க்கப் போகிருனும் அரைப்பித்தன். ஆற்றில் என்ன தங்கக் கட்டியா உருளுகிறது! தண்ணீர்தான் பாய்கிறது. அதைப் போய்ப் பார்ப்பதேன்? அதற்காக இத்துணேப் பெரும் இடையூறுகளிடையே ஆயிரக்கணக்கான கிலோ மீட்டர் தொலேயைக் கடந்து பயணம் செய்வது ஏன்? முழுக் கிறுக்கன். தொலேயட்டும்; எக் கேடாவது கெடட்டும்.

(போய் விடுகிருன்)

மங் :—ஆண்டவனே! உன் கருணேக்கு நன்றி. பெரும் இடையூற்றினின்று என்னேக் காத்த இறைவா! இதோ உம் அருளுக்கு நான் பணிகிறேன்.

[மங்கோ பார்க், இறைவனே வணங்கிப் பின் எழுந்து செஜோவை நோக்கிப் பல நாட்கள் நடந்து, பல இடங்களேச் சுற்றிச் சென்று நைஜர் ஆற்றை அணுகினுர். அதைக் கண்டதும் மகிழ்ச்சிப் பெருக்கால்]

மங் :—இதோ என் எண்ணம் நிறைவேறி விட்டது. கண்டு விட்டேன் நைஜர் ஆற்றை. இரண்டரை ஆண்டு

ரிஃ 1155

களாகப் பாடுபட்டது பயனளித்து விட்டது. என்ன அழகான ஆறு! எவ்வளவு இரைச்சலுடன் பாய்ந்தோடுகிறது! எவ்வளவு தெளிவான பளிங்கு போன்ற நீர்! இறைவனே, கருணைக் கடலே! அருட்குன்றே, என் அன்பே, உன்னை என்னவென்றுதான் போற்றுவேன்!

[நைஜர் ஆற்றில் மங்கோ பார்க் இறங்கி, அவ்வாற்று நீரை அள்ளியள்ளிப் பருகி, மகிழ்ச்சி ததும்ப இறைவனை வழிபடுகிறார். பின் அவ்வாற்றின் போக்கைச் சற்று தொலை வரை சென்றறிந்து தம் தாய் நாடு புறப்படுகிறார்.

அருஞ்சொற்பொருள்

இணக்கம் - சம்மதம். இசைவு-அனுமதி. இடையூறு-தொல்லை. ஐயம் - சந்தேகம்.

கேள்விகள்

1. மங்கோ பார்க் மூர் மன்னனிடம் வேண்டியது யாது ?
2. மூர் மன்னன் மங்கோ பார்க்கை ஏன் சிறையில் அடைத்தான் ?
3. பார்க்கைப் பார்த்த நீக்ரோப் பெண்கள் பேசிக்கொண்டவை யாவை ?
4. பார்க் விடுதலை பெற்றது எவ்வாறு ?
5. பார்க்கைப் பற்றி அரசாங்க வேலையாட்கள் எண்ணியவை யாவை ?
6. மூர் வைத்திருந்த கடிதங்களிலிருந்து வெளியான உண்மைகள் யாவை ?

பயிற்சி

1. சொற்றொடர்களில் பயன்படுத்துக :
   இணக்கம், முகாம், நல்வரவு, வணக்கம், துணிவுடன், பதுமை, உளவாளி, பறிமுதல்.
2. எதிர்ச் சொல் எழுதுக:
   விவரமாக, குற்றமற்றவன், ஐயம், புதிய, வெளிப்புறம், துன்பம், பேரிரைச்சல்.
3. இந்தியாவில் வாஸ்கோடகாமா வந்திறங்கியதை ஒரு நாடகமாக வரைந்து நடிக்கவும்.
4. தெரிநிலை வினைமுற்று, உடன்பாட்டுப் பெயரெச்சம், இறந்த கால வினையெச்சம்—இவற்றிற்கு இப்பாடத்திலிருந்து சான்று தருக.

TB 031(9) W65
146509